www.tamilarangam.net

# தமிழர்தம் இலக்கியம், பண்பாடு, அரசியல், கல்வி 2000

க.ப. அறவாணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்தம்
# இலக்கியம்-பண்பாடு-அரசியல் -கல்வி

க.ப. அறவாணன்

SEELAN BOOKS * NORWAY * SIGNATURE

நூலாசிரியரின்
மணிவிழா (60) ஆண்டுச்
சிறப்பு வெளியீடு

தமிழ்க்கோட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்தம்

## இலக்கியம் - பண்பாடு - அரசியல் - கல்வி

*க.ப. அறவாணன்*
*துணைவேந்தர்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்*
*திருநெல்வேலி*

**தமிழ்க்கோட்டம்**
**11, இரண்டாம் தெரு, மோகன் நகர்**
**புதுச்சேரி - 605 005**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

◆ தமிழர்தம்
இலக்கியம்-பண்பாடு-அரசியல்-கல்வி

◆ க.ப. அறவாணன்

◆ வெளியீடு
தமிழ்க்கோட்டம்
11, இரண்டாம் தெரு
மோகன் நகர்
புதுச்சேரி – 605 005

◆ முதற்பதிப்பு : திசம்பர் 2000

◆ **விலை : உரூபாய் 60/-**

**U.S. $ 10/-**

◆ கணினி அச்சு
சபாநாயகம் பிரிண்டர்ஸ்
176, கீழ ரத வீதி, சிதம்பரம் – 608 001.
✆ : 23040, 23020

◆ அச்சாக்கம்
யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை – 4.
✆ : 4984693, 4661807

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**படையல்**

‘இவன் ஆசான் எந்நோற்றான்?’

எனும் புகழ்மொழி சேர்த்த

கவிப்பேரரசு

**இரா. வைரமுத்துவுக்கு...**

www.tamilarangam.net

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

# வேண்டுவனவும் விலக்குவனவும்

இந்நூல் நான் கடந்த ஓராண்டில் பல்வேறு களங்களில் படைத்தவை. தமிழருடைய இலக்கியம், பண்பாடு, அரசியல், கல்வி ஆகியன பற்றிய என் ஆழ்ந்த கண்ணோட்டங்கள் இந்நூலின்கண் இடம் பெற்றுள்ளன. டேவிட் கிரைஸ்டல் (David Crystal) எனும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் 'Language Death' எனும் நூல் ஒன்றை அண்மையில் எழுதியுள்ளார். அந்நூலில் அவர் குறிப்பது: காலப் போக்கில் சிறுபான்மை மொழிகள் வழக்கொழிந்து விடும்; ஒவ்வொரு மாதமும் இரண்டு சிறுபான்மை மொழிகள் வழக்கிழக்கின்றன; காலப்போக்கில் ஆதிக்க மொழிகளே வாழும்; ஏனையவை அழிந்து விடும். தமிழர் கிரைஸ்டல் கூறும் கருத்தை மனத்தில் நிறுத்த வேண்டும். இது தொடர்பான வேறு சில

www.tamilarangam.net



செய்திகளை நூலில் மொழி பற்றிய கட்டுரைகளில் எழுதியுள்ளேன்.

என் கட்டுரைகளில் ஆங்காங்கே என் அயல் நாட்டுப் பயண அனுபவங்களின் காரணமாகச் சில நாடுகளை மேற்கோள் காட்டும் பகுதி இடம் பெற்றுள்ளது. இன்னும் சில இடங்களில் நாம் எப்போதும் அயல் நாட்டையே தழுவி இருத்தல் ஆகாது எனுங் கருத்தும் எழுதப் பெற்றுள்ளது. இவ்விரு கருத்துகளும் மேம்போக்காக நோக்குகையில் முரண்பாடாகத் தோற்றம் அளிக்கும். இக்கருத்தின் அகத்தையும், முகத்தையும் விளக்குதல் வேண்டும். அறிவியல், பொறியியல், கணினியியல் முதலான வற்றுள் அமெரிக்க, ஐரோப்பிய, சப்பான் முதலான நாடுகள் மிக வளர்ந்துள்ளன என்பது உண்மை. மெய் பேசுதல், கடமையைப் போற்றுதல், காலம் தவறாமை முதலான பண்பாட்டு நெறிகளிலும் அன்னோர் முன் நிற்கின்றனர். மேற்கண்டவற்றுள் தமிழராகிய நாம் போதிய அளவிற்கு மேம்படவில்லை என்பது உண்மை. அதற்காக அனைத்துத் துறைகளிலும் அயல் நாட்டாரை அப்படியே பின்பற்றுதல் வேண்டும் என்பது பேதைமை. அதிலும் குறிப்பாக அயல் நாட்டுக் கல்வி முறைகளைக் கற்றுக் கொள்ளும் நம் நாட்டார், அம்முறைகள் வழியாக நம் நாட்டை வளப்படுத்த எண்ணுதல் வேண்டும். மாறாக, நம்முடைய கல்வியமைப்பும், உழைப்பும், பிழைப்பும் கூட

www.tamilarangam.net



அயல்நாட்டுத் தேவைகளை நிரப்புவதாக உள்ளன. இது முற்றுமாகத் தவிர்க்கத் தக்கது. அன்றியும், நம் முன்னோர் போற்றிய உணவு, உடை, சிற்றூர்ப்புறப் பழக்கவழக்கங்கள், விருந்தோம்பல், குடும்ப அமைப்பு, உள்ளூர் நாட்டாண்மை, நீதி முறை, ஊராட்சிமுறை ஆகியன தேவையான திருத்தங் களுடன் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டியவை. அயல்நாட்டுப் போக்குகளைக் கண்மூடி வாங்கிக் கொள்வதால் நாம் தொடர்ந்து பல்வேறு சிக்கல்களில் அகப்பட்டுத் தவித்து வருகிறோம். இவற்றுள் தலையாயவை: கட்சி அரசியல் முறை, கட்டுப்பாடற்ற சனநாயக அமைப்பு, அனைத்திலும் பண நோக்கு, வணிகப் போக்கு, பல்வேறு குடி மற்றும் பிடி வகைகள், தனிக் குடும்பம், குடும்பச் சீரழிவு முதலாயவற்றைச் சுட்டிக் காட்டலாம். உலக மயமாதல், தனியார் மயமாதல், தாராளமயமாதல் ஆகியன இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்கு நன்மை தருவதைவிடத் தீமைகளையே மிகுதியாகத் தருகின்றன. தேவைகளையும், ஆசைகளையும் ஏழை மக்களிடையே பெருக்குவது பாவம். அதிலும் குறிப்பாக அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை நாற்பது கோடி மக்களுக்குத் தர முடியாத நிலையில் அலங்கார, ஆடம்பரத் தேவைகளின் மேல் மோகம் ஊட்டுவது, அதற்குத்தக அரசு, தனியார் முதலான அனைத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்புகளையும் திசை திருப்பி இயக்கிவிடுவது கொடும் விளைவுகளை உண்டாக்கும்; உண்டாக்கி இருக்கிறது. எனவே, நம் மக்கள் தொகை, நம் வசதி வாய்ப்புகள் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்டே அயல் நாட்டை நோக்கும் நிலையும் ஏற்கும் நிலையும் நம் மண்ணில் வளர்க்கப்பட வேண்டும். ஒரு காலத்திலும் நாம் அமெரிக்க, ஐரோப்பியராக மாற முடியாது; மாறக் கூடாது. நாம் நம்மில் இருந்துதான் உருவாக்கப்பட வேண்டும். சீனம் அதனைப் போலத்தான் செய்தது. தனித் தன்மை இழக்காத உயர்ச்சியை நோக்கிய ஒரு பயணம் நம்மனோரால் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்குத்தக நம்முடைய குடும்பம் முதலான அகத் தளங்களும், அரசியல் முதலான புறத் தளங்களும் வடிவமைக்கப்பட வேண்டும்.

நம்முடைய கட்சி அரசியல் வழிப்பட்ட சனநாயகம் முற்றுமாக ஐரோப்பிய நாடுகளைப் பார்த்து நகல் எடுக்கப்பட்டது. நாம் சந்தித்துவரும் பல தீங்குகளுக்கும் இந்த நகல் அமைப்புப் பெரும் காரணமாகும்.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து, அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு, மண், பொன், பெண் ஆசைகள் கூடா, பேராசை பெரும் நட்டம் முதலாயின இந்திய மண்ணில், இந்திய

www.tamilarangam.net



மக்களுக்கு ஏற்ப அமைந்த அமைக்கப்பட்ட கோட்பாடுகள் ஆகும். இவை வெறித்தனமாகப் புறக் கணிக்கப்படல் ஆகாது. எனவே இன்றும் தேவை யான, பொருத்தமான முன்னைய பழக்க வழக்கங் களையும், எண்ணக் கோட்பாடுகளையும் வெளிநாட்டு வெறியில் விட்டுவிடக் கூடாது; நமக்குப் பொருத்தம் ஆகாதவற்றை, அயல்நாட்டு வரவு - உயர்வு என்று பிழையாகக் கருதிப் போற்றுதல் கூடாது. ஆனால் நம்மை வளர்க்கும் ஆற்றல் பெற்றவை அயல் நாட்டவை எனினும் ஏற்காமல் இருத்தல் கூடாது.

நல்ல எடுத்துக்காட்டுகளாக விளங்கும் அயல் நாடுகளை மேற்கோளாக நாம் கொள்ளும்போது தள்ளுவன தள்ளியும், கொள்ளுவன கொண்டும் செயல்படுதல் வேண்டும். நம் பண்பாடு, மரபு, இன்றைய வளர்ச்சி, அதற்குரிய தேவை ஆகியவற்றை அளவுகோல்களாகக் கொண்டே அன்னப் பறவையின் முயற்சி நமக்குள் நடத்தல் வேண்டும். மாறாக, நல்ல சாற்றைக் கீழே விட்டுவிட்டுக் குப்பைகளை மட்டும் வடிக்காமல் வைத்திருக்கும் பன்னாடைப் பழக்கத்தை நாம் விட்டு ஒழித்தாக வேண்டும். இத்தகு வேண்டுதல்கள் தமிழரிடையே தொடர்ந்து பாலைவனத்தில் பொழியும் மழைத் தாரைகளாகவே மண்ணுள் மடிந்து விடுகின்றன; முடிந்து விடுகின்றன. திருவள்ளுவர் காலம் முதல் இன்று வரை இதே நிலைதான். இந்நிலையை மாற்ற அரசு, சமுதாய

www.tamilarangam.net



அமைப்புகள், செயல் உருவம் கொடுக்க நாம் திட்டமிடுதல் வேண்டும்.

இந்நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் கடந்த ஓராண்டில் வேறு வேறு களங்களுக்காக உருவாக்கப் பட்டவை. என் எண்ணக் கருத்தில் விதையாகத் தோன்றிய இவற்றிற்குக் கணினி வடிவம் கொடுத்த என் தனிச் செயலர் திரு. பழ. முருகப்பனும், இக்கட்டுரைகளைத் தொகுத்துப் பார்த்துக் கருத்து வழங்கிய மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக ஆங்கிலத் துறைப் பேராசிரியரும் கவிஞருமாகிய முனைவர் பாலாவும், மீண்டும் ஒருமுறை வாசித்து உதவிய புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன விரிவுரையாளர் முனைவர் சிலம்பு நா. செல்வராசும், திருச்சிராப்பள்ளி பிசப் ஈபர் கல்லூரி விரிவுரையாளர் முனைவர் இரா. அறவேந்தனும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக மதுரை மைய ஒருங்கிணைப்பாளரும் என் துணைவியாரும் ஆகிய முனைவர் தாயம்மாள் அறவாணனும், அச்சு உருவில் கொண்டு வந்த திருமதி நந்தினி கௌதமசங்கரும் நன்றி கூறத் தக்கவர்கள்.

என் நூலைத் தொடர்ந்து வாசித்து ஊக்கப் படுத்திவரும் உலகத் தமிழ் வாசகர்கள் அனைவரும் என் நன்றிக்குரியவர்கள்.

27.09.2000
திருநெல்வேலி

**க.ப. அறவாணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உள்ளே . . .

### இயல் ஒன்று : தமிழர் இலக்கியம்

- திருவள்ளுவம் : தமிழ்ச் சமூகத்தின் முதல் எதிர்ப்புக்குரல் 17
- திருவள்ளுவச் சமூகவியல் 30
- தமிழர் சமயச் சமூகவியல் 41
- சமய அரசியலும் திருமுறைத் தொகுப்பு முயற்சிகளும் 48
- தமிழரிடையே இராமாயண மகாபாரதச் செல்வாக்கும் எதிர்விளைவும் 65
- தமிழர் கலைகள் - ஒரு சமூகவியல் அலசல் 77

### இயல் இரண்டு : தமிழர் பண்பாடு

- தமிழர் : ஒரு நூற்றாண்டு வரலாறு 85
- தமிழர் : பண்பாட்டுச் சீர்குலைவு 92
- தமிழர் : சடங்குகளும் சங்கடங்களும் 96
- சமத்துவப் பண்பாடு 99
- தேவை : அஞ்சா நெஞ்சம் 106
- மனநலம் எல்லாம் தரும் 110

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இயல் மூன்று : தமிழர் அரசியல்


- விடுதலை அரசியல் 117
- கட்டற்ற சனநாயகம் 123
- தேர்தல் : சில திருத்தங்கள் 129
- அதிபர் ஆட்சி 135
- தேவை : புதிய அரசியல் சாசனம் 142
- இனி ஒரு விதி செய்க 151
- நிருவாகச் சீர்திருத்தம் 155


## இயல் நான்கு : தமிழர் கல்வி


- கல்வி உலகில் அநேகாந்த வாதம் 160
- பண்பாட்டுக்கல்வி 167
- அறிவியல் கல்வி 180
- மானுட விளிச்சத்துக்கு உயர் கல்வி 188
- உயர் கல்விக்கு உயிர் நிலை 193
- சமுதாயக் கல்லூரிகள் 198
- பொருளடைவு 205

www.tamilarangam.net

# இயல் ஒன்று

# தமிழர் இலக்கியம்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருவள்ளுவம்: தமிழ்ச் சமூகத்தின் முதல் எதிர்ப்புக்குரல்

திருவள்ளுவரின் தொடக்கப் பெயர் திருவள்ளுவர் அன்று. தமக்குத் தாமே திருவள்ளுவர் எனப் பெயர் சூட்டிக் கொள்ளும் பழக்கம் திருவள்ளுவர் போன்ற மாமேதையிடம் இருந்திருத்தல் முடியாது. அன்றியும், திருவள்ளுவரையும், திருக்குறளையும் பாராட்டி எழுதப் பெற்ற திருவள்ளுவ மாலை 54 வெண்பாக்களை உடையது. இதில் ஒன்று குறள் வெண்பா, ஏனையவை 4 அடி வெண்பாக்கள். இவற்றுள் 46 பாக்கள் வள்ளுவர் என்றே அவர்தம் பெயரைக் குறிப்பிடுகின்றன. ஓரிரு சான்றுகள் வருமாறு:

வள்ளுவனாய்த் தந்துரைத்த [4]

வள்ளுவனார் வெள்ளைக் குறட்பா [5]

வள்ளுவன் என்பான் [8]

பரிமேலழகரும் தம் உரைப் பாயிரத்தில் வள்ளுவர் எனும் பெயரையே முன் நிறுத்துகிறார். 'வசையில் வள்ளுவன் வாய்மொழி பொருள்' என்பது பரிமேலழகரின் உரைச் சிறப்புப் பாயிரம்.

வள்ளுவர் எழுதிய தம்முடைய நூலுக்கு அவர் வைத்த பெயர் முப்பால் என்பதாகவே இருந்திருத்தல் வேண்டும். திருவள்ளுவ மாலையில் இடம் பெற்ற 15 பாடல்கள் முப்பால் என்றே சுட்டுகின்றன; வேறு சில 'குறள்' என்று சுட்டுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிகமிகப் பிற்காலத்து எழுதப் பெற்ற கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைப் பட்டயங்கள் ஆகியவற்றில் திருவள்ளுவர் பற்றிய குறிப்புகள் வந்துள்ளமை அண்மையில் கண்டறியப் பெற்றுள்ளது.*

அவற்றிலும் வள்ளுவர், முப்பால் என்ற பெயர்களே குறிக்கப் படுவது சுட்டத் தக்கது.

இன்சொல்லால் இனிது அளித்து வள்ளுவர் மரபு காத்து
முப்பால் மொழியின் படிக்கு
- பழனி வீரமுடியானர் செப்பேடு

வள்ளுவர் மரபு காத்து
முப்பால் மொழியின் படிக்கு
அல்லவை கடிந்து
நல்லவை நாட்டி
- பல்லடம் செப்பேடு

வள்ளுவர் உரைத்த முப்பால் மொழியின்படியே
செங்கோல் நீதி வழுமாமல் நாட்டி
- பூந்துறை நாட்டார் மேலோலை கி.பி. 1617

வள்ளுவர் உரைத்த முப்பால் மொழியின்படியே
அறமே அறிந்து அல்லவை கடிந்து நல்லவை நாட்டி
- காரையூர்ச் செப்பேடு

மேற்கண்ட குறிப்பில் இருந்து தெரிய வருவன.

1. மிக மிகப் பிற்காலம் வரை வள்ளுவர் என்ற பெயரும், முப்பால் என்ற பெயரும் முதன்மைப் புழக்கத்தில் இருந்து வந்துள்ளன.
2. பிற்காலத்து ஆளுவோரும், சான்றோரும் வள்ளுவ முப்பாலை முன்னிறுத்தும் பழக்கம் இருந்து வந்துள்ளது.

காலப்போக்கில் வள்ளுவர் நூலின் அருமையை அறிந்த அறிஞர் பெருமக்கள் திரு எனும் முன்னொட்டைச் சேர்த்திருத்தல் வேண்டும். அதன் பின்பே திருவள்ளுவர், திருக்குறள் என்ற வழக்காறுகள் வந்திருத்தல் வேண்டும். தமிழில் எழுதப் பெற்ற மிகச் சிறந்த நூலுக்கும், நூலை எழுதிய மிகச் சிறந்த அறிஞருக்கும் திரு எனும்

* (செ. இராசு, ஆவணங்களில் திருவள்ளுவரும், திருக்குறளும், வள்ளுவம், நவம்பர் திசம் 1999).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒட்டு, பெயர் முன்பு சேர்க்கப்பட்டதால் திரு எனும் சொல்லே ஒரு பெரும் சிறப்பை எய்தி இருத்தல் வேண்டும். 'திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என விரிவாகப் பேராசிரியர் திருக்கோவையாருக்கு உரை எழுதுவதும் இங்கே கருதத் தக்கது. திருக்குறளை ஒட்டித் திரு என்ற சொல் பெற்ற சிறப்பின் பின் விளைவே தேவாரம் முதலானவை கல்வெட்டுகளில் முதன் முதலாகத் 'திருப்பதிகம்' எனப் பாராட்டப் பெற்றன. சைவத் தேவாரங்கள் அடங்கிய தொகுப்பு 'திருமுறை' எனக் குறிக்கப் பட்டதும், சைவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடப் பெற்ற தலங்கள் 'திரு' என முன்னொட்டுப் பெற்றதும் ஆகும்.

திரு எனும் சிறப்புச் சொல் திருக்குறளை ஒட்டிப் பெற்ற புனிதத் தன்மை பிற்காலத்தில் சமசுகிருதம் உள்ளிட்ட பிற மொழி களுக்கும் 'ஸ்ரீ' என உருமாறிப் பரவி இருக்க இடம் இருக்கிறது.

தமிழ் இன வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திருவள்ளுவரே தம் சமகாலத் தமிழ்ச் சமுதாய, அரசியல், பொருளியல் போக்குகளை எதிர்த்தவர் ஆதல் வேண்டும். தம் கால மானுடர் தமிழர் மீது திருவள்ளுவருக்குச் சீற்றம் மிகவாக இருந்துள்ளது. அவர்தம் கோபம் 'கயமை' எனும் (108) அதிகாரம் வழித் தெள்ளெனப் புலப்படுகிறது. அதனுடன், மரம் என்றும் மிருகம் (விலங்கு) என்றும் அவர் திட்டுவதாலும் தெளிவாகிறது.

**மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ**
**டியைந்துகண் ணோடா தவர்** 576

**உரமொருவற் குள்ள வெறுக்கைய ஃ தில்லார்**
**மரமக்க ளாதலே வேறு** 600

**அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர்** 997

படிக்காத மக்களை 'விலங்கு' என்று சாடுகிறார்.

**விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்**
**கற்றாரோ டேனை யவர்** 410

எனவே, இவரை முதல் எதிர்ப்பாளர் (Protestant) எனக் குறிக்கலாம். சமகாலத் தமிழர்கள் பின்பற்றிய நெறிமுறைகளைத் திருவள்ளுவர் எதிர்த்தமையைப் பின்வருமாறு பட்டியல் இடலாம்.:

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. கி.பி. 2ஆம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழ்நாட்டில் தமிழர் சமயம் பரவி இருந்தது. இந்நிலையில் வட இந்தியாவில் இருந்து ஆரிய மதமும், தொடர்ந்து ஆரியத்திற்கு எதிரான சைன, பௌத்த மதங்களும் தமிழ்நாட்டில் பரவின. தமிழரிடையே இச்சமயங்கள் தமிழர் சமயத்தை மறக்க வைத்தன, புதிய சமயங்களைப் பின்பற்றுவதில் பிளவுகளை ஏற்படுத்தின. சமயப் பகைமையும், மக்களிடையே சமயத்தை முன்னிறுத்திய பூசல்களும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. இச்சூழலில், திருவள்ளுவர் சமயக் காழ்ப்பை ஒழிக்க விரும்பி இருத்தல் வேண்டும். எனவேதான் கடவுள் வாழ்த்தில் சமயச் சார்பு எதனையும் வெளிப்படையாகப் புலப்படுத்த வில்லை. அனைத்துச் சமயங்களுக்கும் வேறான வழிபாட்டை மட்டும் முன்னிறுத்துகிறார். சுருக்கமாகக் கடவுளை உடன்படுகிறார்; சமயங்களை உடன்படவில்லை.

2. ஆரிய மதப் பரவுதலால் தொழில் அடிப்படையில் பிரிந்து இருந்த தமிழர்கள் வருண அடிப்படையிலும், சாதி அடிப்படை யிலும் பிரியத் தொடங்கினர்; வேறுபாடு காணத் தொடங்கினர். இதை ஒழித்துக் கட்டவே,

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான் - 972

> மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
> கீழல்லார் கீழல் லவர் - 973

எனத் திருக்குறளை யாத்தார். அதனுடன் கல்வி மூலம் (அதிகாரம் 40) மேன்மை, கீழ்மை என்ற பிறப்பு அடிப்படையிலான வேறுபாடு ஒழிக்கப்பட்டுவிடும் என்று வற்புறுத்தினார்.

> மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
> கற்றார் அனைத்திலர் பாடு - 409

3. பண்டைய தமிழர் வாழ்க்கை அகம், புறம் என இரண்டாகப் பகுக்கப்பட்டிருந்தது. இன்பம் தொடர்பான அகம் முன்னிறுத்தப் பட்டிருந்தது. பின்னாளில் இவை இரண்டும் விரிவடைந்து இன்பம், பொருள், அறம் எனத் தொல்காப்பியரால் நிரல் படுத்தப்பட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை - களவியல் 89

இங்கும் இன்பம் முன்னிறுத்தப்பட்டிருந்தது. திருவள்ளுவருக்கு இது உடன்பாடு அன்று என்பது மெய் உணர்தல் எனும் அதிகாரத்தில் மொழிந்துள்ள கருத்தால் புலப்படுகிறது.

காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் - 360

எனவேதான், இம்முறையைத் தலைகீழாக மாற்றி அறம், பொருள், இன்பம் என அமைத்துள்ளார். இவ்வரிசையைத் திருவள்ளுவரே திட்டமிட்டுச் செய்தனர் ஆதல் வேண்டும்.

தான் செய்த வரிசை தமிழரைப் பொறுத்த அளவிற்கு மிகச் சரி எனுங் கருத்துத் துலங்க திருவள்ளுவர்

அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல 39

எனத் தெளிவுபடுத்தலும், 'அறன் வலியுறுத்தல்' எனும் அதிகாரத்தைத் (4) தனியாக வகுத்திருத்தலும் கருதத் தக்கவை. 'வரைவின் மகளிர்' (92) எனும் அதிகாரத்தின் மூலம் சங்ககாலத்தில் இயல்பாகப் பின்பற்றப்பட்டு வந்த பரத்தமையைக் கடிதலும் இங்கே சுட்டிக் காட்டத்தக்கது. இன்பத்திற்கு என ஒரு தனிப் பாலையும், சிக்கனத்திற்குப் பெயர் போன திருவள்ளுவர் 250 திருக்குறள் பாக்களையும் எழுதியிருந்தும், சங்ககாலத்தில் கருதப்பட்ட பரத்தையர் பிரிவை இணைக்காதது சேர்த்துக் கருதத் தக்கது. சங்ககால அதி இன்ப வாழ்விற்குத் திருவள்ளுவர் முதல் எதிர்ப்பாளர் என்பது தெளிவு.

திருவள்ளுவர் புதுவதாகச் சேர்த்த ஓர் அதிகாரம் 'பிறனில் விழையாமை' (15) ஆகும். திருவள்ளுவருக்கு முன்பு இக்கருத்து தமிழ் இலக்கியங்களில் பேசப்பட்டதாகத் தெரிய வில்லை. திருவள்ளுவர் முன் எடுத்துப் பேசுவதற்குத் தனிக் காரணம் இருத்தல் வேண்டும்.

4. திருக்குறளில் புதுவதாக இடம் பெற்ற கருத்துருக்களுள் பிறனில் விழையாமை என்பது மிக முதன்மையானது. திருவள்ளுவத்துக்கு முன்பு இக்கருத்து சங்க இலக்கியத்துள் எங்கும் இடம் பெற வில்லை என்பது வினாவுக்கு உரியதாகவும், வியப்புக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உரியதாகவும் இக்கின்றது. முதன் முதலில் இக்கருத்து ஏன் எடுத்து ஓதப் பெற்றது என்பது வினவத் தக்கது.

கிருத்துவம், பௌத்தம் ஆகிய சமயங்களின் வரலாறு இதற்கு விடையளிக்கிறது. ஜெர்மனியைச் சார்ந்த மார்ட்டின் லூதரால் (1483-1546) அதுவரை நடைமுறையில் இருந்த கிருத்துவத்துக்கு எதிர்க்குரல் எழுப்பப்பட்டது. அப்போதைய கிருத்துவம் திருமணம் செய்து கொள்ளாத துறவியரைக் கொண்டும், இத்தாலி ரோம் நகரில் உள்ள போப்பைத் தலைமையாகவும் கொண்டும் இயங்கியது. துறவியருடைய ஒழுக்க நெறி பற்றிக் கடுமையாகச் சாடப்பட்டது. பிறரின் மனைவியரோடும் ஆங்காங்கே துறவியர் கள்ள உறவு கொண்டிருந்தனர். இது கண்டுபிடிக்கப் பட்டது. பிறனில் விழைதல் பற்றிய பேச்சும் பைபிளில் இடம் பெற்றிருந்தது. பௌத்த சமயத் துறவியரிடமும் இது போன்ற போக்குக் காணப்பட்டது. ஆரிய புராணக் கதைகளிலும், துறவியர்களின் ஒழுக்கக் கேடு இடம் பெற்றுள்ளது. கௌதம முனிவரின் மனைவியைத் தேவேந்திரன் பெண்டாடியது முதலாயவற்றைச் சுட்டலாம்.

திருவள்ளுவர் முதன் முதலாகப் பிறனில் விழைதலைப் பற்றிப் பேசுதற்குத் துறவியரால் ஏற்பட்ட அக்கால நிலைமையும் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

5. ‘இரவு அச்சம்’ (107), ‘கயமை’ (108), ‘கள் உண்ணாமை’ (93), ‘கொல்லாமை’ (33), ‘சிற்றினம் சேராமை’ (46), ‘சூது’ (94), ‘புலால் மறுத்தல்’ (26), ‘ஆள்வினை உடைமை’ (62), ‘பெண்வழிச் சேறல்’ (91), ‘வரைவின் மகளிர்’ (92) ஆகிய அதிகாரக் கருத்துகள் அனைத்தும் சமகாலச் சமுதாயத்தில் மக்களால் பின்பற்றப்பட்டு வந்த பழக்கவழக்கங்களை மறுதலிப்பன ஆகும். திருவள்ளுவர் சமகாலத்தை மறுதலிக்க மேற்கொண்ட கொள்கை ஒவ்வொன்றும் விரிவாக அவர் காலச் சமுதாயப் பின்னணியில் ஆராயத் தகுந்தவை.

திருக்குறள் ஆரிய சமயத்தால் எதிர்க்கப்பட்டதற்குத் திருவள்ளுவரின் சமகால எதிர்ப்புக் குரலே தலைமைக் காரணமாக இருந்திருத்தல் வேண்டும். திருவள்ளுவருக்கு முன்பு எழுதப்பட்ட தொல்காப்பியம் முதலான தனி ஆசிரியர் நூல்கள் அரசன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்க, திருக்குறள் எனும் பெரு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நூல் அரங்கேற்ற வாய்ப்பை இழந்தது தற்செயலான நிகழ்வு அன்று.

திருவள்ளுவருக்கும், திருக்குறளுக்கும் எதிர்ப்பு இருந்ததைத் திருவள்ளுவர் தொடர்பாக வழங்குகின்ற தொன்மக் கதைகளும் வற்புறுத்துகின்றன.

> தமிழ்ப் புலவர்கள் சங்கத்தில் அரங்கேற்றுவதற்குக் கொண்டு வரும் நூல்களை அவர்கள் படித்து விளக்கும்போது, சங்கப் புலவர்கள் கீழறையிலுள்ள சிலரைக் கொண்டு அவற்றை எழுதுவித்து, பிறகு அந்நூல்கள் சங்கத்திலும் உள்ளன என்று கூறி அவற்றை எடுத்துக் காட்டி, அன்னோரை அவமதித்து அனுப்பி வந்தனர் என்றும், அவ்வடாத செயலை ஒழிக்க வேண்டி இடைக்காடனாரும் ஆசிரியர் திருவள்ளுவனாரும் முறையே ஊசிமுறியும், திருக்குறளும் இயற்றிக் கொண்டு தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றனர் என்றும், அப்போது ஊசிமுறிப் பாடல்களைக் கீழறையிலிருந்தோர் தம் செவி யுணர்வு கொண்டு எழுத முடியாமையால் சங்கப் புலவர்கள் தம் செயலில் தோல்வியுற்றனர் என்றும், பிறகு திருக்குறள் அரங்கேற்றப் பெற்றபோது அந்நூலாசிரியரோடொப்பச் சங்கப் புலவர்கள் வீற்றிருக்க இயலாமையால் சங்கம் அழிவுற்ற தென்றும், எனவே திருக்குறள் அரங்கேற்றமே கடைச்சங்கம் வீழ்ச்சி எய்தியமைக்குக் காரணமாகும் என்றும் கூறுகின்றனர். அன்னோர் கொள்கைகள் வலியுடையனவா என்பது ஆராயற் பாலதாகும்.*

திருவள்ளுவர் காலச் சமுதாயத்தில் ஆரிய சமயம் மேலோங்கிய நிலையிலும், சைன, பௌத்த மதங்கள் அடுத்த நிலையிலும் இருந்திருத்தல் வேண்டும். சைன, பௌத்த மதங்களைச் சார்ந்திருந்த களப்பிரர் வீழ்ச்சி (கி.பி. 575இல்) பாண்டியன் கடுங்கோன் ஆட்சியில் ஏற்பட்டது. இவ்வீழ்ச்சியை ஒட்டி ஆரிய சமயமும், ஆரியத்தையும், ஆரிய வட மொழியையும் ஏற்றுக் கொண்ட தேவார, திருவாசகச் சமயமும் மேலெழுச்சி பெறலாயின. இவ்வெழுச்சியே பக்தி இயக்கம் எனக் குறிப்பிடப்படுகிறது. பக்தி இயக்கம் ஆரியச் சார்பானது என்பதால் திருவள்ளுவத்தை வரவேற்றுப் போற்றினதாகச் சான்றுகள் இல்லை. தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியபிரபந்தம் ஆகிய பக்திப் பாடல் களில் திருவள்ளுவம் எங்கும் போற்றிக் குறிப்பிடப்படவில்லை.

* (டி.வி. சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு, பக். 10)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாறாக, திருக்குறளை ஓதுதல், செய்யக் கூடாத செயலாகக் கருதப்பட்டது. ஆண்டாள் எழுதிய திருப்பாவையில்

**'வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத் துயின்ற பரமன் அடிபாடி**
**நெய் உண்ணோம் பால் உண்ணோம் நாள்காலே நீர்ஆடி**
**மை இட்[டு] எழுதோம் மலர்இட்டு நாம் முடியோம்**
**செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றுஓதோம்**
**ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி**
**உய்யுமா[று] எண்ணி உகந்து ஏல்ஓர் எம்பாவாய்'.**

எனும் வரி இடம் பெற்றுள்ளது. குறளை எனவரும் சொல் திருவள்ளுவர் செல்வாக்குப் பெற்ற பிற்காலத்தில் புறம் கூறுதலைக் குறிப்பதாக உரை விளக்கம் தரப்பட்டது. ஆனால், இது மெய்யான விளக்கம் அன்று. புறம் பேசுதலைப் புறம் கூறுதல் என்பதே மரபு. ஓதுதல் என்பது மரபு அன்று. எனவே, ஆண்டாளால் குறிப்பிடப் பட்ட தீக்குறளை என்பதற்குத் தீயதான திருக்குறள் என்பதே பொருளாகும். செய்யாதன செய்யோம் என்று முற்பகுதியில் கூறிவிட்டு அதனை விளக்கும் முகமாகத் திருக்குறளை ஓதுதல் செய்யக் கூடாத செயல், அதைச் செய்ய மாட்டோம் என்பது கருத்து. காஞ்சி சங்கராச்சாரியார், இதே கருத்தைக் 'கல்கி' ஏட்டுக் கேள்வி - பதில் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இம்மட்டுமின்றித் திருக்குறள் ஆரிய வேதங்களுக்கும், ஆரிய நூல்களுக்கும் சமமானது அன்று, தாழ்வானது எனுங் கருத்தும் அக்காலத்துப் பரப்பப்பட்டது. அதனை மறுக்கும் முகமாகத் திருவள்ளுவ மாலையில் சில செய்யுள்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வாரிய வேத மறுப்பு பின்வரும் மூன்று நிலைகளில் இருந்தது.

1. ஆரிய வேதத்திற்குச் சமமானது திருக்குறள்.
2. ஆரிய வேதங்களைவிட உயர்வானது.
3. ஆரிய வேதங்கள் மட்டுமில்லாமல், ஆரிய நூல்களைவிட உயர்ந்தது.

திருவள்ளுவமாலையில் சரசுவதி பாடியுள்ளதாக இடம் பெற்றுள்ள பாடலில் (2) சரஸ்வதி சொல்வதாக ''முதலில் ரிக் முதலான

www.tamilarangam.net



நான்கு வேதங்களையும் பாடினேன்; இடைக்காலத்தில் பாரதத்தைப் பாடினேன்; அதற்கும் பிற்பட்ட கடைசிக் காலத்தில் திருக்குறளைப் பாடினேன்'' என்றும், உக்கிரப்பெருவழுதியார் பாடலில் (4) நான்கு வேதங்களில் சொல்லப்பட்ட முப்பொருளைத் திருவள்ளுவர் தந்துரைத்தார் என்றும் கருத்து இடம் பெற்றுள்ளது. இதே கருத்து கோதமனார் பாடலிலும் எதிரொலிக்கிறது (15).

''ஆற்றல் அழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதார் - ஏட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று''

வடமொழி மனிதனால் உருவாக்கப்படாது, கடவுளால் படைக்கப் பட்ட மொழி, எனவே, செய்யா மொழி. வடமொழியில் உள்ள வேதங்களுக்கு உரியவர் அந்தணர். திருவள்ளுவர் மொழி பொய்யா மொழி; அதற்கு உரியவர் அனைத்து மக்களும் எனுங் கருத்தில் வெள்ளிவீதியார் பாடுகிறார் (23).

''செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருள்ஒன்றே - செய்யா
அதற்குரியர் அந்தணரே ஆராயின் ஏனை
இதற்குரியர் அல்லாதார் இல்''

மாங்குடி மருதனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிகண்ணனார் ஆகியோர் பாடல்களிலும் இக்கருத்து இடம் பெற்றுள்ளது.

பெருஞ்சித்திரனார் (32) பாடலில் வேதத்தைவிட 'ஓதிய ஒண் பொருள் எல்லாம் உரைத்ததனால் திருவள்ளுவம் உயரியது' எனுங் கருத்து காட்டப்படுகிறது.

ஆரியம், தமிழ் இரண்டையும் வேதம் திருக்குறள் பின்னணியில் ஒப்பிட்டு வண்ணக்கஞ் சாத்தனார் எழுதும் பாடல் இங்கே சிறப்பாகச் சுட்டிக்காட்டத் தக்கது.

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனின் இது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால் - ஆரியம்
வேதம் உடைத்துத் தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து - [திருவள்ளுவமாலை 43]

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வனைத்திற்கும் உச்சமாகப் பாரதம், இராமாயணம், மனுசுமிருதி, பண்டைய வேதங்கள் ஆகிய அனைத்தும் சேர்ந்தும் கூடத் திருக்குறளுக்கு நிகராக முடியாது எனுங் கருத்தில் பாரதம் பாடிய பெருந்தேவனார் எழுதியுள்ளார் (30).

திருவள்ளுவ மாலைக்கு உள்ளேயே புதுவதாகக் குரல் ஒன்று மாமூலனாரால் ஒலிக்கப்படுகிறது (8). இப்பாடலில் மறந்தாய வள்ளுவன் என்பான் ஓர் பேதை அவன் சொல் கேளார் அறிவுடையார் எனும் அடிகள் இடம் பெற்றுள்ளன. திருக்குறள் வடித்தெடுத்த மேதையைத் திரு என முன்னொட்டு இடாமல் வள்ளுவன் என்று பழிப்பவன் ஒப்பற்ற முட்டாள் ஆவான்; அம்முட்டாளின் சொல்லை அறிவுடையவர் ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பது இப்பாடற் கருத்தாகும். திருவள்ளுவர் வேத விளக்கம் பாடியவர் அல்லர்; வேதத்தை எதிர்த்துப் பாடியவர் என்பதற்கு நூல் உள்ளே நிறையச் சான்றுகள் உள்ளன. கடவுள் வாழ்த்தில் ஆரியக் கடவுளர் யாரையும் முன்னிறுத்திப் பாடாதது முன்பே சுட்டப்பட்டது. இது மட்டுமின்றி ஆரிய முறைப்படி மக்கள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் தொழிலும் வரையறுக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| 1. | பிராமணர் | ஓதுதல், ஓதுவித்தல் |
| 2. | சத்திரியர் | போர் புரிதல் |
| 3. | வைசியர் | வணிகம் செய்தல் |
| 4. | சூத்திரர் | உழவு |

இதனுடன் பிராமணர் - ஓதுதலுடன் வைதிக மதங்களும், சத்திரியர் - போர் புரிதலுடன் பௌத்த மதமும், வைசியர் - வணிகம் செய்தலுடன் சமண மதமும், சூத்திரர் - உழவுத் தொழிலுடன் தமிழர் ஆதிசமயமும் ஆழமாக ஒருங்குபட்டிருந்தன.

உழைப்போடு தொடர்புடைய உழவுத் தொழில் தாழ்வாகக் கருதப்பட்டதுடன், அத்தொழிலைச் செய்யும் சூத்திரத் தமிழர்கள் வருணத்திலும் கடைசிப் பிரிவு மக்களாகக் கருதப்பட்டார்கள். உழவுத் தொழில் இழிதொழிலாகக் கருதப்பட்டது. உழவர்கள் பிராமணர்களுக்கு உரிய ஓதுதல் தொழிலைச் செய்யக் கூடாது

www.tamilarangam.net



என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு யாரேனும் செய்வாராயின் அவரை ஊரை விட்டே துரத்திவிடப் பிராமணர் களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.*

பெரும்பான்மை மக்கள் செய்யும் தொழிலாக உழவு இருப்பதுடன், ஏனைய மூன்று பிரிவினர்க்கும் சோறு இடும் தொழிலாகவும் உழவுத் தொழில் இருந்தும், அது கடைநிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. இது வேத விதியாகும். திருவள்ளுவர் இதனை முற்றுமாக மறுத்து, உழவு எனும் தனி அதிகாரத்தை வகுத்துப் பத்துத் திருக்குறள் பாக்களையும் (1031 - 1040) படைத்துள்ளார். இப்பத்துப் பாக்களில் அவர் குறிப்பிடும்.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் [1031]

உழுவார் உலகத்தார்க்கு ஆணி [1032]

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் [1033]

எனுங் கருத்துப் பாக்கள் உழவுத் தொழிலை மிக உயரிய தொழிலாகத் திருவள்ளுவர் கருதினார் என்பதற்குச் சான்று. இவ்விடத்தில் ஆடம்ஸ் மித் எனும் பொருளாதார அறிஞர் தாம் எழுதியுள்ள Wealth of Nations எனும் நூலில் குறிப்பிடும் பிரான்சு நாட்டு நிலையைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும். அவர் குறிப்பிடுவதாவது:

*Could it be that Valluvar was an anticipator of the Physiocrats of the eighteenth-century France? The Physiocrats held that land alone produced a net product, and agriculturists alone were the productive class. The artificers, manufacturers and merchants were, according to this school, an unproductive class. Explaining their theory, Adam Smit wrote.*

> *"The unproductive class, that of merchants, artificers and manufacturers is maintained and employed altogether at the expense of the two other class, of that of proprietors, and of that of cultivators. They furnish both with the materials of its work and with the fund of its subsistence, with the corn and cattle which it consumes while it is employed about the work. The proprietors and cultivators*

* (மனு 12, அ 9/225 மற்றும் அ 10/.99).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*finally pay both the wages of all the workmen of the unproductive class, and the profits of all their employers".**

மற்றவரிடம் சென்று பிச்சை எடுத்தலைச் சமணம், பௌத்தம், ஆரியம் ஆகிய அனைத்து மதங்களும் ஏற்றுக் கொண்டிருந்தன. துறவிகளுக்குப் பிச்சை போடுவது இல்லறத்தார் கடமை எனுங் கருத்து அச்சமயங்களால் வற்புறுத்தப்பட்டது. பிச்சை எடுத்தல் தவறு என்பதைத் திருவள்ளுவர் அழுத்தம் திருத்தமாகத் தாம் எழுதிய 'இரவு அச்சம்' (107) எனும் அதிகாரத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆரிய, சைன, பௌத்த சமயங்கள் மிக வற்புறுத்திய தத்துவம் விதி தத்துவம் ஆகும். இவ்விதி, வினை, கர்மா, தலையெழுத்து எனப் பலவேறாக வழங்கப்பெறும். பழந் தமிழில் ஊழ் என்றும் இது குறிக்கப் பெற்றது. இந்தியரையே ஆட்டிப் படைத்த, படைக்கும் தத்துவம் இது ஆகும். தமிழர் முயற்சி இல்லாமல் முறிந்து போனதற்கு இத்தத்துவத்தின் பங்கு மிகப் பெரியது ஆகும். திருவள்ளுவரே முதன் முதலில் இத்தவறான நம்பிக்கைக்கு எதிர்க் குரல் கொடுத்தார். ''ஆள்வினை உடைமை'' (62); ''ஊக்கம் உடைமை'' (60) எனும் அதிகாரங்கள் தலையெழுத்துத் தத்துவதத்திற்கு எதிராக எழுதப்பட்ட நம்பிக்கை வாசகம் ஆகும்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்** 620

ஆரியர் இடையேயும், அவர் வழியாக நம்மிடையேயும் வெகுவாகப் பாராட்டப்படும் நூல் கண்ணன் அருளிய பகவத்கீதை யாகும். இதில் கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே எனும் வாசகம் மிகப் பெரியதாகப் பேசப்படும். திருவள்ளுவர் இக்கருத்திற்கு முழுதும் மாறான கருத்துடையவர் ஆவார். கடமைக்குக் கூலி வேண்டும், கிடைக்கும் எனுங் கருத்தில்

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்** 619

என எழுதியுள்ள குறள் சான்றாகும்.

இத்துணை மக்கள் வளர்ச்சிக்குரிய திருவள்ளுவக் கருத்துகள் தமிழரிடையே பரவாமல் போனமைக்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றுள் முதன்மையானவை ஒருசில வருமாறு.

* *(Thirukkural 1959-60 to 1968-69, University of Madras, P:83)*

www.tamilarangam.net



1. உணர்வு வழி ஒழுகும் தமிழரை அறிவு வழி மாற்றும் முயற்சி திருவள்ளுவர்தம் முயற்சியாக இருந்தது. இது தமிழர்க்கு ஏற்பானதாக இல்லை. குறிப்பாக, மத மறுப்பு, சாதி மறுப்பு, கள், சூது முதலானவற்றின் மறுப்பு திருவள்ளுவர்தம் குறிக் கோளாக இருந்தது காரணமாகும்.

2. செருசலத்தில் பிறந்த ஏசு தம் கருத்துகளைத் தாமே ஏழை எளிய மக்களிடம் எடுத்துச் சென்று பரப்பினார். அவருடன் அவர்தம் சீடர்களும் சேர்ந்து கொண்டனர். இவ்விரு முயற்சிகளுக்கு மேல்ாக ஏசுவின் கருத்துகளால் கவரப்பெற்ற ரோம அரசர்கள் ஐரோப்பாவிற்கு அச்சமயத்தை எடுத்துச் சென்று ஏசுவின் கருத்துகளைப் பரப்பியதுடன், அவர்கள் சென்ற உலக நாடுகள் எங்கிலும் அக்கருத்துகளைப் பரப்பினர். மெக்காவிலும், மதினாவிலும் புதிய கருத்துகளைத் தோற்றுவித்த அண்ணல் நபி, அவர்தம் கருத்துக்களை அவரே பல்வேறு இடங்களில் சென்று பரப்பினார். அவருக்குப் பின் இறைத் தூதுவர்கள் நபியின் கருத்துக்களை நாடெங்கும் பரப்பினர். தொடர்ந்து அராபிய அரசர்கள் நபியின் கருத்துக்களால் ஈர்க்கப் பெற்றுத் தம் நாடுகளிலும், தாம் சென்ற நாடுகளிலும் பரப்பினர்.

3. இந்தியாவில் புத்தர் போதிமரத்தின் அடியில் பெற்ற புதிய சிந்தனையை ஊர்தோறும் நடந்து சென்று மக்களிடையே நேர்முகமாகப் பரப்பினார். அவருடைய கருத்துப் பரவுதலுக்குத் தலைமைச் சீடர் ஆனந்தர் மிகவும் உதவியாக இருந்தார். சீடர் பலரும் புத்த கருத்தைப் பல்வேறு இடங்களுக்குப் பரப்பினர். எல்லாவற்றுக்கும் மேலாக மௌரியப் பேரரசன் அசோகன் உலகம் முழுதும் பௌத்த மத்ததை எடுத்துச் சென்றான்.

ஏசு, நபி, புத்தர் ஆகியோருக்கு வாய்த்தது போலத் திருவள்ளுவருக்குச் சீடர்களும் வாய்க்க வில்லை, அரசர்களும் வாய்க்க வில்லை, அவரும் நேர்முகமாக மக்களிடம் சென்று கருத்துப் பரப்பும் முறையைச் செய்ய வில்லை. இந்நிலையே திருவள்ளுவர் தோன்றிய காலம் தொடங்கி அண்மைக் காலம் வரை நடந்து வந்தது. எனவே, கருத்துக் களஞ்சியமாகத் திருக்குறள் விளங்கினாலும், அது பின்பற்றப்படும் நெறியாகப் போற்றப் படாமல் இலக்கியப் பொருளாக மட்டும் இருந்து விட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருவள்ளுவச் சமூகவியல்

## பகுதி ஒன்று

இருபதாம் நூற்றாண்டின் அறிவு சார்ந்த கண்டுபிடிப்புகளில் கார்ல் மார்க்சின் பொதுவுடைமைக் கோட்பாடும், சிக்மண்ட் பிராய்டின் உளவியல் கோட்பாடும், சார்லஸ் டார்வினின் உயிரியல் கோட்பாடும், ஆகஸ்ட் கோம்த்தின் சமூகவியல் கோட்பாடும் மிக முதன்மையானவை; இதற்கு முன்பு கண்டுஅறியப் படாதவை. இந்த நால்வருடைய கண்டுபிடிப்புகள்தாம் உலகச் சமுதாயத்தையே ஆட்டிப் படைத்தன; மாற்றி அமைத்தன. இவை அனைத்தும் காரண காரியங்களுக்கு உரிய தரவுகளை மையமாக வைத்து அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்து நிறுவப்பட்டவை. மானுட வாழ்வில் உள்ளத்திற்கு உரிய பங்கும், சமுதாயத்திற்கு உரிய பங்கும் பிராய்டினாலும், ஆகஸ்ட் கோம்த், எமில் துர்க்கேம் எனும் சமூகவியல் அறிஞர்களாலும் முன்னிலைப்படுத்தப் பட்டன.

தனி மனித வாழ்க்கையின் அமைதிக்குத் தனி மனிதனின் மனம் ஓர் அடிப்படையாக விளங்குகிறது. சமுதாயம் பிறிதோர் அடிப்படையாக விளங்குகிறது. இந்த இரண்டு அடிப்படையையும் வைத்து இனத்தையே சமுதாய உளவியல் பார்வையில் ஆராயத் தொடங்கினர்; விளக்கினர். இதில் மார்க்கரேட் மீட், ரூத் பெனடிக்ட் எனும் சமுதாய உளவியல் அறிஞர்களின் ஆராய்ச்சிகள் முதன்மை யானவை. தனி மனிதனிடம் உள் பொதிந்துள்ள அருவமான உள்ளத்தை ஆராயும் இயல் மனம் இயல் எனக் கண்டறியப்பட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள இயல் அறிஞர்களால் வளர்க்கப் பெற்றது. உளஇயல் அறிஞர்களால் மனஇயல் சாத்திரம் தனிப்பெரும் அறிவியல் துறையாக வளர்க்கப் பெற்றது. அதனைப் போலவே ஒட்டுமொத்தக் கூட்டுச் சமுதாயத்துக்கும் மனப்போக்கு என்ற ஒன்று இருக்கிறது என்று கண்டறியப்பெற்று, சமுதாய இயல் என்றும், சமுதாய உள இயல் என்றும் தனித்த துறைகளாக வளர்க்கப் பெற்றன. இவை கடந்த நூற்றாண்டில் ஐரோப்பிய மண்ணில் நிகழ்ந்தவை.

1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவள்ளுவ மேதை தனி மனித மனத்தையும், சமுதாய மனத்தையும் வேறுபடுத்தி உள இயலை, மனம் என்றும், சமுதாய இயலை இனம் என்றும் பிரித்து எடுத்து விளக்கியுள்ளார்.

ஒரு மனிதன் முழுமையாக மனநிறைவுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்க, மனமும் சமுதாயமும் காரணங்களாக இருக்கின்றன என்பதைத் திருவள்ளுவர் கண்டறிந்துள்ளார். பொருட்பாலில் சிற்றினம் சேராமை எனும் அதிகாரக் கருத்தைச் சமுக உளவியல் எனும் இருபதாம் நூற்றாண்டின் அறிவுடன் பொருத்திப் பார்க்கும் போது இச்செய்தி புலப்படுகிறது.

சமுதாயத்தைத் திருவள்ளுவர் இனம் எனும் சொல்லீட்டால் சுட்டுகிறார்.

**மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்**
**இன்னான் எனப்படுஞ் சொல்** 453

**மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துள தாகும் அறிவு** 454

**மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனந்தூய்மை தூவா வரும்** 455

**மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு**
**இல்லைநன் றாகா வினை** 456

**மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்** 457

**மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப் புடைத்து** 458

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து 459

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல் 460

இந்தக் குறட்பாக்களில் மனம், இனம் என்ற இரண்டையும் சேர்த்து விளக்கியது மிகப் பெரிய வியப்பான ஒன்று. ஒருவனின் மனநலம் சிறப்பாக இருந்து, சமுதாயம் எனும் இன நலம் சிறப்பாக இல்லையென்று சொன்னால், அவன் உயர்வாகக் கருதப்படுவது இல்லை.

சமுதாயவியல் என்பது 19ஆம் நூற்றாண்டின் நடுப்பாதியில் தொடங்கி வளர்ந்த ஓர் அறிவியல் ஆகும். மக்கள் கூட்டமாக அடங்கி இருக்கும் மக்கள் தொகுதியின் இடையே நிலவி இருக்கும் உறவையும், அதற்குரிய காரண காரியங்களையும் ஆராய்கின்ற அறிவியல். ஆகஸ்ட் கோம்த் (1798-1857), தொடங்கித் தற்போது மிகப் பெரியதாக வளர்ந்துள்ளது.

சமுதாய உளவியல், சமுதாயவியலில் இருந்து கிளைத்து வளர்ந்த ஒன்றாகும். தனி மனிதனின் மன இயலை ஆராய்வது உளவியலாகும். தனி மனிதனின் நடத்தை, அனுபவம் ஆகியவை மற்றவர்களுடன் இணையும்போதோ, குழுக்கள், கழகங்கள் போன்றவற்றைச் சார்ந்து இருக்கும்போதோ அந்தத் தனி மனிதன் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை அறிவியல் முறையில் ஆராய்வது சமுதாய உளவியல் ஆகும்.

சமுதாய உளவியலைப் பயன்படுத்தி உலகில் உள்ள மக்களின் போக்கை ஆராய்ந்து கருத்து உரைத்துள்ளனர்.* சான்றாக:

*அமெரிக்கர்*

கடின உழைப்பாளியர், வணிக நோக்கினர், தனக்குத் தானே உதவி செய்து கொள்ளும் பண்பினர், சுதந்திரம், நீதி, செவ்வைப் பாடு ஆகியவற்றில் நம்பிக்கை உள்ள நல்லதே நடக்கும் எனும் கருத்தினைக் கொண்டவர்.

---

* ஆதாரம் : Philip Holden, **Super Success, Discover Your True Potential and get what you want out of life!**, Magna Publishing Co. Ltd., Mumbai - 400 025, 1998.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### பெல்ஜியர்

பெல்ஜியரிடையே பிளம்மிஷ் எனும் மொழி பேசும் ஃபிளாண்டர் என்போர் வடபகுதியிலும், பிரஞ்சு மொழி பேசும் வல்லோனியர் என்போர் தென்பகுதியிலும் இரு பிரிவினராக உள்ளனர். பிரஞ்சு பேசும் பெல்ஜியர் தேசிய உணர்வு கொண்டவர். வல்லோனியர் தம் இனத்திற்கு முதல் நிலையும், தம் ஐரோப்பிய இனத்திற்கு இரண்டாம் நிலையும், பெல்ஜியர் எனும் தம் நாட்டிற்கு மூன்றாம் நிலையும் வழங்குகிறவர். பிளம்மிங் மக்கள் தம் மொழி மீது உணர்ச்சிகரமான காதல் கொண்டவர்.

### ஆங்கிலேயர்

உழைப்பே உயர்வு தரும் எனும் கருத்தினர், அரசக் குடும்பத்தின் மீது பெரும் மதிப்பு உடையவர், பெரும் சுறுசுறுப்பு உடையவர். நல்லதே நடக்கும் எனும் நம்பிக்கை உடையவர்.

### பிரெஞ்சுக்காரர்

வேலையைவிடத் தம் வாழ்க்கை மீது மிகுந்த அக்கறை உடையவர். விடுமுறை, வேலையில்லாத நாட்கள், விளையாட்டு, விழாக்கள், குடும்பம் ஆகியவை மிக முதன்மையானவை என்று கருதும் போக்கினர். தங்கள் மொழி மேல் மிகுந்த அன்புடையவர்.

### செருமானியர்

மேலதிகாரியை விமர்சனம் செய்யாப் போக்கினர், வலிமை யான முடிவை உடனே மேற்கொள்ளும் நிர்வாகிகள், முன் கோபம் மனிதனின் பலகீனம் என்று கருதுகிறவர். காலம் தவறாமை, போட்டியில் வெல்லுதல், துன்பம் கண்டு தளராமை, அலுவலக வேலை மேல் ஆராக் காதல் உடையவர். தங்கள் மொழி மேல் பெரும் பற்றினர், வேலை நேரத்தில் சிரித்து விளையாடக் கூடாது என்ற கருத்தினர்.

### சப்பானியர்

தனி மனிதனை விடச் சமுதாயமே பெரிது என்று கருதுகிறவர். கூட்டு உழைப்பு, கூட்டுணர்வு, பொறுப்புப் பங்கீடு, மோதலைத் தவிர்க்கும் பண்பு, மரியாதை காட்டும் போக்கு உடையவர். தங்கள் குடும்பத்தை (கரோசி) விடத் தாங்கள் வேலை செய்யும் நிறுவனமே முதலில் முக்கியமானது என்று கருதுகிறவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படித் தமிழர்க்கும் ஓரிரு பண்பு அடையாளங்கள் உள்ளன. ''மேலே முன்னேறும் நண்டை அடுத்த நண்டு பற்றி இழுப்பது போல், தமிழர் நண்டுப் போக்கினர்'. ''கூட்டு உணர்வும், உறவும் இல்லாமல் அவிழ்த்து விட்டால் எண்திசைக்கும் பிரிந்து சிதறிப் போகும் நெல்லிக்காய் மூட்டைப் போக்கினர்''. ''திறந்த கணத்தில், புஷ் என்று ஆவேசம் காட்டி அடுத்த சில கணங்களில் ஊமையாகவும், ஆமையாகவும் அடங்கிவிடும் சோடாப்புட்டியினர்''. ''அனைத்துக்கும் அஞ்சுகிறவர்'' என்று தமிழர் அடையாளம் காட்டப்படுகின்றனர். ஒற்றுமையற்றவர், புறம் சொல்லுபவர், தம் மொழி, பண்பாடு ஆகியவற்றைத் தாழ்வாகக் கருதுபவர். இவை எல்லாம் சமுதாய அடையாளங்கள். சமுதாய அடையாளங்களை வைத்துத்தான் தனி மனிதனுடைய தரமும் முடிவு செய்யப்படுகிறது. இந்தச் சமூக உளவியல் கருத்தைத் திருவள்ளுவர்

மனநலம் நன்குடைய ராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து 458

என்றும்,

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் 457

என்றும் தெளிவுபடுத்துகிறார். சமுதாயப் பார்வையில் பண்புக் குறைவை உடைய சமுதாயம் என்று கருதப்பட்டு நிறுவப் பட்டிருப்பின், மன அளவில் உயர்ந்த மனிதனானாலும் உயர்வாகக் கருதப்படுவது இல்லை என்பதைத் திருவள்ளுவர்

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல் 543

என்று வரையறுக்கிறார்.

தமிழ்ச் சமுதாயம் கடந்த காலங்களில் ஏனைய உயர்தனி மொழியின மக்களான சீனர், யூதர், கிரேக்கர், ஆரியர் ஆகியோர் வென்றமை போல வெல்ல முடியாமல் போனதற்குத் தனிப்பெரும் காரணம் ஒன்றுண்டு. யூதம், கிரேக்கம் ஆகிய நாடுகளை அடியொற்றி வளர்ந்த கிருத்துவ மதமும், சீனத்தை ஒட்டி வளர்ந்த பௌத்த மதமும் தான் என்ற தனி மனிதன் வீடுபேற்றை அடைதலைவிட வளர்ச்சி முதன்மையானது என்று கருதின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரியமும், தமிழும் தனித்தனி மனிதன் தன் சுய வீடுபேற்றுக்காகக் காட்டுக்குச் செல்வதையும், தவம் மேற்கொள்வதையும் கடவுளிடம் வரம் பெறுவதையும், வெற்றி கொள்வதையும் முதன்மைப்படுத்தின. தனி மனிதர்களா அவர்கள் அடங்கிய சமுதாயமா என வருகிற போது, சமுதாயத்துக்கே முதன்மை கொடுத்தனர். எனவே, கூட்டுச் சமுதாயமாக அன்னோர் வளர்ந்தனர். தமிழர் தனித்தனித் திட்டு களாகத் தாழ்ந்தனர்.

இவை எல்லாம் எளிதில் மறுக்கப்பட இயலாத சமுதாய உண்மைகள்.

புகழ் பெற்ற ஆங்கிலப் படம் ஒன்று. அப்படத்தின் சாரம் இதுதான்.

> அரசக் குடும்பத்தினர் குழந்தைகளுடன் காட்டுக்குள் சிற்றுலா செல்கின்றனர். சென்ற இடத்தில் சிற்றுண்டி உண்டுவிட்டு அங்குமிங்குமாகப் பேசிக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் மனிதக் குரங்குகள் இரண்டு, மூன்று, உண்ட உணவு எஞ்சி இருக்கும் பகுதிக்கு ஓடி வந்தன. அப்பகுதியில் ஓர் ஆண் குழந்தையும் இருந்தது. வந்த குரங்குகள் பண்டங்களுடன் அந்தக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு காட்டுக்கு உள்ளே ஓடிவிட்டன. எவ்வளவு முயன்றும் குழந்தையைக் குரங்குகளிடம் இருந்து மீட்க முடிய வில்லை. குழந்தையின் கழுத்தில் அரசக் குடும்பத்தின் அடையாளம் காட்டும் சங்கிலி மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தையை மனிதக் குரங்குகளே வளர்த்தன. குரங்குகளோடு குரங்காக அவன் வாலிப வயதை அடைந்தான். குரங்கைப் போலவே நடந்தான்; தாவினான்; பாய்ந்தான்; பேசத் தெரியாது; குரங்கைப் போன்றே கூச்சல், கூப்பாடு மட்டும் போடத் தெரியும். இந்நிலையில் மனித வாலிபன் தனியே ஓரிடத்தில் மரத்தடியில் இருக்கும் சமயம் குழந்தையை இழந்த ராஜா குடும்பத்தினர் பார்த்து விட்டார்கள். கழுத்தில் தொங்கிய சங்கிலி அவனை அடையாளம் காட்டியது. அவனைப் பிடித்தும் விட்டார்கள். வலிய அரண்மனைக்குக் கொண்டு சென்றார்கள். அவனுக்குத் திருமணமும் செய்து வைத்தார்கள். ஆனால், அரண்மனை வாழ்க்கை அவனுக்கு ஒத்தே வரவில்லை. புதிதாகக் கட்டிய மனைவி, குடும்பம், எல்லாவற்றையும் விட்டு விட்டு யாருக்கும் தெரியாமல் காட்டை நோக்கி ஓடிப் போய்விட்டான். அவன் காட்டில் நுழைந்தவுடன் முன்பு பழகிய மனிதக் குரங்குகள் அத்தனையும் அவனை ஆரவாரித்து வரவேற்றன; மேலே அணிந்து இருந்த ஆடை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஆபரணங்களையும் களைந்து தூக்கி எறிந்து விட்டுக் குரங்கோடு குரங்காகக் காட்டுக்குள் அவன் கலந்து விட்டான்.**

இது திரைக்கதையாகக் காட்டப்பட்டாலும் வெறும் திரைக்கதை மட்டும் அன்று.

லிதுவேனியாவில் கரடிக் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட சிறுவன், அயர்லாந்தில் செம்மறி ஆடுகள் நடுவில் வளர்ந்து வந்த ஒரு குழந்தை, பிரான்சில் மனிதக் குரங்குகள் கூட்டத்தில் வளர்ந்த ஒரு பையன், ஆலந்தில் காட்டுப் பன்றிக் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்ட ஒரு சிறுவன், இலங்கையில் காட்டு எருமைகளின் இடையே வளர்ந்த ஒரு சிறுமி ஆகிய அனைவரும் தத்தம் சுற்றுச்சூழ்நிலைக்கு ஏற்ப மானுடத் தன்மையை இழந்து விலங்குத் தன்மையில் வளர்ந்தனர். எனவே, பிறப்பால் ஒருவன் மனிதனாகப் பிறந்தாலும், வாழும் சமுதாயச் சூழ்நிலைக்கு ஏற்பவே அவன் மானுடன் ஆகிறான் அல்லது விலங்காகிறான்.

இந்தச் சமுதாயவியல் உண்மையைத் திருவள்ளுவர் பின்வரும் குறட்பாவில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கிறார்.

**நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்ப தாகும் அறிவு** 452

விண்ணில் இருந்து பொழியும் மழை நீரின் நிறம் பளிங்கு போல் இருக்கிறது; சுவை பன்னீர் போல் இருக்கிறது. அந்நீர் கடலில் விழுகிறபோது நிறத்தை இழந்து, கருநீல நிறம் பெறுகிறது. இன்சுவையை இழந்து உப்புச் சுவையை எய்துகிறது. நல்ல ஏரியின் விழுமானால் ஏரியின் தூய நீர் நிறத்தையும், சுவையையும் அது பெறுகிறது.

சேர்ந்த நிலத்தின் தன்மைக்கு ஏற்றபடி நீருக்கு நிறமும் மாறும்; சுவையும் ஏறும். அதனைப் போலவே சேர்ந்த இனத்திற்கு ஏற்பப் பழக்கவழக்கமும், அறிவும் மாறும். நம் மனம் தூயதாக இருந்தால் பழக்கவழக்கம் அறிவு மாற வழியில்லையே எனலாம். அது நடைமுறை உண்மை இல்லை. சமுதாயச் சார்பிற்கு ஏற்ப மாறுவதே மெய்ம்மை; மாறும் என்பதே உண்மை.

ஒருவனை அவனது மனத்தின் உண்மை இயல்பு அறிந்து முடிவு செய்வதற்குக் காலங்கள் ஆகும். நடிப்புலகம் என்பதால்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிவு, தவறாகவும் இருக்க வாய்ப்புண்டு. ஆனால், சமுதாயம், கடந்த காலத்தில் பெற்றிருக்கும் பெயர், சமுதாயத்தில் உள்ளவனைச் சரியாக அறிந்து கொள்ளும் வண்ணம் அடையாளம் காட்டும்.

ஆக, தனி மனிதன் மட்டும் அல்லாமல் சமுதாயமே தனி மனிதர்கள் உள்ளிட்ட கூட்டத்தின் பண்பைத் தீர்மானிப்பதில் பெரிய இடம் பெறுகிறது. தனி மனித மாற்றம் என்பதுடன் நிறுத்தாமல் சமுதாயத்தை மாற்றும் நடவடிக்கைகள் மூலம்தான் தனி மனிதனையும், கூட்டத்தையும் ஒரு சேர உடனடியாகத் திருத்த முடியும்; உயர்த்த முடியும் எனும் சமுதாய உண்மை திருவள்ளுவர் பாக்களில் பொதிந்து கிடக்கிறது. நல்ல சமுதாயச் சூழ்நிலைதான் தனி மனிதனுக்குப் பெருமையையும், சிறுமையையும் சேர்க்கிறது. தமிழ்நாட்டில் பிறந்த ஒருவர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றவராகவோ, சிங்கப்பூர் குடியுரிமை பெற்றவராகவோ ஆகிவிடும் போது அவர் அமெரிக்க சிங்கப்பூர் சமுதாயத்தைச் சார்ந்தே மதிக்கப் படுகிறார். இதனைத் திருவள்ளுவர்

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல் 460

என்று குறிப்பிடுகிறார்.

ஆக, பொருட்பாலில் அரசியல் எனும் அதிகாரத்தின் கீழ் இடம் பெற்றிருக்கும் 451 முதல் 460 வரையுள்ள குறட்பாக்கள் முற்றும் சமுதாயவியலைப் பேசுவன ஆகும். இப்பகுதி பிழையாகச் சிற்றினம் சேராமை எனும் அதிகாரத் தலைப்பை எய்தியிருக்கிறது என்பதைச் சமுதாயவியல் கல்வி புலப்படுத்துகிறது.

## பகுதி இரண்டு

திருவள்ளுவர், 1800 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் வாழ்ந்தவர். தம் காலத்தில், தம்முடன் வாழும் தமிழ்ச் சமுதாயத்தையும், தாம் அறிந்த தமிழ்நாட்டை ஒட்டிய வேறு மொழி நிலப் பகுதிகளையும், செவி வழிக் கேள்வியுற்ற பிற நாடுகளையும், தம் நாட்டில் வாழ்ந்த அயல் நாட்டு அறிஞர்களையும் உள்ளத்துள் கொண்டவராகத் திருக்குறளை உருவாக்கி இருத்தல் வேண்டும். எனவேதான், 1330 எனும் பெரிய எண்ணிக்கையுடைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொகுதியில் மத, இனக் குறிப்புகள் எதுவும் இடம் பெற வில்லை. தாம் வாழும் நாட்டைச் சார்ந்த ஆறுகள், மலைகள், அரசர்கள் முதலாய அடையாளம் காட்டும் பகுதிகளையும் மறைமுகமாகக் கூடச் சுட்டவில்லை. மாறாக, வாய்ப்பும், தேவையும் நேரும் இடங்களில் உலகம் என்பதை மீண்டும் மீண்டும் கையாளுகிறார் (493, 337, 331, 206, 633, 311, 110, 83, 150, 18, 149, 152, 337, 374, 375, 392, 410, 644, 149, 152, 153, 601, 2, 264 முதலாய இடங்கள்).

ஆக, திருவள்ளுவரின் நோக்கம் தமிழ்ச் சமுதாயம் மட்டு மில்லாமல் மொழி கடந்த, உலகச் சமுதாயத்தையும் மனத்துள் கொண்டு திருக்குறளை எழுதியுள்ளார் என்பது தெளிவு. இக்காரணத்தால்தான் திருக்குறளைத் தவத்திரு வீரமாமுனிவர், குரௌகாமர்ஸ் முதலானோர் ஒரு பகுதியை மொழி பெயர்த் துள்ளனர். ஜி.யூ. போப் போன்ற அறிஞர்கள் முழுமையாக மொழி பெயர்த்துள்ளனர்.

போப்பினுடைய மொழிபெயர்ப்பும், அந்நூலில் இடம் பெற்றுள்ள முகப்புரையும், ஆல்பர்ட் சுவிட்சர் திருக்குறளைப் பற்றி எழுதியுள்ள குறிப்புகளும் திருவள்ளுவத்தின் உலக எல்லையை உறுதி செய்வனவாகும். திருவள்ளுவர் உலக நோக்கினர் என்பதற்கு ஓரிரு சான்றுகளைக் காண்போம்.

திருவள்ளுவர் உலகத்தில் வாழும் சிறந்தவர்களைச் சார்ந்து தம் ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். மிகப் பெரிய அளவு கற்றவராக இருந்தாலும் உலகத்தோடு ஒத்துப் போகும் பண்பை அறியாதவர்கள் அறிவே இல்லாதவர்கள் என்று கடுமையாகச் சாடுகிறார். அவர் எழுதியுள்ள குறட்பா வருமாறு

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.** [140]

திருக்குறளில் இடம் பெற்றுள்ள 133 அதிகாரங்களுள் காமத்துப் பாலில் இடம் பெற்றுள்ள கணிசமான அதிகாரங்கள் உலக மக்கள் அனைவருக்கும் பேரளவு பொருந்தாமல் இருக்கலாம். ஏனைய அறத்துப் பால், பொருட்பால் ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாரக் கருத்துகள் பெரும்பாலானவை அனைவருக்கும் பொருந்து வதாகும்.

ஊழ், புலால் உண்ணாமை முதலாய ஓரிரு அதிகாரங்கள் தவிர ஏனைய அதிகாரக் கருத்துகள் எல்லாம் எல்லாருக்கும் பொருந்துவனவாகவே அமைந்துள்ளன. அரசு இயல் பற்றிய இறைமாட்சி முதலாய அதிகாரக் கருத்துகளும், மக்கள் பேறு எனும் அதிகாரக் கருத்துகளும் மேலோட்டமாகப் பார்க்கும்போது இன்றைய குடியாட்சி அமைப்பிற்கும், குடும்பக் கட்டுப்பாட்டுத் தேவைக்கும் பொருந்தாதன போன்று தோன்றலாம். ஆனால், இவ்வதிகாரங் களில் அமைந்துள்ள கருத்துத்துகளின் அடிப்படை இன்றும் மக்களுக்குத் தேவையானவையே. சிற்றினம் சேராமை எனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் மொழிந்தன அனைத்தும் இன்றைய சமுதாயவியல் கல்வி வளர்ச்சியில் முற்றும் பொருந்தி இருக் கின்றன. ஒரு மனிதனின் முயற்சியிலும், தாழ்ச்சியிலும் அவன் வாழுகின்ற சுற்றுச்சூழல் பெரும் பங்கு வகிக்கிறது என்பது அண்மை அறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளும் கருத்தாகும்.

கல்வி மாந்தர்க்கு மிக மிக இன்றியமையாதது என்று இன்று கண்டறியப்பட்டு இருக்கிறது. அதற்காக உலகத்தில் உள்ள அரசுகள் மிகப் பெரிய அளவில் செலவு செய்கின்றன. ஒரு நாட்டின் இராணுவச் செலவிற்கு அடுத்தபடியாகக் கல்விக்கான நிதி ஒதுக்கீடே அனைத்து நாடுகளிலும் பேரளவினதாக ஒதுக்கப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர் 1800 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து கல்வி தொடர்பாகக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை எனும் நான்கு அதிகாரங்களை அமைத்து 40 குறட்பாக்களில் விரிவாக விளக்குகிறார். இதிலுள்ள இன்னொரு சிறப்பு என்ன வென்றால், கல்வி சார்ந்த விரிவான கருத்துகளை அரசியல் எனும் பகுதியில் திருவள்ளுவர் அமைத்துப் போற்றி இருப்பதாகும். ஆக, அரசியல் வாழ்வில் பங்கேற்று இருப்போர் கட்டாயம் நூல்களைக் கற்றவராகவும், மற்றவர் சொல்வதைச் செவிமடுப்ப வராகவும், முதியோரை மதிப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

ஐரோப்பிய அமெரிக்கச் சமுதாயம் பெரிய அளவு வளர்ச்சி பெற்றதற்குக் கால்வின் எனும் அறிஞர், உழைப்பு, ஊக்கம், சேமிப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகிய குணத் தேவைகளை மக்களிடம் பரப்பியதாகும் என்பர். அவர் கருத்துப் பரவுதல் அந்நாட்டு மக்கள் நடுவில் பரவிச் செல்வந்த நாடாக மாறுவதற்கு வழி செய்தது. திருவள்ளுவர் ஊக்கம் உடைமை, மடியின்மை, ஆள்வினை உடைமை, இடுக்கண் அழியாமை எனும் அதிகாரத்தில் படித்துப் படித்துச் சொல்லும் கருத்துகள் மானுட முயற்சியை வற்புறுத்துவன ஆகும். கால்வின் அறிவுரையை ஐரோப்பிய அமெரிக்க மக்கள் பின்பற்றிச் செயல்படுத்தியது போலத் தமிழர்கள் பின்பற்றாமல் போனது அவர்களின் பின் தள்ளிய வாழ்க்கையை மெய்ப்படுத்துகிறது.

ஒருவனுடைய வெற்றி அல்லது ஒரு நாட்டின் வெற்றி நில வளத்தாலும், நீர் வளத்தாலும் மட்டும் அமைந்து விடுவது இல்லை. மானுடரின் மன வளத்தாலும், அவருடைய வினை வளத்தாலும் மட்டுமே வெற்றி நிகழும். இதற்குச் சான்று, நில வளமும், நீர் வளமும் இல்லாத இசுரேல், சிங்கப்பூர் முதலாய நாடுகள் இன்று பொருளாதாரத்தில் உச்ச நிலையில் இருக்கின்றன. இதற்குக் காரணம், அந்நாடுகளில் வாழும் மக்களின் வினை வளமும், மன வளமுமே. இவ்விரண்டின் முதன்மைத் தேவைகளைத் திருவள்ளுவர் வினைத் தூய்மை, வினைத் திட்பம், வினை செயல் வகை எனும் அதிகாரங்களில் மிக அருமையாக விளக்குகிறார். அவர் வழங்கியுள்ள குறட்பாக்களில் மிகத் தலையாயது 'வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பமே, மற்றைய எல்லாம் பிற' என்பதாகும்.

நல்லவர்கள் வாழ்வதால்தான் நாடும் உலகமும் நிலைத்து நிற்கின்றன. இக்கருத்து தமிழர் தலைமுறை தலைமுறையாகப் போற்றிவரும் கருத்தாகும். தனக்கு என வாழாது பிறர்க்கு என வாழ்வதால்தான் இந்த உலகம் இன்னும் நிலை பெற்று உள்ளது என்பர் புறநானூற்று அறிஞர் ஒருவர். நல்லோர் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்பர் ஔவையார். திருவள்ளுவர் பண்புடையார் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் நிற்கிறது; இல்லையேல் அழிந்துவிடும் என்பர் (996).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமயச் சமூகவியல்

சமூகவியல் அறிஞர் கோம்த் அன்று முதல் இன்று வரை வளர்ந்துள்ள சமுதாயப் படிநிலையை வகைப்படுத்துகிறபோது, ஆதி சமுதாயம் என்றும், முது பழங்குடி நிலையை இறையியல் கட்டம் (Theological Stage) என்றும், இடைக்காலச் சமுதாய நிலையை மெய்யியல் கட்டம் (Meta Physical Stage) என்றும், 19ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட நவீன சமுதாய நிலையை நம்பிக்கைக் கட்டம் (Positive Stage) என்றும் வகைப்படுத்தினார். தொடக்கக் காலச் சமுதாயக் கட்டத்தைத் தெய்வீக நிலைக்கு உள்ளாக்கிய போது, அது ஆதி மனிதனின் உள நிலை என்றும், அனிமிசத்தில் இருந்து தெய்வ நிலையை நோக்கி வளர்ந்த நிலை என்றும் விளக்கினார். டெய்லரும், ஸ்பென்சரும் மத நம்பிக்கைக்கு அடிப்படை, ஆன்மா பற்றிய எண்ணம் என்று கருதினர். மனிதர், கனவு, இறப்பு ஆகியவற்றைத் தவறாக விளங்கிக் கொண்டு ஆன்மாவைப் பற்றிப் பேசினர் என்றனர்.

அச்சமும், பதற்றம் கலந்த எதிர்பார்ப்பும் மதத் தோற்றத்திற்குக் காரணம் என்றார் கார்ல் மார்க்ஸ். மதத்தையும், மந்திரச் சடங்கையும் ஃபிரேசர் பிரித்து விளக்கினார். மதத் தோற்றத்திற்குப் புதிய காரணங்களைக் காட்டித் துர்க்கேம் விளக்கம் சொன்னார். கூட்டத்தில் கூடி, பதைத்து ஆவியாக வந்து ஆடும் நிலையைத் தொடர்பு படுத்தினார். மலினோஸ்கி, பிரௌன் ஆகியோர் மதம், சமுதாய ஒருங்கிணைப்பிற்கும், தனி மனித ஒழுக்கத்திற்கும் பழைய சமூகங்களில் பெரிய துணையாக இருந்தது என்றனர். மதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருங்கிணைக்கும் சக்தியாக இருந்தபோதிலும், ஒருங்கிணைப்பின் மூலம் மற்ற மதங்களில் இருந்து பேதப்படுத்தும் சக்தியாகவும் இருக்கிறது என்று அண்மைச் சமூகவியல் அறிஞர்கள் கருது கின்றனர். நவீனத் தொழில்வயச் சமுதாயங்களில் மதம், இணைக்கும் சக்தியாகவும், பிரிக்கும் சக்தியாகவும் செயல்படுகிறது. சடங்குகளை விட நம்பிக்கைகளில் முதன்மை கொள்கிறது. சமுதாய வளர்ச்சிக்கு மதம் பயன்படும் என்பதை மேக்ஸ்வெப்பர் கொள்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

சில மதங்கள் நாடு கடந்து, வேறு நாடுகளில் பரவியமைக்குச் சமூகவியல் அறிஞர்கள் காரணம் சொல்கின்றனர். இசுலாம், கிருத்துவம், புத்தம் ஆகியன கடல் கடந்து பரவியமை போல, சைவ (இந்து) சமயம் பரவ வில்லை. வேறு வழிபாட்டினர் தம் வழிபாட்டிற்கு வரும்போது நிகழக் கூடிய Baptism என்ற சடங்கு சைவ சமயம் போன்றவற்றில் இல்லை என்பதும், கடல் கடந்து செல்லல் ஆகாது என்ற நம்பிக்கையும், வேறு சில மதம் சார்ந்த உணவு, உடை, பழக்கவழக்க முறைகளும் காரணம். பொறுத்துப் போதல், இச்சமுதாயத்தின் பாங்காக இருப்பினும், மிஷனரி (அரும்பெரும் தொண்டுணர்வு) இச்சமயங்களில் குறைவு என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அண்மைக் காலங்களில் உலகம் முழுதும் மத நம்பிக்கை, வழிபாடு ஆகியன நடுத்தர மக்களிடமும், நிலையான ஊதியம் பெறும் தொழில் சார் மக்களிடமும் குறைந்துள்ளன. ஐந்தில் ஒரு பகுதி நடுத்தர மக்கள் கோயில்களுக்குச் செல்வதில்லை என்று ஒரு புள்ளிவிபரம் மொழிகிறது. இலண்டன் போன்ற நகரங்களில் சர்ச்சுகளில் கூட்டம் இல்லை என்கின்றனர்.

Church தமிழ் என்று லார்சன் ஒரு கவிதை எழுதியுள்ளார். அதில் Church going our of life என்றும் அர்த்தம் உண்டு என்பர் ஆய்வாளர். இவை அனைத்தும் மேலும் உலகத் தமிழ்ச் சமுதாயத்துடன் பொருத்தி ஆராயத் தக்கவை.

### வழிபாட்டின் தோற்றம்

கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகியன உலகில் முதன் முதல் என்று தோன்றின? எப்படித் தோன்றின? ஏன் தோன்றின? இவ்வினாக்களுக்கு விடையளிப்பது அத்துணை எளிதன்று.

www.tamilarangam.net



*எளிதில் இயலாமைக்குக் காரணங்கள்:*

1. உலகம் மிகப் பெரியது. அதனைக் கடல்நீரும், ஆறும், மலைகளும், பாலை வெளிகளும், காடுகளும் ஆங்காங்கே பிரிவினை செய்துள்ளன.
2. இயற்கையால் ஏற்பட்ட உலகப் பிரிவுகள், மனித இனத்தையும் பிரித்தன. வெவ்வேறு நிறமும், தோற்றமும், பழக்கமும், பண்பாடும் உடைய மனித இனங்கள் உலகம் முழுதும் சிதறிக் கிடக்கின்றன.
3. உடல் உறுப்புகளுக்கு இணையாக மனித இனத்துடன் மொழிகள் பல தோன்றியுள்ளன. அம்மொழிகளும் மனித இனங்களைப் பிரித்துள்ளன; பிரிக்கின்றன; பிரிக்கும்.
4. மனிதனின் சூழ்நிலைகளுக்குத் தக, முயற்சிகளுக்குத் தக அவனது சிந்தனையும் செயலும் அமைகின்றன. எனவே, அவற்றின் வேறுபாடுகளுக்கு ஏற்ப மனித இனச் சிந்தனைகளும் வேறு வேறு வடிவில் தோன்றுகின்றன.

ஆகவே, உலக விரிவு - பிரிவு, மனித இன வேறுபாடு - கூறுபாடு, மொழிகளின் பன்மை - தன்மை, சிந்தனைகளின் தோற்றம் - மாற்றம் ஆகியன உலகம் அளாவிய வினாக்களுக்கு விடையளிப் பதைச் சிக்கலாக்குகின்றன.

## வழிபாட்டின் பொதுமை

எனினும் மனிதச் சிந்தனைகள் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக எழுகிறபோது பேரளவு ஒத்துள்ளன. சிலபோது ஓரிடத்தில் தோன்றிய மனிதச் சிந்தனைகள், இனம் பரவுதலுக்கு ஏற்ப உலகெங்கும் பரவுகின்றன. இப்பரவுதல், ஓர் இனம் இடம்விட்டு இடம் பெயர்வதாலும் நிகழும். ஓர் இனமக்களைப் பிறிதோர் இனமக்கள் வணிகம், அரசியல், மதம் இவை தொடர்பாகச் சந்திப்பதாலும் கலப்பதாலும் நிகழும். ஆக, உலகளாவ ஏதேனும் ஒரு பொதுச் சிந்தனை தென்பட்டால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் ஐந்து ஆகலாம்.

### *1. மனித இனத்தின் குறிப்பிட்ட சூழலில் எழுவது*

சான்று - கடவுள் நம்பிக்கை. பிறப்பிற்கு முன் மனிதன் எங்கிருந்தான்? இறப்பிற்குப் பின் அவன் எங்கு இருப்பான்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உண்ணக் காய், கனி, கிழங்குகளையும், உறைய மலைக் குகைகளையும், பருக நீரையும், உயிர்த்திட அல்லும் பகலும் ஒளியையும் படைத்தது யார்? இவ்வினாக்களுக்குப் பண்டைய மனிதன் தேடிய விடைதான் கடவுள். இவ்வினாக்களுக்கு விடை ஆசிய மக்களுக்குத் தோன்றியிருக்கும்; ஆப்பிரிக்க மக்களுக்கும் தோன்றியிருக்கும்; ஆத்திரேலிய, ஐரோப்பிய மக்களுக்கும் தோன்றியிருக்கும்.

*2. இன இடப் பெயர்ச்சியால் எழுவது*

ஐரோப்பியர் கி.பி. 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் தம் மண்ணிற்குரிய சிந்தனைகளோடு உலகெங்கும் பரவினர். அப்போது அவர் சென்ற இடமெல்லாம், அவர்தம் சிந்தனைகளும் செயல்களும் பரவின. பண்டைய நாளில், ஆரியர் இந்தியாவிற்கு வந்தனர்; அவருடன் அவர்தம் பழக்க வழக்கங்களும், பண்பாடும் வந்தன; பரவின.

*3. வணிகக் கூட்டுறவால் எழுவது*

கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, திராவிட நாட்டு மேலைநிலக் கடலோரப் பகுதிகளுக்கும், நடுநிலக் கடலோரப் பகுதிகளுக்கும் இடையே வணிகப் போக்குவரத்து நடந்தது. இதன் விளைவாகத் திராவிடப் பொருள்களும், திராவிட மக்கள்தம் நம்பிக்கைகளும் நடுநிலப் பகுதிகளுக்குச் சென்றன. நடுநிலக் கடலோர நாடுகளான கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து முதலிய நாடுகளின் பொருள்களும், அந்நாட்டு மக்களின் சில பழக்க வழக்கங்களும் திராவிட மாநிலங்களில் பரவின. ஐரோப்பியர் தம் வணிக விரிவால் அவர் தம் சிந்தனைகளும், பண்பாடுகளும் இன்றும் உலகெங்கும் பரவியுள்ளன.

*4. அரசியல் படையெடுப்பால் எழுவது*

ஐரோப்பிய ஆப்பிரிக்க நாடுகளின் மீது, கிரேக்க, உரோமரின் படையெடுப்பு கி.மு. சில நூற்றாண்டுகளுக்கு முன்பும் பின்பும் நிகழ்ந்தது. கி.பி. முதல் சில நூற்றாண்டுகளில் திராவிடத் தமிழர்தம் படையெடுப்பு இலங்கை, வட இந்திய ஆரிய நாடுகள் மீதும் நிகழ்ந்தது. முகமதியர்தம் படையெடுப்பு பேரளவு வட இந்தியாவிலும், ஓரளவு தென்னிந்தியாவிலும் இடைக்காலத்தில் தொடர்ந்து நிகழ்ந்தது. ஒரு நாட்டிற்கு உரிமையற்ற வேறு இன மக்கள், படையெடுப்பு நிகழ்த்தி, வெற்றி கொண்டு அந்நாட்டிலேயே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலை நிற்கும்போது அவர் தம் சிந்தனைகளும் செயல்களும் கலக்கின்றன.

### 5. மதம் பரப்புதலால் எழுவது

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னும் புத்த மதம் இந்தியாவிலிருந்து இலங்கை, இந்தோனேசியா, கம்போடியா, சப்பான், பர்மா, நேபாளம், திபெத் முதலான நாடுகளில் பரவியது. இடைக்காலத்தில் இசுலாம், அராபியா, பாரசிகம் வழி உலகெங்கும் பரவியது. கி.பி. 17, 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் கிறித்தவம் உலகம் முழுதும் பரந்தது. ஒரு குறிப்பிட்ட கொள்கைக் கோட்பாடு உடைய மதம் பிறந்த இட மன்றிப் பிற இடங்களுக்குப் பரவுகிற போது அம்மதத்தின் கொள்கைகளும் நம்பிக்கைகளும் பரவுகின்றன.

எனவே, பண்பாட்டு ஒப்பீட்டு ஆராய்ச்சியில், உலக வரலாற்று அறிவும், இனவரலாற்று அறிவும் தேவையாகின்றன. சில பழக்க வழக்கப் பண்பாடுகள், ஒரு நாட்டைப் போல இன்னொரு நாட்டில் பின்பற்றப்படுமானால், அதற்குரிய காரணத்தைத் திடும் என்று எழுதிவிட இயலாது. இரண்டு நாடுகளின் வரலாற்றையும் இன, வணிக, அரசியல், மதத் தொடர்புகளையும் நன்கு ஆராய்ந்த பிறகே பண்பாட்டு ஒற்றுமைக்கான காரணத்தை நுவல முடியும்.

ஒவ்வோரிடத்திலும் சிற்றில சூழ்நிலைகள் அமையும்போது ஒத்த உயிர்கள் தோன்றுகின்றன. ஈக்கள், கொசுக்கள், இன்ன பிற செடி, கொடிகள் உலகத்தின் வெவ்வேறிடங்களில் குறிப்பிட்ட தட்ப வெப்பச் சூழ்நிலைகளில் உயிர்க்கின்றன. இவ்வாறே குறிப்பிட்ட அரசியல், பொருளியல், சமூக இயல் சூழல்களில் ஒத்த பண்பாடு களும் அங்கங்கே தன்னிச்சையாகத் தோன்ற வாய்ப்புண்டு. எனவே, ஒத்த பண்பாடுகளை இரு வேறு இனத்தில் கண்டுபிடிக்கிற பொழுது, அவை தன்னிச்சையாகத் தோன்றியவையா அல்லது மனித இடப் பெயர்ச்சியால் நேர்ந்தவையா என்பதைச் சோதித்து அறிதல் வேண்டும். அதன் பின்பே குறிப்பிட்ட பண்பாட்டுக் கூற்றின் தோற்றத்தைப் பற்றி முடிவு செய்தல் வேண்டும்.

### இயற்கை வழிபாடு

உலகளாவிய கடவுள் நம்பிக்கை, வழிபாடு, பூசை ஆகிய வற்றைப் பொறுத்த வரையில், அவை அச்ச அடிப்படையிலும், அன்பு அடிப்படையிலும் எங்கும் தன்னிச்சையாகத் தோன்றித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தழைத்திருத்தல் வேண்டும். அன்பு காட்டுவனவற்றிற்கு நன்றி காட்டுவதும், அச்சம் ஊட்டுவனவற்றிற்கு அடிபணிவதும் மனிதச் செயல்கள். நிலம், நீர், தீ, காற்று, விண் என்ற ஐம்பூதங்களும் மனிதர்க்கு நன்மை செய்வனவாயும், தீமை செய்வனவாயும் திகழ்ந்தன. நிலம் மனிதனுக்குக் காய், கனி, கிழங்குகளைத் தந்து நன்மை செய்தது; ஒன்றும் விளையாமல் வாடி வறண்டு, தீமையும் செய்தது. நீர் மனிதன் தாகத்தைத் தணித்தும், பயிர்களை விளைத்தும், நன்மை செய்தது; சில சமயங்களில் கொடு மழையாகக் கொட்டியும், கடலாகக் குமுறியும் மனிதனுக்கு அல்லல் விளைத்தது. தீ மனிதன் உணவுகளைச் சுடவும், சமைக்கவும், குளிரில் வாடாமல் நலமுறவும் காத்தது. சில சமயம் எரி பிழம்பாகக் காடுகளை அழித்தது; வீடுகளை அழித்தது. காற்று மனிதனுக்கு மூச்சைத் தந்தது; களைப்புற்ற மனிதரை மீட்டது. சில சமயம் புயலாகச் சீறி வீட்டையும், காட்டையும் அழித்தது. விண், நிலவாகக் குளிர்ந்தது; மழையாகப் பொழிந்தது. கதிர் ஒளியாகக் காய்ந்தது. சில சமயம் இருள் மண்டியது; மழை பொய்த்தது; கதிர் சுட்டது. இயற்கை தரும் நம்மைகள் மனிதரை அன்பு செய்ய வைத்தன. அவை படுத்தும் அல்லல்கள் அச்சப்படுத்தின. நன்மை செய்த ஒருவர் மீது அன்பு காட்டினால் அவர் மேலும் நன்மை செய்வார் அன்றோ? தீமை செய்த ஒருவர்முன் பணிந்து போற்றினால் அவர் தீமை செய்யாது இருப்பார் அன்றோ? அதன் விளைவே ஐம்பூத வழிபாடும் பூசையும். நில வழிபாடு - பூமாதேவி வழிபாடாயிற்று; நீர் வழிபாடு - கங்காதேவி/வருண/மழை/ இந்திர வழிபாடாயிற்று; தீ வழிபாடு சேய், சிவ வழிபாடாயிற்று; காற்று வழிபாடு வாயு அனும வழிபாடாயிற்று; விண் வழிபாடு சூரிய வழிபாடுகள் ஆயிற்று.

## முன்னோர் வழிபாடு

மனிதனுடன் வாழ்ந்த மூத்தோர், முதுமையாலும் நோயாலும் விபத்தாலும் இறந்தனர். உடன் வாழ்ந்த மாந்தன் இறந்த முதியவர் இருக்கும் போது, அவனிடம் காட்டிய பேரன்பை எண்ணுகிறான். அவர் ஆற்றிய பேருதவிகளை எண்ணுகிறான். அவர் செய்த பெருஞ் செயல்களை எண்ணுகிறான். அவர் தன்னோடு தொடர்ந்து இருத்தலாகாதா என்று எண்ணுகிறான். இந்த எண்ணங்களின் நினைவுகளோடு அவன் உறங்குகிறான். உறக்கத்தில் கனவுகள் காண்கிறான். கனவில் அந்த முதியவர் வருகிறார்; அவனோடு உரையாடுகிறார்; உறவாடுகிறார். ''ஓ! அவர் இறக்க வில்லை;

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கிறார். மூச்சுக் காற்று வெற்று வெளியில் விண்ணில்தானே உள்ளது. அவர் இருக்கும்போது அவரை உடன் இருந்து இயக்கியது மூச்சுக் காற்றுத்தானே. அம்மூச்சுக் காற்று அவரைவிட்டுப் போனதும் அவர் போய்விட்டார். எனவே, அந்தக் காற்றுதான் அவர். ஆகவே, அவர் காற்றோடு கலந்து விட்டார்; காற்று விண்ணோடு கலந்து விட்டது. எனவே அவர் விண்ணில் இருக்கிறார். அவரைத் தொடர்ந்து நினைப்போம். நினைப்பதை எப்படிக் காட்டுவது? அவருக்கு வழிபாடு செய்வோம்; அவரை எண்ணிப் பூசைகள் செய்வோம்'' என்று ஆதி மனிதன் கண்ட கனவு முன்னோர் வழிபாட்டிற்கு அடிகோலியிருத்தல் வேண்டும். இம்முன்னோர் வழிபாடே பிற்காலத்தில் பல இடங்களில் உருவ வழிபாடாக வளர்ந்திருத்தல் வேண்டும். இறந்தாரை நினைவு கூரும் நடுகற்கள் அனைத்தும் பிற்காலத்தில் வழிபடுகோயில்கள் ஆயின. இறந்தோரை நடுகல்லில் உருவமாகச் செதுக்கினர். பெயரும் பீடும் எழுதினர், வழிபட்டனர்.

இறந்த நல்லவர், மனித நினைவை அலைத்தது போல, கனவில் நிலைத்தது போல, இறந்த தீயவரும், அவன் நினைவை விட்டு அவன் கனவை விட்டு அகல மறுத்தனர். வாழும்போது தீங்குகள் செய்தது போலவே, இறந்த பின்பும் கனவுகளில் அவனை அல்லல்படுத்தினர். அவனிடம் நல்லவரை நினைந்து அன்பு பிறந்தது. தீயவரை நினைந்து அச்சம் பிறந்தது. அதற்காகத் தீயோரையும் வணங்கும் முகமாக, இறந்தோர் நினைவுக் கடன்கள் ஆற்றினர். ஒழுங்குறத் தவறாமல் வழிபாடு செய்ய வில்லை எனில் அவர் ஆவியாகப் பேயாக வந்து அல்லல் படுத்துவர் என்று நம்பினர். மழையோ, பயிர் விளைவோ இல்லை எனில் காரணம் முன்னோரே எனக் கருதி, ஆவி உருவில் இருக்கும் முன்னோரை அழைத்துப் பூசை முதலாயினவற்றை ஆப்பிரிக்கப் பழங்குடி மக்கள் செய்வது இதனை அடியொற்றியே ஆகும். தீயோர் பாம்பாக வருவர் என்ற நம்பிக்கை ஆப்பிரிக்காவில் உள்ளது. நளனுக்குத் தொடர்ந்து தீமை செய்யும் சனி பகவான் ''கார்க்கோடகன்'' என்ற பாம்பு உருவில் அவனை அல்லல்படுத்தினான் என்ற கதை இந்தியாவில் வழங்குகிறது. ஏவாளைப் பழந்தின்னச் செய்து பாவியாக்கும் பாவத்தைச் சாத்தான், பாம்பு உருவில் செய்ததாகப் பைபிள் பழைய ஏற்பாட்டில் பழங்கதை வழங்குகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமய அரசியலும் திருமுறைத் தொகுப்பு முயற்சிகளும்

## பகுதி ஒன்று

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.மு. தொடங்கி ஐரோப்பியர் வருகை வரை பல்வேறு நூல் தொகுப்பு முயற்சிகள் நிகழ்ந்துள்ளன. இம்முயற்சிக்குரிய காரணங்களும் பலவேறு பட்டவை ஆகும். அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### 1. பொருள் அடிப்படையில் அமைந்தவை

அகநானூறு, புறநானூறு, புறத்திரட்டு முதலானவை. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் தொகுப்பு அடிப்படை கூட, அறம், பொருள், இன்பம் என்பனவாக இருந்திருக்கலாம்.

### 2. வடிவ அடிப்படையில் அமைந்தவை

சங்கத் தொகைகளில் ஒன்றான பத்துப்பாட்டு வடிவ அடிப்படையில் அமைந்தது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளவை அனைத்தும் மிகுதியான அடிகளை உடைய நெடும்பாட்டுகளாக அமைந்துள்ளன. எட்டுத் தொகையில் இடம் பெற்றுள்ள நற்றிணை முதலான நூல்களுக்கு அகம், புறம் என்ற பொருட் பிரிவுடன் ஒவ்வொரு பாடலுக்கும் உரிய அடிகளும் கணக்கில் கொள்ளப் பெற்று வேறு வேறு தொகுப்புகளாக ஆக்கம் பெற்றுள்ளன. சான்றாக, அகநானூறும் குறுந்தொகையும் அகப்பொருள் பற்றியன

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேனும் அடிகளின் எண்ணிக்கையால் வேறுவேறு நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. சேர, சோழ, பாண்டிய அரசர்களைப் பற்றிய முத்தொள்ளாயிரம் வெண்பா எனும் வடிவ அடிப்படையில் அமைந்தது ஆகும்.

### 3. சமய அடிப்படையில் அமைந்தவை

தமிழில் சமய அடிப்படையில் முதன் முதலாகத் தொகுக்கப் பெற்றது திருமுறையாக இருக்கலாம். இது முற்காலத்துத் திருப்பதிகம் என்றே அழைக்கப் பெற்றது. சேக்கிழார் "திருமுறை எழுதுவோர், வாசிப்போர்" எனக் கணநாதர் புராணத்துள் குறிப்பார். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்துக் கல்வெட்டு 'திருமுறை' என்னும் சொல்லைக் குறிப்பிடுகின்றது. அதற்கு முன்பு தேவாரப் பாடல்கள் திருப்பதிகம் என்றே குறிக்கப் பெற்றன. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற வைணவத் தொகுப்பும் சமய அடிப்படையில் ஆனது. காலந்தோறும் புதிய புதிய சைவ இலக்கியங்கள் சேர்க்கப் பெற்று நிறைவில் திருத்தொண்டர் புராணம் எனப்பெறும் பெரியபுராணம் 12ஆம் இணைப்பாகச் சேர்க்கப் பெற்று அதனோடு நிறுத்தப் பெற்ற பன்னிரு திருமுறை எனும் தொகுப்பும், பிறவும் இதனுள் அடங்கும். இவ்விடத்துச் சமண சமயம் சார்ந்த ஸ்ரீபுராணமும், புத்தரின் அருள்மொழிகளாகத் தொகுக்கப் பெற்ற திரிபிடகமும் இணைத்துக் கருதப் பெறல் வேண்டும்.

### 4. பாதுகாப்பு அடிப்படையில் அமைந்தவை

தமிழகத்தில் தமிழர் சமயம், இந்து மதம் அன்று. தமிழகத்துக்கு வெளியிலிருந்து முதலில் வருகை தந்தது ஆரிய வேத சமயம். சமண சமயமும், பௌத்த சமயமும் இச்சமயங்களுக்கு இடையே நுழைந்தன. இவற்றிற்கிடையே தமிழகத்தைக் களமாகக் கொண்டு கி.பி. தொடக்க நூற்றாண்டுகளிலிருந்து மோதல்கள் இருந்தன. சமண பௌத்தம் ஒரு பக்கமும், ஏனைய சமயங்கள் மறுபக்கமுமாக நின்று மோதிக் கொண்டன. இம்மோதலின் பின்புலத்தில் அரசுகளும் இருந்தன. இதனையே மகேந்திர பல்லவ X திருநாவுக்கரசு வரலாறும், பாண்டியன் கூன் பாண்டியன் X ஞானசம்பந்தர் வரலாறும், இன்ன பிறவும் எடுத்து உரைக்கின்றன. பலவேறு சமயப் பாக்கள் தமிழில் எழுதப்பட்டனவேனும், பிற சமயப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படைப்புகளை வாசித்தலாகாது எனும் கருத்து வற்புறுத்தப் பெற்றது, வளர்க்கப் பெற்றது. இதன் விளைவாக மாற்று மத இலக்கியங்கள் நீரிலும், நெருப்பிலும் அழிக்கப் பெற்றன. திருக்குறள், சீவக சிந்தாமணி, நன்னூல் முதலானவை, சமண நூல்களாகக் கருதப் பெற்று, சைவரால் பயிலப்படக் கூடாது எனும் கருத்து இருந்தது. 18ஆம் பெருக்கு நாளில் பனை ஓலைச் சுவடிகளை அனலில் எரிக்க வேண்டும், புனலில் அழிக்க வேண்டும் எனும் கருத்து நடை முறையில் இருந்து வந்துள்ளது. இம்மதப் போராட்டத்திலிருந்து அழிந்தன போக எஞ்சியவற்றைக் காப்பாற்றும் முகமாகச் சமயப் பாடல்கள் இடம் பெற்ற ஓலைச் சுவடிகள் இரகசியமாகப் பத்திரப்படுத்தப் பெற்றன. தில்லை வாழ் அந்தணர் மூவரின் பாடல் களைப் பத்திரப்படுத்தியதற்கு இதுவும் காரணமாக இருக்கலாம். பின்னாளில் அழிந்தன போக நம்பியாண்டார் நம்பி தொகுத்ததற்கும் இதுவே அடிப்படையாக இருந்திருக்கலாம். தொகுப்பு நூல்களின் பெயர்களைச் சொல்லும் 'முருகு பொருநாறு' என்பன போன்ற பாடலும், இத்தனைப் பாடல்கள் இதில் உள்ளன எனத் தொகுப்பு முடிவில் இடம் பெறும் நாலாயிரத் திவ்விய பிரபந்தப் பாடல்களும், இடையில் தொகுக்கப் பெற்றவை விடுபடாமல் இருப்பதற்கும், விடுபட்டவை அறியப் பெறுதற்கும் துணையாக இருந்தவை. தொகுப்பில் விடுபாட்டைத் தவிர்ப்பதற்கு நம் அறிஞர் செய்த ஏற்பாடு இது.

### 5. தர அடிப்படையில் அமைந்தவை

தமிழ் போன்ற பழமையும் இலக்கியச் செழுமையும் வாய்ந்த மொழிகளில் காலந்தோறும் இடைவிடாமல் படைக்கப் பெற்ற பாக்களில் நல்லவற்றைத் தெரிவு செய்யும் நோக்குடனும் தொகுப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் பெற்றிருக்கலாம். சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்கள் பின்னாளில் வெளி வந்த புறத்திரட்டு, தனிப்பாடல் திரட்டு முதலாயின இந்த அடிப்படையிலேயே தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

## தொகுப்பு முயற்சிகள்

கிரேக்க மொழியில் முதல் தொகுப்பைத் தத்துவவாதியும் கவிஞருமான மீலாகர் ஆப் கதரா (Meleager of Gadara கி.மு. 140-70), கி.மு. 90இல் செய்தார். அவர் இத்தொகுப்பில் தம்முடைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிதைகளுடன் தமக்கு முன்பு கிரேக்க மொழியில் எழுதிய 46 கவிதைகளையும் இணைத்துக் கொண்டார். இத்தொகுப்பில் தொடர்ந்து நான்கு பதிப்பாசிரியர்களால் மேலும் கவிதைகள் பிற்காலங்களில் சேர்க்கப் பெற்றன. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு அறிஞர் ஃபிலிப் பிரங் (1729-1803) (Philippe Brunck) என்பவரால் சீருறப் பதிப்பிக்கப் பெற்றது. கிரேக்கக் கவிதை உலகில் இது இன்றும் தரம் வாய்ந்த தொகுப்பாக அமைந்துள்ளது. கி.பி. 1573இல் மறுமலர்ச்சிக் காலத்தில் பிரெஞ்சு அறிஞர் ஜோசப் ஜஸ்டஸ் ஸ்காலிஜர் (Joseph Justus Scaliger) கிரேக்கத் தொகுப்பைப் போன்ற ஒரு தொகுப்பை இலத்தீன் மொழிக் கவிதைகளைக் கொண்டு உருவாக்கினார். அரபி, பாரசிகம், துருக்கி, சீன மொழிகளிலும் புகழ் பெற்ற தொகுப்புகள் உள்ளன.

ஆங்கில மொழியில் முதல் தொகுப்பு 1557 இல் ரிச்சர்டு டோட்டல் (Richard Tottel 1525-94) எனும் வெளியீட்டாளரால் கி.பி. 1557 இல் கொண்டுவரப் பட்டது. விக்டோரியன் கால மொழிக் கவிஞரும், திறனாய்வாளருமான பிரான்சிஸ் டர்னர் பால்கிரேவ் (Francis Turner Palgrave) (1824-97) Golden Treasury of English Songs and Lyrics (1861) எனும் தொகுதியைக் கொண்டு வந்தார். இது அக்காலச் சுவையை எதிரொலிப்பதாகும். இதனைப் போலப் பல தொகுதிகள் தொடர்ந்து ஆங்கிலத்தில் வெளி வந்துள்ளன. The Passionate Pilgrim (1599) எனும் 20 கவிதைகள் கொண்ட தொகுதி வெளியாயிற்று. இதனைச் சேக்ஸ்பியர் செய்தார் எனும் செய்தி உள்ளது. கி.பி. 1600இல் England's Helicon எனும் தொகுப்பு சேக்ஸ்பியர் (Shakespeare), சிட்னி (Sidney) ஸ்பென்சர் (Spenser) ஆகியோர் கவிதைகளை உள்ளடக்கி இருந்தது.

உலகெங்கும் இதுபோன்ற தொகுப்பு முயற்சிகள் சிறந்த மொழிகளில் நிகழ்ந்துள்ளன. சான்றாக, கிரேக்க மொழியில் இத்தகு முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. பூந்துணர் அல்லது பூங்கொத்து எனப் பொருள்படும் அந்தாலஜி (தொகுப்பு) கி.மு. 60இல் மிலிகர் என்பவரால் செய்யப் பெற்றது. தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒவ்வோர் ஆசிரியரையும் பூவோடு தொடர்புபடுத்தி இத்தொகுப்பு அமைக்கப் பெற்றது. தெய்வங்களும், புகழ் பெற்ற அரசர்களும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெரு நிகழ்ச்சிகளும் இத்தொகுப்பில் பேசப்பெற்றனர். கி.மு. 5ஆம் நூற்றாண்டில் நேப்பாளத்தில் பிறந்து அந்நூற்றாண்டின் இறுதியில் பீகாரில் இறந்த புத்தர் போதனைகள் திரிபீடகங்களாகத் தொகுக்கப் பெற்றன. இருபத்து நான்கு சமணத் தீர்த்தங்கரரின் வரலாறு ஸ்ரீ புராணம் எனும் பெயரில் தொகுக்கப் பெற்றது. சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம், பாலி மொழியில் எழுதப் பெற்றது. நடு ஆசியப் பகுதியைச் சார்ந்த கிருத்துவச் சமய நூலாகிய விவிலியமும் இசுலாமிய சமய நூலாகிய குர்ரானும் முற்காலத்திலேயே தொகுக்கப்பட்டன. தமிழில் சங்க இலக்கியத் தொகுப்பு முயற்சி கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து 5ஆம் நூற்றாண்டு வரை நிகழ்ந்திருக்கலாம். எட்டுத் தொகையில் ஒன்றாக இடம் பெற்றிருக்கும் புறநானூற்றுக்கும் கிரேக்கப் பூங்கொத்து எனப்படும் தொகுப்பிற்கும் ஒற்றுமைகள் உள்ளதாக அறிஞர்கள் கருதுவர். சமற்கிருதத்தில் கவீந்திர வசன சமுச்சயம் எனும் முதல் தொகுப்பு நூல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. கி.பி. 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. இன்பம், ஒழுக்கம், அரசியல், நீதிகள் ஆகியன இதில் அடங்கியுள்ள பாடல்களின் கருப்பொருள் ஆகும். வடமொழியில் உள்ள நான்கு வேதங்களில் மிகப் பழையதான ரிக் ஒரு தொகுப்பு நூலே. எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகிய தொகுப்பு முயற்சி மிகப் பண்பட்ட மிகப் பழைய இலக்கிய முயற்சியாக இந்திய அளவிலும் உலக அளவிலும் கருதப்பட இடமுண்டு. சமய அடிப்படையிலான தொகுப்பு முயற்சியில் மிகப் பழையது எனப் புத்தமத திரிபிடகத்தைக் கருதலாம். சமண பௌத்த உறவையும் கிரேக்க ரோம உறவையும் கி.மு. வை ஒட்டியே தமிழர்கள் பெற்றிருந்தனர். எனவே, சமயம் சார்ந்து தமிழர் செய்த தொகுப்பு முயற்சிகளுக்கு வேறு பல அயற்புல முயற்சிகளும் காரணமாக இருந்திருக்கலாம்.

சமய நூல்களை அடிக்கடி வாசித்துக் கொண்டிருப்பதே ஆன்ம ஈடேற்றம் எனும் கருத்து எல்லா மதங்களிலும் உள்ளது. இந்த நோக்கிலேயே தமிழிலும் சமய இலக்கியங்கள் பார்க்கப் பெற்றன. பைபிள் படிப்பது, திருக்குர்ரான் படிப்பது, பகவத் கீதை படிப்பது என்பதுபோல் திருவாசகம் படிப்பது, நாலாயிரத் திவ்விய பிரபந்தம் படிப்பது ஆகியன தமிழகச் சைவ வைணவர்க்குப் பழக்கமாகி இருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். திருமுறை காணும் முயற்சியும், அது பன்னிரு திருமுறையாக வளர்ந்த வளர்ச்சியும், கடவுளை நினைவு கூரும் முயற்சியே ஆகும். பன்னிரு திருமுறை கண்ட வரலாறு இந்த அடிப்படையிலும் மேற்கொள்ளப் பெற்றிருத்தல் வேண்டும்.

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு அரையனும்
பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்து உகப்பானை

எனவரும் சுந்தரர் தேவாரம் இதனை மெய்ப்படுத்துகிறது.

பக்திப் பாடல்களைத் தொடர்ந்து ஓதினால் என்ன என்ன நன்மை கிடைக்கும் என்பதைத் திருத்தொண்டர் திருவந்தாதியின் நிறைவில் இடம் பெற்றுள்ள பாடல் எடுத்துக் காட்டுகிறது.

ஓடிடும் பஞ்சேந் திரியம்
ஒடுக்கிஎன் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம் நின்று எத்தவம்
செய்தனன் வானின் உள்ளோர்
சூடிடும் சீர்திருப் பாதத்தர்
தொண்டர் தொகையின் உள்ள
சேடர்தம் செல்வப் பெரும்புகழ்
அந்தாதி செப்பிடவே

## பன்னிரு திருமுறை என்னும் சமயத் தொகுப்புப் பற்றிச் சில பார்வைகள்

1. பன்னிரு திருமுறை என்ற பெயரீடு பழமையானது அன்று. பிற்காலத்து, கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியார் (கி.பி. 1313) எழுதிய சேக்கிழார் புராணம் வழி அமைக்கப் பெற்றதாம்.

2. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு அளவில்தான் நம்பி ஆண்டார் நம்பியால் திருஞானசம்பந்தர், சுந்தரர், திருநாவுக்கரசர் எழுதிய திருப்பதிகங்களுக்குத் 'திருமுறை' எனும் பெயர் சூட்டப் பெற்றது. ஆரிய வேதங்கள் மற்றவர் அறியா வண்ணம் காக்கப்பட்டமையால் மறை எனத் தமிழில் அழைக்கப் பெற்றன. அவை எழுதி வைக்கப் பெறாமையால் எழுதாக் கிளவி எனப் பெற்றன. இப்பெயரீட்டுக்கு மறுதலையாக முறை எனவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுதி வாசிக்கப் பெற்றமையால் எழுத்துக் கிளவி எனவும் தேவார திருவாசகங்கள் சுட்டப்பட்டன. முறை என்பது பல சொல் கிளவி எனினும் இங்கே நூல் என்பதையே குறித்தது. 'திருமுறை எழுதுவோர், வாசிப்போர்' என வரும் கணநாத நாயனார் புராண அடிகள் இதனை உறுதி செய்யும். 'பாடும் திருமுறை' என்பது திருமந்திரம் (1067). திரு என்பது 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு' (பெரியபுராணத் திருக்கூட்டச் சிறப்பு, 8) என்பர் சேக்கிழார். திரு என்ற முன் அடையை முதலில் பெற்று வழங்கிய நூல் திருக்குறளே ஆகும். திருக்குறளும் திருவள்ளுவரும் பின்னர் எய்திய சிறப்பால் திரு என்ற சொல் உயர்வைக் குறிப்பதாகத் தமிழில் வழங்கலாயிற்று என்பதை ஏற்கனவே குறித்தோம்.*

தமிழரிடையே 'திரு' எனும் சொல் முதன்மை எய்திய நிலையில் மத வழியாகச் சமஸ்கிருத மொழியிலும் திருவில் திரிந்த வடிவமான ஸ்ரீ என்பதும் முதன்மை பெற்றிருக்க வேண்டும். ஸ்ரீ காஞ்சி புராணம், ஸ்ரீ இராமானுஜர் ஆகிய பெயர்கள் இதனையே காட்டுகின்றன.

* திருவள்ளுவர், திருக்குறள் ஆகிய இரண்டும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழர் வரலாற்றிலும் அரும்பெரும் முதன்மையைப் பெற்றிருந்தன என்பதைத் திருவள்ளுவமாலைப் பாடல்களும், திருக்குறளுக்குப் பின் வந்த இலக்கியங்கள் திருவள்ளுவர் கருத்தையும், அடிகளையும் தம்முள் செறித்துக் கொண்டதும் காட்டுகின்றன. ஆக, திருக்குறள் காலத்திற்குப் பிறகு தமிழில் 'திரு' என்ற சொல் தனிப்பெரும் முதன்மையை எய்தியிருத்தல் வேண்டும். அதன் பின்பு எழுதப் பெற்ற நூல்கள், நூல் தொகுதிகள், நூல் பெயர்கள் ஆகியவற்றுக்குத் 'திரு' என்பதை முன் அடையாகச் சேர்க்கின்ற பழக்கம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அதன் விளைவாகவே மூவர் எழுதிய பதிகங்கள் 'திருப்பதிகங்கள்' எனப் பெற்றன. சைவப் பாவலர் பலர் எழுதிய தொகுப்பிற்கும் 'திருமுறை' எனப் பெயர் சூட்டப் பெற்றது. மூவர் பாடிய தலங்கள் 'திரு' என்னும் முன் அடையைப் பெற்றன. மயிலை, கச்சி, மதுரை, உறையூர், காவிரிப்பூம் பட்டினம், வஞ்சி, தொண்டி, கருவூர் முதலாய ஊர்கள் எல்லாம் பழங்காலத்தில் 'திரு' என்ற அடை இல்லாமலேயே இருந்தன. திரு என்னும் சொல்லுக்கு மகிமை வந்த பிறகு பாடல் பெற்ற ஊர்கள் திருத்தலங்கள் என வழங்கப் பெற்றன. நக்கீரர் எழுதிய முருகாற்றுப்படையின் பழைய பெயர் திருமுருகாற்றுப்படை அன்று. இந்நூலுக்குப் புலவர் ஆற்றுப்படை எனும் இன்னொரு பெயரும் இருந்தது கவனிக்கத் தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆங்கிலத்தில் செயின்ட் (Saint) என்பதைப் போலத் திரு + முறை என்ற சைவ இலக்கியப் பெயரீடும் இவ்வடிப்படையிலேயே இடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. தற்போது கருதப்படுதல் போலத் தொடக்கத்தில் திருமுறைகள் 12ஆகத் தொகுக்கப் பெறவில்லை. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் முதல் ஆதித்த சோழன் காலத்தில் தில்லையில் மறைந்து கிடந்த நாயன்மார் மூவர்தம் பாடல்கள் தொகுக்கப் பட்டு நம்பி ஆண்டார் நம்பியால் முதல் 7 திருமுறைகள் வகுக்கப்பட்டிருத்தல் வேண்டும். பின்னரே அடுத்தடுத்த சைவக் கவிஞர்தம் படைப்புகள் 8, 9, 10 என வளர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. தற்போது 12 திருமுறைகளாகக் காட்டப்படுவனவற்றுள் ஒருமிப்பு இல்லாமை உற்று நோக்கத் தக்கது. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 12 ஆகிய திருமுறைகள் மட்டுமே குறிப்பிட்ட ஓர் ஆசிரியரின் பாத்தொகுப்புகளாக விளங்குகின்றன. 9ஆம் திருமுறை எண்மர் பாடிய பாடல்களின் தொகுப்பாக உள்ளது. 11ஆம் திருமுறை, 13 கவிஞர்களின் படைப்புத் தொகுப்பாக உள்ளது.

பன்னிரு திருமுறை எனும் தொகுப்புப் பெயர் ஒரே காலத்தில், அதாவது, கி.பி. 12ஆம் நூற்றாண்டுக்குப் பின்பு தொகுக்கப் பட்டிருந்தால் கால வரிசை அமைந்திருக்கும். இத்தொகுப்பில் கால வரிசை பரவலாகக் காணப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1, 2, 3 | திருமுறை | திருஞான சம்பந்தர் | கி.பி 640 - 656 |
| 4, 5, 6 | திருமுறை | திருநாவுக்கரசர் | 580 - 661 |
| 7 | திருமுறை | சுந்தரமூர்த்தி | 692 - 710 |
| 8 | திருமுறை | மாணிக்கவாசகர் | 800 - 832 |
| 9 | திருமுறை | திருமாளிகைத் தேவர் | 10 முற்பகுதி |
| | | சேந்தனர் | 10 இடைப்பகுதி |
| | | கருவூர்த் தேவர் | 11 முற்பகுதி |
| | | பூந்துருத்தி நம்பிகாடவநம்பி | 11 தொடக்கம் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | | | |
|---|---|---|---|
| | | கண்டராதித்தர் வேணாட்டடிகள் | 950 957 |
| | | திருவாலியமுதனார் | 10 இடைப்பகுதி |
| | | புருடோத்தமநம்பி | 11 தொடக்கம் |
| | | சேதிராயர் | 11 தொடக்கம் |
| 10 | திருமுறை | திருமூலர் | 5 அல்லது 6 |
| 11 | திருமுறை | திருவாலவா யுடையார் | கி.பி. 705 |
| | | காரைக்காலம்மையார் | 5 - 6 |
| | | ஐயடிகள் காடவர் கோன் | 7 பிற்பாதி |
| | | சேரமான் பெருமாள் | 650 - 710 |
| | | நக்கீரர் | 2 |
| | | நக்கீரதேவ நாயனார் | 10 பிற்பாதி |
| | | கல்லாட தேவர் | 10 பிற்பாதி |
| | | கபிலதேவர் | 10 பிற்பாதி |
| 12 | திருமுறை | சேக்கிழார் | 12 |

தேவாரத்திற்கு முன்னால் இடம் பெற வேண்டிய திருமூலர்தம் திருமந்திரம் 10ஆம் திருமுறையாக இருப்பதும், திருமந்திரத்தைப் போலவே தொடக்கத்தில் இடம் பெற வேண்டிய காரைக்கால் அம்மையார் பதிகங்கள் 11ஆம் திருமுறையாக இடம் பெற்றிருப்பதும் சங்க காலத்தில் எழுதப்பட்ட திருமுருகாற்றுப்படை நக்கீர தேவநாயனார் படைப்புகளோடு 11ஆம் திருமுறையாக இடம் பெற்றிருப்பதும் கால வரிசை இன்மையை உறுதிப்படுத்துகின்றன.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் தலைமைக் கடவுள் திருமாலாக அமைந்திருக்க, பன்னிரு திருமுறையின் தலைமைக் கடவுள் சிவபெருமானாக அமைந்திருத்தல் வேண்டும். ஆனால், சிவபெருமானுடன், முருகனும், கண்ணப்பரும், விநாயகரும், தில்லை நடராசர் கோயிலும், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரரும் இடம் பெற்று இருப்பதும், மணிவாசகர் இடம் பெறாமல் இருப்பதும், பன்னிரு திருமுறையின் அடிநாதமாக, ஏகநாதனாகச் சிவபெருமான் இடம் பெறாமல் இருப்பதும், பன்னிரு திருமுறை என்னும் தொகுப்பு தருக்க நெறிக்கு உட்பட்டுத் தொகுக்கப்பட வில்லை என்பதையே காட்டுவதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சைவ சமயத்தின் பெயரில் சிதறிக் கிடந்தவற்றை யெல்லாம் தொகுத்து ஒரு கட்டாகக் கட்டிப் போடுவது போன்று இத்தொகுப்பு அமைந்து கிடக்கிறது.

முருகனை மையப்படுத்தி நக்கீரரால் எழுதப் பெற்ற சங்க இலக்கியப் பாட்டு, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படை என்பன போல முருகாற்றுப்படை என்றே முன்பு அமைந்திருத்தல் வேண்டும். இதற்குப் புலவராற்றுப்படை எனும் பெயரும் மாற்றாக விளங்கி இருப்பது இணைத்து நினைக்கத்தக்கது. திரு என்ற ஒட்டுப் பிற்காலத்தில் சேர்க்கப் பெற்றுத் திருமுருகாற்றுப்படை என வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். 11ஆம் திருமுறையைத் தொகுத்த ஒருவருக்கு மேற்பட்ட தொகுப்பு ஆசிரியர்கள், நக்கீர தேவநாயனாரையும், சங்ககால நக்கீரரையும் ஒன்றாக்கி விட்டனர்.

> **முருகனைப் பற்றிப் பேசுவதால் திருமுருகாற்றுப்படை 11ஆம் திருமுறையாக இணைக்கப்பட்டது பொருத்தம் எனில், பரிபாடலில் இடம் பெற்றுள்ள முருகனைப் பற்றிய பாடல்களும் இணைக்கப் பட்டிருத்தல் வேண்டும். ஆனால், அவ்வாறு இணைக்கப் பெறவில்லை.**

பன்னிரு திருமுறையின் தொடக்கத் தொகுப்பிற்குக் காரணரான நம்பி ஆண்டார் நம்பி தம் படைப்புகளைத் தாமே 11ஆம் திருமுறையாக இணைத்துக் கொண்டுள்ளார் என்று கருதுவது பிழை. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியின் பாடல்களைப் பின்னே வந்த எவரோ ஏனைய கவிஞர் பட்டியலில் நம்பியையும் இணைத்து இருத்தல் வேண்டும்.

ஓர் ஆசிரியர் பல திருமுறைகள்; ஓர் ஆசிரியர் ஒரு திருமுறை எனத் தொடக்கத் தொகுப்பு முறை மீறப்பட்டுப் 12 புலவர்கள் 11ஆம் திருமுறை ஆசிரியர்கள் என விரிவுபடுத்தப்பட்டிருப்பது கருதத் தக்கது.

இத்தொகுப்பில் கால வரன்முறையும் இல்லை, வடிவ் வரன் முறையும் இல்லை, பொருள் வரன்முறையும் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பகுதி இரண்டு

மானுட இனம் பரிணாமம் பெற்று வளர்ந்துள்ள இன்றுவரை பின்வரும் மூன்று நிலைகளைக் கடந்து வந்துள்ளது.

1. இறையியல் கட்டம்
2. மெய்யியல் கட்டம்
3. நம்பிக்கையியல் கட்டம்

இறைமையியல் நிலையில் மானுடர், அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று நம்புவர். உலகில் உள்ள அனைத்தையும் இறை ஆற்றல்கள்தாம் இயக்குகின்றன, செயல்களைத் தீர்மானிக்கின்றன என்று கருதுவர்.

நுண்பொருள் கோட்பாட்டியல் நிலையில் முன்னைய நிலை மாறி வளர்ந்து, கண்ணுக்குப் புலப்படாத நுணுக்கச் சக்திகள்தாம் உலகில் நிகழும் நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்கும் என்று நம்புவர்.

புற மெய்ம்மை நிலையில் மானுடம் மேலும் வளர்ந்து அனைத்து நிகழ்வுகளும் ஒரு சில இயற்கை விதிகளின்படி நிகழும் என்று நம்புவர்.

மேற்கண்ட மூன்று நிலைகளையும் ஆகஸ்ட்டு கோம்த் எனும் அறிஞர் விளக்குகிறார். ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு நிலையும் மேலோங்கி இருந்தது. குறிப்பாக, இறையியல் நிலையில் கடவுளே மன்னனாக இருப்பார், அரசனுக்கு மேற்பட்ட அரசனாக இருப்பார். மக்கள் தங்களை அவருடைய போர் வீரர்களாகக் கருதி நடப்பர். சமய நெறிகளைத் தெய்வக் கட்டளைகளாகக் கடவுளின் சொற்களாகக் கருதுவர். இராணுவக் கட்டளைகளை மதிப்பது போல அவற்றை மதிப்பர். அவ்வார்த்தைப் பாடுகளைத் திறனாய்வு செய்வதோ, குறை கூறுவதோ, மீறி நடப்பதோ பெரும் குற்றமாகும் என்றும், அதற்குக் கடவுள் தண்டனை கிடைக்கும் என்றும் அஞ்சுவர்.

இந்நிலையில் குடும்பம் சமுக நிலை அமைப்பில் முதன்மையான உறுப்பாக இருக்கும். மக்களைக் கட்டுப்படுத்துவது, நெறிப் படுத்துவது, அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வது என அனைத்துச் செயல்களையும் குடும்பமே செய்யும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்நிலை நுண்பொருள் கோட்பாட்டு நிலையில் மாறி வளரும். புற மெய்ம்மை நிலையில் மேலும் மாறி வளரும். மூன்றாம் நிலையை எய்தும்போது மக்களே முதன்மையான நிலையில் இருப்பர். சமுதாயம் தொழில் மயமானதாக மாறும். இப்படி, அறிவு ஒவ்வொரு நிலையாக வளர்ச்சி பெறும்போது சமூக நிலை அமைப்பும் மாற்றம் அடையும், வளர்ச்சி பெறும். ஆனால், சமூகம் ஒழுங்குடன் இயங்கவில்லை எனில் இம்மாற்றங்கள் நிகழா, சமூக வளர்ச்சியும் ஏற்படாது. இந்நிலையில் சமூக நிலை அமைப்பில் ஏற்படும் மாற்றம் வளர்ச்சியாக மாறாமல் சமூகச் சீர்குலைவாக உருவாகிவிடும்.

மேலே குறிப்பிடப்பட்ட மானுட இனத்தின் அறிவு வளர்ச்சியின் பரிணாமத்தைப் பன்னிரு திருமுறைத் தொகுப்புடனும், தமிழ் மக்களின் வளர்ச்சியுடனும் இணைத்துக் கருதும்போது தமிழ்ச் சமுதாயம் எந்த அளவு வளர்ந்து இருக்கிறது அல்லது வளரவில்லை என்பதை ஓரளவு உய்த்துணர முடியும். முதல் திருமுறை தொடங்கி 12ஆம் திருமுறையாகப் பிற்காலத்துச் சேர்க்கப்பட்ட பெரியபுராணம், அதாவது, கி.பி. 7ஆம் நூற்றாண்டு தொடங்கி 12ஆம் நூற்றாண்டு வரை, தமிழர்கள் மானுட இனத்தின் தொடக்க நிலையான இறையியல் நிலையிலேயே தேங்கி வாழ்ந்து வந்துள்ளனர் என்று தெரிகிறது. தம் வாழ்வில் நிகழும் அனைத்திற்கும் கடவுளே பொறுப்பு எனும் குரல் பன்னிரு திருமுறையில் இடம் பெற்றுள்ள அனைத்து இலக்கியங்களிலும் மேலோங்கி இருக்கிறது. திருமூலரின் திருமந்திரம் தவிர, பிறவற்றில் விலகிய புதிய பார்வைகள் இடம் பெறாமல் போனது தமிழர்க்குப் பேரிழப்பேயாகும்.

**சிந்தனை செய்ய மனம்அமைத்**
**தேன்செப்ப நாஅமைத்தேன்**
**வந்தனை செய்யத் தலைஅமைத்**
**தேன்கை தொழஅமைத்தேன்**
**பந்தனை செய்வதற் [கு] அன்பமைத்**
**தேன்மெய் அரும்பவைத்தேன்**
**வெந்தவெண் ணீறணி ஈசற் [கு]**
**இவையான் விதித்தனவே.**

**[சேரமான் பெருமாள் நாயனார் பொன்வண்ணத்து அந்தாதி].**

உருவ வணக்கம், அருவ வணக்கம் ஆகியவற்றுள் உருவ வணக்கம் முந்தையது, அருவ வணக்கம் பிந்தையது. பழம் சமயங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனைத்திலும் உருவ வணக்கமே முந்தையதாக இருந்தமை கருதத் தக்கது. தாம் வாழ்ந்த நாட்டில் பல்வேறு உருவ வணக்கங்கள் இருந்ததையும், அவற்றை முகம்மது நபி விலக்கியதையும் அவர்தம் வரலாறு காட்டுகிறது. தமிழரிடையே கூட வடலூர் வள்ளலார் மிகப் பிற்காலத்தில் அருவ வணக்கத்தை ஒரு பேரியக்கமாகக் கட்டி எழுப்பினார். சிவலிங்க வழிபாடு கூட ஒரு வகை அருவ வழிபாடே. இவையெல்லாம் தமிழ்ச் சமுதாயத்தின் பிற்கால வளர்ச்சிகள். தமிழர் முன்னோர் வழிபாட்டினர். அவ்வழிபாடே பொதுமை எய்தி உருவ வழிபாடாக வளர்ந்து இருக்க வேண்டும். எளிய மக்களுக்கு உருவங்களை முன்நிறுத்தி வழிபடுவதும், மனத்தை ஒருமுகப் படுத்துவதும் எளிது. இதனைப் பன்னிரு திருமுறைத் தொகுப்பு உறுதிப்படுத்துகிறது. பன்னிரு திருமுறையின் பெரும்பாலான வற்றில் சிவபெருமானே ஏக கடவுள். அவனுடைய உருவ அழகு பற்றித் திருநாவுக்கரசரின் தேவாரம் முதல் (குனித்த புருவமும்...) பல்வேறு பாடல்கள் வருணிக்கின்றன. திருமுறை 7-க்குப் பிறகு மேலும் 12 வரை வளர்க்கப்பட்ட நிலையில் வினாயகர், முருகன், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திரு ஆரூரர் ஆகியோரும் வழிபடு உருவங்களாக வழிபடப்படுவதைக் காண்கிறோம். பல்வேறு உருவ வழிபாடுகளும், பல்வேறு வழிபாட்டு முறைகளும் தமிழ்ச் சமுதாயம் ஓர் இடைநிலையில் இருந்ததையே காட்டுகின்றன.

பன்னிரு திருமுறை என்ற பெயரீட்டிற்கும், பெரியபுராணம் 12ஆம் திருமுறையாய் இடம் பெற்றதற்கும், தில்லையை அடுத்த கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் (கி.பி. 1313) ஒரு முதன்மையான காரணர் ஆகலாம். சங்ககாலம், சங்கம் மருவிய காலம் வரை கூடத் தில்லை கோயில் முன்னிடம் பெற வில்லை. நடராசர் உருவம் பற்றிய இலக்கியச் சான்று திருநாவுக்கரசர் பதிகத்தில்தான் முதலாவது இடம் பெறுகிறது. காரைக்கால் அம்மையார் இவரை ஒட்டியோ, இவருக்குச் சற்றே முன் பின்னாகவோ ஆடல் அரசனைப் பற்றிக் குறித்தார் எனலாம். தில்லைச்சிற்றம்பலம், 'கோயில்' எனக் குறிக்கப்படுவதும், திருமுறைத் தொகுப்பு தொடங்கி வளர்ப்பு வரை தில்லை முதன்மை பெறுவதும் சிறப்பாகக் கருதத் தக்கன. மூவர் படைப்புகள் தில்லையில் கண்டுபிடிக்கப்பட்டன, திருவாசகம் தில்லையில் அரங்கேறியதும் சேக்கிழார் பெரியபுராணம் தில்லையில் உருவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெற்றதும் தில்லை, பிற்காலச் சோழர் காலத்தில் ஒரு சமயத் தலைநகராக விளங்கி இருத்தல் வேண்டும் என்பதைக் காட்டுகின்றன. திருமுறை கண்ட புராணத்தை எழுதிய உமாபதி சிவாச்சாரியார் தில்லையைச் சார்ந்தவர் என்பதும், தில்லைவாழ் அந்தணர் என்பதும் சுட்டத்தக்கன. தில்லை முதன்மை பெறுவதால் அறியப் பெற வேண்டியது தமிழும் சமசுகிருதமும் அல்லது சமசுகிருதமும் தமிழும் பன்னிரு திருமுறை ஆசிரியர் காலத்தில் சமமாகப் பாவிக்கப்பட்டன என்பதாகும். இது சோழர் கால மொழி நிலையைச் சுட்டுகிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி ஆட்சி மொழித் தகைமையை இழந்திருந்த தமிழ், சோழர் காலத்து ஐம்பது விழுக்காடு முதல் நிலை பெற்றதைக் காட்டுவதாகவும் இதனைக் கொள்ள இடமுண்டு.

தில்லை முதன்மை பெற்றதற்கும், திருமுறை 12 ஆக விரிவு அடைந்ததற்கும் நெருக்கமான தொடர்பு இருக்கலாம் என்று தோன்றுகிறது. கி.பி. 1133 - 1150 காலத்தில் ஆட்சி செய்த இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லையில் முடிசூட்டிக் கொண்டான். தில்லைக் கோயிலுக்குப் பல சிறப்புகள் செய்தான். பொன் மயம் ஆக்கினான். எழுநிலைக் கோபுரங்கள் எழுப்புவித்தான். இச்சோழ மன்னன் நடராசர் திருமுன் இருந்த கோவிந்தராசப் பெருமாள் திரு உருவத்தை முன்நிலை விரிவுபடுத்தும் நோக்குடன் கடலில் எறிந்தான்.

முன்றில் கிடந்த கருங்கடல் போய்
முன்னைக் கடல் புகப் பின்னை - [தாழிசை 777]

என்று தக்கயாகப் பரணி, குறிப்பிடுகிறது. இதனால் வைணவ எதிர்ப்பு மன்னனுக்கு வந்து சேர்ந்தது. கிருமி கண்ட சோழன் என்றே இவன் வரலாற்றில் பழிக்கப்பட்டான்.*

தீவிர சைவனாகிய குலோத்துங்கச் சோழன் காலத்தும், அவனுக்குப் பின் வந்து ஆண்ட இரண்டாம் இராசராச சோழன் (1146 - 1163) காலத்தும் சைவ மதம் முதன்மை பெற்றதுடன் மட்டுமில்லாமல் தில்லையும் முதன்மை பெற்றது. இரண்டாம் இராசராச சோழனின் தில்லைப் பற்றை ஒட்டக்கூத்தர்

* தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி 2, பக்கம் 93, 95.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தில்லைத் திருமரபிற்கு எல்லாம் தொழுகுலமும்
தில்லைத் திருநடனம் சிந்தித்து
[இராசராசன் உலா, 93-94]

எனக் குறிப்பிடுவர். இவனை அடுத்து இரண்டாம் இராசராச சோழன், அவனை அடுத்து மூன்றாம் குலோத்துங்கச் சோழன் தென்னகத்தை ஆண்டனர். மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் தில்லைப் பேரம்பலம் மீண்டும் பொன் வேயப் பெற்றது. இவன் காலத்துத்தான் சேக்கிழார் பெரிய புராணத்தை எழுதினார். நூலாசிரியர் சேக்கிழார் தில்லை மாநகரில் தங்கி அதனைப் பாடி முடித்தார். பிற்காலச் சோழ மன்னனின் வீழ்ச்சிக்குப் பின்னும், பாண்டியரின் எழுச்சியின்போதும் தொடர்ந்து தில்லை முதன்மை பெற்று வந்துள்ளதைத் தமிழக வரலாறு தெளிவாகப் புலப்படுத்து கிறது. திருமுறையின் எண்ணிக்கையும் அதற்குத்தக பெருகிக் கொண்டே வந்துள்ளது. தில்லைவாழ் அந்தணர் குலத்தைச் சார்ந்த உமாபதி சிவாச்சாரியார் திருமுறை கண்ட புராணம் எழுதி நிறுவுகிறார். இவை அனைத்தையும் ஒருங்கு நோக்க, தில்லை பிற்காலச் சோழர் காலத்தில் பெரும் முதன்மை பெற்று இருந்தது. தில்லைக் கோயிலை ஆட்சி செய்தோர் தில்லைவாழ் அந்தணர் ஆவர். இவர்தம் ஆதி இடம் காஷ்மீரம். இவர்தம் தாய்மொழி தமிழ் அன்று. கோயிலில் சமசுகிருதம் இடம் பெறுவதற்கு உறுதுணையாக இருந்தோர் இவரே.

தில்லையில் உள்ள அந்தணர் ரிக் முதலான வேதம் ஓதுவோர் என்பதை நம்பியாண்டார் நம்பி தம் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிடுகிறார்.

தில்லைவாழ் அந்தணர் முதலாவதாக வட மொழியையும், அடுத்ததாகத் தென் மொழியையும் கருதி வந்தனர் என்பதை நம்பியாண்டார் நம்பியின் பின்வரும் பாடல் உறுதி செய்கிறது.

தொகுத்த வடமொழி தென்மொழி
யாதென்று தோன்றியதே
மிகுந்த இயலிசை வல்ல
வகையில்விண் தோயும்நெற்றி
வகுத்த மதில்தில்லை அம்பலத்
தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்
லோர்என்ப உத்தமரே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தில்லைக் கோயிலை மையமாக வைத்துப் பிற்காலச் சோழ மன்னர் அனைவரும் ஈர்க்கப்பட்டுள்ளனர். தில்லைவாழ் அந்தணர் முடிசூடவே, முடி சூட்டிக் கொள்ளும் மரபும் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. பன்னிரு திருமுறையை இந்தப் பின்னணியிலும் நாம் பார்க்க வேண்டியுள்ளது. தில்லை சார் பாடல்கள் மிகுதியாகப் பன்னிரு திருமுறையில் சேர்க்கப்பட்டமைக்கும், இந்நிகழ்வுகளுக்கும் மிகுந்த தொடர்பு உள்ளதாக நினைக்க வேண்டியுள்ளது. தேவாரம் கண்டெடுக்கப்பட்ட நிகழ்ச்சி, திருவாசகம் அரங்கேற்றப்பட்ட நிகழ்ச்சி, திருத்தொண்டர் புராணம் சேக்கிழாரால் இங்கே அமர்ந்து உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி ஆகியன மெய் நிகழ்வுகளா? கதைகளா? என்பன கூட மீண்டும் ஆராயப்பட வேண்டும் என்று தோன்றுகிறது.

கருவூர் தேவர், நக்கீர தேவநாயனார், கல்லாட தேவர், கபில தேவர் எனும் பெயர்கள் கொண்டோர் திருமுறை ஆசிரியர்களாகப் பேசப் படுகின்றனர். கல்லாட தேவர், திருக்கண்ணப்ப தேவர் திருமறம் எனும் பெயரிலேயே ஒரு திருமுறையைப் பாடியுள்ளார். இது 38 அடிகளை உடையது. ஆசிரியப்பாவால் எழுதப்பட்டது. இதுவும் திருமுறையாக இணைக்கப் பெற்றுள்ளது. திண்ணப்பர், கண்ணப்பராகி, திருக்கண்ணப்பராகி மேலும் திருக்கண்ணப்ப தேவராகப் பெயர் எய்துகிறார். கண்ணனார் காளத்தி மலை மீது அமர்ந்து சிவலிங்கப் பெருமானைக் கண்டு வழிபட்டுத் தமது கண்ணைத் தோண்டி, அப்பி, கண்ணப்பர் ஆயினர் என்பது வரலாறு. ஆனால், காளத்தி தேவர் கானப்பேரை (காணப்பேறு....?) வழிபட்டார் என்று தம் நூலில் குறித்துள்ளார். கானப்பேர் என்பது இன்றைய காளையார் கோவிலாகும். காளத்தி மலை மீது நிகழ்ந்த நிகழ்ச்சியை எங்கோ தெற்கே தள்ளியுள்ள காண்பேர் கடவுளோடு இணைப்பது ஆசிரியரின் கானப்பேர் பற்றைக் காட்டுகிறது. தேவர், தேவர் என வரும் குறிப்பும் காணப்பேறு எனும் குறிப்பும் ஆழமாகச் சிந்திக்கத் தக்க சமுதாயவியல் குறிப்புகளாகும்.

பன்னிரு திருமுறை ஆசிரியர்கள் 27 பேர். அவர்கள் படைத்த நூல்கள் 76. இந்நூல்களில் இடம் பெற்றுள்ள திருப்பாடல்கள் 18,326.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூவர் பாடிய தலங்கள் மட்டும் பாடல் பெற்ற திருத்தலங்களாகக் காட்டப்பட்டு, ஏனைய 24 பேர் பாடிய தலங்கள் அவ்வாறு குறிக்கப்படாமையின் வெளிப்படையான பொருள் புலப்படவில்லை. விடுபட்ட பெயர்களுள் திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகர் பெயரும் ஒன்றாகும். மாணிக்கவாசகரின் வரலாறு பெரியபுராணத்தில் விடுபட்டது விவாதத்திற்கு உரியது. பெரிய புராணம் எழுதப்பட்ட கி.பி. 12 ஆம் நூற்றாண்டோடு திருமுறை பெயர் இணைப்பு நிறுத்தப்பட்டதும் திருப்புகழ் எழுதிய அருணகிரியார் போன்றோரின் பெயர்கள் விடுபட்டதும், அதற்குரிய காரணங்களும் நமக்கு விளங்குமாறு இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழரிடையே இராமாயண மகாபாரதச் செல்வாக்கும் எதிர் விளைவும்

இலக்கியங்கள் எல்லாம் எல்லா இடத்திலும், எல்லா மொழியிலும் பரவி விடுவது இல்லை; எல்லாக் காலத்திலும் நிலைத்து விடுவதும் இல்லை. அவற்றுள் ஒரு சிலவே பிறந்த இடத்தை விட்டு வேறு இடங்களுக்கும் பரவுகின்றன. எழுதப்பட்ட மொழியில் இருந்து வேறு மொழிகளுக்கும் பெயர்க்கப்படுகின்றன. தோன்றிய காலத்தைத் தாண்டித் தொடர்ந்து வரும் காலத்திலும் வாழுகின்றன. இதற்கு உரிய காரணங்கள் வருமாறு.

1. ஓர் இடத்தில் இருந்து வேறு இடத்திற்குப் பரவுவதற்கு அரசியலும், சமயமும் காரணமாகின்றன.
2. ஒரு மொழியில் இருந்து வேறு மொழிக்குப் பெயர்க்கப் படுவதற்கு அரசியல், சமயம், இலக்கியத் தரம், அறிவு ஆர்வம் ஆகியன காரணமாகின்றன.
3. எல்லாக் காலத்திலும் நிலைப்பதற்குச் சமயக் காரணமும், இலக்கியத் தரக் காரணமும் முதன்மையாக அமைகின்றன.

இராமாயணமும், மகாபாரதமும் பிறந்த இடம் வட இந்தியப் பகுதி. எழுதப்பட்ட மொழி பிராக்கிருதம். ஆனால் அவை இடம் கடந்தும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மொழி கடந்தும், காலம் கடந்துழ் பரவின; பரவி இன்றும் வாழுகின்றன; பேசப்படுகின்றன. இப்பரவுதலுக்குப் பின்வருவன காரணங்களாக அமைகின்றன.

1. இவை படைக்கப் பெற்ற மொழிக்குரிய மக்கள், ஆதிக்கம் செய்யும் அரசர்கள் வேறு பகுதிகளைத் தம் உடைமை ஆக்கினர். இதனால் இலக்கியத்தின் இடப் பரப்பு முன்னைய ஆரிய மன்னர்களின் ஆளும் எல்லை வரை பரவியது. இவ்வகை யிலேயே இந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஆகியவற்றில் இவை பரவி இருக்க வேண்டும். இவற்றில் குறிப்பாகச் சுட்டத் தக்கது இராமாயணக் கதையாகும்.

2. முன்னே சுட்டிய மன்னர்கள் பெரும்பாலும் வேதங்களை ஒப்புக் கொண்ட வைதிக மன்னர்களாக இருந்தனர். மன்னர்கள் வழிச் சமயம் எல்லை கடந்து பரவுவது உலக வரலாற்று உண்மை. ரோமர்கள் ஆசியக் கண்டத்திலுள்ள பாலஸ்தீனத்தை வென்ற போது அங்குத் தோன்றிப் பரவி இருந்த கிருத்துவத்தால் ஈர்க்கப் பெற்றார்கள். அம்மன்னர்கள் வழி இத்தாலியில் கிருத்துவம் பரவியது. தொடர்ந்து ஐரோப்பா முழுவதும் ரோமர்களின் வெற்றியால் பரவியது. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கு ஐரோப்பியர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், நெதர்லாந்துக் காரர்கள், போர்ச்சுக்கீசியர்கள், ஸ்பெயின் நாட்டார்கள், ஆசிய, ஆப்பிரிக்க, அமெரிக்க, ஆத்திரேலியக் கண்டங்களில் பரவித் தம் ஆளுகையை நிறுவியபோது அவர்கள் வழிக் கிருத்துவச் சமயம் உலகம் முழுதும் பரவியது. இது போன்றே இசுலாம் மெக்கா, மதினாவில் தோன்றி அரசர்களின் வெற்றிக்கும், பரவுதலுக்கும் ஏற்ப உலக நாடுகள் எங்கும் பரவியது. இங்ஙனமே கி.மு. 6ஆம் நூற்றாண்டில் தோன்றிய புத்தரை ஒட்டிப் பரவிய பௌத்த மதம் இந்தியா, இலங்கை, தென் கிழக்கு ஆசிய நாடுகள், சீனா, ஜப்பான் வரை பரவியது. கிருத்துவம், இசுலாம், பௌத்தத்தைப் போலப் பெரும் பரப்பை வைதிகச் சமயத்தால் கவர்ந்து கொள்ள முடியவில்லை. எனினும் இந்தியா, இலங்கை, தென்கிழக்கு ஆசிய நாடுகளை வெற்றி கொண்ட வைதிக அரசர்கள் வழி பரவியது. இப்பரவுதலை ஒட்டியே இராமாயணக் கதையும், பாரதக் கதையும் ஆசியாவின் ஒரு பகுதியில் பரவின. ஏனைய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகுதிகளில் பரவாமைக்கான காரணம் இந்திய மன்னர்களும், சமயவாணர்களும், மேற்கண்ட எல்லைகளைத் தாண்டிச் செல்லாமையே ஆகும் அல்லது செல்ல இயலாமையே காரணமாகும்.

ஆக, வட இந்தியாவில் தோற்றம் கொண்ட இவ்விரண்டு இதிகாசக் கதைகள் தமிழகத்தில பரவியதற்கு முதன்மையான காரணங்கள் அரசியலும், சமயமுமே ஆகும். இவ்விரு காரணங்களுடன் கூடத் தமிழ்ச் சமுதாயத்தின் மனப்போக்கும் ஒரு காரணம். வேற்றுப்புல வரவைத் தரம் பிரித்து வடிகட்டி நல்லன ஏற்கும் மனப்போக்குப் பொதுவாகத் தமிழரிடம் இருந்ததே இல்லை. எனவே, தம் பண்பாட்டுக்கு மறுதலையான இராமாயணக் கதையையும், பாரதக் கதையையும், அவற்றின் உள்ளே அடங்கி இருந்த கிளைக் கதையையும் தமிழர்கள் அரசியல் செல்வாக்காலும், சமயச் செல்வாக்காலும் எளிதே ஏற்றுக் கொண்டனர். இவ்வேற்பு அரசியல், சமய ஏற்புகளாக மட்டுமின்றி மொழி ஏற்பாகவும் இருந்தது. இராமாயண, மகாபாரதக் கதைகள் தொடக்கத்தில் தமிழகத்தில் பரவாமலேயே இருந்திருத்தல் வேண்டும். அத்தொடக்கக் காலங்களில் வட அரச ஆதிக்கமும், வடமொழி ஆதிக்கமும், வட சமய ஆதிக்கமும் இல்லாது இருந்தது இதற்குக் காரணங்களாகும். இம்மூன்றையும் எதிர்க்கும் தன்மதிப்பு நிலை சங்க காலத்தில் இருந்ததற்கான தடயங்கள் சங்க இலக்கியங்களில் காணப்படு கின்றன.

ஆரிய அரசர்களை எதிர்ப்பதும், எதிர்த்துப் போராடுவதும், போராடி வெற்றி கொள்வதும் சங்க இலக்கியங்களில், அதுவும் குறிப்பாகப் புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் பெருமையாகப் பேசப்படுகின்றன. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற குறிப்பும், இமயம் வரை சென்று வென்றான் சேரன் எனும் பொருளைத் தரும் இமயவரம்பன் எனும் பெயரீடும், வட ஆரிய கனகவிசயர்தம் முடித்தலை நெரித்த சேரன் செங்குட்டுவனின் போர் நிகழ்வும் இவற்றை மெய்ப்பிக்கின்றன.

கங்கை வரை சென்று வெல்வதும், கங்கை ஆற்று நீரைக் கொணர்வதும், சிலை செய்வதற்காக இமய மலையில் கல் எடுப்பதும் பெருமையாகக் கருதப் பெற்றன. தமிழ்நாட்டு

www.tamilarangam.net



மூவேந்தராகிய சேரர், சோழர், பாண்டியர் தம் வடபுல வெற்றியை இமய மலையில் தம் சின்னங்களாகிய வில், புலி, மீன் ஆகிய வற்றைப் பொறிப்பதில் அக்கறை காட்டினர்.

பண்டைத் தமிழக மன்னர்கள் வடபுலத்தைப் பகைப்புலமாகப் பார்க்கின்ற பார்வை இருந்தது என்பது பல வகையாலும் உறுதியா கிறது. இதனைப் போலவே வட புலத்துள்ளோர்க்குத் தென் புலத்தை வெற்றி கொள்ள வேண்டும் எனும் கருத்து இருந்ததைப் புராண வரலாறுகளும், அரச வரலாறுகளும் காட்டுகின்றன.

சிவபெருமானுக்குக் கயிலையில் திருமணம் நிகழ்ந்தபோது வடபுலம் தாழ்ந்து, தென்புலம் உயர்ந்ததாகவும், அதனைத் தட்டிச் சமமாக்கச் சிவபெருமான் அகத்தியரைத் தெற்கே அனுப்பினதாகவும் கதை ஒன்று உள்ளது. பாரதக் கதையில் அர்ச்சுனன் பாண்டியன் மகளை மணந்து கொண்டதாக உள்ள குறிப்பும், இராமாயணத்தில் இராமன் தென்னக மன்னனான வாலியை வதம் செய்தான் என்ற கதையும், இலங்கை வேந்தன் இராவணனைக் கொன்றான் என்ற நிகழ்வும் இப்பார்வையில் பார்க்கத் தகுந்தன. சமுத்திரக்குப்தன் எனும் அரசன் தமிழ்நாட்டின் மேல் படையெடுத்தான் எனும் செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று (281) பதிவு செய்துள்ளது.

> முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
> தென்றிசை மாதிரம் முன்னிய வரவிற்கு
> விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
> தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
> அறையிறந் தவரோ சென்றனர்.

சமய நிலையில் இப்போக்கு இருந்ததை வரலாறுகள் காட்டு கின்றன. முருகனைத் தமிழ்க் கடவுளாகக் காட்டும் தமிழ் மரபு, சிவனை அவ்வாறு சித்திரிப்பது இல்லை. முருகனுக்கு இடம் கொடுக்கும் தொல்காப்பியம் சிவனைக் குறிக்காததும் கருதத் தக்கது. வடவாரியர் முருகனின் தமிழ்க் குலத்து மனைவியான வள்ளியைப் போற்றுவதும் இல்லை. திருமால் மேல் மால் கொண்ட ஆண்டாளை வட இந்திய வைணவ மரபு பெரிதாக எடுத்துக் கொள்வதும் இல்லை.

ரிக், யசூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள் ஆரிய வேதங்களாகக் கருதப் பெற்றன. இவ்வேதங்களை ஒப்புக் கொள்ளும் சமயம் வேத சமயம் அல்லது வைதிக சமயம் என

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அழைக்கப் பெற்றது. ஆரிய மொழியில் எழுதப்பட்ட இவ்வேதங்களைத் தமிழர்கள் தம் வேதங்களாக ஒப்புக் கொள்வது இல்லை. தமிழில் எழுதப்பட்ட தேவார திருவாசக பன்னிரு திருமுறைகளையும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தையும், திராவிட வேதங்களாகக் கருதினர். திருக்குறளைத் தமிழ் மறையாகப் போற்றினர். தமிழர் போற்றியது ஆகம முறையாகும். வட இந்தியர் போற்றியது வேத முறையாகும். தமிழர்தம் கோயில் அமைப்பு அவர்க்கே உரிய திராவிடக் கோயில் அமைப்பு ஆகும். வட இந்தியர் கோயில் அமைப்பு முற்றும் வேறுபட்டதாகும். தமிழர் கோயில்களில் ஆகம முறைப்படிப் பூசை செய்து வரும் ஆதி சைவராகிய குருக்களை ஆரியப் பிராமணர் கொள்வன கொடுப்பனவற்றுக்குத் தம்மவராக ஒப்புக் கொள்வது இல்லை. வடக்கே இருந்து வந்த ஆரிய வைதிக மதத்தை எதிர்த்தது போன்று வடக்கு இருந்து வந்த பௌத்தத்தைத் தமிழர்கள் எதிர்த்தனர். முடிவில் நிகழ்ந்த மதப் போராட்டத்தில் சமண, பௌத்த மதங்களைத் தமிழ் மண்ணில் வலுவிழக்கச் செய்தனர். ஆனால், இலங்கையில் இந்நிகழ்வு வெற்றி பெறவில்லை.

கி.பி. 4,5,6ஆம் நூற்றாண்டுகளில் இம்மதப் போராட்டம் அரசியல் போராட்டமாகவும் வெடித்தது. வட இந்தியாவில் சமண, பௌத்தம் வீழ்த்தப் பெற்ற குப்தர் காலத்தில், ஆரிய வைதிக சமயமும், அதனைச் சார்ந்த அரசர்களும் மேலோங்கினர். அவர்தம் ஆதிக்கம் வட இந்தியா மட்டுமின்றித் தென்னகத்திலும் பரவியது. அரச ஆதிக்கமாகவும் பரவியது. சமய ஆதிக்கமாகவும் பரவியது. மொழி ஆதிக்கமாகவும் பரவியது. இப்பரவுதலின் வழி ஆரிய மொழியில் எழுதப்பட்ட சமய இலக்கியங்கள், வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் இருந்து தமிழகத்திற்குப் பரவின. பரப்பப் பட்டன. தமிழ்நாட்டில் இப்பரவுதல் பல்லவர் காலத்தில் வீரியம் பெற்றது. சோழர் காலத்தில் மேலும் மேலோங்கியது. பாண்டியர் காலத்திலும் இந்நிலை தொடர்ந்தது. பின்னாளில் நாயக்கர் காலத்தில் இம்முயற்சி இரண்டு மடங்காக முழுமை பெற்றது. இவ்வரசியல், சமயப் போராட்டத்தின் விளைவே இராமாயணக் கதையும், மகாபாரதக் கதையும் சமய இலக்கியங்களாகத் தமிழ்நாட்டில் பரவியமைக்குத் தலைமைக் காரணங்களாகும்.

www.tamilarangam.net



தமிழ்நாட்டில் இலட்சிய மாந்தர் கதை பரவாமையையும், அயல் புலத்துப் பிற பண்பாட்டு நாகரிக மாந்தர் கதை பரவுவதையும் தமிழ் அறிஞர் எதிர்த்தே வந்துள்ளனர். இதன் ஒரு பெரும் விளைவே சிலப்பதிகாரம் ஆகும். இராமாயணக் கதையில் அண்ணன் இராமன் முடிசூட வேண்டிய நிகழ்வு தம்பி பரதனின் தாய் கைகேயியால் நிறுத்தப்படுகிறது. ஆனால், சிலப்பதிகாரத்தில் கணியர் கூற்றுப்படி பட்டம் ஏற்க வேண்டிய இளங்கோ தலை மழித்துத் துறவியாகி அரசியலை விட்டு விலகித் தமையன் செங்குட்டுவன் பட்டம் ஏற்கத் தடம் அமைத்துத் தருகிறான். இராமாயணக் கதைத் தலைவி சீதை கணவனின் சொல்லை மறுத்து அவனுடன் காட்டுக்குச் செல்கிறாள். மீண்டும் அவன் சொல்லை மறுத்து எல்லை தாண்டுகிறாள். பின்னால் நாடு கடத்திச் சிறை வைக்கப்படுகிறாள். சிலப்பதிகாரக் கதைத் தலைவி கண்ணகி கணவன் சொல்லை ஏற்று மதுரைக்கு உடன் செல்கிறாள்; வழி நெடுகக் கணவன் சொல்லைக் கேட்டுப் பணிந்து நடக்கிறாள். கணவன் கொலைப் பட்டதற்காகத் தனி ஒருத்தியாகப் பாண்டிய அரசனிடம் போராடி அவனைத் தானே அழியச் செய்கிறாள். மதுரையையும் அழிக்கிறாள்; தெய்வம் ஆகிறாள். சேர அரசன் செங்குட்டுவனால் அவளுக்குக் கோயில் எழுப்பப்படுகிறது. இந்திய நாடெங்கிலும் இருந்தும், இலங்கையில் இருந்தும் அரசர்கள் வருகை தந்து கண்ணகி எனும் பத்தினித் தெய்வத்தை வழிபடுகிறார்கள். முதல் முதலாக இந்திய வரலாற்றிலேயே ஓர் பெண் தனிப்பெரும் தெய்வம் ஆக்கப் படுகிறாள்.

ஒருவனுக்கு ஒருத்தி என்பதுடன், பரத்தைக் குலமாக இருந்தாலும் ஒருத்திக்கு ஒருவன் எனும் கருத்து மாதவியால் நிலை நாட்டப்படுகிறது. பரத்தமைத் தொழிலையே புறக்கணித்துப் பசியை விரட்டும் பாவையாக மணிமேகலை படைக்கப்படுகிறாள். பரத்தையையும், பரத்தை மகளையும் மிக உயர்வாக வைத்துப் படைக்கப்பட்ட காப்பியம் மிகப் பழைய காலத்தில் இந்திய மண்ணிலும் உலக மண்ணிலும் தமிழில் மட்டுமே நிகழ்ந்தது ஆகும்.

சீதை நாடு கடத்தப்படுவது, இராமன் சீதை என்ற அரசக் குலத்தினர் கதை மாந்தர் ஆக்கப்படுவது ஆகிய நிகழ்வுகள் முற்றும் அரசகுலச் சார்பானவை. கண்ணகி, மாதவி எனும் எளிய குடும்பத்தினர் கதைத் தலைமை பெறுவது, கோவலன் எனும் வணிகக்

www.tamilarangam.net



குல இளைஞன் முன்னிடம் பெறுவது, எளிய ஒரு பெண்ணுக்கு அநீதி இழைத்தற்காக அரசனும், அரசியும் தாமே மடிவது, மதுரை நகரே அழிவது முதலாய நிகழ்வுகள் முற்றும் வேறுபட்டவையாகும். வேறுபட்ட பண்புக்கு உரியவர் தமிழர் என்று நிலைநாட்டுவதற்காக எழுதப்பட்டவை யாகும்.

சூர்ப்பனகை எனும் கணவனை (வித்யுச்சவன்) இழந்த விதவை இன்னொருத்தியின் கணவனாகிய இராமனையும், இலக்குவனையும் விரும்புவதாகக் காட்டுவது இராமாயணக் கதை. தசரதன் என்னும் மன்னனுக்கு நான்கு முதலான ஆயிரக்கணக்கான மனைவியர் இருந்தனர் என்று காட்டுவது வடபுலத்து நிகழ்வு களாகும். மறுதலையாகக் கணவன் இறந்தபின் இறப்பது தலைக் கற்பாகக் காட்டப்படுவது தமிழ் முறை.

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர்
செகுக்கும் [குறுந்தொகை - 69]

எனக் காட்டுவது காண்க. விதவைக் காதலைப் பற்றிக் குறிப்பு கூட இடம் பெறாமல் 2000க்கும் மேற்பட்ட அக இலக்கியப் பாக்கள், கட்டுப்பாட்டைப் போற்றுவது தமிழர்தம் பழைய நெறிகள் ஆகும். பாரதத்தில் கிளைக் கதையாக இடம் பெற்றிருக்கும் நளன் கதையில் கணவன் உயிரோடு இருக்கத் தமயந்தி மறுமண நிகழ்ச்சிக்கு உடன்படுகிறாள். சுயம்வரத் திருமண முறையும் தமிழர் முறையன்று. இத்தகு நிகழ்வைத் தமிழ் இலக்கியப் பரப்பில் காணவே முடியாது. எனவே, நச்சுக் கருத்துகள் தமிழ் மக்களிடையே புகுவதைத் தடுக்கும் முகமாக இளங்கோ அடிகள் சிலப்பதிகார வரலாற்றைக் காப்பியப் படுத்தினார் என்று கருத வேண்டியுள்ளது. அதாவது, இராமாயணப் பாரத இதிகாசங்கள் தமிழகத்தில் கதையாகப் பரவுவதைக் கூட இளங்கோ ஒப்புக் கொள்ளாமையின் மாற்று வெளிப்பாடுதான் சிலப்பதிகாரப் படைப்பாகும். இக்கருத்தை இன்னொரு வகையிலும் உறுதிப்படுத்தலாம்.

இளங்கோ அடிகள் கோவலன் பூம்புகாரை விட்டு மதுரை சென்ற நிலையில் பூம்புகாரைப் பின்வருமாறு உவமிப்பார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெருமகன் ஏவல் அல்லது யாங்கணும்
அரசே தஞ்சம் என்று அருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும் பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்

[மதுரை, புறஞ்சேரி, 63-65]

இராமன் காடாள வேண்டும், பரதன் நாடாள வேண்டும் என்பனவே அரசு ஆணை என்று அன்னை கைகேயி ஆணையிட்ட பிறகு, இராமன் அயோத்தி விட்டு வெளியேறுகிறான். அவன் வெளியேறிய பின் அயோத்தி மாநகரம் துன்பத்தில் மூழ்குகிறது. அதனைப் போலவே கோவலனைப் பிரிந்த பூம்புகாரும் துன்பத்தில் மூழ்குகிறது என்பது கருத்து. இதில் கருத வேண்டியது இளங்கோ கோவலனை இராமனுக்கு நிகராகக் காட்டுவதாகும். அதாவது, கோவலனின் கதை இராமனின் கதைக்கு நிகரானது என்பது உட்கருத்து போலும்.

இதனை இன்னும் சிலப்பதிகாரத்தைக் கொண்டே விரிவக்கலாம். இராமன் வடக்கில் இருந்து தெற்கு வருகிறான். வாலியைக் கொல்கிறான். பிறகு இலங்கைக்குச் செல்கிறான். அந்நாட்டு மன்னன் இராவணனையும் கொல்கிறான். இந்தியா இலங்கை முழுதும் இராம ராஜ்யம் ஆகிறது. இதற்கு மறுதலையாகச் சேர செங்குட்டுவன் கங்கை செல்கிறான். இமய மலையில் கல் எடுக்கிறான். தமிழரை இழித்துப் பேசிய கனகனையும், விசயனையும் சிறைப்படுத்திக் கண்ணகிச் சிலைக்காக எடுக்கப்பட்ட கல்லைத் தமிழகம் வரை சுமந்து வரச் செய்கிறான். வடபுல வேந்தர் தென்புலம் வந்து வெற்றி கொண்ட போது

எம்மோர் அனைய மன்னர் இங்கில்லை போலும்

என்று வஞ்சினம் மொழிகிறான். அம்மொழிவை நிலைநாட்டுகிறான்.

சேரன் செங்குட்டுவனின் மொழிகள் வருமாறு.

வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவுள் எழுத ஓர் கற்கொண் டலல்து
வறிது மீளுமென் வாய் வாளாகிற்
செறிகடல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகை அரசு நடுக்காது பயம் கெழு வைப்பிற்
குடி நடுக்குறூஉம் கோலேன் என

[சிலம்பு, கால்கோள் காதை, 26]

www.tamilarangam.net



இந்நிகழ்வு தமிழர் வடபுலப் போராட்டக் கதையாகும். இராமன் எனும் ஆடவனைக் கதைத் தலைவனாகவும், கடவுளாகவும் காட்டுவதற்கு மறுதலையாகக் கண்ணகி என்னும் பெண்ணைக் கதைத் தலைவியாகவும், கடவுளாகவும் காட்டுதல் கருதத் தக்கது. இப்பின்னணியில் மகாபாரதத் திரௌபதி கதையும் ஒப்பிடத் தகுந்தது. திரௌபதி, தர்மன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் எனும் ஐந்து சகோதரர்க்கு மனைவியாக இருக்கிறாள். இத்தகு கதை நிகழ்வு தமிழரால் கற்பனையில் கூடச் செய்யப்படாத ஒன்று. திரௌபதியின் தந்தை இந்த ஐவர் திருமணச் செய்தியை ஏற்க உடன்படவில்லை. இதனை எப்படி ஏற்பது என்று வினா எழுப்புகிறார். கடைசியில் வியாசர் விளக்குகிறார். சிற்சில நேரங்களில் பொதுவான வழக்கத்திற்கு அப்பாற்பட்டுச் செயல்பட வேண்டியுள்ளது என்று சமாதானம் செய்கிறார். பிறகு திருமணம் நடக்கிறது. தமிழர் இதனை ஒப்புக்குக் கூட ஏற்றுக் கொண்டிருக்க வாய்ப்பு இல்லை என்பதைப் பண்டைய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்குத் தொகுதிகள் தெளிவுபடுத்துகின்றன. திரௌபதி கதை நிகழ்வாக மட்டும் காட்டப்படாமல் கடவுள் கதையாகக் காட்டப்படும் கோலத்தை இளங்கோ அடிகள் வன்மையாக மறுதலிக்கவே சிலப்பதிகாரத்தை இலக்கியப்படுத்துகிறார். மகாபாரதத்தில் திரௌபதிக்குக் கோயில் எடுக்கப்படவில்லை, கொண்டாடப்படவில்லை. பின்னாளில் இவை நிகழ்ந்தன. ஆனால், இளங்கோ அடிகள் சேரன் செங்குட்டுவனை முன் வைத்தே அரசர் பலரை ஒருங்கு திரட்டி அவர்கள் முன்னாலேயே கண்ணகியைக் கோயில் தெய்வம் ஆக்குகிறார். தொடர்ந்து பல கோயில்கள் எழுப்பிக் கொண்டாட வேண்டிய தமிழர் விட்டுவிட்டது புரியவில்லை. சமயக் காரணம்தான் கண்ணகி தெய்வமாக வழிபடுவதை விட்டு விட்டு அம்மன் கோயில்களில் திரௌபதியைத் தெய்வமாகவும் முன்நிறுத்தப்படக் காரணமாக இருந்திருக்க வேண்டும். கி.பி. 575இல் பாண்டியன் கடுங்கோனுக்குப் பிறகு தமிழகம் ஆந்திரர்களின் கைக்கு மாறியது. பிராகிருதம், சமசுகிருதம், தெலுங்கு என ஐரோப்பியர் வரவு வரை தமிழர்கள் தொடர்ந்து வேற்று மொழி ஆட்சியிலும் வேற்று மதச் செல்வாக்கிலும் இருந்தனர். வேற்றுப் புல அரசரும், அவர் வழித் தமிழ்நாட்டில் கால் ஊன்றிய வைதிக சமயமும், தமிழர் பண்பாட்டுக்கு ஒவ்வாத திரௌபதியைத் தெய்வமாக்கி இருக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். அரசனாக இருந்தாலும், ஒருவனுக்கு ஒருத்திதான் எனும் கருத்தை உடையவர் தமிழர் என்பதைப் பாண்டியன் நெடும் செழியன், புலவர் மாங்குடி மருதன் ஆகியோரைப் பற்றிய புறநானூற்றுப் பாட்டு எடுத்துக் காட்டுகிறது. கோவலன் கண்ணகி வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது. ஆனால், பின்னாளில் வடபுலத்து ஏமாங்கத நாட்டு இளவரசன் சீவகன் பல பெண்களை மாறி மாறி மணந்து கொண்டதைச் சீவகசிந்தாமணி புலப்படுத்துகிறது. சீவக சிந்தாமணியைத் தமிழர் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் அரசியலும், சமயப் பின்னணியும்தான். சமண அரச ஆதிக்கமும், சமண சமயச் செல்வாக்கும் இவ்விலக்கியத்தை ஏற்கச் செய்தன. தன் மனைவியை மற்றவர்க்கு விட்டுக் கொடுத்தலைச் சைவ சமய வரலாறான பெரியபுராணம் இயற்பகை நாயனார் புராண வரலாற்றில் எடுத்துரைக்கிறது. தமிழர் அக்கதையை ஏற்றனர். இன்றும் கூட ஏசுவைப் பெற்றெடுத்த தாய் மேரி, அவர் கணவன் ஜோசப். அன்னை மேரியின் குழந்தை ஏசு என்றாலும், அன்னை மேரியைக் கன்னி என்று கூறுவதை அப்படியே தமிழர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். காரணம், சமயமே. மேற்கண்ட எடுத்துக் காட்டுகள், கி.பி. 5, 6ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஐவர் மனைவி யான திரௌபதியைப் பத்தினியாகத் தமிழர் கொண்டாடியதையும், அம்மனாகக் கொண்டாடியதையும் தமிழர் வரலாற்றில் புதுமை யானவை அல்ல என்பதைக் காட்டுவனவாகும்.

இராமாயணம், மகாபாரதம் ஆகியன பற்றி எதிர்ப்புக் கருத்துகள் இருந்தாலும் காலம் தோறும் மகாபாரதத்தைத் தமிழ்ப் படுத்தும் முயற்சி தமிழகத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கிறது.*

இராமாயணமும், பல்வேறு வடிவில் பல்வேறு காலங்களில் தமிழ்ப்படுத்தப் பட்டிருக்கிறது. இதன் உச்சம் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கம்பனால் உருவாக்கப்பட்ட இராமாயணம் ஆகும். இந்நிகழ்வுக்கும் அரசியல், சமுதாயக் காரணங்கள் பின்னணியில் உள்ளன. தமிழர்க்கும், இலங்கைவாழ் ஈழத் தமிழர்க்கும் நெருக்கமான உறவு தொல்பழம் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. ஈழம் ஆதியில் பழம் தமிழரின் உரிமை மண்ணாகவே இருந்திருக்கிறது. குமரிக் கண்டத்தில் இன்றைய இந்தியாவும், இலங்கையும் ஏழ்பனை

* K.P. Aravaanan, His Studies, Mahabharatha Story in Tamil Region, 44-45, 1996.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டுப் பகுதிகளாகவே இருந்துள்ளன. எனவே, இலங்கை ஐயத்திற்கு இடமின்றித் தமிழ் மண்ணே. இன்றைய ஒரிசா எனும் முன்னைய கலிங்க நாட்டில் இருந்த விசயன் எனும் அரசன் இலங்கை சென்ற பிறகே சிங்கள மொழி, இனம் ஆகியன உருவாயின. அசோக மன்னனின் மகள் இலங்கை சென்ற பின்பே தமிழர்தம் பண்டைச் சமயமான சைவத்துடன் பௌத்தமும் போட்டிச் சமயமாக உருவாயிற்று. இராமன் இலங்கை மீது படையெடுத்த காலத்தில் கடல் தாண்டக் கூடாது என்ற கருத்து இருந்தது. எனவேதான், தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே அகன்ற ஆறு போல அலைமோதிக் கொண்டிருந்த கடல் மேல் அணை கட்டப்பட்டது எனும் செய்தியும், இராவணனும், அனுமனும் வான் வழியே பறந்து சென்றனர் என்ற செய்தியும் இடம் பெற்றுள்ளன. பின்னாளில் சிங்களருடைய வல்லமை பெற்ற அரசும், அரசமைப்பும் தமிழர்க்கு அறைகூவல் விடும் ஆற்றல் வாய்ந்தவை ஆயின. பௌத்த சமயச் சார்பு கருதியும், சிங்களம் எனும் ஆரிய மொழிச் சார்பு கருதியும் அவருக்கு இந்தியாவில் வேறு பகுதியில் இருந்தும் உதவிகள் அவ்வப்போது கிடைத்திருக்கலாம். தமக்குள் சேர, சோழ, பாண்டியர் என்றும், குறு நில மன்னர் என்றும், ஒருவருக்கொருவர் பொருமிக் கொண்டிருந்த தமிழ் அரசர்கள் ஈழ மண்ணைக் கவனிக்காது விட்டனர். எனினும், பிற்காலச் சோழ மன்னர் காலத்துச் சிங்கள மண்ணை அடக்கிப் புலிக்கொடியை நாடெங்கும் பறக்க விட்ட வரலாறு முதலாம் இராசராச சோழன், இராசேந்திர சோழன், குலோத்துங்கச் சோழன் ஆகியோர் வரலாறுகளில் காணப்படுகிறது. சோழ அரசர்கள் சிங்களரை வெற்றி கொண்ட வரலாறு கல்வெட்டுகளில் வீரம் பொங்க வருணிக்கப்படுகிறது. தமிழக அரசர் வெற்றியைச் சிங்களரின் வரலாறு கூறும் மகாவம்சமும் பதிவு செய்திருக்கிறது.

முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) முதல் இராசேந்திரச் சோழன் (கி.பி. 1012-1044) ஆகியோர் சிங்களத்தை வெற்றி கொண்ட நிகழ்ச்சி இராமன் முற்காலத்து இலங்கையை வெற்றி கொண்ட நிகழ்ச்சிக்கு இணையாகப் பரப்பப்படுகிறது. சோழ அரசர் இராமன் என்றே முன் நிறுத்தப்பட்டுப் பாராட்டப்படுகின்றனர். எனவே, கி.பி. 11, 12ஆம் நூற்றாண்டுகளில் சோழத் தமிழ் அரசன் ஈழம் கொண்ட வெற்றியை நியாயப்படுத்தப்பட வேண்டிய சூழல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்திருத்தல் வேண்டும். இப்பின்னணியிலேயே முற்காலத்து இராவணனை வெற்றி கொண்ட இராமனின் கதை வரலாறு முதன்மைப்படுத்தப்பட வேண்டிய பெரும் தேவை எழுந்திருக்க வேண்டும். கவிதை புனைவதில் மிகப் பெரும் ஆற்றல் வாய்ந்த கம்பன் கதைக்கு வால்மீகியைத் தேடிப் போக வேண்டிய தேவை இல்லை. ஆனால், தமிழரின் ஈழ வெற்றியை முன்னிறுத்த வேண்டிய தேவை கம்பருக்கு இருந்திருத்தல் வேண்டும். அதன் விளைவாகவே இராமாயணம் எனும் படைப்பு உருவாயிற்றுப் போலும்.

www.tamilarangam.net

# தமிழர் கலைகள்
# ஒரு சமூகவியல் அலசல்

கலையைப் பற்றி இரு வேறு கருத்துகள் தமிழகத்து இருந்து வந்துள்ளன.

1. கலை, சமுதாயத்தை வளர்க்கும். எனவே, வளர்க்கப் பெற வேண்டியது.

2. கலை, சமுதாயத்தை வளர்க்காது. எனவே, வளர்க்கப் பெற வேண்டுவதில்லை.

முதற் கருத்தையே பலரும் கொண்டிருந்தனர்; கொண்டிருக் கின்றனர். இரண்டாம் கருத்தைச் சிலர் கொண்டிருந்தனர். சமுதாயத்தை மேலெடுத்துச் செல்லாது கலை என்ற கருத்தினராகச் சமணரையும் ஓரளவு பௌத்தரையும் குறிப்பிடலாம். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரியாரை முதன்மையாகக் குறிப்பிடலாம். சிறப்பாகத் திரைப்படத்தை முழுமையாகப் பெரியார் எதிர்த்தார்.

ஆடுதலிலும், பாடுதலிலும், யாழ் மீட்டுதலிலும் கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கையான மாதவி, வாழ்க்கையில் தோல்வியுற்றவராகவும், தான் ஆற்றல் பெற்ற கலைகளைத் துறந்தவராகவும், முடி, அணி துறந்து, குழலொடு தாமம் களைந்து, பௌத்தப் பிக்குணியாகக் கோலம் கொண்டதைச் சமணத் துறவி இளங்கோ, சிலப்பதிகாரத்தில் வருணிப்பார்; அனைத்துக் கலை களையும் கற்றவராக, ஆடல் வல்லாராக, ஆடவர் கண்டால்

www.tamilarangam.net



அகறலும் உண்டோ எனும்படிக்கு அழகு வாய்ந்தவராக இருந்த மணிமேகலை, பௌத்தத் துறவி ஆகிறார். தாய் மாதவி, மகள் மேகலையைத் துறவிற்கு ஆற்றுப்படுத்துகிறார் என்று காட்டுவார் சீத்தலைச் சாத்தனார்.

யசோதர காவியமும், அமிழ்தபதி எனும் காவியமும், மோகம் கொண்ட அரசியார் வாழ்வை அவலம் மிஞ்சப் படம் பிடிக்கின்றன; புகழ் கொண்ட அரசி ஒருத்தி, கணவன் அருகிருக்க, பாடல் திறம் வாய்ந்த தொழுநோயாளி மேல் காமம் கொண்டு அழிவதாகக் காட்டுகின்றன.

வடபுலத்துக் குப்தர் காலக் கலை அரசியல் மொழிப்போக்கு களைத் தமிழகத்து ஆந்திராவிலிருந்து வந்த பல்லவர் அறிமுகப் படுத்துகின்றனர். தமிழகம், அயற் பண்பாட்டுக்குச் சந்தைக்களம் ஆகிறது. கலைமோகத்தில் கட்டுப்பாட்டை வற்புறுத்திய சைன பௌத்தம் தமிழகத்தினின்று வெளியேற்றப் படுகின்றன. கோயில்கள், ஊர் மையங்கள் ஆக்கம் பெறுகின்றன. அவற்றில் ஆடலிலும் பாடலிலும் வல்ல தேவரடியார் அமர்த்தம் பெறு கின்றனர். கோயில்களைச் சுற்றித் தேவரடியார் தெருக்கள் அமை கின்றன. கோயிலில் உள்ள தெய்வங்களுக்குத் துயில் உணர்த்தவும், துயில் எழுப்பவும் தேவரடியார் பாடுகின்றனர்; விழாக் காலங்களில் ஆடுகின்றனர். காலப்போக்கில், கோயில்களை ஒட்டிப் பரத்தமை வளர்கிறது. சைவ நாயன்மாருள் ஒருவராகிய, சுந்தரர், திருவாரூர்க் கோயில், தேவர் அடியாரான பரவை நாய்ச்சியாரைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறார்.

பரத்தையரை மிகப் பழித்துப் பேசும், அறிவுரைப் பாக்கள், திருக்குறள் காலத்துத் தொடங்கிப் பெண் வெறுப்புப் பாடல்களாக நாலடியார் முதலாய அறநூல்களில் பேரிடம் பெறத் தொடங்கு கின்றன.

பல்லவர் காலத்து அறிமுகமான, கோயில் சார் தேவரடியார் முறைமை, பிற்காலச் சோழர் பாண்டியர் காலத்திலும் பெருகவே இருந்தது என்பதை அவ்வக் காலக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. திருமணம் ஆகாமலே குமரியரைப் பிக்குணியராக ஏற்றுக்கொண்ட பௌத்தமும், குரத்தியாக ஏற்றுக் கொண்ட சமணமும், மேற்கண்டோரைத் தொண்டிற்கு மட்டுமே ஆட்கொண்டன. ஆனால்,

www.tamilarangam.net



வைதிகம், தொண்டிற்கு மட்டும் அன்றி ஆடுதற்கும், பாடுதற்கும், தேவரடியாரைப் பயன் கொண்டது. நாளடைவில், பொது மகளிராகப் போகும் தாழ்வு நிலை வந்துற்றது*. நாயக்கர் ஆட்சியில், தேவரடியார் வீழ்ச்சி வெகுவாக இருந்தது. பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் பாடல்கள், பெண் வெறுப்பை இந்தப் பின்னணியிலேயே பாடுகின்றன.

*இங்கே கவனிக்க வேண்டியவை இரண்டு*

1. ஆந்திரரின் முதற் படையெடுப்பான பல்லவர் காலத்திலேயே, தமிழர்தம் பண்டை ஆடல், பாடற் கலைகள், குப்தர் கால வடபுலக் கலைகளுடன் கலக்க வைக்கப் பெற்றன. இச்சூழல், சங்க கால இறுதியில், தமிழகத்தில் செல்வாக்குப் பெற்று வருவதைக் கண்டுதான், இளங்கோவடிகள், தமிழர்தம் பண்டைய கலைச் சொத்தைக் காப்பாற்றும் முகமாக, அரங்கேற்று காதை, கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகியவற்றைப் படைத்திருத்தல் வேண்டும்.

2. ஆந்திரரின் இரண்டாம் படை எடுப்பான, நாயக்கர் காலத்தில் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு), தமிழிசை, தெலுங்குப் பாடல்களின் கீழ் அமுக்கப் பெற்றது. இதனை நேர்முகமாக எதிர்க்க இயலாத அரசியல் சூழலில், அருணகிரிநாதர், நூற்றிற்கு மேற்பட்ட தமிழ்ச் சந்தப் பாடல்கள் மூலம், திருப்புகழில் தமிழிசை நிலைப்பை மேற்கொள்கிறார்.**

நாயக்கர் காலத்தும், ஜமீன்கள், நவாப்புகள் ஆட்சிக் காலத்தும் தேவரடியார் × ஆளுவோரிடையே நச்சுத் தொடர்புகள் இருந் திருத்தல் வேண்டும். பெரும் நிலவுடைமையாளர் × தேவரடியார் இடையே தொடர்புகளும் இருந்திருத்தல் வேண்டும்.

---

* *The Devadasi system was misused for Centuries together at Poori Jaganath Temple - J.B. Patnaik, Orissa Chief Minister, New Delhi, Sept. 16, 1995, Indian Express, Rayalaseema Edition, 17.9.95.*

** அருணகிரி, தமிழ் முருகனுக்கும், தமிழச்சி வள்ளிக் குறத்திக்கும், தமிழ் முருகனின் படை வீடுகளுக்கும், தமிழ்ச் சந்தங்களுக்கும் முதன்மை கொடுப்பது, தெலுங்கு கன்னட ஆதிக்கத்தை எதிர்க்கும் முகமாகத்தான் (பார்க்க. க.ப.அறவாணன், தமிழிலக்கியச் சமூகவியல்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்காலத்து நடிக்கப் பெற்ற நாடகங்கள், கூத்துகள், பாடற் கச்சேரிகள், பரத நாட்டியங்கள் ஆகியவற்றில் வரைவின் மகளிர்தம் பங்களிப்பு, பெரிய அளவில் இருந்திருத்தல் வேண்டும். எனவே, பொதுமகளிர், செல்வம் இழக்க வைக்கும் கொடியராகக் கருதப் பெற்றனர். அதனூடாக, அவரிடம் இருந்த கலைகள் மீதும் மக்களிடையே வெறுப்பும், ஒருவகை எச்சரிக்கை உணர்வும் இருந்திருத்தல் வேண்டும்.

ஆட்டம், பாட்டம் ஆகாதனவாக, பொதுமக்கள் கருத்தில் படிந்திருந்தன. எனவே, அவற்றையும், அவற்றிற்கு உடையாரையும் இழித்துப் பேசும் பழமொழிகள், தமிழரிடையே தோன்றிப் புழங்கின. நாயக்கர் காலத்தை ஒட்டி, முன்னும் பின்னுமாகத் தமிழகத்து அறிமுகமாகியிருந்த இசுலாமிய சமயமும், புராட்டஸ்டண்டு கிறித்தவமும் ஆடல் பாடல் மோகத்தை ஏற்பன அல்ல. இச்சமயங்களின் கருத்தும், தமிழரைப் பாதிப்புறச் செய்திருத்தல் வேண்டும். ஆக்க கலை (வெறி)யே சீரழிவுக்கே வழி வகுக்கும் என்பது, பொதுமக்களின் கருத்தாகப் பரிணாமம் கொண்டிருந்தது. கூத்து, நாடகப் பங்கேற்பாளர்களைக் கூட, கௌரவமாகப் பார்க்க முடியாத ஒரு பார்வை உருவாகி யிருந்தது. இப்பார்வை, சமகால, கடந்த கால அரசியல், சமுதாய, பொருளாதாரக் காரணங்களால் உருவானது என்றே சொல்லுதல் வேண்டும். 1950 வாக்கில், காமராசர் காலம் வரை, இப்பார்வை இருந்து வந்தது என்றே கருதுதல் வேண்டும்.

தனிப்பெரும் சமுதாயச் சீர்திருத்தத் தலைவரான பெரியாரும், இக்கருத்தையே கொண்டிருந்தார். சமுதாய நோக்கில் நடத்தப் பெறும் நாடகங்களை அவர் வரவேற்றார். அந்நோக்கில் நடத்தப் பெற்ற நடிகவேள் எம்.ஆர். ராதாவின் நாடகங்களை அவரே முன்னின்று நடத்தினார். எனினும், திரையுலகக் கலைச் சார்பைப் பெரியார் ஏற்க வில்லை. அதற்கான காரணம் இருந்தது.

தமிழர், பெரும்பான்மையோர் படிக்காதோர். பெண்களில் 95 விழுக்காட்டிற்கு மேல் படிக்காதோர். பொதுவாகத் தமிழர், உணர்ச்சிக்கு ஆளாகும் போக்கினர். அறிவுப் போக்கினர் மிகக் குறைவே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர் வாழ்வில் கலந்திருந்த சிற்பம், ஓவியம், ஆடல், பாடல், கட்டடம், இலக்கியம் ஆகிய அனைத்துக் கலைகளும் மதங் களுடனும், கடவுளர்களுடனுமே தொடர்பு கொண்டிருந்தன. மூட நம்பிக்கையைச் சார்ந்திருந்தன. இவை அறவே பெரியாருக்குப் பிடிக்காதவை. ஆடல், பாடல் ஆகியவற்றுடன், அல்லது அவற்றைப் பெற்றிருந்தாருடன் ஏற்பட்ட தொடர்பால் , வீழ்ந்திருந்த மாந்தரின் வாழ்வைப் பெரியார் கண்டிருத்தல் கூடும். தமிழர் அனைவரும் இசுலாமிய சமயத்திற்கு மாறிவிடலாம் எனக் கருத்துக் கொண்டிருந்த பெரியாருக்கு, இசுலாமிய சமயத்தில் ஆடல், பாடற் கலைகள் பேரிடம் பெறாமை கவர்ந்திருக்கக் கூடும். பெரியாருக்குப் பிடித்திருந்த பௌத்தத்திலும், கலையைத் தலைக்கு மேல் தூக்கிப் பிடித்துக் கொள்ளும் போக்கு இல்லை. எனவே, பெரியாருக்குக் கலையின் பாரித்த வடிவமான குறிப்பாகத் திரைப்பட வெறி சிறிதும் பிடிக்காமலே இருந்தது. திரைப்படக் கலை வெறியால், தமிழர் வீழ்வர் என்ற பெரியாரின் கருதுகோளே பிற்காலத் தமிழ்நாட்டின் மெய் நிகழ்வாயிற்று.

அரசியல் விடுதலை பெற்ற பின், தமிழக வரலாற்றை அவ்வக்கால அரசியல், பொருளியல், சமூகவியற் காரணிகளைக் கொண்டு பின்வருமாறு பகுத்துக் கொள்ளலாம்

1. 1947 - 1967 தேசியக் காலம்
2. 1967 - 1975 திராவிடத் தேசியக் காலம்
3. 1975 - 1995 திரைத் தேசியக் காலம்

1947 - 1967-களின், தொடக்கத்தில், திரை உள்ளிட்ட கலைகள், உணவிற்கு ஊறுகாய் போலவே இருந்தன. கலைஞர்களைப் பற்றிய சமூக மதிப்பு, அத்துணை உயர்வானதாக இல்லை. 1949க்குப் பின், பெரியாரின் இயக்கத்தினின்று அண்ணா இயக்கம், பிரிந்து வளருங் காலங்களில், கலைஞர்களின் பங்கும், மதிப்பும் கூடின. உணர்ச்சிப் பூர்வமான கலைக்கு வரவேற்பு மிகுதியாயிற்று. அறிமுகமான திரைப்பட நுணுக்கம், கலைஞர்களுக்குப் பணம், புகழ் ஆகியவற்றைப் பெருக்கின. பொதுமக்களின் அரசாட்சி எனும் பெயரால், வாக்கு வங்கிகளான, பொதுமக்களிடையே தியாக உழைப்பு மிகுதியாக இல்லாமல், மக்கட் செல்வாக்கைத் திரைக் கலைஞர்கள் எளிதாக எய்த முடிந்தது. இதற்குரிய பலாபலனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(Result) 1967 தேர்தல் வழங்கியது எனலாம். ஓலைக் குடிசைக்குள் நுழைந்த ஒட்டகம், தொடக்கத்தில் தலையை மட்டும் நீட்டி, மெல்ல மெல்ல உள் நுழைந்து 1975-க்குப் பின் முற்றுமாகக் குடிசையையே பிடித்து விட்டது. திரை, தமிழக ஆட்சி வரலாற்றில், வாலை நுழைத்து, வயிற்றை நுழைத்து, உடம்பையே நீட்டிப் படுத்துவிட்டதையே 1975 முதல் 1995 வரையிலான வரலாறு காட்டுகிறது. கூத்து, வாழ்வில் ஒருசிறு பங்காக இருப்பது மாறி, கூத்தே, வாழ்வாகி விட்டது. திரையே அரசியலாகி விட்டது; அரசியலே திரையாகி விட்டது. பெரியாரின் அறிவுரையை மீறி, வரம்பு கடந்து சென்ற தமிழர்க்குச் சரியான பரிசு கிடைத்து விட்டது. தமிழர்கள், தமக்குத் தாமே, தேடிக் கொண்ட வரலாறு இவ்வாறிருக்க, இவரை இன்று ஆட்டிப் படைக்கும் கலைத் துறைகள் எவ்வாறு இருந்தன; இருக்கின்றன என்பது அடுத்த ஆய்விற்குரியது.

1975 அரசியல் நெருக்கடிப் பிரகடனத்திற்குப் பின்னர், சில காலம் இடைவெளி விட்டு, இந்திரா காந்தி தலைமை அமைச்சரானார். ஆன பின், இந்தியாவில் முதன்முதலாகத் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தினார். அதுவரை ஊருக்கொரு கோயிலாகத் தமிழகத்தில் கட்டி எழுப்பப்பட்டிருந்த திரையரங்கு களின் முகப்பில், நிழல் தரிசனத்திற்காகத் தமிழர்கள், கோடிக் கணக்கில் தவம் கிடந்தனர். குறிப்பாகப் பெண்களின் பள்ளிக் கூடமாகவே திரையரங்குகள் இருந்தன. இந்நிலையில், தொலைக்காட்சி வரத்து மூலம், வீடே திரையரங்கமாயிற்று. நடுத்தரக் குடும்பத்து நடுவீட்டில் அமர்ந்து கொண்ட தொலைக்காட்சி, மின்சாரம் வெட்டுப்பட்டு இடையிடையே நிற்கும் காலந் தவிர ஏனைய பொழுதுகளில் வீட்டாரைத் தாலாட்டிற்று. கால அடைவில், தொலைக்காட்சி வண்ணத்துடன் காட்சி தரலாயிற்று, எல்லார் வீடுகளிலும் இடம் பெறலாயிற்று.

அவருக்குப் பிந்தைய காலத்தில், 21ஆம் நூற்றாண்டு குறிக்கோள் முழக்கமாயிற்று; சோசலிசமும் கம்யூனிசமும் பேசி வந்த சோவியத் ஒன்றியம், கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் ஒன்றன் பின் ஒன்றாக விழலாயின; கம்யூனிசக் கிழக்குச் செருமனி, இசத்திற்கு விடை கொடுத்து விட்டு, மொழியடிப்படையில், மேற்குச் செர்மனியுடன் இணைந்தது. எங்கும் எதிலும் மேற்கு நாடுகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையொற்றித் தாளாகக் காப்பி அடித்துக் கொண்டிருந்த இந்தியாவும், இரண்டும் கெட்டான் நிலையினின்று நழுவி, போட்டி முதலாளித்துவமே வழி என நடையிடலாயிற்று. எனவே, அக்கரை அரை/முழு நிர்வாணக் கலைகள் அச்சுப் பிசகாமல், இந்திய வானவெளியில் மிதந்து, மண்ணின் குடில்களில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் வழி ஆடத் தொடங்கின; பேயாட்டம் போடத் தொடங்கின.

தொடர்ந்து தலைமைக்கு வந்தோர் பின்பற்றிய, திறந்த வாசல் முறை, இடையில் இருந்த சுவர்களை இடித்துத் தள்ளிற்று. அய்ரோப்பிய அமெரிக்கக் கலைக் கூச்சல் படையெடுப்பில், தமிழகக் கலையுலகம், மூச்சுத் திணறி உயிருக்குப் போராடிக் கொண்டிருக் கிறது. மைக்கேல் சாக்சனின் நிருவாண நடனப் பாட்டுக் கூத்துத் தவிர இன்ன பிற எல்லாம் கம்பித் தொலைக்காட்சி (Cable T.V.) வழி வண்ணம் வண்ணமாய்த் தமிழக வீடுகளில் பூமழை பொழிகிறது. ஆடல், பாடல் மட்டும் அல்லாமல் விளம்பரம் எனும் புதுக்கலை, இதழ்க் கலை எனும் எழுத்துக் கலை வழியாகக் கண்ணும் காதும் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் வந்து விழுகின்றன.

1. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் ஆந்திரப் பல்லவர் காலத்துச் சமசுகிருத மொழி வழி நேர்ந்த முதற் படையெடுப்பு.

2. கி.பி. 14ஆம் நூற்றாண்டில் நாயக்கர் வழி நேர்ந்த இரண்டாம் படையெடுப்பு.

3. கி.பி. 1975-1985-களில் தமிழகத் திரைப்பட அரசுகளால் நேர்ந்த மூன்றாம் படையெடுப்பு.

4. கி.பி. 20 ஆம் நூற்றாண்டில், தில்லி மைய அரசு வழி நேர்ந்த நான்காம் படையெடுப்பு.

மேற்கண்ட நான்கு படையெடுப்புகளாலும், குறிப்பாகப் பின்னிரண்டு படையெடுப்புகளாலும், சுயன்மை குன்றி அயன்மையைத் தழுவ ஆளாக்கப் பெற்றிருக்கும் தமிழர்தம் கலைகள், உள்நாட்டுச் சாதியச் சிக்கலால் மேலும் நசிப்பிற்கு உள்ளாகி வருகின்றன.

www.tamilarangam.net

# இயல் இரண்டு

# தமிழர் பண்பாடு

www.tamilarangam.net

# தமிழர்: ஒரு நூற்றாண்டு வரலாறு

1901 முதல் 1999 வரையிலான ஒரு நூற்றாண்டில் தமிழகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் இருந்து தமிழர்கள் பெற வேண்டிய பாடங்கள் பல உள்ளன. 1901இல் தமிழரை அன்று ஆண்ட விக்டோரியா மரணத்தில் இருந்து இந்நூற்றாண்டு தொடங்கி 1999இல் கலைஞர் மு. கருணாநிதி ஆட்சியில் தென் குமரிக் கடல் தீவில் திருவள்ளுவர் சிலைத் திறப்பில் இந்நூற்றாண்டு நிறைவுற்று இருக்கிறது. இந்த நீண்ட நெடுங் காலத்தைத் தமிழர் அடிமையாய் இருந்த காலம் (1947 வரை), அரசியல் விடுதலை பெற்ற காலம் (1947 இல் இருந்து), மொழி விடுதலை பெறத் தொடங்கிய காலம் (1967) எனப் பகுத்துக் கொள்ளலாம்.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாஸ்கோடகாமாவின் வரவை ஒட்டி (1498) ஐரோப்பியரின் வணிக ஆதிக்கம் தமிழகத்தில் காலூன்றியது. தமிழகம் அப்போது நாயக்கர், சமீன்தார், மகாராட்டிரர், ராஜாக்கள் ஆகியோர் ஆட்சியில் இருந்தது. இது முழுமையாய் அடிமைக் காலமே. தெலுங்கர் ஆதிக்கத்தில் இருந்து மாறி ஐரோப்பிய ஆதிக்கத்திற்குத் தமிழர்கள் அடிமையாயினர். அவ்வளவே. அரசியல் அடிமையாக மட்டும் இல்லாமல் மொழி அடிமையாகவும், பண்பாட்டு அடிமையாகவும் தமிழர்கள் இருந்து வந்தனர். பல நூறு ஆண்டுகள் தொடர்ந்து அடிமையாக இருந்து வந்த மக்கள் என்பதால், அடிமைத்தனம் என்பது அடிமைத்தனம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்று மக்களால் அறியப்படாமலே போயிற்று. ஒட்டகத்தின் முதுகில் ஏற்றப்பட்டுள்ள சுமைகளை இறக்கி விட்டால், அது தொடர்ந்து நடக்காது என்பார்கள். காரணம், சுமைகளைச் சுமந்தே ஒட்டகம் பழக்கப்பட்டுப் போனது. எனவேதான், தமிழர் அடிமைத் தனத்திலேயே பழக்கப்பட்டுப் போய் இருந்தனர். 1905இல் வங்கம் பிரிக்கப்பட்டபோது வங்காளிகள் எழுப்பிய கலகம் பஞ்சாப், மகாராட்டிரம் ஆகிய பகுதிகளில் பரவி, சென்னையிலும் பற்றத் தொடங்கியது. 1905இல் மகாகவி பாரதியார் போன்றோரால் நிகழ்ந்த அரசியல் இயக்கம் தமிழ்நாட்டில் பரவி வெடித்து வெற்றி பெற 50 ஆண்டுகள் ஆகின.

இதே சமயத்தில் ஜப்பானை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஐரோப்பியக் கிருத்துவத் தொண்டு நிறுவனங்கள் ஜப்பானில் இறங்கித் தங்கள் பணிகளைத் தொடங்கின.

தம் நாட்டிற்குத் தாமே வந்த ஐரோப்பிய மிஷனரிகள் நாட்டை விட்டு இருபதே நாள்களில் வெளியேற வேண்டும், இல்லையேல் மரணதண்டனையைச் சந்திக்க வேண்டும் என ஜப்பானிய அரசர் ஹிடி யோசி 1587இல் அரசு ஆணையைப் பிறப்பித்தார். ஐரோப்பியருக்கு அடிமையே ஆகாத ஜப்பானியர் 1870 இலேயே தம் நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும் கல்வியைக் கட்டாயமாக்கி வெற்றி பெற்றனர்.

ஐரோப்பியக் காலனி ஆதிக்கம் தீண்டப்படாத நாடுகள் ஜப்பான், தாய்லாந்து ஆகிய இரண்டு மட்டுமே.

1901இல் தமிழ்ச் சங்கத்தைப் பாண்டித்துரை தேவர் மதுரையில் நிறுவிய நிகழ்ச்சியும், 1903இல் நாடார் பெருமக்கள் ஆலய நுழைவுப் போராட்டத்தில் வெற்றி கொண்டதும், இவற்றை ஒட்டி 1916இல் நீதிக் கட்சி தோற்றுவிக்கப்பட்டதும் தமிழகத்தின் இன்றியமையா நிகழ்ச்சிகள். நீதிக் கட்சியின் தோற்றுவிப்பு தமிழர் வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. இதன் வெற்றியில் 1930இல் நீதிக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று பி. முனிசாமி முதலமைச்சரான நிகழ்வும், 1936இல் பி.டி. ராஜன் முதல்வரான நிகழ்வும், 1967இல் அறிஞர் அண்ணா முதலமைச்சரான நிகழ்வும் ஒன்றோடொன்று மிகத் தொடர்புடையவை. 1967இல் மலர்ந்த திராவிட இயக்க வெற்றி தொடர்ந்து நின்று வருகிறது. திராவிட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்க வளர்ச்சியின் வெற்றி 20ஆம் நூற்றாண்டுத் தமிழர் வரலாற்றில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்திய ஒன்றாகும். இந்நூற்றாண்டில் மறக்க முடியாத சமூகச் சான்றோராகப் பெரியார் விளங்குகிறார்.

1947இல் நிகழ்ந்த அரசியல் விடுதலைப் போருக்கு நிகரானது 1965இல் நிகழ்ந்த மொழிப் போராகும். இம்மொழிப் போரின் வெற்றி விளைச்சலே அண்ணா, கலைஞர் ஆகிய திராவிட இயக்கத் தலைவர்கள் பொறுப்பேற்ற சிறப்புகள் ஆகும்.

தமிழக வரலாற்றிலே தமிழ்மொழி கி.பி. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 1967-க்கு முன்பு வரை முதன்மை பெறாமலேயே இருந்து வந்தது. சமசுகிருதம், தெலுங்கு, கன்னடம், மகாராஷ்டிரம், உருது, ஆங்கிலம் ஆகியன தொடர்ந்து அரசியல் செல்வாக்கில் இருந்து வந்தன.

1947-க்குப் பிறகு மொழிக்குரிய மகுடத்தைத் தமிழகத்தில் தமிழ் பெறாமல் இந்தி தட்டிக் கொண்டு போயிற்று. இந்தி ஒரு பக்கமும், ஆங்கிலம் மறுபக்கமுமாக நெருக்கியதில் தமிழ் வளராமல் திணறியது. இத்திணறலுக்கு ஓரளவு முடிவு 1965இல் ஏற்பட்டது. இன்னும் முழு முடிவு ஏற்பட வில்லை.

சமூக நிலையில் தமிழ்ச் சமுதாயம் இந்து, கிருத்துவம், இசுலாம் என்று பாகுபட்டுக் கிடந்தது; கிடக்கிறது. 350-க்கு மேற்பட்ட சாதிகளாகப் பிரிந்து கிடந்தது; கிடக்கிறது. இந்நூற்றாண்டின் முதல் பாதியில் சில குறிப்பிட்ட சாதியினரே மேலாதிக்கத்தில் இருந்தனர். 1926இல் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்டு நாளும் விரிவு பெற்ற நிலையில் மேலாதிக்கம் ஒழியத் தொடங்கியது. இதில் நீதிக் கட்சி, திராவிட இயக்கங்களின் பங்கு மகத்தானது. என்றாலும், சாதியை ஒழிக்க வேண்டும், தமிழர்கள் என மொழிக் குடையின் கீழும், திராவிடர் என இனக் குடையின் கீழும், இந்தியர் எனத் தேசக் குடையின் கீழும், மனிதர் என உலகக் குடையின் கீழும் தமிழர்களைத் திரட்டும் முயற்சி ஓரளவு வெற்றி பெற்றது, பேரளவு தோல்வி கண்டது என்றே குறிப்பிட வேண்டும். இப்பிரிவினைகள் நீங்காமல் நிலை நிறுத்தும் வண்ணம் நாம் அமைத்துக் கொண்ட தேர்தல் முறை, பிறப்பு அடிப்படையிலான இட ஒதுக்கீடு, அரசியல் கட்சிகளின் அரவணைப்புடன்

www.tamilarangam.net



மறைமுகமாகவும், நேர்முகமாகவும் இயங்கிவரும் சாதிச் சங்கங்கள், மதச் சிறுபான்மை உரிமை முறை, தமிழர்களை வர்க்க அடிப்படையில் நிறுத்தாமல் வர்ண அடிப்படையில் தொடர்ந்து நிறுத்தி வருகின்றன. இதன் விளைவாக உலக நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம் சமுதாய வளர்ச்சி போதுமானதாக இல்லை.

இலங்கை விடுதலை பெற்ற 1948-க்கு முன்பு வரை ஈழத் தமிழர்க்கும், இந்தியத் தமிழர்க்கும் இடையே கொள்வினை கொடுப்பினை முதலான உறவுப் பாலம் சரியாகவே இருந்தது. இந்தியா (1947), இலங்கை (1948) ஆகிய நாடுகள் பிரிட்டிஷ் அரசியலில் இருந்து விடுதலை பெற்ற பிறகு இருவரிடையே ஏற்பட்ட சேர்க்கைப் பிரிவினை ஈழத் தமிழர்களைத் தனிமைப் படுத்தியது. விளைவு விபரீதம் ஆயிற்று. இதற்காகக் கடந்த நூற்றாண்டில் தமிழர்கள் கொடுத்த விலை, மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டது.

கல்வி, தொழில் நுட்பம், அறிவியல் ஆகிய முனைகளில் கணிசமான வளர்ச்சியைத் தமிழர்கள் பெற்றுள்ளார்கள். சென்னைப் பல்கலைக்கழகம் என்று ஒரே பல்கலைக்கழகத்தின் கீழ் இருந்த தமிழர் வாழும் பகுதியில் இன்று 19 பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. பள்ளிகளும், கல்லூரிகளும் ஆயிரக்கணக்கில் பல்கியுள்ளன. நூற்றுக்கு நூறு படித்தோர் நிலையைத் தமிழகம் இன்றும் எய்த வில்லை. கல்வி நிறுவனங்கள் பெருகிய அளவிற்கு உலகளாவிய சாதனைகளை அறிவு உலகம் சார்ந்தோர் போதிய அளவிற்கு நிகழ்த்தவும் இல்லை. பெங்களூரில் வாழ்ந்த நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. இராமன், அண்மைக் காலத்தில் இந்தியாவிற்குப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்துவரும் அணு விஞ்ஞானி அப்துல் கலாம் ஆகிய ஓரிருவரையே முன்னிறுத்த முடிகிறது.

பண்பாட்டு அளவில் கடந்த 100 ஆண்டுகளில் பல வீழ்ச்சிகளும், பல உயர்ச்சிகளும் நிகழ்ந்துள்ளன. நம் உணவு முறை, உடை முறை, வாழும் முறை ஆகியன எளிய நிலையில் இருந்து விலகி, புதிய நிலைக்கு வந்துள்ளன. என்றாலும், தமிழர் என அடையாளம் காட்டும் சிறந்த உணவு முறைகள், உடை முறைகள், பழக்க வழக்க முறைகள் தாழ்வானவை எனும் கருத்தில் விலக்கப்பட்டுள்ளன, கைவிடப்பட்டு வருகின்றன. நம்மை ஆளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆங்கில மொழி, இந்தி மொழிவழி வரும் பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் தமிழரிடையே உச்சம் பெற்று வருகின்றன. தம் பண்பாட்டை, மொழியை இழக்காமல் வளர்ந்த ஐரோப்பிய அமெரிக்கர்களுக்கே அறைகூவல் விட்டுவரும் சப்பானியரைப் போல் தமிழர்களும் வளர்ந்து இருக்க வேண்டும். ஆனால், அது போன்ற வளர்ச்சி நம்மனோர் இடத்தில் நிகழாமை அவலத்திற்கு உரியதே.

தமிழர் இக்காலத்தில் இலங்கை, மலேசியா, பர்மா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குக் குடி பெயர்ந்த நிகழ்ச்சி சுட்டத்தக்க ஒன்றாகும். இக்குடிபெயர்ப்பு திரைகடல் ஓடியும் திரவியம் தேடு எனும் உயரிய கோட்பாட்டால் மட்டும் நிகழ்ந்தது அன்று. சாதிக் கொடுமை, பஞ்சம், வறுமை, பட்டினி, வட்டிக்கடைக்காரர்களின் கொடுமை, இலங்கையில் நடந்த இனக் கொடுமை ஆகியவற்றைத் தாள முடியாமல் நிகழ்ந்த குடியேற்றமே மிகுதி. இதனால் தம் தாயகங் களில் துன்பப்பட்ட தமிழர்கள் கடல் கடந்து நலம் பெற்றனர் என்பது ஒரு பக்கம் இருக்க, தமிழர்கள் இன்று உலகளாவிய நிலையிலும் நிலை பெற்றனர்.

தந்தை பெரியாரின் வரவாலும், அயரா உழைப்பாலும் பரப்பப்பட்ட பகுத்தறிவுக் கொள்கை தொடர்ந்து வெற்றி பெறாமல் போனது அவலமான நிலைமையாகும். பகுத்தறிவுச் சிந்தனையையும் ஏற்காமல், பொதுவுடைமைச் சிந்தனையையும் ஏற்காமல், இனவழிச் சிந்தனையையும் ஏற்காமல் தமிழர் மனப்பான்மையில் பின்தங்கி யுள்ளனர் என்றுதான் பொதுத் தீர்ப்பு வழங்க முடியும்.

19ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் தமிழர்கள் எந்த மூடநம்பிக்கையில் தழைத்தார்களோ அதே மூடநம்பிக்கையில் தொடர்ந்து தழைத்து வருகிறார்கள்.

படிப்பின்மை, பகுத்தறிவு இன்மை, அடிமைத்தனம், பிற்பட்ட பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள் ஆகியன தமிழரை ஓர் உணர்ச்சி கரமான கூட்டமாகவே வைத்திருந்தன. இந்நிலைப் பாட்டைத் தமிழர் பின்பற்றி வந்த சாதிய, மத முறைகள் நீர் ஊற்றி வளர்த்தன. இந்த இரண்டு கோட்பாட்டுடன் கூடக் கட்சி அரசியலும், விடுதலைக்கு (1947) முன்பே தொடங்கித் தொடர்ந்து கூறுபோட்டது. இவ்வழுக்குகளின் அடுத்த விளைவாகத் தமிழகத்தில் தோன்றி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்ந்தது திரைப்படக் கலாச்சாரம் ஆகும். ஏற்கனவே உணர்ச்சி வசமான இம்மக்களைக் கூறுபோட்ட சக்திகளுடன் திரைப்படமும் வலிமை வாய்ந்த கருவியாக இணைந்தது. 1950-க்குப் பின் இதன் வீரியம் உச்சத்திற்குச் சென்றது. அதன் விளைவாகத் தமிழருடைய அரசியல் இயக்கங்கள் திரைப்படங் களைச் சார்ந்தே இயங்கின. திரைப்பட ஆதிக்கத்தில் இருந்து இந்நூற்றாண்டு முடிவுறும் காலத்திலும் தமிழர் விடுதலை பெற வில்லை. இவர்களுடைய வருங் காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு இன்றும் புகழ்பெற்ற நடிகையரிடமும், நடிகரிடமுமே வாரிக் கொடுக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் தமிழருடைய எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பில் திரைப்படம் சார்ந்தோர் பெரிய பங்கை வகிப்பர். இது தொடருமேயானால் தமிழர் விழிப்பற்ற மக்களாக வெளி வந்து உயரும் காலம் தள்ளிக் கொண்டே போகும். இதைத் தவிர்க்கவே முடியாது.

கடந்த நூற்றாண்டில் தொழில்மயமாக்குதல், நவீன மயமாக்குதல் எனும் பெயரில் தமிழகத்தில் உள்ள இயற்கை வளங்களை எல்லாம் ஒரு பக்கம் அழித்து வந்திருக்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில் இருந்த காட்டு வளம் இன்று இல்லை. அன்று இருந்த பசுமையும் அழிந்தது. அயல் நாட்டு ஏற்றுமதி எனுங் கவர்ச்சியால் யானை, பாம்பு முதலான உயிர்களை ஆயிரக்கணக்கில் கொன்று, தந்தங்களையும், பாம்பின் தோல் களையும் ஏற்றுமதி செய்து வந்திருக்கிறோம். அயல் நாடுகளில் ஒதுக்கப்பட்ட தோல் முதலான தொழில், கரும்பாலை, பனியன் தொழில் ஆகியவற்றால் வேதியியல் கழிவு ஏற்பட்டு நம் நன்செய் நிலத்தையும், புன்செய் நிலத்தையும் தொடர்ந்து இழந்து வந்திருக்கிறோம். இவற்றிலிருந்து இன்று விடுபட முடியாமலும், தொடர முடியாமலும் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்தியத் தமிழக மக்களின் கடந்த கால வரலாறு, அவர்தம் பண்பாட்டுப் போக்கு ஆகியவற்றை அலசி ஆராயாமல் ஐரோப்பாவில் உள்ளபடி வயது வந்த அத்தனைப் பேருக்கும் வாக்குரிமை என்று வழங்கியதன் விளைவு, நாடெங்கும் தொழில் அமைதி கெட்டது, ஒழுங்கும் கெட்டது, அளவிறந்த உரிமைகளால் அலுவலக அமைதியும் கெட்டது. ஒரு காலத்தில் அதீத அடிமைகளாய் இருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட அதீத உரிமைகள் தேர்தலிலும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்க்கை நடப்பிலும் பிழைமுறையாகி விட்டன. அளித்த உரிமைகளை மீளப் பெற்றால் சங்கங்கள் அச்சுறுத்தும் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சங்கங்களின் ஆதிக்கத்திற்குத்தக சமரசம் செய்து கொள்ளும் போக்கு பெருகி வருகிறது. அதீத ஜனநாயக உரிமை (Too much Democracy), அதீத சிவப்பு நாடா முறைக்கு (Too much bureaucracy) வழிவகுத்து விட்டது. இந்நிலையில் அலுவலக வர்க்கத்தினர் தமக்கு ஊதியம் தரும் பெரும்பான்மைப் பொதுமக்களைப் போற்றாது புறக்கணிக்கும் நிலை முள் மரம் போல் செழித்து விட்டது.

ஐரோப்பா, அமெரிக்கா, முன்னாள் சோவியத்து ஒன்றியம் ஆகியவற்றைப் பின்பற்றிப் புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டது போல நம்முடைய பல நடவடிக்கைகள் அமைந்தன. அதிலே மிக மோசமான நடவடிக்கை, நகரங்கள் ஊதிப் பெருக்க வழி வகுத்தது. நகரக் கவர்ச்சிகளைக் கற்பனையில் எண்ணி மிதந்த நிலையில் கிராம உழைப்பாளர்கள் நுழைவதற்குக் கட்டுப்பாடு எதுவும் இல்லாத நகரங்களில் குவியத் தொடங்கினர். அதன் விளைவாகச் சேரிகளும், அசுத்தச் சூழலும் நகரங்களில் பெருகின. இதனால் புதுப் புது நோய்கள் வந்தன. நமக்கு வழிகாட்டியாக இருந்த நாடுகள் கிராமங்களை நோக்கி 40 ஆண்டுகளுக்கு முன்பே திரும்பத் தொடங்கி விட்டன. ஆனால், நாம் இன்றும் நகரங்களை மையமாக்கிப் பல நடவடிக்கைகளைச் செய்து வருகிறோம்.

இனியாவது, நம்மை நாமே எண்ணிச் சீர்தூக்கிப் பார்த்து, நமக்குரிய அரசியல், பொருளியல், சமூகப் பொறுப்புகளை நாமே செய்து கொள்ள வேண்டும். தவறினால், வளர்ந்த நாடுகளில் உற்பத்தியாகும் கவர்ச்சிப் பொருள்களுக்கு, நாம் சந்தைக்காரர்கள் ஆகிவிடுவோம். வறுமை, அறியாமை, வேலையின்மை, ஏழை-பணக்கார இடைவெளி, சாதி மத வெறிகள் கூடிக் கொண்டே போகும்.

**செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.**

திருவள்ளுவம். 466

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்: பண்பாட்டுச் சீர்குலைவு

மானுடர், புறத்தோற்றப் பார்வையில் ஒன்று போலத் தோன்றினாலும், தனித் தோற்றத்தில் ஒவ்வொருவரும் தனித்தனி உடல் வேறுபாடுகளையும், குண வேறுபாடுகளையும் பெற்றே விளங்குகின்றனர். இரட்டைக் குழந்தைகள் கூட இதற்கு விதிவிலக்கு இல்லை. பொதுமை கருதியும், தன்னலம் சார்ந்த பொது வாழ்வு கருதியும், மானுடர் நிறம், மொழி, இனம், நாடு முதலானவற்றின் அடிப்படையில் கூடி வாழுகின்றனர். கூடி வாழுதலுக்கு ஓர் அடிப்படைக் காரணம் அச்சம். வளர்ந்த நிலையில் அவரிடையே வளர்ந்த பண்பு. இவ்வளர்ச்சியில் மொழி பெரும் பங்காற்றி இருக்கிறது; பங்காற்றி வருகிறது. ஆக, இப்பார்வையில் தனி மானுடத் தனித் தன்மை, தனிக் கூட்டத் தனித் தன்மையாக வளர்ச்சி பெறுகிறது. இத்தனித் தன்மையே ஒரு கூட்டத்தின் அல்லது சமுதாயத்தின் பண்பாடு ஆகும்.

இப்பண்பாடு, மூன்று வகைத் தேவைகளை அடியொற்றி அமையும்.

ஒன்று, அச்சமுதாயத்தினர் பயன்படுத்தும் பொருள்கள்,

இரண்டு, அச்சமுதாயத்தினுடைய செயற்பாடுகள்,

மூன்று, அச்சமுதாயத்தினுடைய எண்ணப் போக்குகள்.

இம்மூன்றையும் (Havings, doings & thoughts) ஒட்டித்தான் ஒரு சமுதாயத்தின் (Small) பண்பாடும், அதன் சிறப்பும், சிறப்

www.tamilarangam.net



பின்மையும், அளவுகளும் தீர்மானிக்கப்படுகின்றன. இப்பண்பாடே ஒரு சமுதாயத்தை வளர்த்தெடுக்கும் தலையாய ஒன்றாகவும், சமுதாயத்தின் இடையே நெருக்கமான உறவை (Social Relations) உருவாக்குவதாகவும் அமைகிறது. இவ்வாறு அமைவதால் அச்சமுதாயம் ஏனைய சமுதாயங்களில் இருந்து தனித்துச் சிறந்து விளங்கவும், உயரவும், அச்சுறுத்தும் சமுதாயத்திடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் உரிய வலுவைப் பெறும்.

இது பண்பாட்டு வரலாற்றின் சாரம். தன் தனித்துவம் மிக்க பண்பாட்டை இழக்கின்ற சமுதாயம், சார்புச் சமுதாயமாகவும், அடிமைச் சமுதாயமாகவும், போதிய அளவு வளர்ச்சி பெறாத சமுதாயமாகவும் இருக்கும். தமிழ்ச் சமுதாயம் இந்த நிலையிலேயே உள்ளது. ஏனைய சீன, யூத, ஐரோப்பிய, அமெரிக்க, சப்பானியச் சமுதாயங்கள் தமக்குரிய பண்பாட்டுக் கூறுகளை இழப்பதில்லை. தன் பண்பாட்டுக் கூறுகள் அமுங்கி, அழிந்து போகும் வண்ணம் அயல் நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை ஏற்பதும் இல்லை. எனவே, ஒருவிதமான உயர்வு மனப்பான்மை (Superiority Complex) இந்தச் சமுதாயங்களிடம் தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்கு எதிர்நிலையில் தமிழ்ச் சமுதாயம் இருப்பதால் தாழ்வு உணர்ச்சியில் (Inferiority Complex) தாழ்ந்து கிடக்கிறது.

எனவே, கையாளும் பொருள்கள், பழக்க வழக்கங்கள், செயற்பாடுகள், எண்ணப் போக்குகள் ஆகியவற்றில் தமிழ்ச் சமுதாயம் தனக்குரிய நல்லவற்றை உறுதியாகக் கடைப்பிடித்து நிலைநிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில், வீழ்ச்சி தான் மிஞ்சும்.

ஓர் எடுத்துக்காட்டு: இத்தாலியில் இருந்து கி.பி. 14ஆம் நூற்றாண்டில் பாண்டி நாட்டிற்கு வருகை தந்த மார்க்கோபோலோ தமிழருடைய பல்வேறு பண்பாடுகளைப் பாராட்டி எழுதுகிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க இரண்டு, தண்ணீரை உதட்டில் வைத்துப் பருகாமல் தூக்கிப் பருகுவது, உணவை வாழை இலையில் இட்டு, உண்டு, உண்ட பின் இலையைத் தூக்கி எறிந்து விடுவது. இவை இரண்டும் இன்று மிக உச்சமாகப் பேசுகின்ற தூய ஒழுக்கங்கள். இவற்றை நாம் இழந்து விட்டோம். உணவில் பல பழக்கங்களை இசுலாமியரிடமிருந்தும், பாரசீகரிடமிருந்தும், வட

www.tamilarangam.net



இந்தியரிடமிருந்தும், ஐரோ - அமெரிக்கரிடமிருந்தும், ருசி பார்க்கக் கற்றுக் கொண்டோம். இப்பழக்கங்கள் அனைத்தும் தமிழர்க்குத் தீங்கானவை. ஒரு சான்று, இடி அப்பம், இட்டிலி, தோசை, பழைய சோறு என்று இருந்த காலை உணவுப் பழக்கத்தை மாற்றிப் பூரி, சப்பாத்திக்கு மாறினோம். இவற்றிற்குரிய மூலப் பொருளான கோதுமை தமிழ்நாட்டில் என்றும் விளையாத பொருளாகும். உள்நாட்டில் உள்ள சிறந்த உணவுப் பொருளை விட்டுவிட்டு வேறு பொருளை மாற்றிக் கொண்டதில் பொருளாதார அடிமைத்தனம் புலப்படுகிறது அல்லவா. தமிழருடைய பண்டைய இனிப்பு, சர்க்கரையும் அன்று, சீனியும் அன்று, தேன் மட்டுமே. உடலுக்குத் தீங்கு தராத ஒன்று தேன். தமிழருடைய காரப் பொருள், மிகச் சிறந்த மருந்துப் பொருளான மிளகு மட்டுமே. மிளகாய் நம்முடையது அன்று. உணவுப் பழக்கங்களில் ஓரிரு சான்றுகள் இவை.

பயன்படுத்தும் பொருள்களிலும், பழக்க வழக்கங்களிலும் ஐரோ-அமெரிக்கரைச் சார்ந்து பலவற்றை நாம் கற்றுக் கொண்டோம். அவற்றுள் மேசையில் அமர்ந்து சாப்பிடுவது ஒன்றாகும். ஐரோப்பியர்களுக்குக் கடும் குளிர் காலத்தில் கால்களை மடக்க முடியாது. பெரும்பாலும் மூட்டு வலியால் துன்பப்படுவர். எனவேதான், அவர்களுக்கு ஏற்ப அடுப்பு, உணவு மேசை, கழிப்பறை ஆகியவற்றை அமைத்துக் கொண்டனர். நமக்கு அவ்வாறு அன்று. இந்தப் பண்பாடுகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் மூட்டு வலியையும் சேர்த்து விலைக்கு வாங்கிக் கொண்டோம்.

எண்ணப் பண்பாட்டில் பலவற்றில் சிறந்த கொள்கைகளை நம்முடைய முன்னோர் போற்றி வந்துள்ளனர். சிங்கப்பூர் முதல் தலைமையமைச்சர் லிங்குவாங் யூவைப் பற்றி மூன்று சீனர்கள் ஒரு பெரும் நூலை எழுதியுள்ளனர். அந்நூலில் லிங்குவாங் யூ, டோக்கியோ சென்று இருந்தபோது தன்னுடைய அனுபவத்தைக் குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடுவதாவது:

> டோக்கியோ இரயில் நிலைய அடிவாரத்தில் காலணிகளுக்கு ஒளி ஊட்டும் தொழிலாளி தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். அவனிடம் தன் காலணிகளை லிங்குவாங் யூ கழற்றிக் கொடுத்து ஒளியூட்டச் சொன்னார். சற்று நேரத்தில் முகம் தெரியும்படியாகக் காலணிகளை ஒளியூட்டி இருந்ததைப் பார்த்து வியந்து போனார். ஆசான் அருகில் இருக்கிறார்களோ,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> *இல்லையோ ஏற்ற வேலையை மிகமிகச் செவ்வையாகச் செய்தல் வேண்டும் என்பதுதான் சப்பானியப் பண்பாடு. அந்தப் பண்பாட்டின் வெற்றிதான் அம்மக்களின் வெற்றி என்று குறிப்பிடுகிறார்.*

நம் முன்னோரிடமும் இது போன்ற பழக்கம் இருந்தது. ஒரு தச்சன் மிகச் சிறந்த தேரை மிக அக்கறை எடுத்துக் கொண்டு செய்ததாகப் புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. அந்தச் செவ்வைப் பாட்டைப் பணம் நோக்கிய மனநிலையை வளர்த்து, தற்போது இழந்து விட்டோம். தமிழர் என்றாலே பொய்யர்கள், ஏமாற்று கிறவர்கள் என்ற பெயர் வெளி மாநிலங்களிலும், வெளிநாடு களிலும் பரவி இருக்கிறது. தம் பண்பாட்டுச் சீரழிவால் தமிழர் பெற்ற பேரிழப்பாகும் இது.

ஒரு சமுதாயம் உச்ச நிலைக்கு உயர வேண்டுமானால், அது கட்டுக்கோப்புடையதாக இருக்க வேண்டும். விட்டுக் கொடுத்து, ஒருவரை ஒருவர் தொட்டுப்பிடித்து, அனைத்து நல்லது கெட்டது என எல்லாவற்றிலும் ஒன்றுடன் ஒன்று கரைந்து, குழைந்து போய் இருக்க வேண்டும். அவ்வாறுள்ள, சமூகக் கட்டொருமைப்பாடுள்ள சமுதாயம்தான் உலகில் வளர்ச்சி பெறும் என்பதைச் சமூகவியல் தந்தை எமில் துர்க்கேம் தன்னுடைய தற்கொலை எனும் நூலில் விரிவாக விளக்கி இருக்கிறார்.

கட்டொருமைப்பாட்டை ஒரு சமுதாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், தனக்குரிய பண்பாட்டுக் கூறுகளை அடையாளம் கண்டு, அவற்றுள் சரியானவற்றைப் பின்பற்றுவதில் பிடிவாதம் காட்ட வேண்டும். அதில் பின்னடைவு நிகழவே கூடாது.

தமிழர், பண்பாட்டு வரலாற்றின் மேற்கண்ட உண்மையான பின்புலத்தை அறிந்து, உணர்ந்து, கடைப்பிடித்தால் அவரை யாராலும் வெல்ல முடியாது, உலக நாடுகளில் தமிழரைப் பற்றிய உயர்ந்த கருத்து மேலோங்கி இருக்கும்.

SEELAN BOOKS NORWAY SIGNATURE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்:
# சடங்குகளும் சங்கடங்களும்

தந்தை பெரியார் பன்முகச் சிந்தனையாளர், செயலாளர். அவர் தமிழ் மக்களிடையேயும், அவர்தம் பழக்க வழக்கங் களிடையேயும் உள் நுழைந்து ஆராய்ந்து விசாரித்து விமர்சித்தவை பல. அவற்றுள் குறிப்பிடத் தக்கவை, தமிழர்கள் கொண்டாடும் சடங்குகளும், சம்பிரதாயங்களும். உலக மக்கள் அனைவரிடமும், அவர்கள் வாழும் சுற்றுப்புறச் சூழல், தட்பவெப்பம், பொருளாதாரம், அரசியல், சமுதாய அமைப்புக்கு ஏற்பச் சடங்கு களும், சம்பிரதாயங்களும் பின்பற்றப்படுகின்றன. தமிழரிடை யேயும், அவர்கள் பின்பற்றும் சடங்கு சம்பிரதாயங்களுக்கு அறிய முடிந்த காரணங்களும், அறிய முடியாத காரணங்களும் உள்ளன. மூடநம்பிக்கை உடையனவும் உள்ளன.

உலக மானுட இனங்களைக் கூர்ந்து நோக்கும்போது தமிழர் தனித் தன்மை வாய்ந்த மூடநம்பிக்கை உடையவர் என்று தெரிகிறது. சான்றாக, குழந்தை உண்டாவது, குழந்தை பிறப்பது, வளர்வது, பெண் சமைவது, திருமணமாவது ஆகிய அனைத்தும் பண்பாடும், நாகரிகமும் எய்திய சமுதாயத்தில் இயல்பான நிகழ்வுகள். எனவேதான், இக்காலத்திய ஐரோப்பியச் சமுதாயம் இவற்றிற்குத் தனிச் சிறப்புக் கொடுத்துக் கொண்டாடுவது இல்லை. இயல்பான நிகழ்ச்சிகளைத் தமிழர்கள் பெயரிடு விழா, பெண் சமைந்த விழா, திருமண நிகழ்வு, வளைகாப்பு, குழந்தைப் பேறு எனக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டாடுகின்றனர். அசாதாரண நிகழ்வுகளாக இல்லாத இவற்றிற்குத் தமிழர்கள் அசாதாரணத் தன்மையும், அசாத்தியப் பெயரையும் அளித்துச் சடங்கு, சம்பிரதாயமாக்கிப் பெரும் கூட்டம் கூட்டி நடத்தி வருகின்றனர். அறிவியல் ஊழியில் நவீன நாகரிகம் பரவிய நிலையில் இவை தனக்கிருந்த சிறிதளவு முதன்மையையும் இழந்து விட்டன. எனினும், இவை தொடர்ந்து கொண்டாடப் படுவதைப் பெரியார் தனக்கே உரிய முறையில் கண்டித்தார். அவருடைய கண்டனத்திற்குப் பிறகும், அறிவியல் கல்வி வளர்ந்த பிறகும் தமிழர் இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து நவீன அறிவியல் கருவிகளான போட்டோ, ஆடியோ, வீடியோ, ஒலிபெருக்கி ஆகியவற்றைக் கொண்டு நிகழ்த்தி வருவது இவர்கள் இன்னும் போதிய அளவிற்கு முன்னேறவில்லை என்பதையே காட்டுகின்றது. விண்ணில் குடியேறுதல், கடலில் மூழ்கி ஆராய்தல், கண்ணுக்குப் புலப்படாதவற்றைப் பெருக்காடி கொண்டு பார்த்தல் முதலான அசாத்தியங்களைச் சாத்தியங்கள் ஆக்க முடியா மக்களினம், இயல்பான குழந்தை பெறுதல், கருவுருதல், ஆண் பெண் இணைவு (திருமணம்) ஆகியவற்றை அசாத்தியம் போலக் கொண்டாடுவதில் சமூக உளவியல் தெரிகிறது.

சடங்கு என்ற தலைப்பிற்கு உள்ளாகத் தமிழர் பின்பற்றிவரும் வேறு பிற மூடநம்பிக்கைகள் சங்கிலிப் பின்னலாகப் பிணைந்து கிடக்கின்றன. இதன் உச்சமாகத் திருமண நிகழ்ச்சியைச் சொல்லலாம். ஐரோப்பிய நாடுகளிலும், ஐரோப்பியக் குடியிருப்பு நாடுகளாகிய சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் திருமணம் என்பது ஒரு விடுமுறை நாள் மாலை நிகழ்ச்சியாகச் சுருங்கி விட்டது. ஐரோப்பிய அமெரிக்கச் சமுதாயத்தில் திருமண நாள் வாழ்க்கையில் நிகழும் வெறும் வெற்றுச் சம்பவமாக மெலிந்து விட்டது. உற்பத்தி, உழைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய தொழில் சமுதாயம் அமைந்த பிறகு திங்கள் முதல் வெள்ளி வரை உற்பத்தி நாட்கள் ஆகிவிட்டன. எனவே, இந்நாட்களில் சடங்கு சம்பிரதாயக் கொண்டாட்டத்தை அமைப்பது உழைப்புக்குரிய வேலை நாட்களை வீணடிப்பதாகும். சடங்குக்கு உரியோர் விடுமுறை எடுத்து வேலை நாட்களை வீணாக்குவதுடன், அறிவியல் தந்த அச்சுக் கருவி அழைப்பிதழ்களைக் கொண்டு பெரும் கூட்டம் கூட்டுவதும் இவர்களுடைய இயல்பாக இருக்கிறது. இயல்பான ஒரு நிகழ்வுக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நூற்றுக்கணக்கானோரை இவர்கள் திரட்டுவதன் மூலம் நூற்றுக் கணக்கானவர்களுடைய வேலை நேரம் பாதிப்புக்குள்ளாகிறது.

தமிழர்களும் தமிழர்களை முதன்மையாகக் கொண்ட அமைப்பு களும் உலக அளவில் போட்டி போடும் அளவிற்கு முன்னேற முடியாமல் தடுமாறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகலாம். வேறு உலக இன மக்களிடம் மதம் சார்ந்த விழாக்கள் இருப்பின் அவை ஓரிரண்டாகவே அமைந்துள்ளன. ஆனால், தமிழரிடம் அவை மாதத்திற்கு ஒன்றுக்கு மேலாக, இருபதுக்கும் மேற்பட்ட நோன்பு, விரதம், விழா என அமைந்து கிடக்கின்றன. அறிவியல் கண்டுபிடித்த கருவிகளைத் தங்கள் வாழ்க்கை நுகர்விற்குப் பயன்படுத்திக் கொள்ளும் தமிழ் மக்கள் கூட்டம் அறிவியல் மனப்போக்கை இன்னும் தழுவாமல் பின்தங்கிக் கிடப்பது வியப்பானதுதான். இந்த வகையில் தந்தை பெரியார் தம் வாழ்நாள் முழுதும் மூடநம்பிக்கைகளையும், சடங்கு, சம்பிரதாயங்களையும் விமர்சித்து மக்களிடையே கருத்தைப் பரப்பியது எத்துணைப் பொருளுடைய செயல் என்பது புலனாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமத்துவப் பண்பாடு

உலக வரலாற்றையும் இந்திய வரலாற்றையும் உற்று நோக்கும் போது மனித சமுதாயத்தில் பெண்கள் முதன்மை பெற்றிருந்தனர். அவர்கள் அளிக்கும் இன்பமும், பெற்றுக் கொடுக்கும் குழந்தையும், அக்குழந்தைகளை வளர்த்தெடுக்கும் பொறுப்பும் பெண்டிர்க்கு முதல் நிலையை நல்கி இருத்தல் வேண்டும். அன்றியும் தொல்பழங்காலத்துப் பிறந்த குழந்தைகள் தந்தையரை அறியாமல் இருந்தன, தாயை மட்டுமே அறிந்திருந்தன. உடலியலார் கருத்துப்படி ஏழு ஆண்டுகள் வரை மானுடக் குழந்தைகள் தாய் அரவணைப்பிலேயே இருத்தல் வேண்டும். எனவே தாயிடம் குழந்தை வாழ்ந்த காலமே நீளமாக இருந்தது.

உலகில் வேளாண்மை என்பது, மனிதரால் கண்டுபிடிக்கப் பட்ட தொழிலாகும். இவ்வேலை பெண்களிடமே இருந்தது. எனவே வேலைக்குரிய நிலபுலங்களுக்கும் பெண்களே உரிமை உடையவராக இருந்தனர். வேட்டை ஆடுதல், ஆடு, மாடு மேய்த்தல், மீன் பிடித்தல் முதலான தொழில்கள் அதற்கு முன்பே மானுட சமுதாயத்தால் கண்டறியப் பெற்றன. இத்தொழில்களில் பெண்கள் தமக்குள்ள உடல் அமைப்பாலும், பூப்பாலும் பத்து மாதக் குழந்தைச் சுமையாலும், ஏழாண்டுகள் குழந்தை வளர்ப்புச் சிக்கலாலும், இயந்திரங்கள் இல்லாத அக்காலத்தில் பேரளவு ஈடுபட முடியாமல் இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நூற்றாண்டு நூற்றாண்டாகத் தலைமுறை தலைமுறையாகப் பெண்டிர் பெற்று வந்த நிலையே தாய் வழிச் சமுதாய உருவாக்கத்திற்குக் காரணமாக இருந்தது. இதன் பரப்பையும் ஆழத்தையும் பழைய கண்டங்கள் என்று கருதப்படும் ஆசிய, ஆப்பிரிக்க ஆதிச் சமுதாயங்களில் காணலாம். தாய்த்தெய்வ வழிபாட்டுப் பின்னணியும் இதுதான். தமிழர் தாய்த்தெய்வ வழிபாட்டினரே. தமிழகக் கோயில்களில் 75 விழுக்காட்டிற்கு மேல் அம்மன் கோயில்களே என்பது இக்கருத்தை வலியுறுத்தும்.

பெண்டிர் பெரியவரா, ஆடவர் பெரியவரா என்னும் பொறாமை நிலையும் போட்டி நிலையும் ஆடவர் சமுதாயத்தில் அடுத்தடுத்துத் தோன்றின. இதனைக் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதிகளில் வாழும் கிகியூ மக்களிடையே நிலவும் ஒரு பழங்கதை உறுதி செய்கிறது.

> **''பெண்கள் குழந்தை கருவுற்ற 10 ஆம் மாதத்தில் போதிய அளவு செயல்பட முடியாமல் இருக்கின்றனர். எனவே பெண்களை வீழ்த்த அச்சமயமே தகுந்த காலம் என ஆண்கள் கூடித் தீர்மானித்தனர். ஒரு குறிப்பிட்ட நாளில் தம் மனைவிமாருடன் உடல் உறவு கொள்ளத் திட்டமிட்டனர். அப்படியே செயல் புரிந்தனர். அதன் விளைவாக கிகியூ இனக் குழுப் பெண்கள் சற்று முன்னும் பின்னுமாக கருவுற்றுப் 10 மாத அளவில் குழந்தைப் பேற்றை ஒட்டிய காலத்தில் வலுவிழந்து நின்றனர். அச்சமயத்தைப் பயன்படுத்தி ஆடவர் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டினர்''.**

இப்பழங்கதை பெண் தலைமை முன்னொருகாலத்து மேலோங்கி யிருந்ததைக் காட்டுவதாகும். ஆசிய, ஆப்பிரிக்கப் பண்பாடுகளில் தாய்த் தலைமை மேலோங்கி இருந்த அளவு ஐரோப்பிய, கிரேக்க, சீனப் பழம் பண்பாடுகளில் மேலோங்கி இருக்கவில்லை. பாலை வனம் ஆகிக் கொண்டிருந்த அரேபிய நாடுகளில் கடும் வெயிலும், ஒட்டகப் பயணமும், அயல் நாட்டு வாணிபத் தொடர்பும் பெண்களைப் பின் நிலையிலேயே நிறுத்தி இருந்தன. இப்பின்னணியிலேயே இயேசு, முகமது நபி, புத்தர், மகாவீரர் ஆகியோரை ஒட்டிய ஆண் தலைமைச் சமயங்கள் உலகை ஆட் கொள்ளத் தொடங்கின. தமிழகத்தைப் பொறுத்தவரை அம்மன் வழிபாடே முதன்மையாக இருந்தது. பின்னாளில் சிவன் வழிபாடு தொடர்புறுத்தப் பெற்றது. மெல்ல மெல்ல ஆண் கடவுள் தலைமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலை நிறுத்தப் பெற்றது. எனவே தான் பெரும்பான்மையான கோயில்களில் ஆண் கடவுள் மூலமூர்த்தியாகவும், தலைமையிடத் தலைவராகவும் இருத்தப் பெற்றார். அம்மன் சன்னதி மூலவர் சன்னதியை விடச் சிறியதாகத் தனியாக ஒதுக்குப்புறமாக வைக்கப் பெற்றது. ஆக உலகெங்கும் கடவுள் சார்ந்த சமயங்களில் ஆணாதிக்கம் நிலைபெற்றது.

வேட்டுவத் தொழிலும் ஆடு, மாடு வளர்ப்புத் தொழிலும் கடல் மீன் பிடிப்புத் தொழிலும் அறியப் பெற்று வளர்ந்த காலங்களில் ஆடவர், தொழில் வழி உற்பத்தியில் பெரும் பங்கு பெற்றிருந்தனர். எனவே அங்கும் ஆடவரே தலைமைப் பொறுப்பில் இருந்தனர். இனக் குழுத்தலைவரே காலப் போக்கில் மாடு, ஆடு, நிலம், தொழில் உடையவராகச் செல்வத்திலும் வளமுற்றிருந்தனர். இச்சூழலில் அரசத் தலைமையும் ஆண் தலைமை ஆயிற்று. அரசுத் தலைமை முதலில் தோன்றி ஆண் கடவுள் சமயத் தலைமை பின் வளர நிறைய வாய்ப்பு இருந்தது. முன்னோர் வழிபாடு எனும் கோட்பாடு இதனையே காட்டுகிறது.

ஆகச் சுருக்கமாக ஆண் தலைமை அமைப்பு உலகெங்கிலும் தோன்றி விட்டது. ஆண் தலைமைக்குப் பிறகு, அவனுக்குத் தோன்றிய ஆண் வாரிசே தலைமை என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆதிகால, இடைக்கால, பிற்காலங்களில் நில உரிமைப் போர்களும், அரசு உரிமைப் போர்களும் மனிதத் தன்னலத்தால் நிகழ்ந்து கொண்டே இருந்தன. இப்போருக்குப் போதிய போர்க்கருவிகள் கண்டுபிடிக்கப்படாத சூழலில், உடல் வலிமையே முதல் தகுதியாக இருந்தது. இருக்கவே, உடல் வலிமை மிகுந்த ஆடவர் மிகுதியாகப் பங்கேற்றனர், போதிய மருத்துவ வசதிகள் பெருகாத அக்காலங்களில் அம்பு, வேல், ஈட்டி, கத்தி, அரிவாள் ஆகிய இரும்புக்கருவிகள் பயன்படுத்தப் பட்டன. எனவே பங்கேற்ற ஆடவர், தொடர்ந்து சாவைத் தழுவி இருத்தல் வேண்டும். ஆணிறப்பை ஈடு செய்யப் புதிய ஆண் குழந்தைகளே தேவைப் பட்டன. எனவே போர்ச் சமுதாயத்தில் ஆண் குழந்தைகளின் தேவை பெரிதாக இருந்தது. இந்நிலையிலேயே ஆண் குழந்தைப் பேறு வற்புறுத்தப் பெற்றது. உடல் பலவீனம், உற்பத்தி விலக்கம், போர்ச் சமுதாய அமைப்பு ஆகியன சமுதாயத்தில் பெண் சம நிலையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாற்றிக் கீழ்ப்படுத்தி இருத்தல் வேண்டும். இது உலகெங்கிலும் நடந்தது; இந்தியாவிலும் நடந்தது; தமிழகத்திலும் நடந்தது.

பொருளும், உடைமையும், உற்பத்தியும் ஆண்களின் பங்கை முதன்மைப் படுத்தின. வீட்டுப்பணி, வெளிப்பணி என இரண்டு பணிப் பகிர்வுகள் தெளிவாயின. உடல் அமைப்பு, உடல் அழைப்பு, உற்பத்தி அமைப்பு முதலாயின பெண்ணை வீட்டுக்குத் தலைமை ஆக்கின. ஆணை வெளி வேலைக்குத் தலைமை ஆக்கின. வயிறே பெரிது என்பதால் வயிற்றுக்கான உணவை வீட்டுக்குக் கொண்டு சேர்க்கும் ஆண் பெரியவனாகக் கருதப் பெற்றான்.

வெளி வேலைக்குச் சென்ற ஆடவர்க்கு அவன் தொடர்ந்து செய்து வரும் தொழில் அனுபவம் கல்வி அறிவு ஆயிற்று. பேச்சு மொழியைக் கடந்து எழுத்து மொழி தோன்றிய போது தொழில் அனுபவம் எழுத்திலும் ஏறிற்று. தொழில் அனுபவத்தில் உணவு உற்பத்தியில் பெரும் பங்கு பெற இயலாத பெண்ணுக்கு எழுத்தறிவும் வற்புறுத்தப் பெறாத நிலை தோன்றிற்று. எனவே பெண்கள் கல்வியிலும் பின் நிற்க வேண்டுவதாயிற்று.

போர் வெறிக்கும் காம வெறிக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. வெற்றி பெறும் மன்னர்கள் வெற்றி பெற்ற நாட்டிலிருந்து பெண்களைக் கடத்தி வந்தனர். அவர்கள் பெரும்பாலும் பரத்தையராக்கப் பெற்றனர். பரத்தை எனும் சொல் பர + ஸ்திரீ = பரஸ்திரி; பரதேசி என்பதைப் போல வேற்று நாட்டுப் பெண் எனும் பொருளைக் கொண்டது. பெண்டிர் இக்காலகட்டத்தில் நுகர் பொருள் ஆயினர். இது எல்லா நாட்டிலும் நிகழ்ந்தது. பெரும்பாலான நாடுகளில், அயல் நாட்டுப் பெண்டிரே பரத்தைத் தொழிலில் மிகுதியாக ஈடுபட்டிருக்கின்றனர்.

இந்நீண்ட முற்காலப் பின்னணியிலிருந்து விழிப்படைந்து பெரிதாக எழுச்சியை முதலாவதாக ஐரோப்பியப் பெண்மணியரே பெற்றனர். இதற்கு அங்கு நடந்த அறிவியல் கண்டுபிடிப்பும், தொழில் புரட்சியும் மிகப் பெருங் காரணங்களாகச் செயல்பட்டன. ஐரோப்பிய நாடுகளில் பெண்கள், தங்கள் வாக்குரிமையைப் போராடிப் பெற்ற வரலாறு, அடுப்பங்கரையை விட்டு வெளியேறி அனைத்துத் தொழிலிலும் ஈடுபட்ட தீவிரம், குடும்பத்தை விட்டு வெளியேற ஆயத்தம், குடும்பமாகவே இல்லாமலிருக்க விருப்பம் என

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வளர்ந்து தற்போது திருமணமே வேண்டாம் என்ற உச்ச நிலைக்கு வந்து விட்டனர். இந்த ஐரோப்பிய அமெரிக்கத் தீவிரங்களில் நன்மைகளும் உண்டு தீமைகளும் உண்டு. மேற்கண்ட போக்குகளால் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் மக்கள் தொகை குறையத் தொடங்கி விட்டது. பூச்சிய நிலைக்கு இறங்கித் தற்போது (மைனஸ்) கழித்தல் நிலைக்கு வீழத் தொடங்கி விட்டது. பிரான்சு, செர்மனி முதலாய நாடுகளில் இந்நிலைமையைப் பார்க்கலாம்.

அதே சமயத்தில் பழைய கண்டங்களைக் காலனி நாடுகள் ஆக்கி ஆண்டமையும், அமெரிக்க ஆஸ்திரேலிய நாடுகளைக் கண்டுபிடித்தமையும், மிகப்பெரிய நாடுகளில் (அமெரிக்கா, ஆஸ்திரேலியா) குறைந்த தொகை மக்களால் நிறைத்து இருப்பதும், நுகர் பண்பாட்டுக் கண்டுபிடிப்புகளும், மோக வேகங்களும் மனிதத் தேவையை வற்புறுத்தின. போதிய மனிதத் தேவை நிரப்பப்படாத சூழ்நிலை வந்தமையால் நேர்ந்த சிக்கலை இரண்டு வகையாகத் தீர்த்துக் கொண்டனர்.

1. ஆண், பெண் இருவருக்கும் வேலைவாய்ப்புத் தந்தனர்.
2. பணிக்களங்களை ரொபேட் முதலாய இயந்திரமயமாக்கினர்.
3. குழந்தைகள் பெற்றுக் கொள்ளப் பெண்களைப் பலவேறு சலுகைகள் கொடுத்து ஊக்கப்படுத்தினர்.

மேற்கண்ட ஐரோப்பிய, அமெரிக்கக் கருத்துத் தாக்கம் இந்தியாவில் பரவிவிட்டது. தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், உலக மயமாக்கல் எனும் புதிய தத்துவங்களால் அயல்நாடுகளிலிருந்து பொருள் இறக்குமதி மட்டுமல்லாமல் கருத்து இறக்குமதியும் நடந்து கொண்டிருக்கிறது; சில இடங்களில் நடந்தும் விட்டது. மேற்கண்ட கோட்பாட்டால் இந்தியா அயல்நாட்டு நுகர் பொருள்களுக்கும் கருத்துப் பொருள்களுக்கும் சந்தைக்காடாகி விட்டது. இதில் மிகமிக எச்சரிக்கை தேவை. பெண்ணிற்கு என நாடாளுமன்ற சட்டமன்ற இன்ன பிற இடங்களில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்னும் எண்ணம் ஓங்கி இருக்கும் இச்சமயத்தில் மேற்கண்ட ஐரோப்பிய, அமெரிக்கப் பண்பாட்டுப் படையெடுப்பு வரலாற்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பொட்டு வைக்காமல் இருப்பது, முடியை அவிழ்த்துப் போடுவது, முதலாயின ஐரோப்பிய அமெரிக்கப் பண்பாட்டுப் படையெடுப்பிற்கு ஓரிரு சான்றுகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்கு எதிர் மறையாக எத்தனை ஐரோப்பிய அமெரிக்கப் பெண்கள் பொட்டு வைக்கக் கற்றிருப்பார்கள், கூந்தல் முடிக்கக் கற்றிருப்பார்கள் என்பதையும் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவில் ஆண், பெண் சரிநிகர் சமானமாகக் கருதப்பட வில்லை, போற்றப்படவில்லை என்பதை மறுக்கவே முடியாது. பெண்டிர்க்கு உரிய சமத்துவம் வழங்கப்படத்தான் வேண்டும்.

பெண்களை உயர்த்த சரியான வழிகளைத் தேடுவோம். கடந்த இருநூற்றாண்டுகளாகப் பெரிய மாற்றங்களைப் பெண்டிரிடையே நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

1. படிக்கவே கூடாது என்ற நிலையை மாற்றி அமைத்துப் பெண் களுக்கு எனத் தனிப் பல்கலைக்கழகங்களையும், கல்லூரி களையும், பள்ளிகளையும் கொண்டு வந்துள்ளோம்.
2. பொறியியல், வேளாண்மை, கால்நடைமருத்துவம் எனும் துறைகளில் கனவிலே நினைக்காத அளவிற்குப் பெண்களைப் படிக்க வைத்துள்ளோம்.
3. விதவை மறுமணத்தைச் சட்ட பூர்வமாக்கியுள்ளோம்.
4. சட்டமன்ற, நாடாளுமன்ற, நகராட்சி, ஊராட்சி மன்றங்களில் போதிய அளவில் இடம் பெறாவிட்டாலும் ஓரளவாவது பெண்கள் இடம் பெறுவதில் வெற்றி பெற்றுள்ளோம்.
5. உலகிலேயே இரண்டாவது பெண் தலைமை அமைச்சரைக் கொண்டு வந்தோம்.
6. ஐ.ஏ.எஸ், ஐ.எப்.எஸ் முதலான தேர்வுகளில் கணிசமான அளவிற்குப் பெண்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.
7. தமிழகத்தில் உயர்நிலைப் பள்ளி, மேனிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பெரும்பான்மை பெண்டிர் தேர்ச்சி பெறுவதும் முதல்நிலை பெறுவதும் அண்மைக் காலங்களில் வழக்கமாகி விட்டன.
8. நாவன்மை மிக்க பெண் வழக்கறிஞர்களையும், பேச்சாளர் களையும் நீதிபதிகளையும் பெற்றிருக்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே பெண்டிர், ஆடவர் இடையே புதிய பிரிவுக்கும் பிளவுக்கும் வித்திடாமல் வேறு வேறு முறைகளில் வேறு வேறு தளங்களில் பெண்களை உயர்த்தத் திட்டமிடுவோம்; செயல்படுவோம்.

*இந்தியாவைச் சாதிகளாகப் பிரித்தார்கள்*
*பொறுத்துக் கொண்டோம்,*
*மதங்களாகப் பிரித்தார்கள்,*
*பொறுத்துக் கொண்டோம்,*
*மீண்டும்*
*சாதிகளாகப் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்*
*பொறுத்துக் கொண்டு வருகிறோம்*
*இப்போது*
*ஆணாகவும் பெண்ணாகவும் பிரிக்கிறார்கள்*
*இதற்கும் பொறுத்துக் கொள்ளத்தான்*
*வேண்டுமா?*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேவை: அஞ்சா நெஞ்சம்

காட்டு ராசாவான சிங்கம், ஒரு நாள் எல்லா விலங்குகளையும் தன் குகை அரண்மனைக்கு முன் கூடச் சொன்னது. சிங்கத்தின் குகையின் உள்ளேயும், வெளியேயுமாக, அவை முண்டியடித்துக் கூடி நின்றன. குகையிலும், வெளியிலும் சிங்கம் கடித்துக் குதறித் தின்று மிஞ்சியிருந்த மிருகங்களின் எலும்புகள், அழுகிய தசைகள் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தன. எங்குப் பார்த்தாலும் குடலைப் பிடுங்கும் ஒரே நாற்றம். பாறையில் ஏறி அலட்சியமாகப் படுத்துக் கொண்டே, சிங்கம் கேட்டது, என் குகை எப்படி இருக்கிறது. மனிதனில் பூர்வீகமான குரங்கு முந்திரிக் கொட்டை போல முண்டியடித்துக் கொண்டே பதிலைச் சொன்னது, ''எங்கும் ஒரே நறுமணம் வீசுகிறது, கோயில்வாயில் போலக் குகையுள்ளது'', சொன்ன குரங்கின் கன்னத்தில் சிங்கம் ஒரு அறைவிட்டது, கன்னத்தைத் தடவிக் கொண்டே குரங்கு எட்ட விழும் முன், எப்படிப் பொய் சொல்கிறது குரங்கு என்று சிங்கம் சொன்ன சொற்கள் காதில் விழுந்தன. அதே கேள்வியை யானையைப் பார்த்துக் கேட்டது சிங்கம். ''ஒரே நாற்றம், நிற்கக் கூட முடியாமல் மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது'' என்ற யானைக்குச் சிங்கம் பெரிய அறை ஒன்றைக் கொடுத்தது. நரியைப் பார்த்து அதே கேள்வியைக் கேட்டது. நரி பதில் சொன்னது ''எனக்குச் சளி பிடித்திருக்கிறது'', சிங்கம் உடனே, நரியை மந்திரி ஆக்கி விட்டது.

www.tamilarangam.net



இன்றைய இந்திய அரசியலைப் பார்க்கும் போது மேற்கண்ட கதை முற்றும் பொருந்தி நிற்கிறது. எதுவானாலும் தாழ்வில்லை உண்மையையே சொல்ல வேண்டும் என்பது ஒருநிலை, ஆளுவோர் ஏற்பதையே சொல்ல வேண்டும், பொய்யானாலும் தாழ்வில்லை, வேண்டியது பதவி என்பது பின்னொரு நிலை. இந்தியாவில், நாம் விரும்புகிறோமோ இல்லையோ நரிகளின் சாம்ராஜ்யம் அமைந்துவிட்டது. ஆட்சியின் அடிநாதம், கொள்கையும் இல்லை, உண்மையும் இல்லை. அரிச்சந்திரனுக்குக் கல்லறை எழுப்பி, காந்திக்கும் கல்லறை எழுப்பியாகி விட்டது.

வளரும் நாட்டுமக்களுக்கு நரித்தத்துவம் வாழ்வைக் கொடுக்குமா என்பதே கேள்வி. கொடுக்காது கொடுக்காது என்று குன்றின் மேல் நின்றும் குரல் எழுப்பலாம்.

மருத்துவமனை அறுவைக்காக அறுவைப் படுக்கையில் நோயாளி படுக்க வைக்கப்பட்டபின், பொய்ப்புனைகளுக்கு இடம் இல்லை, மெய் நாட்டம், நோய்த்தீர்வே முதன்மை.

சொந்த வாழ்வு என்றும் பார்க்காமல், மனைவியை விட்டுப் பிரிந்து 'சின்ன வீட்டில்' வாழ்ந்து கொண்டிருந்த மன்னனைப் பார்த்துக் கண்டித்தனர் புலவர்கள். பகைவன் ஆயினும் அவன் குழந்தைகளை யானைக் காலால் இடற வைத்துக் கொல்வது தவறு என்று முகத்துக்கு முகம் அடித்துப் பேசி தடுத்து நிறுத்தினர். முடியாட்சி இருந்த காலத்தில், அரசனே அனைத்தும் என்று இருந்த வேளையில், தவறுகளைக் கண்டிக்கத் தவறவில்லை. அரசன் என்றும் பாராமல் அவனை நேரில் கண்டு வழக்கிட்டு வாதாடி, தவறு செய்த அரசன் தானே மாளும்படி செய்தாள் கண்ணகி.

இறைவன் பாடிய பாடலில் குற்றம் உள்ளது, இறைவனே வந்தாலும், அவன் நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம், குற்றமே என்று நிலைநாட்டிய நக்கீரன் வரலாறு, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளைக் கடைப்பிடித்த வாழ்வைக் காட்டுவதாகும். பல்லவ மன்னனின் கொலை முயற்சிகளுக்கு அஞ்சாமல், நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம் என்ற அப்பரின் தலைமுறை நம் பழைய தலை முறையாகும். இந்த அஞ்சாத் தலைமுறை இன்று எங்குப் போய்த் துஞ்சுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிரேக்கச் சிந்தனையாளர், தன் உயிரைக் காப்பதற்காகக் கூட, அரசை ஆதரிக்கவோ, பொய்பேசவோ ஆயத்தமாக இல்லையே. தப்ப வாய்ப்பிருந்தும் தப்பாமல், நஞ்சு அருந்திச் செத்தாரே. ரோம செனட்டுகளில், ஆட்சியாளரை எதிர்த்துக் குரல்கள் கொடுக்கப் பட்டன்வே. நைல் ஆற்றின் நாகம் எனப்பட்ட கிளியோபாத்ராவின் காலடிகளில் கிடந்த ஆண்டனியை அரசன் என்று பாராமல் எதிர்த்தார்களே. மன்னர் குடும்பம் என்று பாராமல், 1757 புரட்சியில், பிரான்சு நாட்டு மக்கள், அநீதி இழைத்து ஆடம்பரத்தில் திளைத்த அரசர் குடும்பத்தினரைக் கில்லட்டில் வெட்டிக் கொன்றனரே.

குடியரசுத் தத்துவம் தோன்றி வளர்ந்து நிலைபெற்றிருப்பதன், தலைமை இலக்கு என்ன என்றால், மாற்றுக் கருத்தளிக்க இடம் கொடுப்பதும் மாற்றுக் கருத்துகளுக்கு இடம் கொடுப்பதும் ஆகும். ஆனால், இந்தியக் குடியாட்சியில் மற்றவர் கருத்தைக் கூற வேண்டும் என்பதற்காகவே கூறுவது, உரத்துக் கூவுவது, மெய்ப் பொருள் காண்பது நின்று, பொய்ப்பொருள் காண்பது இது. ஜனநாயகம், இந்தியாவில் புற்று நோய்கண்ட நிலையாகும். ஆளுங்கட்சி நல்லதைச் செய்தாலும், சொன்னாலும் எதிர்ப்பது, மறுப்பது என்பதாலும் அன்று - அரசர்களைப் பொய்யாகப் போற்றிப் பாடுவது, இன்று அரசியல் தலைவர்களை, அவ்வக் கட்சியினர் போற்றிப் பாடுவதாக வடிவெடுத்திருக்கிறது.

கட்சிக்காரர் என்ற அளவில் தொடங்கி, ஏடுகள், இதழாசிரியர்கள் என வளர்ந்து, அண்மைக்காலமாக அறிவாளி களையும் இந்நோய் இந்தியா முழுவதும் தொற்றிக் கொண்டு விட்டது. மாமேருவாக இருந்தாண்ட நேருவை, நேருக்கு நேர் மறுத்து நல்லது மொழிந்த ஆசார்ய கிருபளானி, ஜெயப்பிரகாச நாராயணன், அண்ணல் பி.சி.ராய், ராஜாஜி, எச்.வி. காமத் முதலானோரின் பட்டியல் அவர்களோடு முடிந்து விட்டதா, மடிந்து விட்டதா?

பிசிராந்தையார் என்ற புலவர், தன் தலைமுடி நரைக்காமல் இருப்பதற்குரிய காரணங்களைக் கூறும் போது, தான் வாழும் ஊரில் சான்றோர்கள் பலர் வாழுவதை ஒரு காரணமாகக் குறிப்பிடுகிறார். கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு அதிர்ந்த கண்ணகி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடங்கி விடாமல், தன் கணவன் திருடன் அல்லன் என்பதை நிறுவுவதற்காக, மதுரை நகரை நோக்கிப் பறந்து ஓடுகிறாள். மதுரை வீதிகளைக் கடக்கும் பொழுது, இவ்வுலகில் குழந்தைகளைப் பெற்று வளர்த்து வாழும் சான்றோர்கள் இல்லையா என்று கேட்கிறார். திருவள்ளுவமேதை பண்புடையோர் இருப்பதாலேயே உலகம் வாழுகிறது, இன்றேல் அது அழிந்து விடும் என்கிறார். நல்லார் ஒருவர் இருந்தால் போதும் அவர் பொருட்டாவது மழை பொழியும் என்கிறார் ஔவை மூதாட்டி. இச்செய்தி உணர்த்தும் உண்மை இதுதான்: நிலத்தில் யார்க்கும் அஞ்சாமல் கட்சி, மதம், சாதி, பதவி என்பனவற்றிற்கு அஞ்சாமல் சமுதாய நன்மை ஒன்றை மட்டுமே கொண்டு நல்லவற்றைச் சுட்டிக் காட்டும் சான்றோர்கள் சமுதாயத்தின் முக்காலத்திற்கும் பொருந்தும் கருத்தை எடுத்துச் சொல்லும் வினைத்தொகையாக விளங்குகிறார்கள்; விளங்குவார்கள்.

கிரேக்க மேதை அரிஸ்டாடில் சொல்லுவார், சொந்த பந்த சார்புகளுக்கு அப்பால் சிந்தித்துச் சரியானவற்றைச் சொல்லும் சரியானவற்றிற்காகவே வாழும் தேவையானால் சரியானவற்றிற் காகவே சாகவும் ஆயத்தமாக இருக்கும் சான்றோர்கள் தேவை என்பார் டேனியல் பெல் என்ற அமெரிக்கச் சான்றோர், பொது மக்களைச் சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும் வண்ணம் ஏடுகளில் எழுதியவர், தன் முயற்சிகளில் வெற்றியும் பெற்றவர். தற்போது சாம்ஸ்கி என்ற கணக்கிலும் மொழியிலும் பெயர் பெற்ற மேதை பொதுமக்களுக்காகப் போராடுகிறார்.

டார்வின் இங்கிலாந்தில் சமகாலச் சமுதாயத்தையும் சமயத்தையும் எதிர்த்தே தனக்குச் சரியாகப் பட்டவற்றை 'உயிர் களின் தோற்றம்' என்ற நூலாக எழுதினார். அவருடைய நூல் சிலரால் கோயில்களில், கால்களின் கீழே போட்டு மிதிக்கப்பட்டது, அவமதிக்கப்பட்டது. காரல் மாக்சின் மூலதனப் பொருளியற் கருத்துகளும், சிக்மன் பிராய்டின் உளவியல் கருத்துகளும் அவர்கள் காலத்தில் ஏற்கப்படவில்லை என்பதற்காக, அவர்கள் சொல்லாமல் இல்லை. எதிர்ப்பாளருடன் அவர்கள் சமரசம் செய்து கொள்ள வில்லை. எனவேதான் அவர்கள் இன்றும் வாழுகிறார்கள், அவர்களின் கருத்து இன்றும் வாழுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனநலம் எல்லாம் தரும்

மானுடன், மனித நிலையை அடைவதற்கு முன்பு வரை முழு விலங்காகவே இருந்தான். விலங்கு நிலையிலிருந்து அவன் மெல்ல மெல்ல மனித நிலையைப் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு அடைந்திருக்க வேண்டும். அவன் அந்நிலையை அடைவதற்கு முதல் காரணமாக மொழியே இருந்திருத்தல் வேண்டும். மற்ற விலங்கினங்கள் ஓசையாலும், உடல் அங்க அசைவுகளாலும் தம் எண்ணத்தை அன்றும் வெளிப்படுத்தின; இன்றும் வெளிப்படுத்து கின்றன. அவற்றின் நடைகளிலும், அங்க அசைவுகளிலும் மாற்றமும் இல்லை; வளர்ச்சியும் இல்லை. ஆனால், மானுட விலங்கு முதலில் கண்டறிந்த மொழி ஒலிக்கு உட்பட்டதே என்றாலும், அது காலம் செல்லச் செல்ல மாறியது; வளர்ந்தது. இம்மொழி வளர்ச்சியே சிந்தனைக்கும் காரணமாயிற்று. மொழியின்றிச் சிந்தனை செய்ய முடியாது. சிந்தனை உள்ளே மௌன மொழி வடிவாகவும், வெளியே ஓசை வடிவாகவும் வெளிப்படுகிறது. மொழியின் இருப்பிடம் மனம். இது கண்ணுக்குப் புலப்படவில்லை என்றாலும் மனம் என்பது மறுக்கப்பட முடியாத ஒரு நிஜம். மனம் என்ற உருவமிலா அருவத்தைத் தாங்கி இருப்பது மூளை என்ற கண்ணுக்குப் புலப்படும் உருவம்; ஒரு தசைப் பிண்டம். ஆக, மொழி, சிந்தனை, மனம், மூளை ஆகியவை ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடையவை. மனத்தோடு இன்னொன்றும் மிகத் தொடர்புடையது. அது இதயம். உருவ இதயம் அன்று, அருவ இதயம். அது உணர்ச்சியோடு ஒன்றிணைந்தது. மூளை அறிவோடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்றிணைந்தது. 'மனஸ் உடையவனே மனுஷன்' என அழைக்கப் பட்டான். மனுஷன் என்பதே மனிதன் என்றும், மானுடன் என்றும் அழைக்கப்படலாயிற்று. ஆக, மனம் = மனிதன் என்றும், மனம் இல்லாதது மிருகம்/விலங்கு என்றும் கருதிக் கொள்ள வேண்டும்.

மனமே இன்ப நினைப்பிற்கும், துன்ப நினைப்பிற்கும் உற்பத்திக் கூடம். ஒரே நிகழ்ச்சியை இன்பமாகக் கொள்ளுவதும், துன்பமாகக் கொள்ளுவதும் நிகழ்ச்சியின் பாற்பட்டதல்ல. மனத்தின் பாற்பட்டதே. எனவேதான், திருவள்ளுவம், 'வினைத் திட்பம் என்பது ஒருவன் மனத் திட்பம்' என்றும், 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் தரும்' என்றும் எழுதுகிறார். எல்லாப் பொருளும் இல்லாமல் ஒருவனால் நன்கு உறங்க முடிகிறது. எல்லாப் பொருளும் இருந்தும் இன்னொருவனால் உறங்கவே முடிய வில்லை. இங்கே உறக்கத்துக்குக் காரணம், வெளியே உள்ள பொருள் அன்று. மனிதனின் அகத்தே உள்ள மனம்தான்.

மகா அலெக்சாண்டர், கிரேக்கத்தை விட்டுப் புறப்பட்டு இந்தியா வரை படையெடுத்த போது இடையில் பாரசீகத்தில் பாசறை கொண்டார். அப்போது அவருடைய உடல் நலன் பாதிக்கப் பட்டிருந்தது. கிரேக்கத்திலிருந்து அவருடன் வந்த மருத்துவர் மருந்துகள் கொடுத்துக் கொண்டிருந்தார். ஊடே தலைமைத் தளபதியிடமிருந்து மன்னர் அலெக்சாண்டருக்கு ஒரு குறிப்பு வந்தது. அக்குறிப்பில் அரசாங்க மருத்துவர் தன் மருந்தின் ஊடே நஞ்சு கலந்து அரசரைக் கொல்ல இருக்கிறார் என்று இருந்தது. அலெக்சாண்டர் மனதிற்குள் அதை வாசித்தார். வாசித்த போதும், வாசித்த பின்பும் எந்தவகைப் பதற்றமும், நடுக்கமும் இல்லாதிருந்தார். கொஞ்ச நேரத்தில் அக்குறிப்பில் குறிக்கப் பட்டிருந்த மருத்துவர் அலெக்சாண்டர் அறைக்கு வந்திருந்தார். மன்னருக்காக மருந்தைக் கலக்கிக் கொண்டிருந்தார். அப்போது மருந்தைக் கையில் வாங்கிக் கொண்டிருந்த மன்னர் மருத்துவரிடம் தனக்கு வந்திருந்த குறிப்பைச் சாதாரணமாகப் பதற்றம் எதுவும் இன்றிக் காட்டினார். அப்போது மருத்துவர் அக்குறிப்பை வாசித்துக் கொண்டிருந்தபோது மருத்துவர் கண்களையும், முகத்தையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த மன்னர் பின்னர் மருந்தைச் சில கணங்களில் கட கட என்று குடித்துவிட்டு அந்த நோய் நிலையிலும் சிரித்தார். மருத்துவர்க்கு வியப்பாக இருந்தது. என்னைப் பற்றிய இக்குறிப்பைப் பார்த்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிறகும் தயக்கம் எதுவும் இல்லாமல் மருந்தைக் குடித்து விட்டீர்களே என்று கேட்டபோது, அரிஸ்டாட்டிலின் மாணவரான என்னைக் கொலை செய்யும் எண்ணத்துக்குரிய அடையாளம் எதுவும் உங்கள் முகத்திலும் இல்லை; விழிகளிலும் இல்லை என்றார்.

இந்த நிகழ்ச்சி, சம்பவங்களாலும், அவை ஏற்படுத்தும் சலனங்களாலும் பாதிக்கப்படாத பக்குவ மனநிலையை எடுத்துக் காட்டுகிறது. மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் வெளியே இல்லை; உள்ளே தான் பொதிந்து கிடக்கின்றன. உள்ளே உள்ள உள்ளத்தைத் தன் கட்டுக்குள் வைத்து ஆளுகிற திறமை படைத்தவன் சலனப்படுவதும் இல்லை; சஞ்சலப் படுத்துவதும் இல்லை.

கணவனும், மனைவியும் வேலை பார்க்கும் குடும்பம் ஒன்று. உதவிக்குத் தாய் தந்தையர் உடன் இல்லை. ஓராண்டைக் கடந்த குழந்தை மட்டும் உடன் இருக்கிறது. குழந்தையைப் பார்த்துக் கொள்ளவும், வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொள்ளவும் வேலைக்காரி ஒருத்தி கூலிக்காக உடனிருக்கிறார். அலுவலகத்திற்குப் புறப்படவும், அந்தத் தாய் குழந்தையை இடப்பக்க இடுப்பில் அணைத்தபடி வலக்கையைக் கொண்டே சமையல் வேலைகளை முடித்துக் கொண்டு, இடையிடையே குழந்தையையும் கொஞ்சி, குழந்தையை வேலைக்காரியிடம் ஒப்படைத்து விட்டு அலுவலகம் நோக்கி ஓடுகிறாள், குழந்தை அழுகிறது; தாயும் அக்குழந்தையை இடுப்பில்தான் வைத்திருந்தாள்; வேலைக்காரியும் இடுப்பில்தான் வைத்திருந்தாள். ஆனால் ஒரு வேறுபாடு: வேலைக்காரி அக்குழந்தையைச் சுமந்து கொண்டிருந்தாள். ‘சனியனே இடுப்பு ஒடிந்து விடும் போலிருக்கிறதே, இறங்கு கீழே’ என்று அக்குழந்தை அழ அழ தரையில் இறக்கி விடுகிறாள். தாயின் இடுப்பில் இருந்த போதும், வேலைக்காரியின் இடுப்பில் இருந்தபோதும் குழந்தையின் எடை கூடவும் இல்லை; குறையவும் இல்லை, ஆனால் தாயோ குழந்தையை அணைக்கிறாள்; வேலைக்காரியோ குழந்தையைச் சுமக்கிறாள். அதுவும் முடியாமல் தவிக்கிறாள். இதற்குக் காரணம் என்ன? இடுப்பிலிருந்த குழந்தையின் எடை அல்ல. அந்தக் குழந்தையைத் தாங்கிய மனத்தின் எடைதான் காரணம்.

மனத்தின் அருமை பெருமையைக் கருதித்தான் நம் முன்னோர் மனத்துக்குப் பெரும் முதன்மையைக் கொடுத்தனர். மனம் நலமாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பது மானுட உயிர்களுக்கு ஆக்கத்தைத் தருவது; செல்வத்தைச் சேர்ப்பது என்று கருதினர். உள்ளம் உடைமை உடைமை...... என்பது வள்ளுவம். உடைமை என்றால் செல்வம் என்று பொருள். மனநலம் ஆக்கம் தரும் என்றால் செல்வம் தரும் என்று பொருள். செல்வம் என்பது கைமோதிரங்களும், வளையல்களும், கழுத்துச் சங்கிலிகளும், வண்ணப் பட்டாடைகளும் அல்ல. மாடி மனைகளும் அல்ல. மாடு, ஆடு, வயல், வரப்பு என்ற சொத்துகளும் அல்ல. பதவி பவிசுகளும் அல்ல; மாசு மறுவு அற்ற தூய மனம்தான் செல்வம்; செல்வாக்கு; அனைத்தும்.

உள்ளமே எல்லாம் என்ற உயர்ந்த கண்டறிவு காலப் போக்கில் மாறியது; மாற்றப்பட்டது. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றால் அடையப்பெறும் நுகர்வுகளே இன்பம் என்னும் கருத்து உருவாக்கப்பட்டது; நம்ப வைக்கப்பட்டது. கூர்ந்து பார்த்தால் இப்புலன் நுகர்வுகள் எல்லாம் ஒரு காலக்கட்டத்தில் அடங்கி விடுகின்றன அல்லது தம் நுகர்வுச் சக்தியை இழந்து விடுகின்றன. அப்போது இன்பம் தருவது எது? புலன்கள் சரியாக இயங்கும் போதும், மெய்யான இன்பத்தை மன அமைதியை ஐம்பொறிகள் வழங்கி விடுவதில்லை. இதற்குக் கண்கூடான காட்டு, அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஐம்புலன் நுகர்ச்சி உச்சம் பெற்ற நிலையிலும், மக்கள் மன அமைதி இழந்து தவிப்பதும் மனநோய் பெற்று அலமருவதும், மனநோய் மருத்துவமனைகளில் சேர்ந்து மீட்சி பெறத் துடிப்பதும் சரியான காட்சிகள். நம்மூரில் உள்ள செல்வந்தர்கள் கூடப் புலன் நுகர்ச்சிக்குரிய அனைத்து வாய்ப்புகள் இருந்தும் மன அமைதிக்குரிய பக்குவம் இல்லாமையால் அல்லல் படுகிறார்கள். மெத்தையை வாங்க முடிந்த போதும், தூக்கத்தை வாங்க முடியாமல் தவிக்கிறார்கள். இதுவே உண்மை நிலை என்றாலும், மன நலத்தை விட்டு விட்டுப் பண நலத்தை நோக்கி ஓடும் விட்டில் பூச்சிகளாக விளக்குகளைப் பழங்கள் என்று நம்பி ஓடி ஆடித்திரிகிறார்கள்; முடிவில் அழிகிறார்கள்.

ஐம்பொறி, புலன்களின் உள்ளே இன்பம் உறைந்திருக்க வில்லை என்பதற்கு ஒரு சான்று. கசப்பான பாகற்காய் சிலருக்குச் சுவையாக இருக்கின்றது; பலருக்குக் கசக்கிறது. வாடை மிகுதியுள்ள மீன் உணவு சிலருக்கு வாசனை உணவாகப் பிடிக்கிறது; பலருக்கு நாற்ற உணவாக வெறுக்கிறது. பன்றி ஐரோப்பியருக்கு மிகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிடித்தமான உணவு, நமக்கு அசுத்தமான ஒன்று. இப்படி இடத்திற்குத் தக மனிதத்திற்குத் தக ஒரே உணவுப்பொருள் சுவையில் வேறுபடுவானேன்? உணவுப் பொருளின் சுவை, கசப்போ, புளிப்போ ஒன்றுதான். அது நாக்குப் பழக்கத்திற்குத் தக ஒருவருக்குக் கசக்கிறது; இன்னொருவர்க்கு இனிக்கிறது. எனவே, பொருளின் உள்ளே சுவை இல்லை; பழக்கத்திற்கு உள்ளே பதிந்து கிடக்கிறது; இப்படித்தான் அழகு, அலங்காரம் ஆகியனவும்.

ஓஷோ ஒரு கதை சொல்கிறார். அப்பனும் மகனுமாக ஒரு குடும்பம். அப்பா மகனைக் கனிவோடும், கண்டிப்போடும் வளர்த்தார். பல நல்ல பண்புகளை மகனிடையே வளர்த்திருந்தார். காசு மேல் ஆசை கொள்ளக் கூடாது என்றும் அறிவுறுத்தி இருந்தார். ஒரு நாள் இருவரும் கோயிலுக்குப் போயிருந்தார்கள். உண்டியலில் போடுவதற்காக மகனிடம் இரண்டு நாணயங்களை அவர் கொடுத்தார். ஒன்று ஒரு ரூபாய் நாணயம், மற்றொன்று 10 காசு நாணயம். கோயிலுக்குச் செல்லும் போதும், கடவுளை வழிபட்டு வலம் வரும்போதும், மகன் நல்லவன், கடவுள் மேல் மிகுந்த பக்தி உடையவன் எனவே அவன் தானாகவே உண்டியலில் காசு போடுபவன் என்று எண்ணியிருந்தார். கோயிலின் உள்ளே இருந்து வெளியே புறப்படும்போது தலைவாயிலில் இருந்த உண்டியலில் மறவாமல் மகன் காசைப் போட்டான். அப்பா மகனைப் பார்த்துக் கேட்டார், எந்தக் காசைப் போட்டாய்? அவன் சொன்னான், பத்துக் காசைப் போட்டேன். ஒரு ரூபாய் நாணயத்தைப் போட வில்லையா என்று கலக்கத்துடன் கேட்டார். அதற்கு மகன் சொன்னான்: கடவுள் மகிழ்ச்சியுடன் கொடுக்கும் மனிதனை நேசிக்கிறார். எனவே, ஒரு ரூபாய் நாணயத்தைப் போடுவதை விட ஒரு பத்து காசைப் போடும் போது தான் மிகுந்த மகிழ்ச்சி. எனவே , பத்துக் காசை மட்டும் போட்டேன்.

இந்தக் கதை காட்டும் பாடம் என்ன? மகிழ்ச்சி நமக்கு வெளியே இல்லை. உள்ளே உள்ளது என்பதைத் தான்.

எனவே, மனிதன் எப்போதும் மலர்ச்சி இல்லாமல் கூம்பிக் கிடத்தல் கூடாது, மாறாக இரவும் பகலுமாக நிரம்பி வழிந்து, பொங்கி ஆர்ப்பரித்துக் கொண்டே இருக்கும் கடலைப் போல மனத்தால் நிரம்பி வழிந்து மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## வாழ்க்கை வாழ்வதற்காக; அழுவதற்காக அல்ல

மனம், நம் வீட்டுக் குத்துவிளக்கைப் போன்றது. அதனை நாம் பயன்படுத்தாமல் வைத்திருந்தால் நிறம் குன்றிக் கறுத்துவிடுகிறது. விளக்கு, கறுக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? தொடர்ந்து அதனைத் துலக்க வேண்டும்; துடைக்க வேண்டும். அழுக்குப் படியாத இடத்தில் வைத்துக் காக்கவும் வேணடும். அப்போதுதான் ஒளியுடன் துலங்கும். மனமும் அப்படிப்பட்டதுதான்; அதனைத் தொடர்ந்து துடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்; வெளியழுக்குப் படியாமல் காக்கவும் வேண்டும். மனத்தைத் தூய்மை உடையதாகக் காப்பது எப்படி? நல்ல நினைவுகளில் மனத்தைக் கழுவ வேண்டும். அல்லது நினைத்தல், பேசுதல், செய்தல் ஆகியன மனத்தைக் கறுப்பாக்கி விடும்.

மௌன தியானம், புனித நூல்களை ஓதுதல், நல்லவர்களிடம் பழகுதல், நல்ல நூல்களை வாசித்தல், பொழுதை நல்ல சூழலில் போக்குதல், கடமையில் இரண்டறக் கலத்தல் முதலாயின மனத்தை என்றும் ஒளிமயமாக வைத்திருக்கும்.

நாம் கை கழுவியே தீரவேண்டிய ஏழு அழுக்குகள்: அச்சம், பொறாமை, வெறுப்பு, பழிவாங்கத் துடித்தல், பேராசை, மூடநம்பிக்கை, கோபம்.

நல்ல உணர்வுகளும் கெடுதலான உணர்வுகளும் ஒரே சமயத்தில் இருக்க முடியாது. ஒன்று இருந்தால் இன்னொன்று விடை பெற்றுச் சென்றுவிடும். நல்ல உணர்வுகளுக்கு நம் மனத்தில் சிம்மாசனம் போட்டுக் கொடுத்து விடுங்கள். அப்புறம் நீங்கள்தான் இராசா! உங்களை யாரும் வெற்றி கொள்ள முடியாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இயல் மூன்று

# தமிழர் அரசியல்

www.tamilarangam.net

# விடுதலை அரசியல்

உலக மக்கள் வரலாற்றில் 20ஆம் நூற்றாண்டின் அடி நாள் வரலாறு புதுமையானது; பொல்லாங்கு உடையது. 1901இல் ஆசியக் கண்டம், ஆப்பிரிக்கக் கண்டம், வட அமெரிக்க, தென் அமெரிக்கக் கண்டங்கள், ஆஸ்திரேலியா கண்டம் ஆகியனவற்றுள் சில நாடுகளும், பகுதிகளும் நீங்கலாக எஞ்சியவை அடிமை நாடுகளாகவே அடிபணிந்து கிடந்தன. அவை அயல் அரசியல் ஆதிக்கத்தால் வாடி வதங்கின. மேற்கு ஐரோப்பாவில் உள்ள இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து, ஸ்பானிஷ், போர்ச்சுகீசு ஆகிய ஐந்து முன்னணி நாடுகள் ஏனைய கண்டத்தில் உள்ள நாடுகளைத் தம் காலனி ஆட்சிக்குள் கட்டிப் போட்டிருந்தன. மேற்கு ஐரோப்பிய காலனி ஆட்சிக்கு உட்படாத ஓரிரு துணிச்சல் மிக்க நாடுகளும் அன்று இருந்தன. குறிப்பாக, ஆசியக் கண்டத்தில் ஜப்பானும், தாய்லாந்தும் ஐரோப்பிய காலனி ஆதிக்கத்திற்குக் கட்டுப்படாதவை.

அடிமைப்பட்ட நாடுகள், முதல் உலகப் பெரும் போரையும், இரண்டாம் உலகப் பெரும் போரையும் ஒட்டி, அதாவது 1915 - 1945 ஆகிய ஆண்டுகளை ஒட்டி விடுதலை பெறத் தொடங்கின. உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகள், வெற்றி பெறா நாடுகளின் கீழ் இருந்த நாடுகளைப் பங்கு போட்டுக் கொண்டன. ஐரோப்பா நடுப் பாகத்தில் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நடந்த ஊடலும், மோதலும் அவர்கள் உலகில் எங்கெங்கு ஆட்சி செய்தார்களோ அந்தந்த இடங்களில் எதிரொலித்தன. இதற்குச் சரியான எடுத்துக்காட்டு, இந்தியப் பூபாகத்தில் குறு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாநிலமாக இருக்கிற புதுச்சேரி ஆகும். ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்குமாக அது கைமாறிக் கொண்டே இருந்தது. ஆளுகின்ற எஜமானன் மாறினானே தவிர, அடிமைப்பட்டு அடங்கிக் கிடந்த மக்கள் இனம் மாறவில்லை. அடிமைத்தனம் தொடர்ந்தது தொடர்கதையாக நீடித்தது.

இப்போக்கிற்கு எதிரிடையாகத் தங்கள் இனத்தைச் சார்ந்த, தங்கள் மொழியைப் பேசுகின்ற, தங்கள் பண்பாட்டிற்கு வேர் ஆதாரமாக விளங்குகிற ஆங்கிலேய அரசக் குடும்பம் தம்மை ஆண்டபோதிலும், தொலைவில் இருந்து கொண்டு 'இவர்கள் என்ன நம்மை ஆள வேண்டி இருக்கிறது' என்ற உண்மையான உணர்வு பீறிட்டுக் கிளர்ந்து, வளர்ந்து, வேர் விட்டு வெடித்தது. அதன் விளைவே, ஆங்கிலேயக் குடியேற்ற நாடான அமெரிக்கா, வாஷிங்டன் தலைமையில் இங்கிலாந்து அரசக் குடும்பப் பிணைப்பை விடுவித்துக் கொண்டது. இத்தகு நிகழ்வே ஆஸ்திரேலியா, நியூஸ்லாந்து, தென் ஆப்பிரிக்கா முதலாய இடங்களில் நிகழ்ந்தன. கனடாவில் உள்ள கீயூபக், பிரான்சு நாட்டோடு பிணைப்புக் கொண்டிருந்தாலும் இணைப்பை வைத்துக் கொள்ள வில்லை. ஆக, வெள்ளைக்காரர்கள் தங்கள் தாயாதியினர் தலைவர்களாக இருப்பதைக் கூட ஒப்புக் கொள்ள வில்லை. விடுதலை வேண்டினர்; போராடினர்; வென்றனர்; உரிமை மக்களாக வாழத் தொடங்கினர்.

இத்தகு விடுதலைக் காற்று அவர்களோடு தொடர்பற்ற ஐரோப்பிய வெள்ளைக்காரர்கள் ஆண்டபோதிலும் ஆசிய, ஆப்பிரிக்கக் கண்டங்களில் நெடும் காலம் வரை எழவில்லை. 20ஆம் நூற்றாண்டின் நடுப் பாதியில் லெனின் சோவியத்து எழுச்சியை ஒட்டி, உலகெங்கும் உரிமை விளக்கம் மெல்ல முணங்கத் தொடங்கியது. 1917இல் சார் அரசர்களை எதிர்த்து நடந்து வெற்றியும் பெற்ற ருஷ்யப் புரட்சி, ஏனைய நாடுகளிலும் விடுதலை நெருப்பை மூட்டிவிட்டது. அதன் விளைவாக, சீனா, இந்தியா முதலான நாடுகளில் விடுதலைப் போர் வேர் ஊன்றத் தொடங்கி விருட்சமாக வளர்ந்தது. அந்த விருட்சத்தின் விளைவே 1947இல் நாம் விடுதலை பெற்ற நிகழ்ச்சியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியர் வரலாற்றில், அதிலும் தமிழர் வரலாற்றில், இவ்விடுதலை நாள் நிகழ்ச்சி இவர்கள் வரலாற்றிலேயே நிகழ்ந்த மிகப் பெரிய திருப்புமுனைச் சம்பவமாகும். தமிழர்கள் தமக்குத் தாமே ஆளுகின்ற நிலையைப் பல நூறு ஆண்டுகளாக இழந்து இருந்தார்கள். அதனால் தம் மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் மேல் கொண்டிருக்க வேண்டிய நம்பிக்கையை இழந்து கிடந்தனர். வேறு மொழி, பண்பாடு, நாகரிகம் ஆகியவை உயர்ந்தவை என அறியாமையில் நம்பிக் கிடந்தனர். இதன் விளைவாக நம் மக்களின் நாடி நரம்பிலேயே அடிமைத்தனம் ஊறிப்போய் இருந்தது. அதனை அடிமைத்தனம் என்று அறியாது இருந்ததும், அதுவே பெருமை எனத் தவறாக நம்பி இருந்ததும் அடிமைத்தனத்தை விடப் பெரிய கொடுமைகள். ஆக, பல நூறு ஆண்டுகளாக வேறொரு ஆதிக்கத்தின் கீழ்க் கூனிக் குறுகி நடுங்கி நாணி அழிந்து கிடந்த மக்கள் இனம் விடுதலைக் காற்றை நுகரத் தொடங்கியது. எனவே, இந்நாள் மக்கள் வரலாற்றின் தனிப்பெரும் நாள் என்பதில் ஐயமில்லை.

ஆனால். கிடைத்த விடுதலையைத் தடைபடாமலும், பிழை படாமலும் முறையாக நுகர்ந்து போற்றும் தகுதியை இவர்கள் அந்நாளில் எய்த வில்லை; இந்நாளிலும் எய்தி இருக்கவில்லை, இவர்கள் எந்நாளும் எய்தவே மாட்டார்கள் என்று நல்லவர்கள் கலங்கும் நிலையும் தொடரத்தான் செய்கிறது. இவ்வினாக்களில் அவநம்பிக்கையின் தொனி இருந்தாலும் உண்மை இல்லாமல் இல்லை. சங்கிலிகளால் கைகளும், கால்களும் பிணைக்கப்பட்ட ஒருவன் விடுவிக்கப்பட்டபோது உணர்ச்சிமயமாகக் குதித்து, வாய் நிறைய உரத்துச் சப்தம் இட்டு, வயிறு முட்டச் சாப்பிட்டுப் பல்வேறு புதிய கேளிக்கைகளில் ஈடுபடுதல் போல ஒரு நிலைமை இருந்தது; இன்னும் இருக்கிறது; முற்றும் நீங்கிவிட வில்லை. கடமைகளை மேலும் செவ்வனே செய்வதற்கு மாறாக, உரிமைப் பேச்சிலேயே அழிகின்ற அறிகுறிகளும் தெரிகின்றன. கடமையை ஆற்றி உரிமையை அடையும் முதிர்ச்சி வந்துவிடுமேயானால் இம்மக்களை யாராலும் வெல்ல முடியாது. உலகிலேயே சிறந்த மக்களாக வருவதற்கு வாய்ப்பும், சிறந்த வல்லரசாக வளர்வதற்கு வாய்ப்பும் நிறைய இருக்கின்றன.

நாம் பெருமிதம் கொள்ள வேண்டிய ஒரு நிகழ்ச்சி உள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக ஜனநாயகத் தேர்தல் முறை விடுபடாமல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெற்றி பெற்று வருவதாகும். உலகில் விடுதலை பெற்ற நாடுகள் பலவற்றுள் இராணுவப் புரட்சி அடுத்து அடுத்து வெடித்துள்ளது. சர்வாதிகார ஆட்சி இடம் பற்றியுள்ளது. பெரும் பெரும் உள்நாட்டுக் கலவரங்கள் சில இடங்களில் மூண்டுள்ளன. உலகின் பிற பாகங்களில் நடக்கும் இந்த அவலநிலைகளை ஒப்பிடும்போது இந்தியா 1950 முதல் மக்களாட்சி முறையையே தழுவித் தேர்தலை நடத்தி, அரசை அமைத்து மக்களை ஆண்டு வருவது பெரும் வெற்றியாகும். அதுவும் உலகிலேயே இரண்டாவது நிலையில் 100 கோடி மக்களை எட்டிக் கொண்டிருக்கும் இந்நாட்டில் ஜனநாயகம் நிலை பெற்று இருப்பது நமக்கு மகிழ்ச்சியையும், பெருமையையும் நல்குவதாகும்.

இன்று நாம் நினைவில் இறுத்த வேண்டிய செய்திகளும் உள்ளன. இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு விடுதலை பெறுவது, ஒரு பெரிய நாட்டிற்கு விடுதலை தருவது என்பன எளிய, சிறிய நிகழ்ச்சிகள் அல்ல. 1947க்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கவோ, அதில் பங்கேற்கவோ வாய்ப்பைப் பெறாத இளம் தலைமுறையினர் விடுதலை பெறுவதற்குப் பின்னணியில் இருந்த தியாகங்களை மனத்தில் நினைவில் கொள்ள வேண்டும். விடுதலை வேள்வியில் வீழ்ந்து மடிந்த உயிர்கள் கணக்கில் அடங்கா. கொட்டப்பட்ட இரத்தமும் கொஞ்சம் அல்ல. எத்தனையோ பேர் தம்முடைய சுக வாழ்வை நாட்டிற்காகத் தியாகங்கள் புரிந்து உள்ளனர். இவர்களின் நாட்டு அர்ப்பணிப்பும் ஓரிரண்டு ஆண்டுகள் மட்டுமல்ல 1857 தொடங்கி 1947 வரை ஏறத்தாழ 90 ஆண்டுகள் நடந்தது. பல தலைமுறை மக்கள் அடுத்து அடுத்துப் போராட்டத்தில் குதித்துத் தடியடி காயம் பட்டுச் சிறை வாழ்வில் நொந்து வசதி வாய்ப்பை இழந்து தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளனர். அந்த முன்னோரின் தியாகமே நாம் இன்று வாழும் விடுதலை நாட்டு வாழ்வு ஆகும். எனவே, முன்னோரை நினைவுபடுத்துவதுடன் அவர்கள் எதற்காகப் பாடுபட்டார்களோ அந்த நாட்டிற்காகப் பாடுபட வேண்டியது நம்முடைய தனிப்பெரும் கடமையாகும். இக்கடமை நம் நாட்டில் உள்ள அனைத்துத் தள மக்களிடம் இருந்தும் எதிர்பார்க்கப்படுவது தவிர்க்க முடியாதது.

கடந்த 50 ஆண்டுகளில் மேற்கண்ட நினைவு போதிய அளவிற்கு நம்மிடையே இருந்ததற்கான சான்றுகள் குறைவாகவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளன. நம்மை நாமே சமமான சகோதரர்கள் என்பதை உணராமல் சாதி, மத, பேதங்களால் ஒருவரை ஒருவர் வெறுத்தும், விலக்கியும், அடித்தும், பிடித்தும் அழிந்து கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் ஒரே நாட்டுக் குடிமக்கள் என்ற உணர்வு மேலோங்கினால் அதுவே போதும்.

நம் அமைப்புகளில் பல்லாயிரம் கோடி மக்கள் முறையான வேலைவாய்ப்பு இல்லாமல் மூன்று வேளை உணவு இல்லாமல் அல்லல்படுகிறார்கள் என்பதை மறந்து நடக்கிறோம். பொல்லாங்கு மனிதர்கள் நம்மிடையே இருக்கிறார்கள். காந்தி பேசிய அகிம்சையும், சத்தியமும் வளர்வதற்குப் பதிலாக இம்சையும், பொய்ம்மையும் நாடெங்கும் காளான் போலத் தழைத்திருப்பதைக் காண்கிறோம். ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், உள்ளவர், இல்லாதவர் என்ற இடைவெளி ஆகியன நம் முன்னே இருக்கும் அறைகூவல்கள். இவற்றை நாம் நினைத்தால் வெற்றி கொள்ள முடியும். தேவை நினைப்பும், அதற்கேற்ற உழைப்பும் தான்.

நம் நாடு வளங்களில் குறைந்த நாடு அன்று. ஆனால், மனங்களில் வளம் குறைந்த ஏழை நாடாக உள்ளது. மனமது செவ்வையானால் வளமது தானே வளரும்; பெருகும். மலை வளமும், ஆற்று வளமும், நில வளமும், கனிமப் பொருள் வளமும் நம்மிடம் இருக்கின்றன. இவற்றைப் பயன் கொள்ள வேண்டும், கொண்ட பயனைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

நம் நாட்டை அடுத்துப் பெரிதாக வாட்டிவரும் கொடும் பூதம் கல்லாமையும், மூடநம்பிக்கையும் ஆகும். நம்மில் 40 கோடி பேருக்கு மேல் தொடக்க நிலையில் கூட எழுதப் படிக்கத் தெரியாதவர் இருந்து வருகிறார்கள். கல்லாமைக்கும், மூடநம்பிக்கைக்கும் மிக நெருக்கமான சொந்த பந்தம் உண்டு. கல்லாமை நீங்கினால் ஒழிய மூடநம்பிக்கையை நீக்க முடியாது. உடல் உரம் இருந்தும், உழைக்கும் திறம் இருந்தும், நம் மக்களில் சரிபாதியினர் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், மூடநம்பிக்கைகளில் ஈடுபட்டு உள்ளவர் களாகவும் இருப்பதால் இழப்புகள் ஏராளம். எனவே, நம் மக்கள் அனைவரும் பள்ளிக்குச் செல்லாமல் பிழைப்புக்குச் செல்லும் சின்ன வயது குழந்தைகளில் இருந்து படிக்க வாய்ப்பு இழந்து எளிய வேலையில் அல்லல்படும் முதியவர் வரை எல்லாரும் கற்கும் நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டுவரப்பட வேண்டும். இதனையே போர்க் காலத்தில் நெருக்கடி நிலைப் பிரகடனம் போல் மனத்தில் வரித்துக் கொண்டு நாம் செயல்பட வேண்டும்.

நம்மிடையே சிறு பணக்காரர்கள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை கொஞ்சம் பேர் இருக்கின்றனர். 100 கோடி மக்களில் ஒரு கோடிக்குக் குறைந்த மக்கள் அரசு ஊதியம் பெறும் அலுவலர்களாக உள்ளனர். வணிகத்தில் ஈடுபட்டோரும் கணிசமாக உள்ளனர். இவர்கள் அத்தனைப் பேருடைய தொகையும் இரண்டு கோடிக்கு மேல் போகாது. இவர்கள் பெற்றிருக்கும் வசதிகளில் ஒரு சதவீதம் கூடப் பெற முடியாமல் 98 கோடி மக்கள் திண்டாடுகின்றனர். மேலும் மேலும் இப்பெரும்பான்மை மக்களிடம் இருந்து சிறுபான்மை மக்கள் விலகி அன்னியப்பட்டு வருகின்றனர். இடைவெளி பெருகிக் கொண்டே போகிறது. வாடுவோர் மிகுதியாக உள்ளனர். வாடுவோரின் உழைப்பில் இருந்து வசதி பெறுவோர் சிறு பகுதி யாகவும் இருந்து வருகின்றனர். இந்தச் சமமின்மை நம்மிடையே விரைவில் தீர்க்கப்பட வேண்டும். அதற்கேற்ற அரசியல், பொருளாதார, சமுதாய, சமத்துவத் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

நம் நாட்டில் 80 விழுக்காட்டிற்கு மேற்பட்ட மக்கள் சிற்றூர்களிலேயே வாழுகின்றனர். அவர்கள் வேளாண்மையையே நம்பி வாழுகின்றனர். வேளாண்மைத் தொழில் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவும் நம்மிடையே நாளும் மதிப்பு குறைந்து வருகின்றது. இந்நிலையை மாற்றுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நம்முடைய வருங் காலத் திட்டங்கள் சிற்றூர்களை மேம்படுத்துவனவாகவும், உழைப்பை மதிக்கின்றனவாகவும் அமைய வேண்டும்.

மேலே சொன்ன அனைத்தையும் செய்யும் ஆற்றலை நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். நினைத்தவர்கள் செயல்படுவார்களே யானால் வெற்றியைத் தவிர வேறு விளைச்சல் இருக்க முடியாது. நாமும் வெற்றி பெறுவோம்; வெற்றி பெற வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூட்டற்ற சனநாயகம்

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக் கொண்டது என்பார்கள். சூடு போட்டுக் கொண்ட பூனையின் உடம்பில் கோடுகள் விழுந்தாலும் புலியைப் போல உறும முடியாமல் கத்துவது போல இந்தியர்கள் மேற்கு ஐரோப்பிய அமெரிக்க நாடுகளைப் பார்த்துத் தொடர்ந்து சூடு போட்டுக் கொண்டே வருகிறார்கள். அவர்கள் போட்டுக் கொண்ட / போட்டுக் கொண்டிருக்கும் அரசியல் அமைப்புச் சூடு, தாராள, தனியார், உலகமயமாக்கப் பொருளாதாரச் சூடு, பழக்கவழக்கப் பண்பாட்டுச் சூடு என நீண்டு கொண்டே போகிறது. இந்தியப் பாரம்பரியம் அரசியல்வாதிகள், படிக்காத மக்கள் நிலை, மக்களிடையே அடர்ந்து படர்ந்து இருக்கும் மூட நம்பிக்கை ஆகியவற்றைக் கணக்கில் எடுத்து, இந்திய மண்ணுக்கு ஏற்ற இந்திய அரசியல் அமைப்பைச் செய்து கொள்ளாமல் இங்கிலாந்தைப் பார்த்துப் போட்டுக் கொண்ட பெரிய சூட்டால் காயம்பட்டு ஆறாமல், அழுகி, நாள்தோறும் இந்தியத் தலைநகரிலும், நாடாளுமன்றத்திலும், மாநிலத் தலைநகரங்களிலும், சட்டமன்றங் களிலும், துன்பம் சூழ்ந்து கொண்டுள்ளது. கூட்டமாகச் சேர்ந்தால், சங்கமாக அமைத்தால் சூரியன் மேற்கே உதிக்கிறான் என்று கூட இந்தியச் சூழலில் நிலைநாட்டிவிடும் போக்கு யானைக்கால் போல நாளும் வீங்கி வருகிறது.

இந்தியாவிற்கு வந்து போன சிங்கப்பூர் நாட்டின் மகாத்மாவும், முன்னாள் பிரதம அமைச்சருமான லீகுவான்யூ, தம் நாட்டிற்குத்

www.tamilarangam.net



திரும்பிச் சென்றபோது இந்தியாவைப் பற்றிச் சொன்ன கருத்து இங்கே சுட்டிக் காட்டத் தக்கது.

இந்தியர்கள் எதற்கெடுத்தாலும் நாள்கணக்கில், மாதக் கணக்கில் பேசிக் கொண்டே இருப்பார்கள். எளிதில் முடிவெடுக்க மாட்டார்கள்.

ஒரு நாள் நாடாளுமன்றப் பேச்சு நடப்பதற்கு மக்கள் வரிப் பணத்தில் இருந்து 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது. பெரும் பான்மையினர் கருத்தை மதிப்பதுதான் ஜனநாயகத்தின் அடிநாதம், ஆனால், அதற்கு மறுதலையாகக் கூட்டம் கூட்டமாகக் கூப்பாடு போட்டால் எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்பதற்குச் சாட்சியாக நம் நாடாளுமன்றமும், பெரும்பான்மையான சட்ட மன்றங்களும் நடந்து வருகின்றன.

ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற சுமைகளுள் தலையாயது, வெள்ளைக்கார நிர்வாகச் சுமை. வெள்ளைக்காரர்கள் இருந்த இடத்தில் இன்று இந்தியர்கள் இருக்கிறார்கள், அவ்வளவுதான். ஆனால், வெள்ளைக்காரர் காலத்தை விடப் பல மடங்கு இலஞ்சமும், ஊழலும் நம் அரசு நிறுவனங்களில் கோலோச்சுகின்றன. உலகில் மிகுதியான இலஞ்சம் வாங்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதல் பத்து நாடுகளில் ஒன்றாக இருக்கிறது என்பதை நம் ஒலிம்பிக் வெற்றிகளில் ஒன்றாகக் கொள்ளலாம். இதில் வேடிக்கை என்னவென்றால், இலஞ்சத்தையும், ஊழலையும் உற்பத்திச் செய்து சுகபோகத்துடன் வாழும் அரசு அதிகாரவர்க்கம் 85 இலட்சம் பேரை மட்டுமே கொண்டது. எனினும், மாநில, மத்திய அரசுகளின் வருவாயில் பெரும் பகுதி 60 முதல் 85 சதவீதம் வரை சம்பளமாக இந்த ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. சம்பளம் இல்லாமல், கிம்பலமாக இவர்கள் வாங்குவது சிதம்பர இரகசியம் அல்ல. சம்பளம், கிம்பளம் ஆகியவற்றுடன் அரசாங்கம் அவ்வப்போது வழங்கும் ஊதிய உயர்வு, வீடு கட்டக் கடன், பொருள்கள் வாங்கக் கடன், விழாக் காலக் கடன், மருத்துவ வசதி, ஊர் சுற்றிப் பார்க்கப் பண உதவி முதலானவும் இவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றோடு கூடப் போனசு. போனசு என்பது உற்பத்தியோடும், உற்பத்தியில் இருந்து கிடைக்கும் இலாபத்தோடும் தொடர் புடையது. ஒரு நிறுவனம் பெறும் இலாபத்தை ஊழியர்களுக்குப் பகிர்ந்து அளிப்பதே போனசு என்பதன் பொருளாகும். ஆனால்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உற்பத்தியோடோ அல்லது உற்பத்தி இலாபத்தோடோ எவ்வித் தொடர்பே இல்லாதவர்கள் பெறுகிறார்கள். இந்தப் பொருளாதாரச் சுரண்டல் நிகழ்வதற்கான ஜனநாயகப் பின்னணியினைக் கருதுதல் வேண்டும்.

இந்தியாவில் உழைப்போடும், உற்பத்தியோடும் தொடர்புடைய நெல், கோதுமை, கரும்பு முதலானவற்றை உற்பத்திச் செய்யும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் மக்களே மிகுதியானவர்கள். இவர்கள் வேலை செய்யும் நாட்களுக்கு மட்டுமே கூலி பெறுகிறார்கள். அனைவருக்கும் சோறு தரும் இந்த மக்களுக்கு எந்தவித விடுமுறையும் கிடையாது. வேலைக்குச் சென்றால் மட்டுமே கூலி. எவ்வளவு உற்பத்தியைப் பெருக்கினாலும் இவர்களுக்குப் போனசு கிடையாது. எல்லாருக்கும் சோறு போடுகிறவர்கள் இவர்கள்தான். ஆனால், இந்தியா விடுதலை பெற்ற பிறகு நேர் உற்பத்தியில் ஈடுபடாத ஊதிய வர்க்கம் நாளுக்கு நாள் வசதியை மேலும் மேலும் பெற்றுக் கொண்டே இருக்கிறது. நிறுவன (Organised Sector) அமைப்புகளுக்குள் இவர்கள் வந்துவிடுவதால் சங்கம் அமைத்து நிர்வாகிகளை அச்சுறுத்திப் பலன் பெற முடிகிறது. விடுதலை பெற்ற பிறகு உழைப்பின்மைக்குக் கூலியும், சலுகையும் இது போன்ற அமைப்பினருக்கு மேலும் கூடுதலாகக் கிடைத்து வருகின்றன. பிரிட்டனில் ஒரு நாள் கூலி, ஒரு மாதக் கூலி, ஓர் ஆண்டுக் கூலி, ஓய்வு பெறும் வரை சம்பளம், பிற சலுகைகள் என்பதை மாற்றி மணிக்கு இவ்வளவு எனும் முறையைக் கொண்டு வந்து விட்டார்கள். இம்முறை இப்போது பல நாடுகளில் வந்துவிட்டது.

நோபல் பரிசு பெற்ற திரு. அமர்த்தியா சென் நாள்தோறும் உற்பத்தியாகும் நூறு கோடி வாழைப்பழம் நூறு கோடி நபருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். ஆனால், நம் பொருளாதார அமைப்பு தலைகீழாக இயங்கி வருகிறது. 10 சதவீத மக்கள்தொகையினர் மட்டும் நாட்டு வருவாயின் 90 சதவீதத்தை விழுங்கி அனுபவித்து வருகிறார்கள். 90 சதவீத மக்கள் தொகையினர் 10 சதவீதத்தையே பெற்று அல்லாடுகின்றனர்.

தாராளம். தனியார், உலக மயமாக்கலின் விளைவால் வந்த புதுவகை உணவு வகைகள், குடிபானங்கள், உடைகள், அலங்காரப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருள்கள் முதலானவை அனைத்தும் 10 சதவீத மக்களுக்குச் சென்று சேருகின்றன. 90 சதவீத மக்கள் அமைப்புக்கு வர இயலாமல் துண்டு துண்டுகளாகக் கிடக்கின்றார்கள், கட்டுப்பாடற்ற ஜனநாயகத்தின் விளைவு, அரசியலைக் கட்சி அரசியலாக்கிற்று. முன்பு (1950), 21 வயதுக்கு உட்பட்ட ஆண் பெண் அனைவரும் வாக்களிப்புக்கு உள்ளாயினர். இராசீவ் காந்தி ஆண்ட காலத்தில் இவ்வயது 18 ஆகக் குறைக்கப் பட்டது. வயதை மட்டுமே தகுதியாகக் கொண்டு ஓட்டுரிமை வழங்கப்பட்டதால் பல எதிர் விளைவுகள் இந்தியாவில் நிகழ்ந்துள்ளன / நிகழ்ந்து வருகின்றன. ஓட்டுகளைக் கணிசமாகக் கட்டுப்பாடாகக் கொண்டுள்ள மத அமைப்புகளும், சாதிய அமைப்புகளும் ஓட்டு வங்கி முறையால் முதன்மை பெறத் தொடங்கின. எனவே, கணிசமான ஓட்டுகளை யுடைய சாதி மக்களும், மத மக்களும் எம்.எல்.ஏ., எம்.பி., அமைச்சர், அதிகாரப் பதவிகளைப் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இதன் விளைவாக அரசியல் சாசனத்தில் உரத்துப் பேசப் பெற்ற சமத்துவத்திற்கு மறுதலையாகச் சாதிய அமைப்புகளும், மத அமைப்புகளும் கட்டுப்பாட்டுடன் வளரத் தொடங்கின. கணிசமான எண்ணிக்கையில் இல்லாத சவரத் தொழிலாளி, வண்ணான் முதலான மிகச் சிறுபான்மைச் சாதி மக்கள் ஓரம் கட்டப்பட்டார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, கணிசமான தொகையுடைய சாதியினர் அனைவரும் தமிழ்நாட்டு அரசியல் அமைப்பிற்கு அறைகூவல் விடும் அளவிற்கு வளர்ந்துள்ளார்கள். பீகார், கர்நாடகம், ஆந்திரம், உத்திரப் பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களின் அரசைத் தீர்மானிப்பது சாதிய அமைப்புகளே. பஞ்சாப், காஷ்மீர் முதலான இடங்களில் மதச் சார்பும், மாநில அரசாட்சியைத் தீர்மானிக்கிறது.

கி.பி. 1215 சூன் 15இல் இங்கிலாந்து அரசர், ஜார்ஜ் என்பவரிடம் மேக்னகர்ட்டா ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் பெரும் போராட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்து மக்கள் சுதந்திர உரிமையைப் பெற்றார்கள். வாக்குரிமையையும் பெற்றார்கள். ஆனால், இந்தியர்கள் பெற்ற வாக்குரிமை, போராட்டத்தால் பெற்றது அல்ல. எனவே, மக்களுக்கு வாக்கின் அருமையும் தெரியவில்லை. எனவே, பொறுப்புணர்வும் இல்லை. கூட்டமாகச் சேர்ந்து கூப்பாடு போட்டால் எதனையும் பெற முடியும் என்ற நிலை வந்துவிட்டதால், ஒவ்வொன்றிற்கும் கூட்டம் சேர்ப்பது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எளிதாகிவிட்டது. கொள்கை அடிப்படையில், கட்சி அடிப்படையில் கூட்டம் சேர்ப்பதைவிடச் சாதி அடிப்படையில், மத அடிப்படையில் கூட்டம் சேர்ப்பது தன்னலவாதிகளுக்கு எளிதாக இருக்கிறது. எனவே, எதையும் செய்யலாம் எனத் தொடங்கி, எதையும் செய்ய முடியும் என்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள். பொது வாழ்வில் தூய்மை இன்மைக்கு இது ஒரு பெரும் காரணம்.

ஜனநாயகம் அளித்த உரிமைகளை இந்தியர்கள் முழுமையாகத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு முறையான ஊழியம் பெறும் அரசு, அரசு அலுவலகம், வங்கி, கல்வி நிறுவனம், இன்சுரன்சு, இரயில்வே, அஞ்சல், தொலைக்காட்சி முதலான வற்றில் பணியாற்றுவோர் ஓயாது ஊதிய உயர்விற்காக, கூடுதல் சலுகைகளுக்காகத் தெருவுக்கே வந்துவிடுவது சான்று. அவர்களது தெரு வருகை கூட்டங்களாகவும், ஊர்வலங்களாகவும், தர்ணாக் களாகவும், பேரணிகளாகவும், மாநாடுகளாகவும் நம் நாட்டை அன்றாடம் அலைக்கழித்து வருகின்றன. இவர்கள் தங்களோடு தொடர்பற்ற பொதுமக்களைப் பொருட்படுத்துவதே இல்லை. இவர்கள் நினைத்தால் கடைகளை மூட வேண்டும், இவர்கள் நினைத்தால் வாகனங்களை நிறுத்த வேண்டும், இவர்கள் நினைத்தால் மருத்துவமனைகளை மூட வேண்டும். தமக்குச் சோறு போடுகின்ற பெரும்பான்மைப் பொதுமக்களின், அன்றாடக் கூலிகளின் துன்பத்தை இவர்கள் சிறிது கூடக் கருதுவது இல்லை. உரிமைப் பேச்சால், கடமை உணர்வை மறந்த இம்மக்களால் இந்திய நாடு தடுமாறிக் கொண்டிருக்கிறது.

ஓட்டு நோக்கிய கட்சி, தேர்தல், அரசு என்ற அமைப்பு வந்துவிட்டதால் ஆளுகின்ற பொறுப்பிற்கு வரும் சாதி மக்களும் தாம் சார்ந்த கட்சிகள் ஓட்டுப் போட்ட மக்களுக்கு நன்மை செய்யத் துடிக்கின்றன. அதுவும், குறிப்பாகத் தத்தம் சாதி, மதம் சார்ந்த மக்களுக்கு உதவி செய்ய மிகுந்த அக்கறை காட்டுகின்றன. இதனால் நிகழும் அமர்த்தங்கள், பதவிகள், பதவி உயர்வுகள் முதலானவை எல்லை இல்லாதவை. அன்றியும், ஓட்டு அளிக்கும் மக்களுக்குச் சலுகைகள் செய்கின்றன. உணவுப் பொருள்கள், மின்சாரம், உடை, வீடு முதலானவற்றை வழங்குவதில் சலுகைகளைக் காட்டுதல், குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்தல் ஆகியன.

www.tamilarangam.net



சோவியத்து ஒன்றியம் 1991இல் வீழ்ச்சி பெற்றதற்குப் பெரும் காரணம், இவ்வாறு கொடுக்கப்பட்ட சலுகைகள்தான் (Subsidies). ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வேலை செய்யும் நேரத்தைவிட, உழைக்கும் நேரத்தை விடச் சோவியத்து நாட்டில் உழைக்கும் நேரம் குறைவாகவும், குறைவாக உழைக்கும் அதிகார வர்க்கம் பெறும் வசதி கூடுதலாகவும் இருந்தது வீழ்ச்சிக்கு இன்னொரு காரணம். நம் நாட்டில் 10.00 மணியில் இருந்து 5.00 மணி வரை மேசைக் கோப்புகளைப் பார்ப்போர் உழைக்கும் நேரம் குறைவாகும். ஆனால், அவர் பெரும் சராசரி நாள் சம்பளம் ரூபாய் 100 இல் இருந்து 500 வரை அமைகிறது. ஆண்டில் கிட்டத்தட்ட 120 நாட்களுக்கு மேற்பட்ட விடுமுறையைச் சம்பளத்தை வாங்கிக் கொண்டே அனுபவித்து வருகிறார். ஆனால், உழைக்கும் தொழிலாளியோ, விவசாயக் கூலியோ உழைக்கும் நேரம் மிகுதி, வாங்கும் சம்பளம் நாள் ஒன்றிற்குச் சராசரி ரூபாய் 30இல் இருந்து 50 வரை மட்டுமே. விடுமுறை நாட்களில் அவருக்குச் சம்பளமும் இல்லை.

விடுதலைக்குப் பிறகு நம் நாட்டினுடைய போக்கு உண்மையான உழைப்பை நோக்கி நகர்ந்து இருக்க வேண்டும். ஆனால், நகரவில்லை. தாராளம், தனியார், உலக மயமாதலின் இன்னொரு விளைவு, வேலைவாய்ப்புகள் குறைந்து கொண்டே போவதாகும். எந்திர மயமாதல் அதிகமாவதால் வேலைவாய்ப்புகள் குறைகின்றன. முன்பே மிகுதியான மக்கள் தொகையுடைய இந்திய நாடு, வேலை இல்லாத மக்களைக் கோடிக் கணக்கில் பெற்றிருக்கிறது. ஏறத்தாழ 4 கோடி பேர் வேலை கேட்டுப் பதிவு செய்திருக்கிறார்கள். வேலை கேட்போர் எண்ணிக்கை 1986இல் 3.01 சதமாக இருந்தது. இது 1998இல் 4.02 சதமாக உயர்ந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 60 இலட்சம் புதியவர்கள் தங்களை வேலை கேட்டுப் பதிவு செய்து கொள்கிறார்கள். ஆனால், வேலை வாய்ப்புகள் பற்றிய அறிவிப்புகள் 2.6 இலட்சம் பேருக்குத்தான் கிடைக்கிறது. 1986 ஆம் ஆண்டில் இருந்து 1997 ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் வேலை நியமனங்களின் எண்ணிக்கை 37 சதவீதத்தில் இருந்த 22 சதவீதமாக வீழ்ச்சி அடைந்து இருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேர்தல்: சில திருத்தங்கள்

சிந்துபாது, தன் மனைவி மக்களைப் பிரிந்து சம்பாதிப்பதற் காகப் பாய்மரக் கப்பலில் பயணம் புறப்பட்டான். பெரும்புயல் அடித்தது. கப்பல் கவிழ்ந்தது. அவனோ, உடைந்த மரத்துண்டைப் பற்றி ஒரு தீவின் கரையில் ஒதுங்கினான். கோரப் பசி. மெல்ல நடந்து காட்டுக்குள் தள்ளாடி நடந்தான். மரத்தில் படர்ந்து செழித்துக் கிடந்த திராட்சைக் கொடிகள்; கொடி நிறையக் கொத்துக் கொத்தாகப் பழங்கள். எட்டிப் பறிக்க முடியவில்லை. பக்கத்தில் மனிதப் புலம்பல் ஒன்று கேட்டது. புலம்பியவன் ஒரு கிழவன்; எழுந்து நடமாட முடியாமல் தரையில் விழுந்து கிடந்தான். பசியால் துடித்துக் கொண்டிருந்தான். சைகை செய்து சிந்துபாதுவை அருகில் அழைத்தான். தன்னைத் தோளில் தூக்கி உயர்த்தினால், எட்டாத திராட்சைக் கொடியை எட்டிப் பிடித்துப் பழம் பறிப்பேன்; இருவரும் பசியாறலாம் என்றான். சிந்துபாதுவும் அப்படியே செய்தான். தோளில் ஏறி அமர்ந்து, தன் கால்களால், சிந்துபாதுவின் கழுத்தை இறுகப் பற்றிக் கொண்ட கிழவன், பழங்களைக் கைநிறையப் பறித்து வாய்நிறையத் தின்று கொண்டே இருந்தான். பசித்த சிந்துபாதுவுக்கும் தரவில்லை; தர மறுத்தான். சுமையாலும், பசியாலும் வாடிய சிந்துபாது, மயங்கிக் கீழே விழுந்தான். ஆனால், கிழவனோ, சிந்துபாதுவின் கழுத்திலிருந்து கால்களை விடுவிக்க வில்லை. கையில் பற்றிய பழங்களைத் தரையில் சாய்ந்தபடி ஒவ்வொன்றாக ருசித்துத் தின்று கொண்டிருந்தான்.

www.tamilarangam.net



சிந்துபாது கதையில் வரும் திராட்சைப் பழத் துரோகக் கிழவனைப் போல இந்தியச் சராசரி ஏழைக் குடிமக்களின் தோள்களின் மேல் இந்தியக் கழுத்தை இறுக்கிப் பின்னிப் பற்றிக் கொண்டிருப்பவை நம் சட்டமன்ற, நாடாளுமன்ற நடைமுறையும், நீதிமன்ற நடைமுறையும், நிருவாக நடைமுறையும், அவற்றைச் சுற்றி மண்டியிருக்கும் ஊழலும், காலதாமதமும் ஆகும். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இம்மூன்றும் புற்றுகளாக வளர்ந்து நம் ஜனநாயக மேனியை உருக்குலைத்து வருகின்றன. இம்மூன்றில் முன்னிற்பது சட்டமன்ற, நாடாளுமன்ற அமைப்பாகும். இதுவே ஏனைய இரண்டையும் அதட்டி அடக்குகிறது. இவற்றின் பின்னணியில் இருப்பது இயக்குபவர் அரசியல்வாதி. அவரை அலங்கோலம் ஆக்கியவை, நாம் பின்பற்றி வரும் கட்சி அரசியலும், தேர்தல் முறையுமே ஆகும்.

நம் தேர்தல் முறையில் என்ன குறை என வினவத் தோன்றும். அத்திப் பழத்தைப் பிட்டால் அத்தனையும் சொத்தை. குறைகளின் உற்பத்திக் கூடமே அதுதான். பெரும்பான்மை மக்கள் அளிக்கும் வாக்கு எண்ணிக்கையைக் கொண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் கட்சி எம்.எல்.ஏ., எம்.பிக்களைக் கொண்ட பெரும் பான்மைக் கட்சியால் ஆளப்படுவது நம் ஜனநாயக நடைமுறை என்று நாம் நம்பி வருகிறோம். படு இருட்டில் பாம்பைத் தடவிக் கொண்டு பச்சை வாழைத் தண்டு என்று நம்பும் பாமரனைப் போல.

மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினரே வாக்களிக்கின்றனர், 33 சதவீதம்; இந்த 33 சதவீதத்தில் கால்பங்கு 8.2 சதவீதத்திற்குச் சற்றுக் கூடுதலாக வாக்கு பெறுபவரே ஆளுகிறார். அப்படி என்றால் 10 முதல் 16 சதவீதத்தினரே 100 சதத்தினரை ஆண்டு வருகின்றனர். இது கடந்த 11 தேர்தல்களில் இருந்து கிடைக்கும் புள்ளிவிபர முடிவு. நேரு இந்தியாவை மிகக் கூடுதலாக 6130 நாள்கள் பிரதமராக இருந்து, ஆண்ட காலத்திலும் நம் ஜனநாயகப் பெரும்பான்மை கணக்கு இப்படித்தான் உள்ளது. கடந்த 1998 தேர்தலை எடுத்துக் கொள்வோம்.

| | |
|---|---|
| மொத்த மக்கள் தொகையோ | 95 கோடி |
| வாக்களித்தோர் தொகை | 37.2 கோடிதான், அதிலும் |
| செல்லாத வாக்குகள் | 68.69 இலட்சம். |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| கட்சி | வெற்றி எம்.பிக்கள் | வாக்குகள் (கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| பா.ஜ.க | 179 | 9.26 | 25.38 |
| காங்கிரஸ் | 141 | 9.39 | 25.72 |
| கம்யூனிஸ்ட்(மா) | 32 | 1.90 | 5.21 |
| எஸ்.பி | 20 | 1.08 | 4.93 |
| சமதா | 12 | 0.64 | 1.77 |
| கம்யூனிஸ்ட் (வ) | 9 | 0.63 | 1.74 |
| ஜனதாதளம் | 6 | 1.16 | 3.02 |
| பி.எஸ்.பி | 5 | 1.07 | 4.66 |

1988க்கு முன்பு நடந்த தேர்தல்களிலும், பெரும்பான்மை வாக்குகள் என்ற ஜனநாயக அடிப்படை வாக்களித்தோரில் 50 சதவீதத்துக்கு மேல் பல முறை தவிர போனதே இல்லை. இந்தக் கணக்கும் மொத்த மக்கள் தொகையில் பொய்யாகிறது.

நம் தேர்தலில் இன்னொரு வேடிக்கை, வரம்பு கடந்த செல்லாத வாக்குகள். 1998 தேர்தலில் 69 தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் மிகுதியாகப் பெற்ற வாக்கு எண்ணிக்கையை விட அங்கு விழுந்த செல்லாத வாக்குகள் கூடுதலாகும். தமிழ்நாட்டில், 274 வாக்கு கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்ற திருப்பத்தூர் தொகுதியில் செல்லாத வாக்குகள் 25,250 ஆகும்.

உ.பி.யில் பதினொரு தொகுதிகளிலும், மகாராட்டிரத்தில் எட்டுத் தொகுதிகளிலும், தமிழ்நாட்டில் ஏழு தொகுதிகளிலும், ஆந்திரத்தில் ஆறு தொகுதிகளிலும், கர்நாடகத்தில் மூன்று தொகுதிகளிலும், கேரளத்தில் இரண்டு தொகுதிகளிலும் செல்லாத வாக்குகளின் எண்ணிக்கை வெற்றி பெற்ற வேட்பாளர் அதிகம் பெற்ற வாக்குகளை விட மிகுதியாகும்.

ஆக, நம் தேர்தல் முறையில் மிகப் பெரிய குறைபாடுகள் ஓட்டைகள் உள்ளன. இவை அடைக்கப்பட்டு நீக்கப் பட்டாலன்றி நம் ஜனநாயகம் ஒரு வேட நாடகமாகத்தான் இருக்க முடியும். என்ன செய்ய வேண்டும் என்பதை எண்ணுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1. வாக்காளப் பதிவு என்பது பல நாடுகளில் அடையாள அட்டையில் தொடங்குகிறது. குடிமக்களின் நிழற்படம், கையொப்பம், முகவரி, அதிகாரிகளின் கையொப்பம் ஆகியன இதனுள் அடங்கும். இவ்வட்டை பாஸ்போர்ட் போல மிக முதன்மை வாய்ந்தது. வளர்ந்த நாடுகளில் மட்டும் அல்லாமல், வளரும் நாடுகளில் இது சர்வசாதாரணம். சர்வரோக நிவாரணியும் கூட. எல்லா இடத்திலும் அஞ்சலகம் முதல் அலுவலகம் வரை இது பயன்படும். ஐம்பது ஆண்டுகளைக் கடந்தும் நாம் நடைமுறைப்படுத்தத் தயங்குவதற்குக் கள்ள ஓட்டை நீட்டிக்க விரும்பும் அரசியல்வாதியின் ஆசை காரணமாக இருக்க முடியும். அடையாள அட்டை இருந்தால் பொய் ஓட்டுப் போடவே முடியாது. தேர்தல் கால வாக்காளப் பதிவு என்பது மிக எளிதாக இருக்கும் நேர்மையாகவும் நடக்கும்.

2. வாக்களிப்பது கட்டாயம் ஆக்கப்பட வேண்டும். அன்றியும் வாக்களிப்புக் கூடத்திற்குப் பதிலாக, வாக்குச் சேகரிப்பு வண்டிகள் தெருமுனைதோறும் நின்று வாக்குகள் சேகரித்துக் கொள்ள வேண்டும். தற்போது சிற்றூர் தோறும் செல்லும் பேருந்துகளை உரிய காவலர்களுடன் இப்பணிக்காக ஒரு நாள் அமர்த்திக் கொள்ளலாம். ஏனைய சிறு பேருந்துகளையும் பயன்படுத்தலாம். மெய்யான வாக்காளர்கள் அனைவரும் வாக்கிடும்போது பொய்ம்மை வெற்றி பெற முடியாது. நம் ஜனநாயகத்தின் முகமே மாறும். புதிய புன்னகை புரியும்.

3. தேர்தலில், முடிந்தால் எந்த வகை இட ஒதுக்கீடும் இருத்தல் ஆகாது. அப்படித் தவிர்க்க முடியவில்லையெனில், எந்தச் சாதியார், மதத்தார் ஒரு பகுதியில் மிகுதியாக இருக்கிறாரோ, அந்தப் பகுதியில் அந்தந்தச் சாதியாரோ, மதத்தாரோ நிற்க ஒப்புதல் அளிக்கக் கூடாது. கடந்த ஐம்பது ஆண்டுகளில் சாதி மதவெறி வளர்ச்சிக்குத் தேர்தல் நாற்றங்காலாக இருப்பது அப்போதுதான் ஒழியும். நல்லவராக இருந்தால் எங்கு நின்றாலும் வெற்றி பெறுவார்; பெற வேண்டும்.

4. விகிதாச்சாரப் பிரதிநித்துவ முறை கொண்டு வரப்பட வேண்டும். இம்முறையில் கட்சியின் பெயர் மட்டுமே அறிவிக்கப்படும். இந்தத் தொகுதிக்கு இந்த ஆள் என்ற சாதி, மத, கட்சி அடிப்படையும், தனி மனித வழிபாடும் ஒழிய வழி பிறக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறிப்பிட்ட சதவீதத்திற்குக் கீழ் வாக்கு வாங்கும் கட்சி ஆளுக்கொரு கட்சி எனும் தேர்தல் காலண்டர்கள் தோன்றாமல் போகும். இம்முறை பிரஞ்சு பேசப்படும் பிரான்சு உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் சிறப்பாகச் செயல்படுகின்றது.

5. தற்போது, மாநில முதல்வரும், தில்லிப் பிரதமரும் தேர்ந் தெடுக்கப்பெறும் மறைமுக முறை உடனடியாக நீக்கப்பட்டு, மக்களே நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கும் முறை வந்தாக வேண்டும். இப்போது, எம்.எல்.ஏக்கள் கட்சி அடிப்படையில், தம் மாநில முதல்வரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எம்.பிக்கள், நாட்டுப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இம்முறையில் பல கேடுகள் வருகின்றன என்பது நம் கடந்த காலப் படிப்பினை. தேர்ந்தெடுக்கப் பெற்ற மாநில முதல்வரை, நடுவணரசு ஒரே நொடியில் நீக்கி விடுகிறது. 102 தடவை, இப்படி முதல்வர், பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மாநில அரசையும், மைய அரசையும், எம்.எல்.ஏக்களும், எம்.பிக்களும் ஆட்சிக் காலம் முழுதும் ஆட்டிப் படைக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையைத் தன் கைக்குள்ளேயே வைத்திருக்கக் குதிரை வணிகம் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. மக்களுக்கோ துன்பத்துக்கு மேல் துன்பம். நட்டத்திற்கு மேல் நட்டம். அடிக்கடித் தேர்தல் செலவு. இலஞ்ச சாம்ராஜ்யம் ஒழிய வேண்டும் என்றால், மாநகராட்சி மேயரை, மக்களே நேர்முகமாகத் தேர்ந்தெடுப்பது போல, மாநில முதல்வரையும், பிரதமரையும் மக்களே நேரே தேர்ந் தெடுக்கும் வண்ணம் தேர்தல் சட்டம் திருத்தப்பட வேண்டும். இம்முறை அறிமுகமானால், வட இந்தியரே வாய்ப்பைப் பெறுவர் என்று எண்ணுவது பிழை. சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்குச் சுழற்சி முறை பின்பற்றப்படுதல் போல, பிரதமர் பதவிக்கும் சுழற்சி முறையை மண்டல வாரியாகக் கொண்டு வந்து பின்பற்றலாம். ஒரு பிரதமர், நான்கு மண்டலத்தைச் சார்ந்தவர்கள் துணைப் பிரதமர்களாக ஆக்கப் படலாம். இம்மாற்று முறை, மரபாக்கப்படாமல், அரசியல் சாசனத்திலேயே இடம் பெறச் செய்துவிட வேண்டும்.

இங்கிலாந்து முறை, அமெரிக்க முறை, பிரான்சு முறை, இத்தாலி முறை, ஜெர்மனி முறை என இறக்குமதிக் கடன் முறைகளை விட்டுவிட்டு, இந்திய முறை என்ற சுதேசி முறையை நாம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிமுகப்படுத்த வேண்டும். ஒரு மொழி, ஒரு பண்பாடு, ஓரின மக்களுக்குரிய அயல்நாட்டுத் தேர்தல் முறை பன்மொழி பல பண்பாடு, பல்வேறு இனமக்கள் வாழும் மிகப் பெரும் ஒரே ஜனநாயக நாடான இந்தியாவிற்குப் பொருந்தி வராது. நம்முடைய கடந்த காலப் படிப்பினைகளை உள்வாங்கி, நமக்கேற்ற நாடாளுமன்ற முறையை அமைத்துக் கொள்ளுவதே நல்லது.

அறிஞரும், முன்னாள் அமைச்சருமான கரண்சிங், சி. சுப்பிரமணியம், ஐ.கே. குஜ்ரால் முதலான பலர், பிரதமர் தேர்ந்தெடுப்பு முறை முற்றுமாக மாற்றப்பட வேண்டும் என்று எழுதியும் பேசியும் வருகின்றனர். மாநில அரசுக் கவிழ்ப்பும், பிரதமர் கவிழ்ப்பும் ஏழை நாட்டார் தாள முடியாத் தேர்தல் செலவும், அடிக்கடி கோடிக்கணக்கான ரூபாய்க்கு விலைபோகும் எம்.எல்.ஏ., எம்.பிக்களின் குதிரை வாணிபமும், இந்தியாவைப் பற்றி உலக நாடுகளில் பெருகிவரும் அவமானமும், ஏழ்மை, வேலையின்மை, படிப்பின்மை முதலான அடிப்படைத் தேவைகளில் கவனம் செலுத்தாமையும், தம் பதவியைப் பாதுகாப்பதிலேயே நாளும் மடிந்து கொண்டிருக்கும் பொல்லாமையும் நிர்வாகத் தேக்கமும் நீங்க ஒரே வழி தேர்தல் சீர்திருத்தந்தான். அறியாமல் இருப்பது குறை. அறிந்த பின்பும் குறையைக் களையாமல் இருப்பது குற்றம்; மன்னிக்க முடியாத குற்றம்.

www.tamilarangam.net

# அதிபர் ஆட்சி

நம் தலையெழுத்தை அ முதல் ஔ வரை அரசியல்வாதிகளிடம் அள்ளிக் கொடுத்து விட்டோம். அரைகுறையான நம் அரசியல் சாசன அமைப்பாலும் செயல்பாட்டாலும் நாம் அலமருகிறோம். அரசியல்வாதிகளின் உருவாக்கமே சாசனம் என அமைந்து விட்டமையால், அரசியல்வாதி கடலளவே தவறுகள் செய்தாலும் அவர்களை, நம் சாசனச் சட்டத் திட்டங்கள், கண்டிப்பதும் இல்லை; தண்டிப்பதும் இல்லை. அமெரிக்க அதிபர் நிக்சனை, அந்நாட்டு நீதிமன்றத்தால் நீக்க முடிந்தது இன்றைய கிளிண்டனை அமெரிக்க நீதி மன்றம் கண்ணில் விரலைவிட்டு ஆட்ட முடிந்தது. நம் நாட்டில் முடிந்ததா முடியுமா?

உலக மக்கள் தொகையில் 186 நாடுகளுக்குப் பட்டியலில் உள்ள அமைப்பின்படி இந்தியா மக்கள் தொகை எண்ணிக்கையில் சீனாவுக்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் உள்ளது. அமெரிக்கா மூன்றாம் நிலையிலும், ஜெர்மனி 12 ஆம் நிலையிலும், இங்கிலாந்து 17 ஆம் நிலையிலும், ஆஸ்ட்ரியா 49 ஆம் நிலையிலும், சுவிட்சர்லேண்ட் 90 ஆம் நிலையிலும், சிங்கப்பூர் 127 ஆம் நிலையிலும், அராப் எமிரேட்ஸ் 136 ஆம் நிலையிலும், துவாளு கடைசி நிலையான 186 ஆம் நிலையிலும் உள்ளன.

உலகப் பூப்பந்தில் 200-க்கு மேற்பட்ட நாடுகள் உள்ளன. இதன் பரப்பு 13,34,83,000 ச.கி.மீ. இதில் மொத்த வனப்பரப்பு 3,385,95,000 ச.கி.மீ. சராசரி ஆயுள் ஆண்களுக்கு 65 வருடங்கள்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்களுக்கு 67 வருடங்கள். உலக மக்கள் தொகையில் ஆடவர் 60 பெண்டிர் 40 வானொலி 1000 பேருக்கு 361, தொலைக்காட்சி நூறு பேருக்கு 22, செய்தித்தாள்கள் 100 பேருக்கு 10, தனி நபர் வருமானம் 4880.

ஒரு நாட்டின் சிறப்புக்கு அடையாளம் மூன்று.

1. மக்கள் அனைவரும் பசியற்று இருக்க வேண்டும்
2. மக்கள் அனைவரும் நோயற்று இருக்க வேண்டும்
3. உள்நாட்டுப் பகையோ, புற நாட்டுப் பகையோ இல்லாது இருந்தல் வேண்டும்.

மேற்கண்ட மூன்றை அளவுகோலாக வைத்துப் பார்க்கும்போது இந்தியா மேற்கண்ட மூன்றிலும் மிகப் பின்தங்கி இருப்பதை உணரலாம். இதற்கு உரிய காரணங்களை ஆராய்கிறபோது சிலர் மிகுந்த மக்கட்தொகை காரணம் என்பார்கள். அது பெரிய காரணமாக இருக்க முடியாது. மக்கள் தொகையை மீறியும் நாடு வளர முடியும் என்பதற்குச் சான்று சீனா, ஹாங்காங் முதலாயின. சிலர் போதிய நிலவளம் இல்லாமையைக் காரணமாகக் காட்டலாம். இது முழு பொய் என்பதை இந்திய நிலவளத்தை அறிந்தவர்கள் முற்றிலும் உணர்வார்கள். எனவேதான் உலகில் இந்தியா பணக்கார நாடு, ஆனால் இந்தியர்கள் ஏழையர் எனும் மொழி எழுந்தது. நிலவளமே இல்லாத சிங்கப்பூரும், சப்பானும் பல்வேறு தளங்களிலும் முன்னிலையில் முன்னிற்கின்றன. போதிய தொடர் நிலப்பரப்பு துண்டு துண்டான சிறு தீவுகள், நிலப்பரப்பும் சமவெளியும் இல்லாத சப்பான் முன்னிற்கிறது.

மக்கள் தொகை நில வளம் ஆகிய இரண்டு மட்டும் ஒரு நாட்டின் வளத்தைத் தீர்மானிப்பதில்லை. நேப்பாளம் உலகிலேயே வறிய நாடு நன்றாக விளங்குகிறது. நீர்வளமும், நிலவளமும் இருந்தும் வங்கதேசம் பட்டினிப் பட்டியலில் படுத்துக் கிடக்கிறது. பாலைவனத்திலேயே வாழ்ந்தாலும் இசுரேல் வளம் நோக்கிப் பாய்ந்து போய்க் கொண்டிருக்கிறது.

மக்கள் தொகை மிகக் குறைவான நாடுகள் ஆப்பிரிக்காவில் பல இருந்தாலும் சூடான், எத்தியோப்பியா, சோமாலி, உகாண்டா,

www.tamilarangam.net



நைசீரியா முதலாயன பல நாடுகள் இனக்குழுப் பூசலாலும் பதவிப் போட்டிகளாலும் சரியான அரசமைப்பு இல்லாததாலும் வறுமையாலும் அமைதி இன்மையாலும் சரிந்து கிடக்கின்றன. உலக நாடுகளை மொத்தப் பார்வையாக வைத்து ஒரு நாட்டின் சிறப்பு, சிறப்பின்மைக்கு மிக, முதன்மையான காரணம் அந்நாட்டு மக்களும், அந்நாட்டு மக்கள் பின்பற்றுகின்ற அரசியலமைப்பு என்றும் நாம் முடிவுக்கு வரலாம். இப்பின்னணியில் நோக்கும்போது இந்திய வீழ்ச்சிக்குக் காரணம், இந்திய மக்கள் இயல்பும் இந்திய மக்கள் ஏற்றுக் கொண்ட அரசியலமைப்புமே. உலக நெடு வரலாற்றில் மக்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் இருப்பது இயல்புதான். கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை ஐரோப்பாவில் ரோமர்களும், கிரேக்கர்களுமே எல்லாத் தளத்திலும் முன்னிலை வகித்தனர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ரோம ஆதிக்கத்தை எதிர்த்து இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி முதலான நாடுகள் தம்மொழி வழி முன்னிலை பெற்றனர். அதனால் அறிவியல் கண்டுபிடிப்புகள் கண்டுபிடிக்கத் தொழில் புரட்சி காரணம். நாடு தேடித் தம் நாட்டை வளப்படுத்தும் தன்மை பெருகின. இதன் விளைவு ஐரோப்பிய நாடு கண்டத்துக்கு அப்பாலும் அட்லாண்டிக் சமுத்திர நாடு பசிபிக் சமுத்திர நாடுகளையும் தம் சொந்த நாடுகள் ஆக்கிக் கொண்டன. அவர்கள் ஏற்படுத்திய அமைப்பு அந்தந்த நாட்டு வளர்ச்சிக்கு மிகப் பெரிய காரணமாக இருந்தது. இன்று உலக நாடுகளை 1. அரச பரம்பரை ஆட்சி நாடுகள், 2. சர்வாதிகார நாடுகள், 3. வாக்கு வழித்தேர்ந்தெடுக்கப்படும் அதிபர் நாடுகள், 4. மறைமுகப் பிரதம அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் நாடுகள். பன்னிரண்டு நாடுகளில் தான் குடியரசு முறை இருந்து வருகிறது. அதிபரை மக்களே நேர்முகமாகத் தேர்ந்தெடுப்பர். பிரான்சு, அமெரிக்கா, ஜெர்மனி, ஆப்பிரிக்காவில் ஓரளவு வளம் பெற்றுள்ள பிரான்சு குடியிருப்பு நாடுகள் ஆகியவற்றுள் அதிபர் முறை இருந்து வருகிறது. ஆங்கிலேயர் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பாதி வரை ஆண்டு விடுதலை தந்த நூற்றுக்கணக்கான ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் பெரும்பாலானவை இங்கிலாந்து மாடலான பிரதம அமைச்சர் நாடாளுமன்ற வெஸ்மினிஸ்டர் அமைப்பைப் பின்பற்றினர். வெள்ளைக்கார இனமான கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலான இடங்களில் இங்கிலாந்து பிரதம அமைச்சு வெற்றி பெற்றது ஏனைய நாடுகளான இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த அமைப்பு முழுத் தோல்வியையே தழுவியுள்ளது. ஆப்பிரிக்கக் கண்டத்திலும், ஆசியக் கண்டத்திலும் பல நாடுகளிலும் இந்த அவலங்களைப் பார்க்கிறோம். விதிவிலக்காகச் சீனரால் ஆளப்படும் சிங்கப்பூர், ஆங்காங் முதலான ஓரிரண்டு இருக்கலாம். மற்றபடி மறைமுகமாக நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை உள்ள நாடுகளில் உள்ள அல்லல்கள் வருமாறு.

1. இந்தியா முழுதும் ஒரு தேர்தலை நடத்த 4000 கோடி முதல் 6000 கோடி வரை ரூபாய் செலவாகிறது. கணக்கில் வராத கோடிகள் கள்ளத்தனமாகப் பணமாகவும் பொருளாகவும் கட்சிகள் வாக்காளர்களுக்குக் கொடுத்த ரூபாய்கள் மேலும் ஆயிரக்கணக்காகும். இப்பணம் அனைத்தையும் அரசியல் வாதிகள் ஆட்சிக்கு வந்தவுடன் பல மடங்காகக் கொள்ளையடிக் கின்றனர். இதில் மாநிலத் தேர்தல் கணக்கு சேர்க்கப் படவில்லை. அடிக்கடி தேர்தல் நடப்பதால் நடக்கும் இன்னொரு தீங்கு வேட்பாளரை ஒட்டும் சாதிப்பகையும், மொழிப் பகையும், இனப்பகையும், வட்டாரப் பகையும் ஆகும். இந்திய மக்கள் மேற்கண்ட பேதங்களில் இருந்து இன்னும் மீளாமல் சுருங்கிக் கிடப்பதற்குத் தேர்தலே தலைப் பெருங் காரணமாகும்.

முதல் தேர்தல் 1950 இல் நிகழ்ந்தது. தொடர்ந்து முறையாக 1955, 60, 65, 70, 75, 80, 85, 90, 95 என 9 முறை நடந்திருக்க வேண்டும். ஆனால் 3 முறை கூடுதலாக நடந்திருக்கிறது. 10 பிரதமர்கள் 1950 முதல் இருந்திருத்தல் வேண்டும். 1947 - 1965 வரை நேருவே தொடர்ந்து தலைமை அமைச்சராக இருந்தார். 1964 இல் நேரு மறைவிற்குப் பிறகு 7 பிரதமர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் நந்தா தொடங்கி குசரால் வரை 14 பிரதமர்கள் இந்தியாவை ஆண்டுள்ளார்கள். இப்பின்னணியில் உள்ள நிருவாகச் செலவும், நேர்மைக் குறைவும், ஏழை இந்தியாவில் தாங்கவே முடியாதவை.

பிரான்சில் மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அதிபரின் ஆட்சிக் காலம் 7 ஆண்டுக்காலம் ஆகும். அதே போல் ஜெர்மன் சான்சிலரின் ஆட்சிக் காலம் 5 ஆண்டுக் காலம் ஆகும். அமெரிக்க அதிபரின் காலம் 4 ஆண்டுக் காலம் ஆகும். மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசு அதிபர் என்பவர் கட்சி மாறிகள் விலகிப் போகும் எம்.பி.க்கள், கட்சிகள் என யாரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கண்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அதிபரை அசைக்கவே முடியாது. தவறு செய்தால் நீதிமன்றமும் பத்திரிக்கைகளும் அதிபர்களை அசைத்து அகற்றி விடும்.

1966 முதல் 77 வரை இந்திரா காந்தி பிரதம அமைச்சராக இருந்தார். அதற்குப் பின் வந்த பிரதம அமைச்சர் அத்தனைப் பேரும் கொள்கையற்ற கட்சிகளால் தொடர்ந்து கவிழ்க்கப் பெற்று வந்திருக்கின்றனர்.

| | | |
|---|---|---|
| மொரார்ஜி தேசாய் | 1977 | 1979 |
| சரண்சிங் | 1979 | 1980 |
| இந்திரா காந்தி | 1980 | 1984 |
| இராஜீவ் | 1984 | 1989 |
| வி.பி.சிங் | 1989 | 1990 |
| சந்திரசேகர் | 1990 | 1991 |
| பி.வி. நரசிம்மராவ் | 1991 | 1996 |
| வாஜ்பாய் | 16.05.96 | 28.05.96 வரை |
| தேவகௌடா | 01.06.96 | 20.04.97 வரை |
| ஐ.கே. குஜ்ரால் | 21.04.97 | 04.12.97 வரை |
| வாஜ்பாய் | 1998 மார்ச் முதல் | |

மேற்கண்ட தலைமை அமைச்சர்களின் மாற்றத்தைப் பார்க்கும் வளர்ந்த வெளிநாட்டினர் கை கொட்டிச் சிரிக்கின்றார்கள். அம்மட்டுமன்றி இவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் இந்தியாவை மீட்கும் நோக்கத்திற்காக ஏழை வேலை இல்லா இளைஞர்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஒரு கண நேரத்தைக் கூடச் செலவிட நேரமில்லை. ஓயாமல் தம் கட்சியையும் பதவியையும் காப்பாற்றிக் கொள்வதற்காகச் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இனியும் இந்த முறை தேவைதானா என்று நாம் தீவிரமாகச் சிந்திக்கும் கட்டத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதம அமைச்சர் முறைக்குப் பதிலாக மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் அதிபர் முறை இந்தியாவில் அறிமுகமானால் தேர்தலுக்காகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொட்டப்படும் பல்லாயிரம் கோடிகள் மிச்சமாகும். ஆளும் அதிபர் 5 ஆண்டுகளுக்குத் தவறு செய்யாமல் இருந்தால் அஞ்சாமல் 5 ஆண்டுகள் பதவியில் இருக்கலாம். எந்தக் கட்சியும் கவலைப்படத் தேவையில்லை.

சிலர் அதிபர் முறை வரவால் எளிதாகச் சர்வாதிகார முறை வந்து விடும் என்று பொய் பேசுகிறார்கள்.

நம்முடைய வீழ்ச்சிக்குக் காரணம் நாம் இதுவரைப் பின்பற்றி வந்த அரசியல் சாசன முறையே ஆகும். இதில் ஐயமில்லை. சாதி, மத, மொழி ஆதிக்கத்தை அடிப்படையாக வைத்து நம் நாடு புதிதாகப் பெற வேண்டிய மூன்று நிலைகளை அரசியல்வாதிகளே தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு முடிவு வந்தாக வேண்டும், விடிவு தந்தாக வேண்டும்.

இந்தியாவில் அதிபர் முறை வந்தால், வட இந்தியரே வருவர் என்று சிலர் எதிர்பார்க்கலாம். அவ்வாறு வாராமல் சட்டப் பூர்வமாகத் தடுத்துவிட முடியும். அதிபர் தென் மண்டலத்தார் எனில், துணையதிபர் வடமண்டலத்தாராகத்தான் இருத்தல் வேண்டும். இந்தியாவை வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு என நான்கு மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு துணை அதிபர் பொறுப்பை உருவாக்கிக் கொள்ளுதல், இருபத்தைந்திற்கும் மேற்பட்ட மாநில ஆளுநர் பதவிகள் ஒழிவதால் செலவும் மிச்சமாகும், அதில் பத்தில் ஒரு பகுதியே துணை அதிபர் பதவிக்குச் செலவாகும். அதிபர், துணை அதிபர் பொறுப்புகள், சுழற்சி முறையில் ஒழுங்கு படுத்திச் சாசனத்திலேயே ஏற்றி விட வேண்டும். சுவிட்சர்லாந்து, தன்சான்யா முதலாய நாடுகளில், சுழற்சி முறை முழுவெற்றியுடன் செயல்பட்டு வருகிறது.

பிரதமருக்குப் பதிலாக அதிபரை நேர் வாக்களிப்பில் தேர்ந்தெடுப்பது போலவே, மாநில முதல்வரும் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும். ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய வற்றுக்கு மக்கள் நேர்முகமாகத் தனித்தனி தொகுதி உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பது போலத் தலைவரையும் தேர்ந்தெடுக்கச் சட்டமன்ற உறுப்பினரும், தனி வாக்கிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

இம்முறையால் 356 ஆம் பிரிவைக் கொண்டு கொள்ளி வைத்துக் கொல்வது நின்று போகும். அடிக்கடி நிகழும் தேர்தலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதனால் நிகழும் பணச் செலவும் மீண்டும் மீண்டும் உயிர்த்தெழும் சாதி, மத, மொழி வெறிகள் அடியோடு அழிந்து போகும்.

ஒரே வட்டத்துக்காரர், மொழிக்காரர் அதிபராக வராமல் தடுத்துக் கொள்ளச் சட்டமுறை இருக்கிறது. ஆப்பிரிக்காவில் தங்கனீகாவும், ஜான்சிபாரும் ஒரு காலத்தில் தனித்தனி நாடுகளாக இருந்தன. இவை இரண்டும் ஜீலியசு நியா ரரே காலத்தில் ஒரே நாடாக்கப்பட்டன. அப்போது தான்சான்யா எனும் பொதுப் பெயரை இட்டுக் கொண்டன. அதிபர் தங்கனீகாவைச் சேர்ந்தவராக இருந்தால் துணை அதிபர் ஜான்சிபாரைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். அடுத்த முறை இது மாற்றி அமைதல் வேண்டும் எனச் சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது. அதிபர் முறை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்படும் பொழுது இந்தியா பெரிய நாடாக இருப்பதால் ஓர் அதிபரையும், நான்கு துணை அதிபரையும் அமைத்துக் கொள்ள முடியும். இது சுழற்சி முறையில் மாறி மாறி அமையும். இத்தகு சுழற்சி முறை சுவிட்சர்லாந்திலும் இருந்து வருகிறது. வேறு சில நாடுகளிலும் எழுதாச் சட்டமாக வெற்றியுடன் செயல்பட்டு வருகிறது.

அதிபர் சர்வாதிகாரியைப் போலத் தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது. அவ்வாறு சாசனத்தில் வரையறை செய்ய முடியும்.

அதிபர் கொண்டு வரும் ஒவ்வொரு மசோதாவையும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டால்தான் நடைமுறைப்படுத்த முடியும். இல்லையெனில் நடைமுறைப்படுத்த முடியாது. இதில் கட்சி அரசியலை விட நாட்டு மக்கள் நலமே தலைமையிடம் பெறும்.

அமெரிக்கா போன்ற நாடுகளிலும் அதிபர் தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாது அமெரிக்கச் செனேட்டர்கள் மன்றம் தடுத்து நிறுத்தி விடும். மோனிகா பாலுறவு முறைகேட்டிற்காகக் கிளிண்டனை நீக்கச் செனேட்டர்கள் கச்சைக் கட்டிக் கொண்டு நின்றது கண்டோம்.

ஆனால் பிரதம அமைச்சராக இருந்தவர்கள் சர்வாதிகாரிகளாக மாறி உள்ளனர் என்பதற்குப் பாகிஸ்தான், வங்க தேசம், ஆப்பிரிக்காவில் பல நாடுகள் சாட்சியங்களாக உள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேவை: புதிய அரசியல் சாசனம்

நம்முடைய அரசியல் சாசனம் 1950 சனவரி 26 முதல் நடைமுறைக்கு வந்தது. சாசன அமைப்பிற்கான சாசனப் பேரவை நாம் விடுதலை பெறுவதற்கு முன்பும், பாகிஸ்தான் தனியாகப் பிரிவதற்கு முன்பும் 1946 திசம்பர் 9இல் அமைக்கப் பெற்றது. 1947 ஆகஸ்ட்டு 14 இல் பாகிஸ்தான் பிரிந்து சென்ற சூழ்நிலையில் பாகிஸ்தான் உறுப்பினர்கள் மட்டும் தவிர்க்கப் பெற்று ஏனைய உறுப்பினர்கள், அதாவது, விடுதலைக்கு முன்பு அமைக்கப்பட்ட சாசன உறுப்பினர்கள் கொண்ட அமைப்பு நம் அரசியல் சாசனத்தை உருவாக்கிற்று. டாக்டர் இராஜேந்திர பிரசாத் அதன் தலைவராக இருந்தார். சாசனத்தின் முன்வடிவு 1948 பிப்ரவரியில் வெளியிடப் பெற்றது. 1949 நவம்பர் 26இல் சாசனம் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும் நடைமுறைக்கு வந்தது 1950 சனவரி 26 முதல்தான். அந்நாளே குடியரசு நாளாக நம்மால் கொண்டாடப்பட்டு வருகிறது. சட்ட வடிவத்திற்கு டாக்டர் அம்பேத்கர் தலைமை வகித்தார். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், எம். கோபால்சாமி ஐயங்கார், கே.எம். முன்சி, முகம்மது சாதுல்லா, பி.எல். மிட்டர், டி.பி. கைத்தான் ஆகியோர் அதில் அங்கம் வகித்தனர். பி.எல். மிட்டருக்குப் பதிலாக என். மாதவராவும், கைத்தானுக்குப் பதிலாக டி.டி. கிருஷ்ணமாச்சாரியும் இடம் பெற்றனர்.

50 ஆண்டுகள் முடிவுற்ற நிலையில் நம் சாசனத்தையும், அதனைப் பின்பற்றிய நம் நாட்டையும், சமுதாயத்தையும், அரசியல், பொருளாதாரப் போக்குகளையும் கூர்ந்து கவனித்துக் கணிக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடுவுநிலையாளர் நம் நாட்டின் வளர்ச்சிக்கு நாம் சுமந்திருக்கும் அரசியல் சாசனம் உதவியாக இல்லை என்ற முடிவிற்கே வருவார்கள். இந்தியத் தேவைக்கேற்ப உருவாக்கப்படாமல் முதிர்ச்சி பெற்ற இங்கிலாந்து மக்கள் சாசனத்தைப் பார்த்து, முதிர்ச்சி பெறா இந்திய மக்கள் தலையில் சாசனம் கட்டப்பட்டமையே காரணம் ஆகும். இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், சிங்கப்பூர் முதலான நாடுகளைப் போல உரிய வளர்ச்சிக்கு நம் சாசனம் உதவியாக இருக்க வில்லை. கடந்த 50 ஆண்டுக் காலத்தில் 78 முறை நம் அரசியல் சாசனம் திருத்தப்பட்டதே அதன் முழுமை யின்மைக்கு ஆதாரமாகும். 224 ஆண்டுகள் சுதந்திர (4 சூலை 1776) வரலாறு உடைய அமெரிக்க அரசியல் சாசனம் 4 முறைதான் திருத்தப் பெற்றுள்ளது. பல முறை திருத்தங்களைப் பெற்ற நம் அரசியல் சாசனம் இந்திய மக்கள் வளர்ச்சியைப் போதுமான அளவிற்கு வேகப்படுத்தாததுடன், அனைத்து நிலைகளிலும் தேக்கப்படுத்தி இருக்கிறது. ஓரிரு சான்றுகள் வருமாறு.

நம் அரசியல் சாசனத்தின் முகப்பு சமூக, பொருளாதார, அரசியல், நீதி, நம்பிக்கை, வழிபாடு, எண்ணங்கள் ஆகியவற்றில் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை உறுதி செய்கிறது. சாதி, சமயச் சார்பின்மையையும் சத்தியம் செய்கிறது. ஆனால், முகப்பில் இடம் பெற்ற இவ்வுறுதிமொழிகள் சாசனத்திற்கு உள்ளே காற்றில் பறக்கவிடப்பட்டன. கால எல்லையைத் தாண்டி ஓடும் சாதி வழி இட ஒதுக்கீடு, மத வழிச் சிறுபான்மை உரிமைகள் ஆகியனவும் இவற்றை மேலும் கூர்மைப்படுத்தும் இடைக்காலத் திருத்தங்களும் சான்றுகளாக விளங்குகின்றன. இதன் உச்சமாக இந்தியா முழுதும் குமரி முதல் இமயம் வரை சாதிய வெறியும், மத வெறியும் தலைவிரித்து ஆடுகின்றன. ஜனநாயகத்திற்கு அடித் தளமாக இருக்கும் கட்சி பற்றிச் சாசனம் தெளிவாக வரையறுக்க வில்லை. இதன் விளைவாகத் தன்னிச்சையாக இந்தியா முழுதும் கட்சி அரசியல் கும்மாளம் போடுகிறது. கட்சி அரசியலை ஒட்டித் தேர்தல் முடிவுகளும், ஆளும் அமைச்சரவைகளும் அமைகின்றன. கட்சி அரசியலை அண்மைக் காலமாகச் சாதிகளும், மதங்களுமே முழுமுடிவு செய்கின்றன. பெரும்பான்மை மக்கள் எண்ணிக்கையைப் பெற்றிருக்கும் சாதிகளின் ஆதிக்கம் நாளும் பெருகி அறைகூவலாகி வருகிறது. சிறுசிறு எண்ணிக்கையில் இருக்கும் நூற்றுக்கணக்கான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிற்பட்ட, மிகப் பிற்பட்ட சாதி மக்களின் சம நீதி மறுக்கப்பட்டு வருகிறது. மதச் சிறுபான்மை தன் இட்டத்திற்குச் செயல்பட அனுமதித்ததன் விளைவாகச் சிறுபான்மை மதங்கள் கட்டுக் கோப்புடன் மேலாதிக்கம் செய்கின்றன. பெரும்பான்மை மதத்தினர் சாசனத்தில் உறுதி செய்யப்பட்ட சிந்தனை, உணர்த்து முறை, நம்பிக்கை, வழிபாடு ஆகியவற்றின் முழுச் சுதந்திரத்தை நுகர முடியாமல் நெருக்கப்பட்டு வருகிறார்கள். அன்றியும், இடைக்காலப் படை எடுப்புகளால் இந்தியாவிற்கு வந்த மதங்கள் சிலவற்றுக்கு வேர் அயல் நாடுகளில் இருப்பதால் அயல் நாட்டுத் தலையீடும் மிக உச்சமாக இருந்து வருகிறது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகியவற்றின் தீவிரத் தலையீடு இதன் விளைவுதான்.

இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளுக்கு முறையே முதல் நிலையும், இரண்டாம் நிலையும் கொடுக்கப்பட்டமையால் ஏனைய இந்திய மொழிகள் சுதந்திரம் பெற்றும் போதிய வளர்ச்சி பெறாமல் நலிந்து வருகின்றன. தமிழ்மொழியை இதற்குச் சரியான சான்றாகச் சுட்டிக்காட்டலாம். தமிழ் பேசப்பெறும் தமிழ்நாட்டில் கூடப் பெரும்பான்மை மக்களின் தாய்மொழியான தமிழால் ஆட்சி நடவடிக்கைகளை 50 ஆண்டுகள் ஆகியும் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை.

விரிந்து, பரந்த ஒரு பெரும் தேசமான நம் நாட்டு இயற்கையின் நன்கொடை அளப்பரிது. ஆனால் அது சிதறிக் கிடக்கின்றது. பகிர்ந்து நுகர வழியில்லை. சான்றாக, 1950இலேயே ஆறுகள் தேசிய மயமாக்கப்பட்டிருத்தல் வேண்டும். செய்யப்பட வில்லை. ஆறுகளை ஒட்டிய சிக்கல்கள் இமய மலை அளவில் பாரித்துத் தொல்லைப்படுத்துகின்றன. காவிரி ஆற்றுச் சிக்கல், கிருஷ்ணா கால்வாய்த் திட்டம் ஆகியன அரசியல் சாசனப்படி இரயில்வே, அஞ்சல் துறையைப் போலத் தேசிய மயம் ஆக்கப் படாததின் பொல்லா விளைவே ஆகும்.

சட்டப் பிரிவு 356 இன்படி தில்லி மைய அரசு 102 முறை, முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை ஒரே கணத்தில் வெளியேற்றி இருக்கிறது. 50 மாநிலங்களை உடைய அமெரிக்காவிலோ, 16 மாநிலங்களை உடைய ஜெர்மனியிலோ நிகழாத அதிசயம் தொடர்ந்து இந்தியாவில் நடந்து வருவதற்கு மூல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதல் காரணம் அரசியல் சாசனமே. முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசுகள் வெளியேற்றப்படுவதால் உரிய அரசைத் தேர்ந் தெடுத்த மக்கள் கேவலப்படுத்தப் படுகிறார்கள்; ஜனநாயகம் கேலிக் கூத்தாகிறது.*

இதனைப் போலவே நேரடித் தேர்வால் பிரதம அமைச்சர் தேர்ந்தெடுக்கப்படாததால் இந்தியாவில் தில்லியை ஆளும் நடுவண் அரசு அடிக்கடி கவிழ்க்கப்படுவது சர்வசாதாரணமாகிவிட்டது. மாநில, மைய அரசு மாற்றங்கள் நிலைஇல்லாமை ஆகியவற்றோடு மட்டுமில்லாமல் கோடிக்கணக்கான ரூபாயை ஆறு மாதத்திற்குள் தேர்தலை முடிக்க வேண்டும் என்று சாசனம் பணிப்பதால் தேர்தலை அடிக்கடி நடத்த வேண்டியிருக்கிறது. ஓர் ஏழை நாட்டிற்குச் சிறிதும் பொருந்தாத சாசனம் இது. உலகில் மிகப் பெரிய பணக்கார நாடான அமெரிக்காவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் விலகினாலோ, விலக்கப்பட்டாலோ, இறந்தாலோ முறையாக வரும் தேர்தலுக்கு முன்பு இன்னொரு தேர்தல் வைக்கப்படுவது இல்லை. துணை அதிபரே அடுத்த தேர்தல் வரை பொறுப்பேற்பது சட்டமாக்கப்பட்டு இருக்கிறது. பிரான்சிலும், பிரஞ்சு ஆதிக்க நாடுகளிலும் எம்.எல்.ஏ., எம்.பிக்கான இடைத் தேர்தல் இல்லை. இறந்தாலோ, விலகினாலோ நேரும் காலியிடத்தை அந்தந்தக் கட்சிக்கே வழங்கச் சட்டம் வகுக்கப் பட்டிருக்கிறது. அது மட்டும் இல்லாமல் அரசியல் சாசனத்திலேயே அமெரிக்க அதிபரின் தேர்தல் நவம்பர் 4 ஆம் நாள் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. அன்றியும், அதிபருக்கு உரிய தேர்தல் நடக்கிறபொழுதே மாநில ஆளுநர்கள் (நம் நாட்டு முதலமைச்சரைப் போல), செனேட்டர்கள் (நம் நாட்டு எம்.பிக்களைப் போல), பேராள அவையினர் ஆகிய அனைத்திற்கும் உரிய தேர்தல் ஒரே சமயத்தில் நிகழுகிறது. நம் நாட்டில் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் ஆகிய தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடத்தப்படாமல் வேறு வேறு சமயங்களில் தேர்தலை நடத்தி மக்களின் காலத்தையும், காசையும் வீணாக்கச் சட்டம் இடம் தருகிறது. இதனால் முதல் தேர்தல் முதல் 1999இல் நடந்த அண்மைத் தேர்தல் வரை 50 விழுக்காட்டிற்கு மேல் வாக்குகள் பதிவானது இல்லை. ஆனால், சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடத்தப்பட்ட காலங்களில் 1952,

* (டாக்டர் கிரன்வீல் ஆஸ்டின் நேர்முகம், 'இந்து', 2.2.2000).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1957, 1962, 1967 ஆகிய ஆண்டுகளில் 70 விழுக்காட்டு வாக்குகள் பதிவாயின. தேர்தலின் பெயரால் கோடிக்கணக்கான ரூபாய் வீண் செலவிற்கும், கால விரயத்திற்கும் மூல காரணம் நம் அரசியல் சாசனம் தேர்தலைப் பற்றிய போதிய தெளிவுகளை வரையறுக்காமையே. தேர்தல் ஆணையராக இருந்த திரு. சேஷனும், கில்லும் தேர்தல் தொடர்பான பல்வேறு சீர்திருத்தங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவதே நம் அரசியல் சாசனம் தேர்தல் தொடர்பான சட்டதிட்டங்களில் தெளிவாக இல்லாத பகுதிகளை நிறைய வைத்திருக்கிறது என்பதற்குச் சாட்சியம்.

ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மாநிலங்கள் பெரும் அளவில் சுயாட்சி பெற்று இயங்குகின்றன. ஆனால், இந்தியாவில் உள்ள 25 பெரு மாநிலங்களும், 7 குறுமாநிலங்களும் அப்படி இல்லை. மாநில, மைய அரசுகளுக்குரிய உரிமைகள் தனித்தனியே வகுக்கப்பட்டு இருந்தபோதிலும் கடந்த 50 ஆண்டுகளாக மாநிலங்களுக்கு இருந்த உரிமைகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்கப்பட்டு மைய அரசுடன் இணைக்கப் பெற்றுள்ளன. மாநில, மைய அரசுகளின் உரிமையை நெறிப்படுத்த நீதிபதி சர்க்காரியாவைக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டு அது தன் அறிக்கையை 1988இல் வழங்கியது. ஆனால், அந்த அறிக்கை பத்திரமாகப் பரணில் தூங்க வைக்கப்பட்டிருக்கின்றது.

ஏழை நாட்டிற்கு ஆகாத பெரும் கொடுமை ஒன்று உண்டென்றால் 32 பெரிய, சிறிய மாநிலங்களிலும், தில்லி நடுவண் அரசிலும் ஒரே துறைக்கு இரட்டை அமைச்சர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் இருந்து வருவதாகும். எடுத்துக்காட்டாக, மாநிலத்திலும், கல்வியமைச்சர், துணை கல்வியமைச்சர், மைய அரசிலும் கல்வியமைச்சர், துணைக் கல்வியமைச்சர்கள், இவர்களுக்கு உதவி செய்ய அதிகாரிகள், அலுவலர்கள் கொண்ட பெரும் பட்டாளம். இத்தகு அநியாயம் எந்தப் பெரிய நாட்டிலும் இல்லை.

மாநிலங்களில் நேர்முகமாக இல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள் வழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் பதவியில் இருக்க, அவருக்கு மேலாகத் தேர்ந்தெடுக்கப்படாத ஆளுநர் ஒருவர், மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படாத

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறார். ஆளுநருக்குச் சட்ட மன்றத்தை மீறிய அதிகாரம் இல்லை என்று சொல்லப்பட்டபோதும், உண்மையாகச் சட்டமன்றம் பெரும்பான்மை வாக்குகளால் அல்லது ஒருமனதாக முடிவு செய்து பரிந்துரைத்த எந்த ஒன்றையும் நடைமுறைக்குக் கொண்டு வராமல் தடுக்கும் உரிமை ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கிறது; குடியரசுத் தலைவருக்கும் வழங்கப் பட்டிருக்கிறது.

இதனைப் போலவே மக்களால் நேர்முகமாகத் தேர்ந் தெடுக்கப்படாமல், எம்.பி. வழியாகத் தெரிவு செய்யப்பட்டுத் தில்லி மைய அரசின் பிரதம அமைச்சராக இருந்தபோதிலும், அவருக்கும் மேலாக மக்களால் நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்படாத குடியரசுத் தலைவர் எனும் பொறுப்பு அமைக்கப்பட்டுள்ளது. அதிகாரம் இல்லாத பதவி என்று 'பொய்' சொல்லப்பட்ட போதிலும் முழு அதிகாரம் உடைய பதவி அதிபர் பதவியாகும். நாடாளுமன்றம் முடிவு செய்யும் எந்த ஒன்றையும் குடியரசுத் தலைவரால் நிறுத்தி வைக்க முடியும்; தடுத்துவிட முடியும். பீகார் அரசை நீக்க வேண்டும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவு செய்கிறது; நீக்க முடியாது என அதிபர் மறுதலித்த செய்தி ஓர் அண்மை எடுத்துக்காட்டு.

மாநில அளவில் மிகுந்த அதிகாரங்களைக் கொண்ட தேர்ந்து எடுக்கப்படாத ஆளுநருக்கும், நடுவண் அரசில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படாத குடியரசுத் தலைவருக்கும், துணைக் குடியரசுத் தலைவருக்கும் ஏழை பொதுமக்களின் வரிப் பணத்தில் இருந்து செலவழிக்கும் செலவு கற்பனைக்கே எட்டாததாகும். அதிபருக்கு மாதம் ரூ. 50,000, துணை அதிபருக்கு ரூ. 40,000, மாநில ஆளுநருக்கு ரூ. 36,000 மாத ஊதியமாக வழங்கப்படுகின்றது. இவர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மாளிகைகள் வெள்ளைக்காரர் காலத்தில் அமைக்கப்பட்ட கவர்னர் ஜெனரல் அரண்மனைகள் ஆகும். இவற்றைப் பராமரிப்பதற்காக ஆண்டு தோறும் கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்படுகிறது. இவர்கள் அனைவருக்கும் நூற்றுக்கணக்கில் வாகனங்கள் இயங்குகின்றன, ஆயிரக்கணக்கில் அலுவலர்கள் இருக்கின்றனர். இம்மூவரின் செயல் பாட்டை இந்தியாவின் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியாலும், மாநிலத்தின் மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முழுதுமாகச் செயல்படுத்திவிட முடியும். அமெரிக்கா, ஜெர்மனி போன்ற நாடுகளில் கோடிக்கணக்கான பணத்தை விழுங்கும் இது போன்ற அலங்காரப் பதவிகள் இல்லை. இங்கிலாந்து நாட்டைப் பார்த்துக் காப்பி அடித்து இந்தப் பதவிகளை உற்பத்தி செய்தது 1950 அரசியல் சாசனம்.

ஒரு ஜனநாயக நாட்டின் மூன்று தூண்களாக நாடாளுமன்றம், நிர்வாகம், நீதித் துறை ஆகியன வருணிக்கப்படுகின்றன. சட்டமன்றப் பேரவையும், நாடாளுமன்றங்களும் எத்துணைப் பொதுநல உணர்வோடு செயல்படுகின்றன என்பது மக்கள் அனைவருக்கும் வெளிச்சமான ஒன்று. நிர்வாகம் நாடு முழுதும் முழு ஊழல் மயமாகிவிட்டது என்பதைத் தொடர்ந்து ஊழலில் ஈடுபட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் பெயர்ப் பட்டியல் தொடர்ந்து வெளிவருவது உறுதிப்படுத்துகிறது. உலக ஊழல் நாடுகளைப் பட்டியல் இட்டு வரிசைப்படுத்தும் ஜெர்மனி நாட்டுப் புள்ளிவிபரம் இந்தியாவை ஊழல் மலிந்த முதல் பத்து நாடுகளுள் ஒன்றாகக் குறிப்பிட்டுள்ளது. அரசு அலுவலகங்களில் வாயிற் காவலர் தொடங்கித் தலைமை அதிகாரி வரை எவ்வாறு வேலை செய்கிறார்கள்; எவ்வளவு சம்பளமும் கிம்பளமும் பெறுகிறார்கள் என்பதைக் கோடிட்டுச் சொல்ல வேண்டியது இல்லை. மாநில, மைய அரசுகள் நடைபெறுவதற்காக மக்களால் செலுத்தப்பெறும் வரித் தொகையில் 65 விழுக்காடு முதல் 80 விழுக்காடு வரை நிர்வாக ஊழியர்களின் ஊதியத்திற்கே செலவிடப்படுகிறது. மக்கள் நலத் திட்டங்களுக்குக் குறைந்த எஞ்சிய பணமே செலவழிக்கப்படுகிறது. இந்நிலையில் வேலைப் பாதுகாப்பை ஏற்பாகப் பெற்றுள்ள ஊதிய நிர்வாகம் வேலை செய்யாமல் இருப்பதற்கும், மறுப்பதற்கும் வாய்ப்பாக அரசியல் சாசனத்தால் உறுதிசெய்யப்பட்ட தொழிலாளர் சட்டங்கள் நடைமுறையில் இருந்து வருகின்றன. கடமை செய்யாத ஒருவரை வெளியேற்ற முடியாத அளவிற்கு இவை மிக இறுக்கமாக இருந்து வருகின்றன. இதன் விளைவாக உரிய கடமைகளைச் செய்ய முடியாத அரசு அலுவலங்கள் பெரும்பாலானவை செயல்படாமல் முடங்கிக் கிடக்கின்றன. அனைத்தும் பெருநட்டத்தில் இயங்கி வருகின்றன.

மூன்று தூண்களுள் ஒன்றாக வருணிக்கப்படும் நீதித் துறையை எடுத்துக் கொண்டால், கற்பனை செய்ய முடியாத அளவிற்குக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காலதாமதம், முதலான முறைகேடுகள் மண்டிக் கிடக்கின்றன. கடந்த காலங்களில் எவ்வளவு வழக்குகள் தீர்ப்பு வழங்கப்படாமல் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன என்பதைப் பின்வரும் புள்ளிவிபரம் தெளிவுபடுத்தும்.

| நீதிமன்றம் | தீர்ப்பு அளிக்கப்பட்ட வழக்குகள் | தேங்கிக் கிடக்கும் வழக்குகள் |
|---|---|---|
| அலகாபாத் | ...... | 865,455 |
| ஆந்திரப் பிரதேசம் | 142,099 | 133,211 |
| பம்பாய் | 88,252 | 237,618 |
| கல்கத்தா | 63,127 | 282,209 |
| தில்லி | 44,618 | 163,430 |
| கவுகாத்தி | 18,077 | 34,165 |
| குசராத் | 47,711 | 119,383 |
| இமாச்சலப் பிரதேசம் | 13,665 | 13,352 |
| ஜம்மு காஷ்மீர் | 20,753 | 98,645 |
| கர்நாடகம் | 85,059 | 135,389 |
| கேரளம் | 76,075 | 250,261 |
| மத்தியப் பிரதேசம் | 79,094 | 83,131 |
| சென்னை | 110,761 | 326,619 |
| ஒரிசா | 33,557 | 84,897 |
| பாட்னா | 93,306 | 84,666 |
| பஞ்சாப் அரியானா | 119,037 | 170,671 |
| இராஜஸ்தான் | 56,684 | 98,416 |
| சிக்கிம் | 227 | 95 |
| **மொத்தம்** | **1,082,102** | **3,181,613** |

நம் நீதிமன்றங்களின் செயல்பாட்டைத் தெளிவுபடுத்த விரிவான விளக்கங்கள் தேவையே இல்லை. ஒரே ஒரு குறிப்பு மட்டும் போதும். 1950 முதல் கடந்த 50 ஆண்டுகளில் அளவிட முடியாத குற்றங்களைச் செய்த அரசியல்வாதிகள் எத்துணைப் பேர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தண்டிக்கப்பட்டுள்ளார்கள்; தண்டனையை அனுபவிக்கிறார்கள் என்ற ஒரே கேள்வி போதும். தடை ஆணை, முறையீடு, மேல் முறையீடு, மேல் முறையீட்டிற்கு மேல் மேல் முறையீடு என்று பதவிக் காலத்து ஊழல் வழிப் பணம் குவித்த அரசியல் குற்றவாளிகள் பாதுகாப்பாக வாழ்ந்து வருவதற்குப் பெரும் காரணம் நம் அரசியல் சாசனம் அமைத்துள்ள நீதிமன்ற முறைமையே ஆகும்.

அரசியல் சாசனத்தை மாற்றி அல்ல புதிதாகவே உருவாக்க வேண்டும். அவ்வாறு செய்வதே சரி என்பதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட சில காரணங்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான காரணங்கள் உள்ளன. தம் நாட்டு வளர்ச்சிக்குத் நாம் வகுத்துக் கொண்ட அரசியல் சாசனம் சரியாக அமையவில்லை என்று சொன்னால், மாற்றுவது என்பது பெரும் அதிசயமே அல்ல. பக்கத்தில் உள்ள இலங்கையில் நடந்து இருக்கிறது; மலேசியாவில் இருந்து பிரிந்த சிங்கப்பூரில் நடந்து இருக்கிறது; ஜப்பானில் நடந்து இருக்கிறது; ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றுள் புதுவதாக அரசியல் சாசனங்கள் மக்களின் தேவைக்கு ஏற்ப வகுக்கப்பட்டுள்ளன. எனவே, வருங்காலத்தில் நம் நாடு ஒரு வல்லரசாகவும், மக்களுக்குச் சம நீதி வழங்கும் நாடாகவும் வரவேண்டுமென்றால் சாசனத்தைப் புதுக்குவதே சரி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனி ஒரு விதி செய்க

அண்மையில் கிழக்கு ஐரோப்பிய யூகோசிலாவாக்யா நாட்டு உள்நாட்டுப் போர் விவகாரத்தில் அமெரிக்கா, தன் மூக்கை நுழைத்தது; பெல்கிரேடு முதலான நகரங்களைக் குண்டு வீச்சுகளால் நாசப்படுத்தியது. அப்போது ஒரு குண்டு சீனத் தூதரகத்தின் மீது விழுந்து விட்டது. சீனம் சிலிர்த்து எழுந்து ஆர்ப்பரித்தது. அமெரிக்க அதிபர் கிளிண்டன் மன்னிப்புக் கேட்ட பின்பே சீனம் அமைதி யாயிற்று. சீனம் 1949இல் விடுதலை பெற்று 1999இல் ஐம்பது ஆண்டைத் தற்போது நிறைவு செய்து கொண்டாடியது. கொண்டாடுவதற்குரிய பல சாதனைகளைச் சீனம் நிகழ்த்தியிருக் கிறது. நாமும் ஐம்பது ஆண்டுகளைக் கடந்து கொண்டாடினோம். நாம் நிகழ்த்திய சாதனைகள் யாவை? ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஜனநாயக நடைமுறையில் வெற்றி பெற்றிருக்கிறோம். இது மகத்தான சாதனை. பதின்மூன்றாம் மக்கள் அவை தேர்தலின் போது நம் அரசியல் தலைவர்கள் முழங்கிய தேர்தல் முழக்கங்களுள் மிகமிக முதன்மையானது: தேர்தல் சீர்திருத்தம், அரசியல் சாசனப் புத்தமைப்பு. இதனை வரும் காலத்தில் நாம் சரியாக நிகழ்த்தி விட்டால் சீனத்திற்கு நிகரான அதற்கும் மேலான ஜனநாயக வல்லரசாக நாம் வரப் போவது உறுதி செய்வோமா? செய்வதற்கான சில கருத்துரைகள்:

இவற்றை நம்மால் நடத்த முடியுமா என்ற தயக்கத்திற்கு இடமே இல்லை. 1847இல் நாம் 1947இல் விடுதலை பெறுவோம் என்று நம்பினோமா? நடக்கும் என்றால் நடக்கும். அது நடத்துவோரின் கையில் உள்ளது.

www.tamilarangam.net



1. பொருளாதார, சமூக, அரசியல் என அடிப்படை அலகுகள் மூன்றிலும் 50 ஆண்டுகள் ஆகியும், குறிப்பிடத் தக்க எதனையும் இதுவரை சாதிக்காத இந்திய அரசியல் சாசனத்தைக் கால வளர்ச்சிக்கேற்ப மாற்றிப் புதிய அரசியல் சாசனம் ஒன்றை உடனடியாக உருவாக்க வழி செய்தல்.

2. அவ்வாறு உருவாக்கும்போது, ஏழ்மையில் இருந்து கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் வளர்ந்து மகத்தான சாதனை புரிந்துவரும், ஜப்பான், சிங்கப்பூர், சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளின் அரசியல் சாசனத்தைத் துணையாகக் கொண்டு, இந்தியத் தன்மை இழைந்த ஓர் அரசியல் சாசனத்தை வரைதல்.

3. இந்தியன் ஒவ்வொருவனுக்கும் அடுத்த ஐந்து ஆண்டுகளுக் குள்ளாக உண்ணப் போதிய உணவு, உடுக்க உடை, இருக்க இடம், பணி செய்ய ஒரு வேலை ஆகிய நான்கும் கிடைத்தே தீர வேண்டும் என்ற நோக்கில், குறுவட்டத் தொழிற்பேட்டைகளை வட்டந்தோறும் தொடங்குதல்.

4. ஐந்து ஆண்டுகளுக்கு அமைச்சர், எம்.பி., எம்.எல்.ஏ., ஆகியோர் பொதுமக்கள் வரிச் செலவில் உலக உலா வருவதை, அமெரிக்க மருத்துவம் பார்த்துக் கொள்வதை முற்றுமாகத் தடை செய்தல். இதுபோன்ற வீண் கௌரவ ஆடம்பரச் செலவுகள் அனைத்தையும் தொழிற்பேட்டை அமைப்பதில் திசை திருப்புதல்.

5. இந்திய இராணுவம் முழுவதையும் அப்படியே ஈடுபடுத்தி, 10 ஆண்டுகளுக்குள், பணி முடித்தே தீரும் வண்ணம் கங்கை - காவிரி இணைப்பை அமைத்தே தீருதல்.

6. சாதி, மத, மொழி, இனத்தின் பெயரால் சங்கமோ, கூட்டமோ, ஊர்வலமோ, மாநாடோ, நடத்துவதை முற்றுமாகத் தடை செய்தல்.

7. ஒதுக்கீடு, சிறுபான்மை உரிமை அனைத்தையும் ரத்து செய்தல்.

8. அவரவரின் தாய்மொழியைப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம், தொழில் துறை, மருத்துவத் துறை, ஆட்சி, நீதித்துறை, கோயில், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றில் அறிமுகம் செய்தல்.

9. மாநிலங்களுக்கிடையே ஆங்கில மொழி ஒன்றே சிங்கப்பூர் போன்று இணைப்பு மொழியாக அறிவிக்கப்படல். பள்ளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்லூரிகளில் ஆங்கிலம், கட்டாய இரண்டாவது மொழியாக்கப் படல்.

10. ஏனைய மொழிகள் அனைத்தும் சமஉரிமை பெற்ற தேசிய மொழிகளாக ஒப்புக் கொள்ளப்படுதல், எல்லாத் தேசிய மொழிகளும், இனங்களும் ஓரவஞ்சனையின்றி வளர்க்கப் படுதல்.

11. இந்தியாவைப் பெரிய ஐந்து வட்டாரமாகப் (Region) பிரித்து, தலைமை அமைச்சர் பொறுப்பு, ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொரு வட்டாரத்தினரிடமும் சுவிட்சர்லாந்து போல சுழற்சி முறைப்படி, வந்தமையவும் நான்கு துணைத் தலைமை அமைச்சர் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டு தலைமை அமைச்சர் பொறுப்பை அடையாத ஏனைய நான்கு வட்டாரத்திற்கும் மொழிவாரியாக வரும்படி சுழற்சி முறை பின்பற்றப்படுதல்.

12. அடுத்த தேர்தலில் இருந்தாவது, மாநிலங்களில் மக்கள் தொகைக்கு ஏற்ப எம்.பி. எண்ணிக்கையை வழங்காமல், மாநிலம் ஒவ்வொன்றிற்கும் ஒரே எண்ணிக்கை எம்.பி. என்றமைப்பது, எம்.பி வேட்பாளரின் தகுதி - முதுநிலை, எம்.எல்.ஏ.வின் - தகுதி பட்டநிலை, ஓட்டர்களின் தகுதி - எஸ்.எஸ்.எல்.சி, சாதி வழி ஒதுக்கீட்டு அமைப்பு ரத்து, ஊழல் செய்வோரைத் திரும்பப் பெற வாக்காளர்க்கு உரிமை வழங்கப் படல், சுவிட்சர்லாந்தைப் போல.

13. தம்பதியினர்க்கு இனி ஒரே குழந்தை. இரண்டாவது குழந்தை எனில், குடும்பத்திற்கும், குழந்தைக்கும் அரசு தரும் அனைத்துச் சலுகைகளையும் ரத்து செய்து விடுதல்.

14. எஸ். எஸ். எல்.சி. வரை எல்லாருக்கும் கட்டாய இலவசக் கல்வி. அதற்கு மேல் பல்வேறு தொழிற்கல்வி, மருத்துவக் கல்வி போன்றன மட்டுமே. பிளஸ் 1, பிளஸ் 2, நாடெங்கும் உள்ள பொது, அறிவியல், கலைக் கல்லூரிகளையும், பல்கலைக்கழகங் களையும் நிரந்தரமாக மூடிவிடுதல்.

15. மாணவர் பயிற்சிக்கென வயல், தோட்டம், பல்தொழிற் கூடம் இல்லாத பள்ளியோ, கல்லூரியோ, பல்கலைக்கழகமோ இருத்தல் கூடாது. இருந்தால், மூடிவிடுதல்.

www.tamilarangam.net



16. கல்வி நிறுவனங்களில் பணிபுரியச் சேர்க்கப்படும் ஆசிரியர்கள் யாரும், நிரந்தர அடிப்படையில் அமர்த்தப்படாமை. ஒப்பந்த அடிப்படை மட்டுமே. மற்றபடி கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மதம் சாரா மிஷனரி போன்ற பொது அமைப்பிடம் விடப்பட வேண்டும். பலவேறு துறைகளில் பணியாற்றும் வல்லுநர்களை அவ்வப்போது, கல்வி நிறுவனங்கள் ஒப்பந்த அடிப்படையில் அழைத்துப் பயன்படுத்திக் கொள்ளுதல் என்ற திட்டம், குறிப்பாகக் கல்லூரி, பல்கலைக்கழக அளவில் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுதல்.

17. அரசும், தனியாரும் நடத்தும் அனைத்து அலுவலகம், தொழிலகம், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் முதலானவற்றில் பணியாற்றுவோர்க்கு விடுப்பு, விடுமுறை நாட்களுக்கு ஊதியம் தருதலை உடனே நிறுத்துதல், நிறுத்துதல் மூலம் கிடைக்கும் கோடிக்கணக்கான முதலீட்டைக் கொண்டு உற்பத்தியுடன் நேர்த் தொடர்புடைய புதுத் தொழிற்சாலை/ஆய்வுச்சாலைகளை அமைத்து, வேலையில்லா இளைஞர்க்கு வேலை கொடுத்தல்.

18. தேர்தலில், தத்துவத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டு விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ (Proportional Representation) அடிப்படையில் கட்சிகளுக்கு இடம் வழங்கப்படுதல்.

19. ஊராட்சி, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் எந்த ஆண்டில், மாதத்தில், நாளில் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை எந்தத் தனி மனிதர் கையிலும் கொடுக்கப்படக் கூடாது. காலண்டர்தான் தீர்மானிக்கும்; தீர்மானிக்க வேண்டும்.

20. ஊராட்சி, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர், அமைச்சர் என எவருக்கும், பொதுமக்கள் செலவில் வீடு, கார், வசதி, பாதுகாப்பு முதலான அனைத்தும் ஸ்வீடனைப் போல இல்லாதிருத்தல் வேண்டும். ஒரு கம்பெனி எக்ஸிகியூட்டிவ் போல அவரும் ஊதியத்திற்கு வேலை செய்தல் வேண்டும் அவ்வளவுதான்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிருவாகச் சீர்திருத்தம்

அண்மையில் மலேசியாவிலிருந்து விமானத்தில் பயணித்த போது கனடா நாட்டைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் என் அருகே அமர்ந்திருந்தார். அவரிடம் மென்மையாக மெல்ல உரையாடத் தொடங்கினேன். சீன நாட்டுக்குச் சென்றிருந்ததாகவும், தரைமேவு செயற்கைப் பளிங்குக்கல் ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பிய தாகவும் மகிழ்வு ததும்ப விவரித்தார். சீனம், மாசேதுங் காலம் வரை சுதந்திரப் பொருளாதார ஒப்பந்தங்களுக்குக் கதவை அடைத்திருந்தது. வறுமைச் சாவு இல்லை எனினும், அமெரிக்க, ஜப்பானிய, தைவான் நாடுகளைப் போல விண்ணைத் தொடும் வளர்ச்சி அங்கு இல்லை. மக்கள், ஒரே நிலையில் தேங்கிக் கிடந்தார்கள். சோவியத் உதவி நின்றபோது ஒரு வீழ்ச்சி: சோவியத்தே வீழ்ந்தபோது, பெரும் வீழ்ச்சியில் சீனம் திணறியது.

சீனத்தின் நெடுங்கதவுகள் வெளியுலகிற்கு மெல்லத் திறந்து விடப்பட்டன. நாணயமான, கட்டுப்பாடான, மலிவான, கோடிக் கணக்கான சீன மனித வளம், உலகின் கண்களை ஈர்த்தது. சிவப்பு நாடே தவிர சிவப்பு நாடாவின் நாடல்ல. பளிச்சென்று உடனுக் குடன் பதில் வழங்கும் நிருவாகம்; சந்திப்புக்கு முன் ஒப்புதல் பெற்றுச் சென்று அமர்ந்தால், தொழிலாலோசனை மேசைக்கு முன் மின்னல் வேகத்தில் அனைத்துக் கோப்புகளும் அமரும். அதிகாரிகளும் மொழிபெயர்ப்பாளர்களுடன் புன்னகைச் சிரிப்புடன் கைகுலுக்குவர். கனிந்த சொற்களையே பரிமாறும் இனிய பேச்சு; வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்ற கண்டிப்பு; முடிவை ''மேலே மேலே'' என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகார மமதைக்கு அழைத்துச் செல்லாமல், அங்கேயே அப்போதே எடுக்கும் தெளிவு.

தொழிலதிபர் பெருமிதத்துடன் வருணித்தார். ''ஆனால் ஒரு சிக்கல்'' அவரே சொன்னார்: சீனர்கள் கடந்த (1949 -1999) ஐம்பது ஆண்டுகளில் உற்பத்தி செய்யப் பழகி இருக்கிறார்கள்; ஆனால் மிஞ்சிய உற்பத்தியை ஏனைய நாடுகளுக்கு விற்பனை செய்யும் சந்தைப் பொருளாதாரம் அவர்களுக்குத் தெரியவில்லை. தற்போதுதான் தொடங்கி இருக்கிறார்கள். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிக் கலந்தாலோசிக்க அவர்களால் இயலவில்லை. அவர்களின் சக இனத்தவரான தைவானியர் சந்தைப்படுத்துவதிலும், ஆங்கிலத்தில் சொல்லாடுவதிலும் வல்லவர்கள். எனவே, சீனப் பொருளை வாங்கியும் வழிப்படுத்தியும் அமெரிக்க ஏற்றமதியைப் பெருக்கி யுள்ளார்கள். தைவானியர் சீனர் என்பதால், சீன மொழியும் கைகொடுக்கிறது. இன்னும் சில ஐந்தாண்டுகளில், சீனப் பொருள்கள் ஞாலம் எங்கும் ஆட்சி செய்யும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் செழித்த பட்டியலில் கிடந்த மலேசியா, கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பொருளாதாரத் தடங்கலுக்கு உள்ளாகி இருக்கிறது. வீழ்ச்சிக்கு ஆசியப் பொருளியல் வீழ்ச்சி ஒரு காரணம்; ஆனால் அது மட்டும் காரணம் அல்ல. சுல்தான்களின் ஊழல், சக இனமக்களை இணக்கமாக அழைத்துச் செல்லாமை, மதச் சார்பை முன்நிறுத்தும் நாட்டாண்மை; எதிர்க்கட்சிகளை எதிரிகளாகப் பாவிக்கும் ஏகாதிக்க மனப்பான்மை; பெருமிதத்தை மிதித்து விட்ட கர்வம் ஆகிய இவற்றால் அமெரிக்க-ஐரோப்பியப் பகைமை நேர்ந்தது. இவற்றின் கூட்டு விளைச்சலே நாட்டு வீழ்ச்சியாக உருவங் கண்டது. என்றாலும், வீழ்ச்சிக்குரிய வேரை அறிந்து, களை கொல்லும் முயற்சி 2020 எனும் இருபத்தோராம் நூற்றாண்டுத் திட்ட முழக்கத்தில் தெரிகிறது. அங்கே அடுத்த பொதுத் தேர்தலும் நடந்து விட்டது. அரசியல் எசமானர்கள், தற்போது பொதுமக்கள் பக்கம் திரும்பி இருக்கிறார்கள்.

கனடா தொழிலதிபர், மலேசிய நாட்டுத் தொழில் ஒப்பந்த முறை பற்றி என்னிடம் தொடர்கிறார்:

மலேசிய ஆட்சி நிர்வாகத்தில் வேகம் தெரிகிறது. ஒத்தி வைப்பு இல்லை; கோப்புத் தேடும் கோலங்கள் இல்லை; வணிக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒப்பந்தங்களை மேசைக்குக் கீழ் முடிக்கும் சீழ் முறை இல்லை; மேலேயே முடிக்க விடுகிறார்கள்; அரசியல் அதிகார இட்லர்களைச் சந்திப்பதற்காகக் காத்துக் கிடக்க வேண்டியதில்லை; பெட்டிகளும் தேவை இல்லை; எனவே, தொழில்சார் வணிக ஒப்பந்தங்கள் வந்த வேகத்தில் முடிகின்றன; நொந்த சோகங்கள் இல்லவே இல்லை.

அடுத்த பயணம் இந்தியாவிற்கா? நான் கேட்டேன். இல்லை என்றார். இந்தியாவிற்குத்தான் முதலில் சென்றேன். ஒப்பந்தம் எதனையும் முடிக்க முடியாமல் பாதியிலேயே முயற்சிகள் முறிந்தன. தொடர்ந்து சீனாவில் அதே பொருளுக்கான ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று; மலேசியாவில் இன்னோர் ஒப்பந்தத்திற்கு ஏற்பாடாயிற்று. இனி நேரே தாயகமான கனடா பயணம் என்றார். 'ஏன் ஏன்'? எனப் பரிதாபமாக நான் கேட்டேன். அவர் சொன்னார். சீனாவிலும் உங்கள் நாட்டிலும் பொருள்வளம் இருக்கிறது; மனித வளமும் இருக்கிறது மனித வளம் மலிவாகவும் கிடைக்கிறது. ஆனால் உங்கள் நாட்டில் மனவளம் இல்லை.

முதலாவது : நாணயம் (Honesty) இல்லை. காட்டுவது ஒன்று; கப்பலில் ஏற்றுவது ஒன்று என ஏமாற்றுகிறார்கள்.

இரண்டாவது : கட்டுப்பாடு (Discipline) இல்லை. மிதமிஞ்சிய சுதந்திரம். சீனர்கள் முழுக் கட்டுப்பாடுடையவர்கள்; மலேசியர் கட்டுப்பாடுள்ள ஜனநாயக உரிமைகள் (Disciplined Democratic Rights) உடையவர்கள். எனவே, தொழில் அமைதி இரு இடங்களிலும் தவழுகிறது.

மூன்றாவது : நிருவாக நேர்மை இல்லை. அங்கே மக்களாலேயே அமைந்த நிருவாகம் செயல்படுகிறது; சிவப்பு நாடாமுறை கிஞ்சித்தும் இல்லை. இங்கே நிருவாகம், வண்டிக்குப் பின் குதிரை பூட்டப்பட்டிருக்கிறது. கோப்புகள் எங்கெங்கோ இருக்கும். அதிகாரிகள், தனக்கு மேல் அதிகாரி, மேல் அதிகாரி என மாண்டு போன பெர்லின் சுவர் போல் நீண்டு கொண்டே இழுப்பார்கள். சந்திப்புக்குக் காத்துக் கிடப்பதிலேயே காலம் முழுதும் கரையும். ஆயுளே முடிந்துவிடும். பெட்டி, மேசை என மறைவாகத் தமக்குள்ளே பல

www.tamilarangam.net



கதைகள் பேச வேண்டும். ஒளிவும் மறைவுமே நிர்வாகம் என்றாகிவிட்டது. வெளிப்படைத் தன்மை இல்லை (No Transparency)

நான்காவது : உண்மை உழைப்பில்லை. சீனர்கள், கடுமையான உழைப்பாளிகள்; தம் நாடு, தம் மொழி, தம் இனம் என மானங் காக்கும் மானஸ்தர்கள். மலேசியர்களிடமும் அந்த உணர்வு உண்டு. 'நாம் சீனர்கள், நாம் மலேசியர்கள்' என்ற நாம் உணர்வு, கூட்டுணர்வாக (Team Spirit) வெளிப்படுகிறது. ஒருவர் தோள், இன்னொருவர்க்கு ஏணியாக இயங்குகிறது. எனவே, தோல்வி வெற்றியாகிறது; துவளல், துலங்கல் ஆகிறது. இங்கே, அரசு, அரசு சார் நிறுவனங்களில் வேலை செய்வோர், விரக்தியின் உச்சியில் சிணுங்குகிறார்கள். ஒருவர் பாதையில், இன்னொருவர் கூரிய ஆணிகளைக் கண்ணிற்குத் தெரியாமல் மண்ணில் புதைத்து வைக்கிறார்கள். எதிரி கால் வைத்துக் காயம் பெற்றுக் கதறுவதையும், இரத்தம் கொட்டத் துடிப்பதையும் மனத்திரையில் படமோட்டி மௌனப் பள்ளுப் பாடி ஆனந்திக் கிறார்கள். எனவே, இங்கே ஐம்பதாண்டு ஆகியும் தளர்ச்சி; அங்கேயோ வளர்ச்சி.

ஆக, ஒரு நாடு உயர்வதற்கும், தாழ்வதற்கும் அங்குள்ள நிலவளம், நீர்வளம், கனிம வளம், மூலப்பொருள் வளம் ஆகியன மட்டும் காரணங்கள் ஆவதில்லை. அந்நாட்டில் செழித்திருக்கும் மனித வளமும், அம்மனிதரிடம் செழித்திருக்கும் பண்பு வளமுமே முதன்மைக் காரணங்கள்.

www.tamilarangam.net

SEELAN BOOKS NORWAY SIGNATURE

# இயல் நான்கு

# தமிழர் கல்வி

www.tamilarangam.net

# கல்வி உலகில் அநேகாந்த வாதம்

ஒரு பொருளின் முரண்பட்ட தன்மைகளைக் கவனிக்காமல் ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டு முடிவு செய்வதும், மற்றவற்றைக் கைவிடுவதும் ஏகாந்த வாதம் ஆகும். இதற்கு மறுதலையாக, ஒரு பொருளுக்குப் பல்வேறு தன்மைகள் உள்ளன. முரண்படும் தன்மைகளும் உள்ளன. இவ்வாறு பல்வேறு பண்புகளையும், முரண்படும் தன்மைகளையும் அறிவதும் அதற்குத்தக முடிவு செய்வதும் அநேகாந்த வாதம் ஆகும். ஏகாந்த வாதத்தை முன்னிறுத்தி எடுக்கும் முடிவை விட, அநேகாந்த வாதத்தை முன்னிறுத்தி எடுக்கும் முடிவு மிகப் பொருத்தமாகவும், பயனுடையதாகவும் இருக்கும். இத்தத்துவம் சைன சமயத்திற்கே உரியது என்றாலும், அனைவரும் கைக்கொண்டு பின்பற்றத் தக்க உயர்ந்த தத்துவம் ஆகும்.

ஒவ்வொரு பொருளுக்கும், கருத்துக்கும், மனிதனுக்கும் மேல், மேம்போக்காகப் புலப்படக் கூடிய ஒரு பக்கத்தினை மட்டும் கொண்டு ஒரு பொருளையோ, கருத்தையோ, மனிதரையோ முழுமையாக அறிந்து கொள்வது இயலாது; எடை போடுதல் கூடாது. இரவு என்றால் இருட்டு என்று முடிவு எடுத்தோமானால் ஐரோப்பிய நாடுகளில் இரவு பத்து மணிக்கு மேல் கூடப் பகலாக இருப்பதைப் பார்க்கலாம். சூரியனையும் பார்க்க முடியும். பகல் என்றால் வெளிச்சம் என்று முடிவு கட்ட முடியாது. வட துருவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மற்றும் தென் துருவப் பகுதிகளில் வெளிச்சம் இல்லாத பகல்கள் தாம் மாதக் கணக்கில் நீடிக்கின்றன. எனவே, அனைத்திற்கும் பல பக்கங்கள் உள்ளன, பல முகங்கள் உள்ளன. இக்கருத்து, கல்வி உலகத்திற்கும் பொருந்துவதாகும்.

நம் முன் இயங்கிவரும் உயர்கல்வித் துறையில் பல்கலைக் கழகம், கல்லூரி, நிர்வாகம், ஆசிரியர்கள், மாணாக்கர்கள், சமுதாயம், அரசு எனப் பல அமைப்புகள் இருக்கின்றன. இவ்வமைப்புகள் ஒன்றுடன் ஒன்று வேறுபடுவதும், தமக்குள்ளே வேறுபடுவதும், அதனால் ஒன்றிற்கு மற்றொன்று பகையாவதும் நடைமுறையில் இருக்கின்றன. இந்நிலைக்குப் பல காரணங்கள் இருப்பினும், மிக முதன்மையான காரணம், தான் பார்க்கும் ஒன்றே சரி என்று கருதும் ஏகாந்த வாதப் போக்கே ஆகும். பல்கலைக்கழகம் என்றால், ஆளுநர், அரசு, துணைவேந்தர், ஆட்சிக் குழு, நிதிக் குழு, கல்விப் பேரவை, ஆட்சிப் பேரவை, பல்வேறு பாடத்திட்டக் குழுக்கள், ஆசிரிய அமைப்புகள், அலுவலர் அமைப்புகள், மாணாக்க அமைப்புகள், கல்லூரி நிர்வாகம், கல்லூரி முதல்வர்கள், கல்லூரி மாணாக்கர்கள், பொதுமக்கள் எனப் பல உள் பிரிவுகள் இருக்கின்றன. இவை ஓர் உடம்பின் அங்கங்களைப் போல ஒருமித்துச் செயல்படும்போது தான் வளர்ச்சி தொடருகிறது. அல்லாத நிலையில் எதிர்மறை விளைவு நிகழுகிறது. ஒரு முடிவு மிகச் சரியாக நமக்குத் தென்படினும், அம்முடிவை நடைமுறைப் படுத்துகிறபோது மேற்கண்ட அங்கங்கள் அனைத்தும் ஏற்கும்படியான கருத்து உருவாக்கத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதனால் ஒரு கருத்து உருவாக்கத்திற்கு மாதங்கள், ஆண்டுகள் கூட ஆகின்றன. பல்கலைக்கழகத்தைப் போலவே கல்லூரியிலும், கல்லூரி நிர்வாகம், முதல்வர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பொதுமக்கள், அரசு, பல்கலைக்கழகம் எனப் பல்வேறு உள் அமைப்புகள் அமைந்து கிடக்கின்றன. ஒன்றிற்கு ஒன்று அனுசரணையாக நடக்கும் வரை செயலோட்டம் தடைப் படுவது இல்லை. பல்கலைக்கழகம், கல்லூரி ஆகியவற்றைப் போலவே ஆசிரியச் சமூகத்திற்கும், முதல்வர், கல்லூரி, ஆட்சிக் குழுவினர், உடன் பணியாற்றும் ஆசிரியர்கள், துறைத் தலைவர்கள், மாணாக்கர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என ஒன்றை ஒன்று சார்ந்து அமைப்புகள் அங்கம் அங்கமாகச் செயல்படுகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வரிசையில் கல்லூரியில் பயிலும் மாணவர்களைக் கொஞ்சம் விரிவாக எண்ணிப் பார்க்கலாம். நிர்வாகப் பார்வையில், - பணம் கட்டுகிறவன், முதல்வர் பார்வையில், - கல்லூரியில் படிக்கிறவன், ஆசிரியர் பார்வையில், - வகுப்பில் வாசிக்கிறவன் என்ற அளவில் மட்டும் மாணவர்கள் நிலையை நாம் முடிவு செய்கிறோம். இவற்றிற்கு அப்பால் மாணவனைப் பற்றி முடிவு செய்ய வேண்டிய கூறுகள் உள்ளன. நிர்வாகத்தின் பார்வையில் உரிய நேரத்தில் பணம் கட்டாதவன், முதல்வர் பார்வையில் சரியாகப் படிக்காதவன், ஆசிரியர் பார்வையில் வகுப்பறையில் முறையாகக் கவனிக்காதவன் என்று முடிவு செய்யப்படுகின்றது. அவர்கள் அவ்வாறு இருப்பதற்கான நியாயமான காரணங்கள் பின்னணியில் இருக்கின்றன என்பதை நாம் பொதுவாக அறிந்து வைத்திருப்பதில்லை.

## ஒரு சான்று

நான் துறைத் தலைவராகச் சென்னை இலயோலா கல்லூரியில் பணியாற்றியபோது முதல் வகுப்பிலேயே மாணவன் ஒருவன் கடைசி இருக்கையில் இருந்து கொண்டு தூங்கிக் கொண்டிருக்கிறான் என்று பாட ஆசிரியர் தொடர்ந்து என்னிடம் முறையிட்டு வந்தார். அவன் பெயரைச் சொல்லி அவனைப் பழித்தும் வந்தார். ஏனைய சகோதர மாணவர்கள் முன்னிலையில் அவனைப் பழித்தும் காட்டினார். இதனால் அவமானம் உற்ற அந்த மாணவன் துறைத் தலைவர் என்ற முறையில் என்னை வந்து பார்த்தான். பார்த்தவன் பேச முயன்றான். ஆனால் பேச முடியாமல் அவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டான். தட்டிக் கொடுத்து அவனைத் தேற்றி ஏன் அழுகிறாய் என்று கேட்டபோது அவன் தடுமாறித் தடுமாறிச் சொன்ன காரணம் நெஞ்சை உருக்கவல்லது.

> **சென்னை எழும்பூர் இரயில் நிலைய இரவு அஞ்சல் பிரிப்புச் செயலகத்தில் [ஆர்.எம்.எஸ்] இரவு எட்டு மணி தொடங்கி விடிகாலை நான்கு மணி வரை நின்றபடியே கடிதங்களைப் பிரித்துப் போடும் அன்றாடக் கூலி வேலையை அவன் செய்து வருகிறான். வைகறை நான்கு மணிக்கு வேலையை முடித்துவிட்டு அவசர அவசரமாகக் குடிசை வீட்டிற்குத் திரும்பிக் கொஞ்ச நேரம் தூங்கிவிட்டு, குளித்து, பஸ் கூட்டத்தில் ஏற முடியாமல் தொங்கிக் கொண்டு கல்லூரிக்கு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்து சேருகிறான். அவனை மீறி அவனுக்கு வகுப்பறையில் தூக்கம் வந்துவிடுகிறது.

இந்த நிகழ்ச்சி தூங்கு மூஞ்சி என்று வகுப்பு ஆசிரியரும், மற்றவர்களும் எடுத்த முடிவு எவ்வளவு தவறானது என்பதைக் காட்டுவதாகும். இதனைப் போலவே உரிய காலத்தில் உரிய கல்லூரிக் கட்டணத்தைச் செலுத்தாமைக்குச் சில இடங்களில் பணக்காரத்தனம் காரணமாக இருக்கலாம். பரவலாகப் பணம் இல்லாமைதான் நம் நாட்டில் பொதுக் காரணமாக இருந்து வருகிறது. ஆசிரியரின் அருமையான வகுப்பைக் கவனிக்க முடியாத அளவிற்கு அவன் குடும்பத்தில் என்ன துன்பமோ? என்ன நேர்ந்ததோ? யாருக்குத் தெரியும்? ஓரிரு வகுப்புகளில் அவனுடைய புறக்கணிப்பை வைத்துக் கொண்டு அவனைக் கவனிக்காதவன் என்று முடிவு செய்வது முறையாக இருக்காது. நம் நாட்டைப் பொறுத்தவரை நம்முடைய இளைஞர்கள் தரம் குறைந்தவர்கள் அல்லர் என்பதற்கு ஆதாரங்கள் நிறையவே இருக்கின்றன. சரியான வாய்ப்பை அவர்களுக்கு அளிக்கிறபோது அவர்கள் மிகச் சிறப்பாக ஒளிறுகிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாகச் சுந்தரனார் பல்கலைக்கழக இளைஞர் நலத் துறை நடத்திவரும் திறமைத் திருவிழா இதற்கு ஒரு பெரும் சான்று ஆகும். இத்திருவிழாவில் அத்தனைக் கல்லூரிகளும் பங்கேற்பது இல்லை, அத்தனை மாணவர்களும் பங்கேற்பது இல்லை. கணிசமான கல்லூரிகள், தேர்ந்தெடுத்த மாணவர்கள் பங்கேற்கிறார்கள். திறமையைக் காட்ட வேண்டுமென விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு பக்கம், அதைவிட மாணவர்களின் திறமையை வெளிக் கொணர வேண்டும் என்று ஆசிரியர்களின் தொண்டார்வம் மறுபக்கம். கணித்த கணிப்பில் இருந்து எந்த எந்தக் கல்லூரிகளில் சேவை மனப்பான்மை யுடன் தொண்டாற்றும் ஆசிரியர்கள் இருக்கிறார்களோ அந்தக் கல்லூரிகளில் இருந்து திறமைத் திருவிழாவில் பங்கேற்கும் மாணாக்கர்களின் பங்கு பெரிதாக இருப்பது புலப்படுகிறது. எனவே, இந்நிகழ்வில் இருந்து மாணவனின் திறமையை வெளிப்படுத்துவது, அவனுக்கு உள்ளே மட்டும் இல்லாமல், அவனுக்குப் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களைப் பொறுத்தே இருக்கிறது என்பதை அறியலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படியே ஒவ்வொன்றும்.

1. மாணவனின் தேவை, நாட்டின் தேவை என்ற இரண்டையும் முன்னிறுத்தும் பாட அமைப்புகள் நம் நாட்டில் மிக மிகக் குறைவு. நம் உயர்கல்வி போதிய அளவிற்கு இளைஞர்களை மேலெடுத்துச் செல்லாமைக்கு இது ஒரு பெரும் காரணமாகும்.

2. கல்லூரிக்குப் பயில வரும் மாணவர்களின் வயதை வைத்துப் பார்க்கும்போது 17 முதல் 21 வயதினராக இருக்கிறார்கள். இது அவர்களின் குமரப் பருவம் (Teen Age). பெற்றோர்களுக்கு அடங்காத, பெரியோர்களுக்கு அடங்காத, எதையும் சுதந்திரமாக முடிவு எடுத்துச் செய்யத் துடிக்கும் வயது. Dependence பருவத்தைக் கடந்த Independence பருவம். இந்த வயதில் அதிகாரத்தைக் காட்டி அடக்கு முறைப் பாணியில் திணிக்கப் பெறும் கருத்துகள் இளைஞர்கள் நெஞ்சில் படிவது இல்லை. மறுதலையாக ஆசிரியர் உடன் பழகும் தோழனாக இருந்து, கலந்துரையாடி வழிகாட்டும் போக்கில் அமைக்கப்பெறும் பயிற்று முறையே வெற்றி பெற முடியும். நம்முடைய உயர்கல்வி முறை இந்தப் போக்கில் மாற்றம் பெற வேண்டும்.

3. இளைஞர் உள்ளத்தில் தன்னம்பிக்கையை வளர்த்து எடுப்பதே முதல் பெரும் நோக்கமாக நமக்கு இருத்தல் வேண்டும். வெற்று மனிதனாக வருபவனை மனித வளம் உடையவனாக (Human Resource) மாற்றுதல் நம் கல்வித் திட்டத்தின் முதல் நோக்கமாக இருத்தல் வேண்டும். எனவே, குமரப் பருவத்தின் உளவியலை நன்கு வாங்கிக் கொண்டு நம் பாடமும், நடத்தும் முறையும், தேர்வு, மதிப்பீட்டு முறைகளும் அமைதல் வேண்டும். ஆசிரியர் அனைவருக்கும் குமரப் பருவ உளவியலைப் பற்றி ஒரு தனிப் பயிற்சியை ஒவ்வொரு கல்லூரியும் வழங்கினால் கூட அது விரும்பத் தக்க முடிவாக இருக்கும்.

4. நம் நாட்டில் 17 வயதில் இருந்து 21 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் தொகையில் 6 பேர் மட்டுமே உயர்கல்வி பெறுகிறார்கள். அமெரிக்காவில் 76, கனடாவில் 100, சப்பானில் 87 பேர். இந்த விழுக்காட்டில் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய மாணவனின் இன்னொரு பக்கம், நம்மிடையே பயில

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரும் மாணாக்கர் பயில வாய்ப்பு அற்ற 94 சதமான இளைஞர்களிடம் இருந்து வருகிறார்கள். படிக்காத பொருளாதார வளமற்ற குடும்பப் பின்னணியில் இருந்து படிக்க வரும் இளைஞர்களின் பழக்க வழக்கங்கள், படித்து அனுபவம் பெற்ற நம் அளவிற்கு இருக்கும் என்று எதிர்பார்ப்பது சரியன்று. மாறாக, முதல் தலைமுறையிலும் அல்லது அடுத்த ஓரிரு தலைமுறையிலும் இருந்து படிப்பதற்காக வரும் இளைஞர்களை நெறிப்படுத்தும் பொறுப்பு ஆசிரியரிடையே உள்ளது.

5. இதன் பின்னணியில் இத்தகு இளைஞர்களுக்குக் கல்வி அறிவு கற்பிப்பது ஒரு பக்கம் இருந்தாலும், பண்பாட்டுப் பயிற்சி மிக முதன்மை வாய்ந்ததாகும். இந்தப் பண்பாட்டுக் கல்விக்கு நம்முடைய உயர்கல்வியில் இடம் மிக மிகக் குறைவே. மிக மிக வளர்ந்த நாடுகளில் கூடத் தம் நாட்டு இளைஞர்களிடம் கண்ணியம், கட்டுப்பாடு, காலம் தவறாமை முதலானவை பரவுவதற்காகப் பள்ளிக் கல்வி முடித்த பிறகு கட்டாய இராணுவப் பயிற்சி 18 மாதங்களில் இருந்து இரண்டு ஆண்டுகள் வரை வழங்கப் பெறுகிறது. இசுரேலில் ஆணுக்கும், பெண்ணுக்குமாக இப்பயிற்சி கட்டாயமாக வழங்கப்படுகிறது. இத்தகு பயிற்சியை வழங்கும் அமைப்பு நம்மிடம் இல்லாதது ஒரு பெரும் குறையே. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகத்தான் என்.சி.சி., என்.எஸ்.எஸ்., முதலான விருப்ப அமைப்புகள் உள்ளன. எனினும், நம் நாட்டில் கண்ணியம், கட்டுப்பாடு, காலம் தவறாமை ஆகியவற்றை வளர்க்க வழி வகுக்க வேண்டும் என்று சொன்னால் ஏனைய நாடுகளில் உள்ளது போன்ற கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்குதல் விரும்பத் தக்கது.

முதல் கட்டமாக இலவச உயர்கல்வி வாய்ப்பைப் பெண்கள் அனைவருக்குமாவது நாம் பிஎச்.டி வரை விரிவுபடுத்துவது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஆக, கல்வியுலகிலும், ஒரு பக்கப் பார்வை பார்ப்பது, முடிவு செய்வது பெரும் பிழை. ஒன்றன், பலவேறு முகங்களைப் பார்ப்பதும், ஆராய்வதும், சீர்தூக்குவதும், நடுவுநிலையில் முடிவு செய்வதும் நம் அணுகுமுறையாக இருத்தல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*'குருவானவர் சீடரை நோக்கிச் செல்கிறார்; சீடர் குருவை நோக்கிச் செல்கிறார். விரைவில் இருவரும் சந்திக்கின்றனர்.*

*அந்தச் சந்திப்பு உடல் சம்பந்தப்பட்டது அல்ல. அந்தச் சந்திப்பு உள்ளம் சம்பந்தப்பட்டது. அந்தச் சந்திப்பு அவர்களது ஆன்மாவின் சந்திப்பு.*

*இரண்டு விளக்குகளை நீங்கள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றைக் கொண்டு வருகிறீர்கள். திடீரென்று அந்த விளக்குகளின் சுடர் ஒன்றாகி விடும். விளக்குகள் தனித்தனியாக உள்ளன. ஆனால் சுடர் ஒன்றுதான்.'*

*- ஓஷோ*

*M.A. Mohammed Shaul Hameed, 'Psychological Research in Education Process,' The Hindu, Feb. 1, 2000.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்பாட்டுக் கல்வி

கல்வியின் நோக்கங்கள் காலம் தோறும் மாறி வந்திருக்கின்றன. அவற்றுள் மாறாதனவும், மாற வேண்டாதனவும் ஒரு சில உள்ளன. ஒரு காலத்தில் கடவுளை வணங்குவது கல்வியின் முதல் நோக்கமாகக் கருதப் பெற்றது.

ஒன்றை அறிந்து கொள்வது கல்வி எனப்பட்டது. ஒவ்வொரு தொழில் நுணுக்கத்தை அறிந்து கொள்வதும் கல்வி எனப்பட்டது. கற்றல் என்றால் எழுதத் தெரிய வேண்டும்; வாசிக்கத் தெரிய வேண்டும்; கணக்கிடத் தெரிய வேண்டும் என்று கருதப்பட்டது. கல்வியின் நோக்கம் வெறும் சாத்திரப் படிப்பாக இருந்த வரை அது எல்லாருக்கும் வற்புறுத்தப் படவில்லை. ஓரிரு சமுதாயத்தினருக்கு மட்டுமே இந்தியாவில் வற்புறுத்தப்பட்டு வந்தது. சாத்திரக் கல்வி உயர்வாகக் கருதப்பட்டது. அது சாதியோடு இணைத்து அடையாளம் காணப்பட்டது. சாத்திரம் ஓதுதல் மட்டும் கல்வி அல்ல. வாழ்வின் அறிவுக் கூறுகளையும், அவை பயன்படும் தொழில் கூறுகளையும் அறிந்து கொள்வது, பயன்படுத்துவது எனக் கல்வி விரிவு பெற்றது. கல்வியின் முதன்மை இந்தியச் சமுதாயத்தால் அறியப்பட்டு இருந்தபோதும், அது சாத்திரக் கல்வியாக மட்டும் சுருக்கப்பட்டு இருந்த நிலையில் எல்லாருக்கும் கற்பிக்கப்படவில்லை. எனவே, பெரும்பாலோர் எழுதவும், படிக்கவும் கற்காது இருந்தனர். ஐரோப்பியர் வரவுக்குப் பிறகே, அதுவும் குறிப்பாகக் கிருத்துவத் தொண்டு நிறுவனங்களின் சேவை எல்லை விரிவுபடுத்தப்பட்டபோது கல்வியும் எல்லாருக்கும் உரிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒன்றாயிற்று. இத்தொண்டின் ஊடே அரசு பின்னணியில் இருந்ததால் வெள்ளைக்கார அரசுக்கும் அதன் நிருவாகத்திற்கும், அதன் நிருவாகத்திற்கு உட்பட்டு இருந்த இரயில்வே, அஞ்சல் துறை, இரும்பு, துணி முதலான தொழில் உற்பத்தி நிறுவனங்களுக்கும் எழுத்து அறிவும், கணக்கு அறிவும் தேவைப்பட்டன. இத்தேவைக்குத் தக வெள்ளைக்காரர் காலத்தில் கல்வி வடிவமைக்கப் பட்டது. கல்வியின் நோக்கம், பிழைப்பு மட்டுமன்று; அது ஒரு சத்தியத் தேட்டம் என ஐரோப்பிய, அமெரிக்க, சீன, சப்பானிய நாடுகளில் 400 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறியப்பட்டிருந்தது. கால அளவில் இந்தியாவிற்கும் மேற்கண்ட கல்வியின் விசால நோக்கம் விரிவடைந்தது. எனவே, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியன இந்தியா விடுதலை பெறும் முன்பே தோற்றுவிக்கப்பட்டன. விடுதலை பெற்று நம்மை நாமே ஆளுகின்ற உரிமைச் சூழல் உருவானவுடன் கல்வியின் தேவை வெகுவாக உணரப் பெற்றுக் கல்வி நிறுவனங்கள் பலவாகத் தோற்றுவிக்கப் பட்டன. இதனைப் பின்வரும் புள்ளிவிவரம் தெளிவாகக் காட்டும்.

**1951ஆம் ஆண்டு முதல் கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி**

| ஆண்டு | தொடக்கப் பள்ளி | நடுநிலைப் பள்ளி | மேல்நிலைப் பள்ளி | கல்லூரி பொது | கல்லூரி தொழில் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|---|---|
| 1950-51 | 2,09,671 | 13,596 | 7,416 | 370 | 208 | 27 |
| 1955-56 | 2,78,135 | 21,730 | 10,838 | 466 | 218 | 31 |
| 1960- 61 | 3,30,399 | 49,663 | 17,329 | 967 | 852 | 45 |
| 1965-66 | 3,91,064 | 75,798 | 27,614 | 1,536 | 770 | 64 |
| 1970-71 | 4,08,378 | 90,621 | 37,051 | 2,285 | 992 | 82 |
| 1975-76 | 4,54,270 | 1,06,571 | 43,054 | 3,667 | 3,276 | 101 |
| 1980-81 | 4,94,503 | 1,18,555 | 51,573 | 3,421 | 3,542 | 110 |
| 1985-86 | 5,28,872 | 1,34,846 | 65,837 | 4,067 | 1,533 | 126 |
| 1990-91 | 5,60,935 | 1,51,456 | 79,796 | 4,862 | 886 | 184 |
| 1991-92 | 5,65,786 | 1,52,077 | 81,747 | 5,058 | 950 | 196 |
| 1992-93 | 5,72,541 | 1,53,921 | 84,086 | 5,334 | 989 | 207 |
| 1993-94 | 5,72,923 | 1,55,707 | 88,411 | 5,639 | 1,125 | 213 |
| 1994-95 | 5,81,305 | 1,63,605 | 92,252 | 6,089 | 1,230 | 219 |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கடந்த 50 ஆண்டுகளில் இந்தியக் கல்வி பெரிய அளவு விரிவாகி இருக்கிறது என்பதில் ஐயமில்லை. என்றாலும், இது போதுமானது இல்லை. நூறு கோடி மக்களில் ஆறு கோடி இளைஞர்களே உயர் கல்வியைப் பெறும் வாய்ப்பை அடைந்துள்ளனர். 60 கோடி அளவு இந்திய மக்கள் எழுதவோ, வாசிக்கவோ அறியாத நிலையில் உள்ளனர். இது ஒருபுறம் இருக்க, கற்க வாய்ப்பைப் பெற்றுள்ள ஆறு கோடி இளைஞர்களும் இந்தியாவின் தேவைக்கும், சேவைக்கும் தக உருவாக்கப்படுகிறார்களா என்பது மிகப் பெரிய கேள்வியாக - இராட்சசக் கேள்வியாக மண்ணுக்கும், விண்ணுக்குமாக அனும அவதாரம் எடுத்து நிற்கிறது.

நாகர்கோவில் இலட்சுமி பிரியா என்ற கல்லூரி மாணவி கற்ற இளைஞர்களால் சாவின் எல்லைக்கு அழைத்துச் செல்லப்பட்டதும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்தியாவில் மிக உச்ச கல்வியாகக் கருதப்பெறும் மருத்துவம் பயிலும் மாணவர், நாவரசு எனும் தம் இளைய மாணவரை ராகிங் என்ற பெயரால் அங்கம் அங்கமாக வெட்டிப் பிரித்துக் கொன்றதும், நம் உயர் கல்வி திசை மாறிச் செல்கிறதோ எனுங் கருத்தைத் தோற்றுவித்துள்ளன. கல்வி நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் கணிசமானோர் நல்ல ஊதியம் பெற்றும், ஏழை மக்களிடம் இருந்து இலஞ்சம் வாங்கும் ஊழல் அரக்கர்களாக உள்ளனர் என்பதைக் கடந்த 25 ஆண்டுச் செய்திகள் நமக்கு நிறுவுகின்றன. உலக ஊழல் நாடுகளுள் இந்தியா முன்னணி நாடாக இருக்கிறது என்று ஜெர்மன் நாட்டுப் புள்ளிவிவரம் ஒன்று வரிசைப்படுத்துகிறது. நல்ல ஊதியம் பெறும் ஒரு சதமான கற்றோர் ஒரு பக்கம், அன்றாட வாழ்விற்கே அல்லல்படும் 99 சதமான ஏழை மக்கள் இன்னொரு பக்கம். இந்நிலையில் ஒரு சதமான ஊதிய மக்களுக்கு ஊதியம் தர உழைப்போரும், ஊழியம் செய்வோரும் ஏனையோரே என்ற உணர்வு சிறிது கூட இல்லாமல் தங்கள் வசதி வாய்ப்புகளை மட்டுமே உயர்த்திக் கொள்ளும் நிலைமை இன்னொரு பக்கம். கல்லாதவரே நல்லவர், மிக நல்லவர் எனத் தமிழ்ச் சித்தர் ஒருவரின் பாட்டு வரி சரியானதோ என்று நம்மை நினைக்க வைக்கும் சூழல் நாளும் விரிவடைந்து வருகிறது. இந்நிலையில் நாம் கற்பித்து வரும் கல்வி அமைப்பில் கட்டாய மாற்றங்கள் தேவையே என்ற நினைவைக் கற்கும், கற்ற மக்களின் செயற்பாடுகள் நம்மை ஏற்க வைக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கற்றலில் கூட முதல் வகுப்பு பெறுதல், நிறைய மதிப்பெண்கள் பெறுதல் ஆகியன மிக மிகப் பெரிய குறிக்கோள்களாக நம்மால் வற்புறுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இவ்வற்புறுத்தல் சரியானதுதானா என்ற ஐய வினாவைக் கற்றவர்தம் செயற்பாடுகள் தோற்றுவித்துள்ளன. I. T. (I.Q = Intelligence Quotient) எனும் அறிவுக் கூர்மை மட்டும் வாழ்க்கைக்கோ, பணி இடங்களுக்கோ போதாது என்பதை அண்மை அறிவு உலகம் கண்டறிந்துள்ளது. முதல் உலகப் பெரும் போர் வெடித்த 1918இல் இருந்து ஐ.கூ.வை மையமாக வைத்து இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் வழக்கம் அமெரிக்காவில் கொண்டுவரப் பட்டது. இதனை ஒட்டி இன்ன பிற நாடுகளிலும் ஐ.கூ. தேர்வு முறைகள் பரவின. ஆனால், அறிவுக் கூர்மை மேலாக இருந்தபோதும், உணர்வுகளைச் சுயமாகக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறம் இவர்களுக்குக் குறைவாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. பெற்றோர்கள் இடையேயும், ஆசிரியர்கள் இடையேயும் எடுக்கப்பட்ட ஆய்வில் இருந்து அறிவுக் கூர்மை இருந்தபோதும், உணர்வுப் பக்குவம் போதிய அளவு இல்லை என்பது தெரிய வந்தது. இதன் விளைவாக வீடு, கல்வி நிறுவனம், பணியாற்றும் அலுவலகம், அவர்கள் பங்கேற்கும் பொது இடம் ஆகிய எல்லாத் தளத்திலும் ஐ.கூ.வில் கூடுதலாக இருந்தும், உணர்வுப் பக்குவத்தில் குறைவாக இருப்போர் ஓர் அவலந்தரும் அறைகூவலாக ஆகிவிட்டதை அறிய முடிந்தது. இது பற்றி டேனியல் கோல்மேன் (Daniel Goleman) எனும் அறிஞர் விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். உணர்வுப் பக்குவம் (E.Q. = Emotional Intelligence) (உ.கூ.) என்றால் என்ன? ஜென் ஞானி ஒருவரைப் பார்த்துச் சாமுரே எனும் சப்பானியத் தற்கொலைப் படை வீரன் கேள்வி கேட்டான்.

சொர்க்கம் எது? நரகம் எது?

எனக்கு ஒன்றும் தெரியாது.

உன்னைப் போன்ற ஆட்களிடம் பேசி என் நேரத்தை வீணாக்க மாட்டேன் என்று அலட்சியத்துடனும், சீற்றத்துடனும் பதில் சொன்னார் ஜென் ஞானி.

சாமுரேவுக்குக் கடுங் கோபம் வந்தது. உறையிலிருந்த வாளை உருவினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஞானியை வெட்டக் கையை ஓங்கினான்.

ஞானி சொன்னார்.

இதற்குப் பெயர்தான் நரகம்.

பொறுமையாகவும், அமைதியாகவும் ஜென் ஞானி சொன்ன சாந்தமான பதிலைக் கேட்டவுடன் ஆத்திரம் முற்றும் தணிந்த அவ்வீரன், வாளை உறையில் போட்டு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் என்றான்.

அந்த ஞானி சொன்னார்.

இதற்குப் பெயர்தான் சொர்க்கம்.

ஒரு மனிதன் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதும், நெறிப்படுத்திக் கொள்வதுமே உணர்வுப் பக்குவமாகும்.

இதனை டேனியல் கோல்மேன் பின்வருமாறு வகைப்படுத்துகிறார்.

1. கோபம்
2. சோகம்
3. பயம்
4. மோகம்
5. காமம்
6. அதிர்ச்சி
7. வெறுப்புணர்ச்சி
8. வெட்கம்

ஆக, நம்மிடம் பயிலவரும் மாணவனை நிறைய மதிப்பெண் வாங்கும் வண்ணம் முன்நிறுத்த வேண்டும் என்பதைவிட, அவனுடைய பண்பைச் செவ்வைப்படுத்த வேண்டும்; பண்படுத்திப் பக்குவம் எய்தச் செய்ய வேண்டும் என்பதே தலையாய நோக்கம். இதுவே கற்ற இளைஞனுக்கு உரிய மெய்யான தகுதி. இதனைத்தான் நம் முன்னோர் 'படிப்பு' என்ற சொல் வழிக் கூறியுள்ளனர் போலும். படித்தவன் பண்பால் படிந்தவனாக இருத்தல் வேண்டும் என்பது கருத்து. நம் திருவள்ளுவ மேதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்*
*மக்கட்பண்பு இல்லா தவர்* [977]

என்று எழுதுகிறார். இதன் கருத்து, மக்களுக்குரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவை உடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர் என்பதாகும்.

உணர்வைக் கட்டுப்படுத்த, நெறிப்படுத்தத் தெரியாதவர், வாழ்க்கையில் தாம் துன்பம் உறுவதுடன், மற்றவர்களையும் துன்பப்படுத்துகிறார். கல்லூரி, பல்கலைக்கழகம், பணி செய்யும் இடம் என அவர் துன்பப்படுத்தும் எல்லை விரிந்து கொண்டே போகிறது. உணர்வை அறிவு அடிப்படையில் நெறிப்படுத்து வோருடைய வாழ்க்கை இன்பமாக இருக்கிறது. உணர்வு அடிப்படையில் குதித்துக் குமுறுவோர் வாழ்க்கை துன்ப மயமாக இருக்கிறது. அவர் இருப்பிடமும் துன்ப மயமாகிறது. ஒரு புள்ளிவிவரச் சான்று:

முதல் நெஞ்சு அதிர்ச்சியுற்ற 122 பேரிடம் ஆய்வு ஒன்று நிகழ்த்தப் பெற்றது. அவர்களில் 25 பேர் உணர்வு மயமாகி, வாழ்க்கையை அவநம்பிக்கையோடு (Pessimist) பார்க்கும் போக்கினர். அவர்களுள் 21 பேர் இறந்து போயினர். அவர்களில் அறிவை முன்நிறுத்தும் 25 பேரில் (Optimist) 6 பேர் மட்டுமே இறந்து போயினர்.

அமெரிக்காவில் நிகழ்த்தப்பட்ட பிறிதொரு புள்ளிவிபரம் வருமாறு. 1890இல் மணவிலக்கு பத்துச் சதமாக இருந்தது. 1920இல் அது 18 சதமாக உயர்ந்தது. 1950இல் அது 30 சதமாக வளர்ந்தது. 1970இல் 50 சதமாகப் பெருகிவிட்டது. 1990 இல் அது 67 சதமாகிவிட்டது. உணர்வு மயமாகிக் குடும்பம் சிதறி உள்ளுக்குள்ளேயே புகைந்து வாழ்க்கை அழகி அழிந்து போனதற்குச் சான்றாக இப்புள்ளிவிவரத்தை டேனியல் கோல்மேன் எடுத்துக் காட்டுகிறார்.

ஆக, கல்வியால் மூளையைத் தொடுவது ஒரு பக்கம் இருக்க, இதயத்தைத் தொடுவதும், பண்படுத்துவதும் மிக மிக முதன்மை யானவை. பைபிலில் நீதி மொழிகள் எனும் பகுதியை அடுத்துச் சபை உரையாடல் எனும் பகுதி உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எனக்கு முன் எருசலேமில் அரசராய் இருந்தவர்கள் எல்லாரையும்விட, நான் ஞானத்தை மிகுதியாகத் தேடிப் பெற்றவன்; மிகுந்த ஞானத்தையும், அறிவையும் அனுபவத்தால் பெற்றவன் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். ஞானத்தையும், அறிவையும் பற்றித் தெரிந்து கொள்வதில் என் சிந்தையைச் செலுத்தினேன். மடமையையும், மதிகேட்டையும் பற்றி அறிய முயன்றேன். இதுவும் காற்றைப் பிடிக்க முயலுவதற்கு ஒப்பானதே எனக் கண்டேன்."

மிகுந்த ஞானம் துக்ககரமானது. அறிவின் வளர்ச்சிக்குத் தக துயரமும் பெருகும்.

இக்கருத்துகளை முன்வைப்பதன் நோக்கம், கல்வியில் அறிவூட்டல் என்பதன் பங்கு இருத்தலாகாது என்பதற்காக அல்ல. அறிவின் பங்கு இருக்க வேண்டும்; ஆனால், அதே சமயம் உணர்வு மயமாக வரும் இளைஞனின் உணர்ச்சியை நெறிப்படுத்துவதும் நமக்கு நோக்கமாக, இன்னும் முதல் நோக்கமாக இருத்தல் வேண்டும். நம் கல்வி அமைப்பில் அந்தப் பகுதி மிக மிகக் குறைவான இடத்தைப் பெற்றிருக்கிறது அல்லது உயர் கல்வியில் இல்லாமலேயே இருக்கிறது. அப்படியானால், கல்வி பயிற்றலில் உணர்வுக் கூர்மையை எப்படி உட்படுத்துவது? இவ்வினாவிற்கு உரிய விடையை ஸ்டோன் என்பவரும், டிலிஹிண்ட் என்பவரும் Self Science: The Subject is Me எனும் நூலில் விரிவாக விளக்கியுள்ளனர். அந்நூலில் உள்ள இன்றியமையாத குறிப்புகள் வருமாறு.

**சுய விழிப்பு**

தன்னைப் பற்றியும், தன்னுடைய பலம், பலகீனம் பற்றியும் இளைஞனைத் தனக்குத் தானே அறியச் செய்வது.

**சுயமாக முடிவெடுக்கப் பழக்குவது**

அறிவுபூர்வமான சிந்தனை, உணர்வுப் பூர்வமான கொந்தளிப்பு ஆகியவற்றைத் தானே எடைபோட்டு முடிவு எடுக்கப் பழக்குவது.

**உணர்ச்சிகளை நெறிப்படுத்துவது**

கோபம், சோகம், மோகம், காமம் ஆகிய உணர்வுகள் மேலிடும்போது அவற்றை நிருவகிக்க கற்றுக் கொள்வதுடன், மனசாட்சியுடன் தனக்குத் தானே உரையாடப் பழக்குவது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### பதற்றத்தைக் கையாளத் தெரிவது

வாழ்க்கையில் தன்னைப் பதற்றப்படுத்தும் சம்பவங்கள் நேருகிறபோது பதறாமல் இருப்பதற்கான பயிற்சிகளைத் தருவது.

### உணர்வுகள்

மற்றவர்களுடைய உணர்வுகள், அவர் பக்கம் உள்ள நியாயங்கள், இருவரிடையே ஏற்படும் வேறுபாடுகளுக்கான காரணங்கள் ஆகியவற்றை அறிவது, பழக்குவது.

### தொடர்புகள்

மற்றவர்கள் கூறுவதைச் செவிமடுப்பது, ஆழமான கேள்விகள் எழுப்பப் பழக்குவது, மற்றவர்கள் மேல் பழியைப் போடாமல் தனக்குத் தானே ஆராய்ந்து முடிவு செய்வது. மற்றவர்களிடம் மறைக்காமல் புலப்படுத்துவது. நட்பையும், உறவையும் பலப்படுத்த மனம் திறந்து தம் உணர்வுகளை வெளிப்படுத்துவது.

வாழ்க்கை எதிர்விளைவுகள் ஆகியவற்றை அறிவது, மற்றவர் பக்கம் உள்ளவற்றையும் அறிவது.

### ஒப்புக் கொள்வது

தன்னிடம் உள்ள பலத்தையும், பலகீனத்தையும் நன்கு அறிந்து வைத்திருப்பது.

### தன்னை அறிவது

தன் உணர்ச்சிகரமான வாழ்க்கையின் போக்குகளை அடையாளம் காண்பது, எதிர்ச்செயல் புரிவது. அவற்றைப் போலவே மற்றவர்கள் போக்கையும் அறிந்து கொள்வது, ஒப்புக் கொள்வது.

### பொறுப்பேற்பது

பழி வரும்போது மற்றவர் பக்கம் தள்ளாமல் தனக்குரிய பொறுப்பைத் தானே ஏற்பது.

### தானே உடன்படுவது

தன்னிடம் உள்ள நல்ல குணங்களை எண்ணிப் பெருமிதம் கொள்வது, தன்னைப் பற்றி உடன்பாட்டு முகமாக அறிந்து கொள்வது. தன்னுடைய பலத்தையும், பலகீனத்தையும் புரிந்து கொள்வது, தன் நிலை அறிந்து தனக்குத் தானே நகைத்துக் கொள்வது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**உறுதிப்பாடு**

ஒரு கருத்தை வற்புறுத்தும்போது உணர்ச்சிவசப் படாமல், கோபதாபம் கொள்ளாமல் புலப்படுத்துவது; உறுதியாய் நிற்பது.

**கூட்டுணர்வு**

கூட்டாகச் செயல்படுவது. குழுவிற்குத் தலைமை வகிப்பது, குழுவிற்குப் பணிந்து பின்பற்றுவது.

**மோதலைத் தவிர்ப்பது**

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றவர்களோடு மோதலைத் தவிர்ப்பது; சமரச முறையில் வெற்றி காண்பது.

பண்படுத்துவது, பயன்படுத்தி வழி காட்டுவது என்பன நம் கல்வியின் தலைமைக் குறிக்கோள்களாக இருத்தல் வேண்டும். அப்படி நிகழ்ந்தால்தான் கற்றவரால் வருகின்ற சமுதாயத் தீமைகள் வாராது ஒழியும். படிப்பு வழிப் பண்படுத்தலை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பயிற்றுவிக்குமாறு பாடத்திட்டம், பயிற்று முறை, தேர்வு முறை ஆகியன அமைக்கப்பட வேண்டும். இதில் ஆசிரியர்களின் பங்கு மிக மிக முதன்மை வாய்ந்தது. ஆயிரக் கணக்கான உபதேசங்களைவிட, ஆசிரியர்கள் முன் எடுத்துக் காட்டாக மாணாக்கர்களுக்கு முன்பு மெய்யாகவே நடந்து காட்டுதல் மூலம் இலட்சக்கணக்கானவற்றைச் சாதிக்க முடியும்.

நபிநாயகத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவுபடுத்தலாம். வயதான கிழவி ஒருத்தி தன் பேரனை அழைத்துக் கொண்டு அண்ணல் நபியிடம் வந்தார் ''அண்ணலே இவன் மிகுதியாக இனிப்புகளைச் சாப்பிடுகிறான். இவன் உடல் கெட்டுவிடுமோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது. தாங்கள்தான் இவனுக்கு அறிவுரையைச் சொல்லித் திருத்த வேண்டும்''.

கிழவியின் முறையீட்டைக் கேட்ட நபி, மூன்று நாள் கழித்து வருமாறு சொல்லி அனுப்பினார். மூன்று நாட்களும் முடிந்த பிறகு கிழவி பேரனைக் கூட்டி வந்து நபி முன் நிறுத்தினார். அந்தச் சிறுவனைத் தட்டிக் கொடுத்து மிகுதியாக இனிப்பைச் சாப்பிடுவது அவன் உடலைக் கெடுக்கும் என்பதை மென்மையாகவும், பக்குவமாகவும் எடுத்துச் சொன்னார் அண்ணல் நபி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திரும்பும் முன் கிழவி கோபத்துடன் நபியைப் பார்த்துக் கேட்டார்.

''இதனைச் சொல்வதற்காகவா மூன்று நாள்? முன்பே சொல்லி இருக்கலாமே?''

அப்போது அண்ணல் நபி சொன்னார், மூன்று நாட்களுக்கு முன்பு நீங்கள் வந்தபோது என்னிடமும் இனிப்பை மிகுதியாகச் சாப்பிடும் பழக்கம் இருந்தது. நானே செய்து கொண்டிருக்கும் ஒரு செயலை இன்னொருவர் செய்யக் கூடாது என்று எப்படி அறிவுரை கூறுவது? அதற்காகத்தான் மூன்று நாள் கெடு கேட்டேன். கடந்த மூன்று நாட்களில் முயன்று இனிப்பைச் சாப்பிடும் பழக்கத்தை நிறுத்தி விட்டேன் என்றார்.

இந்நிகழ்வு, நம் அனைவரும் மிக மிக நினைவுகூரத் தக்க நிகழ்வு ஆகும்.

மாணவனுக்கு முன்பு நாம் வாழ்ந்து காட்டுதல் மூலம் அவனுடைய வாழ்க்கையில் மாற்றத்தைப் பதிய வைக்க முடியும். ஆசிரியர்கள் அப்படிப் பல பேர் வாழ்க்கையில் தம் பாதிப்பை உண்டாக்கி இருக்கிறார்கள். சான்றாக, அணுசக்தி விஞ்ஞானி அப்துல் கலாம் அண்மையில் அக்கினிச் சிறகுகள் (Wings of Fire) எனும் தன் சுய வரலாற்றை எழுதி வெளியிட்டுள்ளார். மிக அருமையாக எழுதப்பட்ட அந்நூலில் அப்துல் கலாம் தன் பள்ளி வாழ்க்கையில் தன்னைப் பாதித்த அய்யாதுரை சாலமன், இராமகிருஷ்ண ஐயர் என்ற ஆசிரியர்களையும், தான் பயின்ற திருச்சிராப்பள்ளித் தூய வளனார் கல்லூரியில் தனக்கு ஆங்கிலம் போதித்த தவத்திரு செக்யூரா அடிகளாரையும் நினைவு கூர்வதுடன், அவர்களுடைய நிழற்படங்களையும் இணைத்து வெளியிட்டுள்ளார். பழைய தலைமுறைகளில் மாணவர்களின் நெஞ்சைத் தொட்டுப் பாதித்த ஆசிரியர்கள் மிகுதி. ஆனால், இன்று மாணவர்களின் வருங்காலத்தை வடித்தெடுத்துப் பக்குவப்படுத்தும் ஆசிரியர்களின் பங்கு குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு ஒரு சான்று, அண்மையில் தமிழ்நாடு அரசுக்கு உட்பட்ட தேர்வாணையத்தில், துணை ஆட்சித் தலைவர்களையும், மாவட்டக் காவல் அதிகாரிகளையும் தேர்ந்தெடுக்கும் நேர்முகம் நிகழ்ந்தது. தெரிவுக் குழுவில் பங்கேற்கும் பொறுப்பு எனக்குக் கிட்டியது. விண்ணப்பம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்த 4000 பேருக்கு எழுத்துத் தேர்வு நடத்தி, அதிலிருந்து 180 பேரை வடி கட்டி, நேர்முகத்திற்கு வரச் செய்திருந்தார்கள். நேர்முகத்தில் குழுவில் இருந்த மிக உயர்ந்த பொறுப்பில் உள்ள ஓர் உறுப்பினர் நேர்முகத்திற்கு வந்த அத்தனைப் பேரிடமும் ஒரு கேள்வியைக் கேட்டார்.

உங்களுடைய வாழ்க்கையில் எடுத்துக் காட்டு மனிதர் யார்?

இந்த வினாவிற்கு விடை அளித்த ஆண்களும், பெண்களுமான அந்த இளைஞர்கள், தம் அம்மாவையும், தம் அப்பாவையும், ஓரிருவர் தம் சாதித் தலைவரையும், கட்சித் தலைவர்களையும் சுட்டிக் காட்டினார்களே யன்றி, ஒருவர் கூடத் தம் ஆசிரியர் என்று விடை அளிக்க வில்லை. இது அதிர்ச்சி தருவதாக இருக்கலாம். ஆனால், இதுதான் உண்மை. இங்கே வற்புறுத்த விரும்புவது, மாணாக்க இளைஞர்களுக்கு வகுப்பெடுக்கும் பொறுப்பு மட்டுமில்லாமல், நடந்து காட்டும் மாதிரி மனிதராக நம் ஆசிரியர் சமூகம் விளங்க வேண்டும். அவ்வாறு விளங்கவும் முடியும். அவ்வாறு விளங்குவோரும் நம்மில் கணிசமாக இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை பெருக வேண்டும்.

அண்மையில் அக்ரியுனிஃபேஸ்ட் (மார்ச்சு 12-16, 1999) எனும் அனைத்துலக இளைஞர் விழா இந்தியாவில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழக மாணாக்கர்கள் பங்கேற்கும் வண்ணம் நடத்தப் பட்டது. பங்கேற்ற ஆடவர், பெண்டிர் உள்ளிட்ட மாணாக்கர்களிடம் வினா நிரல் அளிக்கப்பட்டு விடைகள் திரட்டப்பட்டன. வினா நிரலில் தங்களை ஊக்குவித்த மூலவர் யார் எனும் கேள்வி அடங்கி இருந்தது. அக்கேள்விக்கு இறுத்த விடையில் இருந்து பெற்ற முடிவுகளின் படியும், மாணாக்கர்களைச் செல்வாக்கு செலுத்துவதில் ஆசிரியரின் பங்கு குறைவாக உள்ளது என்பது தெரிய வருகிறது.

என்ன இது? படிப்பைப் பற்றியும், பாடத்திட்டம் பற்றியும், தேர்வு முறை பற்றியும் பேசாமல் பண்பைப் பற்றிப் பேசுகிறாரே என்று நினைத்தல் வேண்டாம். ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது. நம்மிடம் பயிலும் மாணாக்கர்களுக்கு மதிப்பெண் பட்டியலைத் தருவதுடன், அவனுக்கு அவனுடைய பண்பை மதிப்பீடும் நடத்தைச் சான்றிதழையும் (Conduct Certificate) நாம் வழங்கி வருகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| | பங்கேற்ற பல்கலைக்கழக மாணாக்கர்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஊக்கமளிப்பு விபரம் | யுஎஸ் | யுஎஸ் | பிஎயு | எஎயு | ஓயுஎடி | டிஎன் எயு | ஜேஎன் கேவிவி | பிடி கேவி | கேஎயு | ஜிபிபி யுஎடி | எம்பி கேவிபி | எண்ணிக்கை |
| தாய் | 61.54 | 26.09 | 38.46 | 18.18 | 50.00 | 35.00 | 23.53 | 62.50 | 35.29 | 16.00 | 75.00 | 35.50 |
| தந்தை | 49.15 | 21.74 | 38.46 | 27.27 | 42.86 | 45.00 | 17.65 | 37.50 | 47.06 | 24.00 | 62.50 | 34.91 |
| உடன்பிறந்தவர் | 46.15 | 13.04 | 15.38 | 9.09 | 35.71 | 30.00 | 11.76 | 37.50 | 5.88 | 4.00 | 25.00 | 18.13 |
| உடன்பிறந்தவள் | 61.54 | 13.04 | 30.77 | - | 21.43 | 25.00 | 11.76 | 12.50 | 23.53 | 8.00 | 12.50 | 19.52 |
| குடும்பம் முழுதும் | 76.92 | 39.13 | 23.08 | 45.45 | 71.43 | 50.00 | 52.94 | 25.00 | 58.82 | 52.00 | 50.00 | 50.29 |
| நண்பர்கள் | 76.92 | 65.22 | 61.54 | 18.18 | 92.86 | 90.00 | 52.94 | 87.50 | 76.47 | 48.00 | 37.50 | 65.09 |
| ஆசிரியர்கள் | 61.54 | 56.52 | 30.77 | 18.18 | 78.57 | 15.00 | 41.18 | 75.00 | 70.59 | - | 37.50 | 40.82 |
| தன் ஊக்குவிப்பு | 84.62 | 43.48 | 84.62 | 81.82 | 71.43 | 90.00 | 100.00 | 75.00 | 64.70 | 92.00 | 100.00 | 79.29 |

www.tamilarangam.net



இம்முறை வெள்ளைக்காரர் நம்முடைய கல்வி முறையில் வைத்து விட்டுப் போன ஓர் உயர்ந்த முறை. ஆனால், இம்முறை இன்று வெறும் சடங்காக மாறிவிட்டதுதான் அவலம். இதன் அருமையை நாம் அறிதல் வேண்டும். நம்மிடம் பயிலும் இளைஞர்கள் வெறும் பட்டத்தை மட்டும் அல்ல: நல்ல பண்புகளையும் வாங்கிச் செரித்துத் தம் நாடி நரம்போடும், குருதியோடும் கலந்து உயர்ந்த மனிதராக வெளிச் செல்ல வேண்டும்.

அந்த உயர்ந்த மனிதர்களை உருவாக்கும் பொறுப்பு உயர்ந்த ஆசிரியர் சமுதாயத்திற்கும், கல்லூரி முதல்வர்களுக்கும், கல்வித் துறையைச் சார்ந்த அத்தனைப் பேருக்கும் இருந்தாக வேண்டும்.

**அது நம்மிடம் முன்பே இருக்கிறது.**

**அது பெரிய அளவு பெருக வேண்டும்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறிவியல் கல்வி

மானுடம் தோன்றி வளர்ந்து தெளிவுற்ற காலந் தொடங்கி இன்று வரை கூட்டிப் பார்த்தால் உச்சத்தில் சில சிந்தனை மரபுகள் மானுடத்தை நெறிப்படுத்தி வந்துள்ளமை புலப்படும்.

1850 வாக்கில் சார்லஸ் டார்வின் எழுதி நிறுவிய பரிணாமச் சிந்தனையும், தொடர்ந்து காரல் மார்க்ஸ் எழுதிய பொருளாதாரச் சிந்தனையும், தொடர்ந்து சிக்மன் பிராய்டு எழுதிய உளவியல், சிந்தனையும் கடந்த 150 ஆண்டுகளாக உலகச் சமுதாயத்தைப் பெரிதும் பாதித்துள்ளன.

இம்மூவரின் சிந்தனைகளுக்கு முன்பு உலகில் புழங்கிய மரபுகளைக் கிரேக்கச் சிந்தனை மரபு என்றும், இந்தியச் சிந்தனை மரபு என்றும், சீனச் சிந்தனை மரபு என்றும், அராபியச் சிந்தனை மரபு என்றும் பகுக்கலாம். இவற்றுள் கிரேக்கச் சிந்தனை மரபு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், அவர்கள் ஆண்ட நாடுகளிலும் மிகப் பரவலாகப் பரவியது. இந்தியச் சிந்தனை மரபு இலங்கை, இந்தோனேசியா முதலான தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியது. சீனச் சிந்தனை மரபு சீன மங்கோலிய இன மக்கள் பரவிய இடங்களை எல்லாம் பற்றிக் கொண்டது. அராபியச் சிந்தனை, செமித்திக் இன மக்களையும், இசுலாமிய மத மக்களையும் ஈர்த்துக் கொண்டது.

மேற்கண்ட நான்கு சிந்தனை மரபுகளுள் கிரேக்க மரபே பிற்கால அறிவியல் தோற்றத்திற்குப் பெரிதும் காரணமாக இருந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிவியலுக்கு அடிப்படை தரவு. முற்றாக ஒன்றை நம்பாமையும், சரிபார்த்து நம்புவதும் அறிவியலைத் தோற்றுவித்து வளர்த்தன. இந்தியச் சிந்தனை மரபு மதங்களைச் சார்ந்ததாகும். நம்பிக்கை யையே (Faith) முற்றும் தழுவியதாகும். இதனால் மறுமைக் கவலையும், இரசனை மனோபாவமும், போற்றி மனோபாவமும் செழித்த அளவிற்கு அறிவியல் ஆராய்ச்சி மனோபாவம் வளர வில்லை.

ஈதன்றி, இந்தியரிடையே பெரிய அளவு அறிவியல் பெருகாமல் போனதற்குப் பிறிதொரு காரணமும் இருக்கிறது. மேற்கு ஐரோப்பிய நாடுகள் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை ரோம ஆதிக்கத்தில் இருந்தன. ரோம ஆதிக்கம், ரோமர்களின் ஆதிக்க அரசியலிலும், இலத்தீன் மொழி ஆதிக்கம், கோயில், நீதிமன்றம், கல்விக்கூடம், கலைப் பண்பாடு முதலான அனைத்திலும் இருந்தன. இவற்றுள் குறிப்பாகக் கருதத் தக்கது, ரோமானியர் ஆட்சியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கல்வி அந்தந்த மக்களின் சொந்த மொழியில் இல்லாமல் இலத்தீன் மொழியில் இருந்தது என்பதாகும்.

ரோமப் பண்பாட்டுச் செல்வாக்கு இங்கிலாந்து நகரங்களில், உயர் குடியினரிடமே மிகுதியாக விளங்கியது. மக்கள் பலர் இரு மொழியாளராய்க் கெல்திய மொழியையும், இலத்தீனையும் அறிந்திருந்தனர்.

ரோம ஆதிக்கத்திலிருந்து மேற்கு ஐரோப்பா விடுபடுவதற்கு முக்கிய உந்தாற்றலாக விளங்கியது சீர்திருத்த இயக்கம் (1517 1525). ரோமத் திருச்சபையின் இறையியல் அரசியல் ஆதிக்கம் வலுவிழந்தது. சீர்திருத்த இயக்கத்தோடு இணைந்த எழுச்சி தேசியம் என்ற கருத்தியல், தேச அரசு என்ற அரசமைப்பு, முதலாளித்துவப் பொருளாதார வளர்ச்சி தேசச் சந்தைகளை உருவாக்கியமை ஆகியன ஒன்றைச் சார்ந்து ஒன்றோடொன்று நிகழ்ந்தன. மேலும் 1456 இல் அச்சுச் சாதனம் செருமனில் கண்டுபிடிக்கப்பட்டது. இலத்தீன் மொழி ஆதிக்கத்திற்கு அறைகூவல் விடுத்தது. அந்தந்தத் தேச மொழிகள் அச்சுச் சாதனத்தின் வளர்ச்சியால் செம்மையாக்கம் பெற்ற மொழியாக உருவம் பெற்றன. இதில் விவலிய மொழிபெயர்ப்பு முக்கிய இடம் பெற்றது. இலத்தீன் விவிலியம்

www.tamilarangam.net



பலவேறு மொழிகளில் பெயர்க்கப் பெற்றதன் மூலம், மொழிச் செம்மையாக்கம் ஏற்பட்டது. மார்ட்டின் லூதரின் விவலிய மொழிபெயர்ப்பு மூலம், பல கிளை மொழிகளாகச் சிதறியிருந்தவை ஜெர்மன் மொழியாகத் தனி உருப் பெற்றன. இலத்தீன் மொழியில்தான் விவிலியம் வாசிக்கப்பட வேண்டும் என்ற பிடிவாதத்திற்கு முடிவு கட்டப்பட்டது.

கல்விமொழியாக அந்தந்தத் தேசிய மொழிகள் புதுவாழ்வை எய்தின. 15ஆம் நூற்றாண்டின் மனித மையச் சிந்தனையாளர்கள் (Humanists) செவ்வியல் மொழிகள் கற்பிக்க அரிய பல நூல்களை உருவாக்கினர். அப்போது தோன்றியோரே ஜான் கொலட் (John Colet), தாமஸ் மோர் (Thomas More) முதலானோர். இடைக்கால இறையியல் சார்ந்த பள்ளிகளுக்கு (Medieval Eccles laticas School) மாறாக மொழிப் பள்ளிகள் அமைந்தன.

கிறிஸ்தவச் சீர்திருத்த இயக்கப் பின்புலத்தில் தேச அரசுகள் கல்வித் துறையில் நேரிடையாக ஈடுபடத் தொடங்கின. சீர்திருத்த இயக்கத்தினர் பரந்துபட்ட வெகுமக்களுக்கும் கல்வியை எடுத்துச் செல்வதில் நாட்டம் செலுத்தினர். லூதர் இதில் முன்னணியில் இருந்தார். இவர் ஊக்கத்தால் 1543இல் ஜெர்மனியில் மூன்று பொதுப் பள்ளிகள் தொடங்கப் பட்டன. இங்கு ஜெர்மன் மொழி பயிற்றுவிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றி அரசின் அதிகாரத்தை உறுதி செய்யும் முகமாகக் கல்வித் துறையில் நேர் கவனம் செலுத்தினார். திருச்சபையின் சொத்துகள், கல்விக்கெனக் கையகப் படுத்தப் பட்டன. இதில் ஆங்கிலம், பிரெஞ்சு, இத்தாலியம் பயிற்று விக்கப்பட்டன.

இங்கிலாந்தில் வணிக வர்க்கத்தின் வளர்ச்சியும், கால்வினிய (Calvinist) எண்ணங்கள் பரவி, தூயநெறி (Puritan) இயக்கம் வலுப்பெற்றதும், ஆங்கிலம் முன்னுரிமை பெறக் காரணமாயின.

பிரான்சிலும் 16ஆம் நூற்றாண்டு வரை கல்வியில் கத்தோலிக்கத் திருச்சபையின் ஆதிக்கம் இருந்தது. சீர்திருத்தக்காரர்கள், இதனை எதிர்த்தனர். தனி மனிதருக்கு முதன்மை வழங்கிய இவர்கள், மரபு வழிக் கல்வியைக் கண்டித்தனர். ஃபிரான்சுவா ரெபெலேர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(Francois Rabelair) தம்முடைய பண்டாக்ருவல் (Panta Gruel (1532)., கற்கண்ட்வா (Gargantua (1534) நாவல்களில் இதைக் கேலி செய்துள்ளார்.

கல்வி மொழி, தாய்மொழி ஆகிப் போனமையால், கண்டுபிடிப்புகளும் தொழிற்புரட்சியும் தோன்றின. வேளாண்மை, கைவினை சார்ந்த பொருளாதாரத்திலிருந்து இயந்திரமயப்பட்ட பெரும் பொருள் உற்பத்தி முறைக்கு ஏற்பட்ட மாற்றமே தொழிற் புரட்சி. இது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கியது.

### இப்புரட்சியின் மூன்று கூறுகள்

1. தொழில் நுட்பம், இரும்பு, எஃகு ஆகியவற்றின் பயன்பாடு, கரி, மின்சாரம், நீராவி, பெட்ரோலியம் முதலானவற்றின் வழிப் புதிய உந்துசக்தியும் எரிபொருளும், புதிய இயந்திரங்களின் கண்டுபிடிப்பும் பயன்பாடும். எடுத்துக்காட்டு, புதிய உற்பத்தி முறை, கருவி வழி நூற்பு, நெசவு முறைகள் அறிமுகமாயின. தொழிற்சாலைகளின் மூலமாகப் போக்குவரத்திலும் தகவல் தொடர்பிலும் பெரும் முன்னேற்றம். அறிவியலைத் தொழில் துறைக்குப் பயன்படுத்தியமை.
2. வேளாண் உற்பத்தியின் பெருக்கம் மூலமாக வேளாண்மை சாராத உழைப்பாளிகளுக்கும் உணவு கிடைத்தது. உற்பத்திக்கு நிலத்தைச் சார்ந்திட வேண்டாத நிலையும் இவற்றுக்கு உகந்த அரசியல் அமைப்பு மாற்றங்களும் நிகழ்ந்தன.
3. பண்பாட்டு மாற்றங்கள். சுதந்திரக் கைவினைஞர்களாக இருந்தவர்கள் தொழிற்சாலைக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட கூலித் தொழிலாளர்களாக மாறினர்.

### தொழிற் புரட்சி முதன் முதலில் தோன்றியது இங்கிலாந்தில்

இங்கிலாந்தில் 1770-1800 வரையிலான காலக்கட்டத்தில் ஏற்பட்ட மிக விரைவான தொழில் வளர்ச்சி தொழில் புரட்சி எனச் சுட்டப்பட்டது. இந்த முப்பது ஆண்டுகளில் ஏற்றுமதி ஐந்து மடங்காகவும், தொழில் உற்பத்தி நான்கு மடங்காகவும் பெருகின. 1800 ஆம் ஆண்டில் இங்கிலாந்தே தொழில் மயமாக்கத்தில் முன்னணியில் இருந்தது. மக்கள் தொகைப் பெருக்கம் 1790இல் 83 இலட்சங்கள், 1811இல் ஒருகோடி 21 இலட்சங்களாக இருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கிலாந்தை ஒப்பிட, பிரான்சு தொழில் புரட்சியில் ஒரு தலைமுறைக் காலம் பின்தங்கி இருந்தது. காரணம் 1789இல் நிகழ்ந்த பிரெஞ்சு புரட்சி. 1848 புரட்சியின் போது பிரான்சுக்கு இரண்டாவது இடம்.

ஜெர்மனியில் தொழில் புரட்சி 19ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்தான் ஏற்பட்டது. 1870 இல் ஜெர்மன் இணைப்பு ஏற்பட்ட பிறகே தொழில் புரட்சி தொடங்கியது. ஆனால், முதல் உலகப் போரின் தொடக்கத்தில், உலக அளவில், அமெரிக்காவிற்கு அடுத்த நிலையை எட்டிவிட்டது.

ஆக, அந்தந்த மக்களின் மொழிவழிப்பட்ட தேசிய அரசு சார் மக்கள் சொந்த மொழியில் கற்றமையால் அறிவியல் சிந்தனை பிறந்தது, தொழில் நுட்பங்கள் தோன்றின, தொழில் புரட்சி வெடித்தது. இவற்றைச் சிறப்பாகச் செரித்துக் கொண்டும், வரித்துக் கொண்டும் செயல்பட்டனர் ஐரோப்பிய மக்கள்.

மேற்கு ஐரோப்பியர், கி.மு.வில் அறிவுக் கண்களைத் திறந்து விட்ட கிரேக்கப் பண்பாட்டைத் தழுவிக் கொண்டமையும், கி.பி. 15ஆம் நூற்றாண்டு முதல் தேசிய எழுச்சி கொண்டமையும், அவர்தம் அறிவியல் வெற்றிக்குப் பெரும் காரணங்களாக அமைந்தன. இத்தகு வாய்ப்பு தமிழர்க்கு இன்று வரை ஏற்படவில்லை.

தமிழ்மொழி தமிழர்களை ஏழ்மைப் படுத்தவில்லை, தன் இலக்கியங்களாலும், இலக்கணங்களாலும், தமிழர்களை வளமை உடையவர்களாக ஆக்கிற்று. ஆனால், இடைக்கால, பிற்கால, ஏன் இக்காலத் தமிழர்கள் கூடக் குறிப்பாகத் தமிழ் அறிவியலாளர்கள் தமிழையும், தமிழனையும், தமிழகத்தையும் போதிய அளவில் வளப்படுத்தத் தவறிவிட்டார்கள் என்றே சொல்லுதல் வேண்டும். அறிவியல் தமிழ் என்பது மொழி சார்ந்த கோட்பாடு அன்று. அது தமிழ் மக்களை மேலே எடுத்துச் செல்வதற்கு முன் வைக்கப் பெறும் கோட்பாடாகும்.

எனினும், மொழி சார்ந்த ஒரு வரலாற்றையும் தமிழர்க்கு நினைவு படுத்த வேண்டும். பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகில் ஏறத்தாழப் பதினைந்தாயிரம் மொழிகள் வழக்கில் இருந்தன. இன்று இவை ஏழாயிரம் அளவில் சுருங்கி விட்டன. எஞ்சியவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறந்து விட்டன. இவற்றினிடையே வழக்கிழந்த மொழிகளாகக் குறிப்பிடத் தக்கவை எகிப்தியம், சுமேரியம், எட்ருசியன், ஏசு பேசிய அம்காரிக் ஆகியவை ஆகும். கொலம்பஸ் 500 ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்த இரண்டு அமெரிக்காவிலும் வழங்கிய மொழிகள் 2200 ஆகும். இவற்றுள் இன்று இருப்பவை 600 மொழிகள் மட்டுமே. 250 மொழிகள் காலப்போக்கில் விரைவில் அழிந்துவிடும் நிலையில் உள்ளன. ஐரோப்பியர் ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் பொழுது அங்கே வழக்கில் இருந்த மொழிகள் 200 ஆகும். இவற்றுள் 135 மொழிகள் வழக்கில் இருந்து அழியும் நிலையில் உள்ளன. 15,000 மொழிகள் இருந்த உலக நாடுகளில் வருங்காலத்தில் 300 முதல் 600 வரையே நிலை பெற்றிருக்கும் என்று ஜெர்மானிய அறிவியல் அறிஞர் மார்ட்டின் ஹேஸ்பல் மார்த் கணித்துள்ளார். தமிழையும், வாழும் மொழிகளுள் ஒன்றாக வருங்காலத்து வைக்க வேண்டிய கடமை அறிவியலாளர்க்கு இருக்கிறது. இல்லையெனில் தமிழ், புலவர் மொழி என்ற அளவிலேயே ஒதுக்கப்பட்டுவிடும் பேராபத்துக் காத்துக் கொண்டிருக்கிறது.

மொழிகள் வழக்கிழப்பதற்கான காரணங்களைப் பின்வருமாறு அறிஞர்கள் வரிசைப்படுத்துகிறார்கள்.*

1. மக்கள் இடப் பெயர்ச்சி (People Mobility)
2. வணிகத் தொடர்புகள் (Trade And Commerce)
3. மொழிப் பெரும்பான்மை மக்களின் கீழ் இருப்பதால் சிறுபான்மை மொழி பேசுநர்க்கு நேரும் அரசியல் பண்பாட்டு நெருக்கடி (Political and Cultural Pressure on Minority Language Groups),
4. மக்கள் தொடர்புச் சாதனங்கள் (Mass Media)
5. காலனி ஆட்சிக்கு உள்ளாவது (Colonialism)
6. இனப் படுகொலை (Genocide)

* Martin Haspelmath Scientist, Berlin in a Journal Muttersprache (Mother Tongue), A German Language Society Publication, "Ethnic Identity & National Integration," Ed. Ali Ashraf, Concept Publishing Co., New Delhi 110 059, 1994.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கண்ட ஆறு காரணங்களும் தமிழ் மொழியைப் பொறுத்த அளவிற்கு இன்று முற்றுமாக நீங்கி விட்டன என்று கருத முடியாது. இதனையும் நாம் கருத்தில் இருத்த வேண்டும்.

தமிழரைப் பொறுத்த வரை அறிவியல் மூன்று முனைகளில் செழிப்புற வேண்டும்.

1. கண்டுபிடிப்பு முனை
2. தொழில்நுட்ப முனை
3. பொதுமக்கள் முனை.

இந்த மூன்று முனைகளிலும் அறிவியல் சென்று சேருவது தமிழுக்காக அன்று. தமிழர்க்காகும். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளைப் போல ஆசியக் கண்டத்திலும், அண்மைக் காலத்தில் சப்பான், வியட்நாம், கொரியா ஆகிய நாடுகளில் அறிவியல் தொழில்நுட்பம் பேரளவு வளர்ந்துள்ளமைக்குக் காரணம், அந்த மக்களின் அயரா உழைப்பு என்பதுடன், அவர்கள் தம் சொந்த மொழியில் அறிவியல் கல்வியையும், ஆராய்ச்சியையும் மேற் கொண்டதாகும். இத்தகு நிலை தமிழரிடையே தோன்றும்போது கற்கும் மாணவர் கிளிப்பிள்ளை மனப்போக்கில் வளராமல் புதிய அறிவியல் இராகம் பாடும் குயில் பிள்ளைகளாக வளருவார்கள். அறிவியல் கண்டுபிடிப்பு இதனால் மேலும் பெருக வாய்ப்புண்டு.

அறிவியல் கண்டுபிடிப்பாளர்களின் வாழ்க்கையை ஆராய்ந்த வர்கள் பின்வருவனவற்றை அவர்தம் தலைமைப் பண்புகளாக நிரல்படுத்துகிறார்கள்.**

1. அயரா முயற்சி (Intense Persistence)
2. நிறைவேறும் என்று நம்புதல் (Optimism)
3. மூலத்துவத்துடன் கூடிய அணுகுமுறை (Originality Of Approach)
4. திறன் வாய்ந்த அழகு நயத்தோடு கூடிய மரபு (Combined With Aesthetical Conviction)
5. மொழிச் சுதந்திரம் (Extreme Independence)

** The Roots of Invention by Goron Rattray Taylor, the Inventions that Changed the World, 1982, P.6.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழில் நுட்பம் சார்ந்த கண்டுபிடிப்புகளைக் கூட முறையான கல்வி பெற்றவர்களை விட வேறு துறையாளர்களே நிகழ்த்துகிறார்கள். லியோ போல்டு மேன் (Leo Pold Mannes), லியோ போல்டு கொடொவ்ஸ்கி (Leo Pold Godowsky), ஜார்ஜ் ஈஸ்ட் மேன் (George East Man) ஆகியோர் வண்ணப் பிலிம் களைக் கண்டுபிடித்தார்கள். முதல் இருவரும் இசைத் துறையைச் சேர்ந்தவர்கள், மூன்றாமவர் வங்கிக் கணக்காளர். நாம் அனைவரும் இன்று பயன்படுத்தும் பல்வேறு வகை பால் பாயிண்ட் பேனாவைக் கண்டுபிடித்த லடிஸ் லாவ் பீரோ என்பவர் ஓவியராகவும், சிற்பியாயும் இதழ்களில் பணியாற்றியவர். பாட்டில்களுக்கு மூடிகளை விற்றுக் கொண்டிருந்த கிங் காம்ப் கில்லெட் (King Kamp Gillette) என்பவர்தான், புகழ் பெற்ற கில்லெட் பிளேடைக் கண்டுபிடித்தவர். இப்படி பட்டியல் நீளுகிறது. இதன் பொருள் என்ன வென்றால், நாம் பல்கலைக்கழக அரங்குகளில் வழங்கும் முறைசார் அறிவியல் கல்வி நம் இளைஞர்களின் அறிவியல் மனோபாவத்தைக் கண்டுபிடித்து ஊக்கப்படுத்துவது இல்லை. எனவே, தொழில் நுட்ப அறிவியலைச் சிந்திப்பதுடன், நம் இளைஞர்களை அது நோக்கிக் கொண்டு செல்லும் கல்வி அமைப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

அனைத்திற்கும் மேலாக, அறிவியல் தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகளின் நுகர்வோராக இருக்கும் தமிழர், அறிவியல் மனப்பாங்கு இல்லாது இருப்பதாகும். மாறாக, இரசனை வெறித்தனமும், போற்றி மனோபாவமும் உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே, நுகரும் கலாச்சாரம் தமிழரிடையே வளர்ந்த அளவிற்கு அறிவுக் கலாச்சாரம் வளரவில்லை. இதை வளர்க்கும் பொறுப்பு அறிவியல் தமிழ் அறிஞர்களுக்குப் பெரிய அளவில் இருக்கிறது. அவர்தம் எழுத்துகள், தொடர்புச் சாதனப் பேச்சுகள் இவற்றின் மூலம் தமிழ்நாட்டில் அறிவியல் புரட்சியை உண்டாக்க முடியும், உண்டாக்க வேண்டும்.

www.tamilarangam.net

# மானுட வளர்ச்சிக்கு உயர்கல்வி

'மானுட வளர்ச்சிக்கு உயர்கல்வி' எனுந் தலைப்பில் உலக மாநாடு புதுதில்லியில் நடந்தது. எழுபத்தைந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கும் அனைத்திந்தியப் பல்கலைக்கழகச் சங்கம் இம்மாநாட்டை நடத்தியது. பிரிட்டிஷ் கவின்சிலும், தில்லி ஜாம்யா ஹம்தார்டு பல்லைக்கழகமும் துணை நின்றன. இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களும் அழைக்கப்பட்டிருந்தன. தமிழகத்திலிருந்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், புதுவைப் பல்கலைக்கழகம் ஆகிய வற்றின் துணைவேந்தர்கள் பங்கேற்றனர். இங்கிலாந்து, ஜெர்மனி, தென்னாப்பிரிக்கக் கல்வியாளர்களும் வருகை தந்தனர். சுமார் இருநூறு பேர் பங்கேற்றிருந்த இம்மாநாட்டைப் பிர்லா தொழில் நுட்ப நிறுவன (BITS) இயக்குநர் எஸ். வேங்கடேசுவரன் தொடங்கி வைத்தார். பல்கலைக்கழக நல்கைக் குழுவின் தலைவர் கௌதம் உட்படப் பலர் பங்கேற்று உரை நிகழ்த்தினர்.

எண்பதுக்கு மேற்பட்ட கட்டுரைகள் அளிக்கப்பட்ட இம்மாநாட்டில், இருபத்தோரம் நூற்றாண்டை நோக்கிய உயர்கல்வியும் உலகமயமாதலுக்கு ஏற்ற உயர்கல்வியும் மிகப் பலரால் பேசப் பெற்றன. அனைத்திலும் முதன்மையாகக் கல்வி சிந்தை வளமாதல் என்ற நிலையிலிருந்து சந்தைமயமாதல் நோக்கி நகர்ந்துவிட்டதை ஹோவார்ட் நியூபி (யு.கே.) சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலாய நாடுகள், கல்வி சந்தைமயமாக்குதலில் பெருந் தொலைவு சென்று விட்டன. அந்நாடுகளின் கல்வி விற்பனைக்குரிய சந்தையிடங்களுள் இந்தியாவும் முன்னிடம் பெற்று வருகிறது.

தொடக்கவுரை நிகழ்த்திய தமிழகம் சார்ந்த பிலாயில் வாழும் வேங்கடேசுவரன் சில நல்ல சிந்தனைகளை வழங்கினார். இந்தியாவில் மனிதர்கள் நிரம்ப இருக்கும் அளவிற்கு மனித வளம் இல்லை. மனித வளர்ச்சியை நோக்குவதைவிட, மனித வளத்தைப் பெருக்குவதைக் கல்வி நோக்கமாகக் கொள்ளுதல் வேண்டும். உலகமயமாதலும், தகவல் தொழில் நுட்பப் புரட்சியும் இந்தியாவை அனைத்து மட்டத்திலும் பாதித்து வருகின்றன. அதற்கேற்ப, உயர்கல்விக் குரிய பல்கலைக்கழகங்களிடையே வேகம் இல்லை. அறிவே தொழிலாகி விட்டது, வணிகம் ஆகி விட்டது. சந்தைப் பொருள் ஆகிவிட்டது.

அனைந்திந்தியப் பல்கலைக்கழகச் சங்கச் செயலர், கே.பி. பவார், உயர்கல்வியின் முகமாற்றம் எனுந் தலைப்பில் ஆற்றிய உரை குறிப்பிடத் தகுந்தது.

உயர்கல்வி, உலகமயமாதலுக்கேற்ப உருமாற வேண்டும் என்ற கூப்பாடு, பலர் கருத்துரைகளில் கேட்கிறது. கூர்ந்து நோக்கினால், ஐரோப்பிய, அமெரிக்க, வளைகுடா, ஆஸ்திரேலியா, ஜப்பான் முதலான நாடுகளின் தேவைகளுக்கேற்ப, இந்தியக் கல்வியின் முகத்தையே சதை மாற்றம் செய்துவிட வேண்டும் என்ற பொல்லா ஆசை புதைந்து கிடப்பது தெரிகிறது.

நம் நாட்டைப் பற்றிப் பிடுங்கிக் கொண்டிருக்கும் வறுமை, ஊழல், வன்முறை, அறியாமை, சாதி மதப் பூசல், வேலையின்மை, சுற்றுச்சூழல் கேடு, தூய்மைக் கேடு, எரிசக்திப் போதாமை, பண்பாட்டுக் குறைவு, நாகரிகம் இன்மை முதலானவற்றை ஒழித்தல் நம் முதற்கடமை அல்லவா? இம்முதற்கடமையைச் செய்வதில் நம் கல்வி நிறுவனங்களுக்கு முதற்பங்கு உண்டு அல்லவா?

உலக மயமாதலால் நேர்ந்துள்ள வளர்ந்த நாடுகளின் வேலை வேட்டைக்கு, நம் பல்கலைக்கழகங்கள் ஆட்களை உருவாக்கி விடுவதாகவே வைத்துக் கொள்வோம். அவர்கள் அத்தனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேரையும் அந்நாடுகள் அணைத்துக் கௌரவமான வேலை கொடுத்து விடுமா? உலகமயமாதல், நாடுகள் அனைத்தையுமே சின்ன கிராமம் ஆக்கி விட்டது என்று முழக்குவோர், மிகமிகச் சிறிய அளவில் வெளிநாடு செல்வத் தகுதிபெறும் நம் இளைஞர்கள், அயல்நாட்டுத் தூதரக வாசல்களில் வேலை அனுமதி விசாவுக்காக நின்று தவம் கிடப்பதை அறியாதவர்களா?

நம் உயர்கல்வி நிறுவனங்கள், கல்வித் தேவையை உள்மாநிலத் தேவை, உள்நாட்டுத் தேவை, அயல்நாட்டுத் தேவை என மூன்றாகப் பகுத்துக் கொள்ளுதல் வேண்டும். தேவையை, வேலைத் தேவை என்று கொண்டால், நூறு பட்டதாரிகளில் பத்துப் பேர் அளவிற்குத்தான் வேலை கிட்டும். இப் பத்துப் பேரிலும் உள்மாநிலத் தேவைக்கு 5 பேர், உள்நாட்டுத் தேவைக்கு 2 பேர் இருக்கலாம். அயல்நாட்டுத் தேவை ஆயிரத்திற்கு ஒருவர் என்று அமைதல் கூடக் கூடுதலான கணக்கு. எனவே, உள்மாநில, நாட்டுத் தேவையை ஓரங்கட்டி வைத்து விட்டு, உலகத் தேவைக்குத் தக, நம் கால்களை வெட்டிக் கொள்வது பற்றி ஆர அமரச் சிந்திக்க வேண்டும்.

இந்தியக் கல்வி முறை எது நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பதில் தெளிவில்லை. வருங்காலக் கல்விமுறையை யாரை முன் நிறுத்தி அமைப்பது என்பதில் முழுத் தெளிவு வேண்டும். தெளிவிற்கேற்பத் திட்டம் வேண்டும். திட்டத்தைச் செயல்படுத்தும் துணிவு வேண்டும். முதலில் முன்னிறுத்தப்பட வேண்டியது மாணவரா? ஆசிரியரா? பெற்றோரா? சமுதாயமா? வேலையா? பாடப்பொருளா? தற்போது ஆசிரியர் விருப்பமே பாடம் வகுப்பதில் முன் நிற்கிறது. ஆனால் நாட்டின் தேவையே (Need Based Education) முதலில் முன்நிறுத்தப்பட வேண்டும்.

திட்டம், நடைமுறைக்கு வரும்போது முன் நிற்போர் ஆசிரியரே. அவர் இன்றி ஓர் அணுவும் அசையாது. ஆசிரியரை அசைக்கும் முயற்சிகள், அரவணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டால் அன்றி எத்தனை மாநாடுகளாலும், அடிப்படை மாற்றம் எதனையும் கொண்டுவர முடியாது. கப்பல் அழகு படுத்தப்படலாம் புதிய வசதிகள் புகுத்தப்படலாம். அதனாலேயே கப்பல் கடலில் மிதந்து, நகர்ந்து இலக்கை அடைந்துவிட முடியாது. கப்பலோட்டித் துணை தேவையானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வகுப்புகள், வகுப்பறை எல்லையைத் தாண்டத் தொடங்கி விட்டன. ஆசிரியர்கள் நம்பி இருக்கும் நிலையையும் கடந்து விட்டன. அஞ்சல் வழி, திறந்த வழி, ஒலி/ஒளி நாடாக் கல்வி எனப் பல்கிப் பெருகத் தொடங்கி விட்டன. இணைய வழிக் கல்வி, மனிதரை ஒன்று சேர்க்கிறதா, தனிமைப்படுத்திப் பிரிக்கிறதா என்பதை வருங்காலந்தான் சொல்ல வேண்டும்.

கணினி இணையத்தில் அதிக நேரத்தைச் செலவிடும் மக்கள் தங்கள் குடும்பத்தாருடன், நண்பர்களுடன் குறைந்த நேரத்தையே செலவிடுகின்றனர். குடும்பத்தாருடன் சேர்ந்து நேரத்தைப் போக்குவது, நண்பர்களைச் சந்தித்து மகிழ்வது, தொலைக்காட்சிப் பார்ப்பது எல்லாம் குறைந்து வருகிறது.

அமெரிக்காவில் இப்போது 55 விழுக்காட்டினரிடம் கணினி இணையம் வசதி இருக்கிறது. கணினி இணையம் வசதி உள்ள குடும்பங்களில் 2,689 குடும்பங்களைச் சார்ந்த 4,113 பேரிடம் ஆய்வு நடத்தப்பட்டது. ஸ்டான்போட்டு பல்கலைக்கழகம் நடத்திய அந்த ஆய்வு விவரங்கள் வருமாறு:

அமெரிக்காவில் கணினி இணையம் பயன்படுத்துவோரில் 15 விழுக்காட்டினர் வாரம் ஒரு மணி நேரத்துக்கும் குறைவாக அதைப் பயன்படுத்துகிறார்கள். ஒரு மணி நேரம் முதல் ஐந்து மணி நேரம் வரை பயன்படுத்துவோர் 49 விழுக்காட்டினர். ஐந்து மணி முதல் பத்து மணி நேரத்தை வாரா வாரம் இணையத்தில் செலவிடுவோர் 22 விழுக்காட்டினர். வாராவாரம் இணையத்தில் பத்து மணி நேரத்துக்கும் அதிக நேரத்தைக் கழிப்போர் 14 விழுக்காட்டினர். அதிக நேரத்தை இணையத்தில் செலவிடுவோர் தங்கள் நண்பர்கள், குடும்பத்தார்களுடன் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் கலந்து உறவாடுவது குறைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். வழக்கமாக இணையம் பயன்படுத்துவோரில் 60 விழுக்காட்டினர் தாங்கள் தொலைக்காட்சியைப் பார்ப்பது குறைந்துவிட்டது என்று கூறுகிறார்கள். செய்தித் தாள்கள் படிப்பதும் இப்போது குறைவு தான் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

இணையத்தில் அதிக நேரத்தைச் செலவிடச் செலவிட மக்களுடன் கலந்து உறவாடிப் பழகும் நேரம் குறைகிறது. அண்டை வீட்டுக்காரர்கள், நண்பர்கள், வெவ்வேறான மக்கள் ஆகியோரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்றாடம் சந்தித்து அவர்களுடன் கலந்து உறவாடி மகிழும் உலகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது.

டாக்டர் இராதாகிருஷ்ணன் தன் கல்விக் குழு (1948) அறிக்கையில் 52 ஆண்டுகளுக்கு முன்பு எழுப்பிய ஐயம், இன்னும் பொருளுடையதாகவே இருக்கிறது. அறிவுக் கூர்மையும், கல்வியும் நம்மிடையே அமைதியையும், ஒழுங்கையும் கொண்டு வரவில்லை; ஜனநாயக நாட்டு அரசியல் சாசனம், முழுமையான ஜனநாயகத்தை இன்னும் கொண்டு வந்துவிடவில்லை; நாம் பின்பற்றி வரும் மதங்கள், நம் மக்கள் இடையே சகோதரத்துவத்தைக் கொண்டு வரவில்லை; தொழில்நுட்பக் கல்வி, கற்றவரிடையே கொள்கை நாணயத்தைக் கொண்டு வரவில்லை; வழக்கறிஞர்கள் தம் திறமையை நீதியை நிலைநாட்டப் பயன்படுத்துவதில்லை; தாம் ஏற்ற வழக்கு முறையா, முறையற்றதா என்று பார்ப்பதில்லை; மருத்துவர்கள், சேவையைச் செய்வதில்லை; வருமானத்தையே பார்க்கின்றனர். இவர்கள் எல்லாம், தாம் கற்ற கல்வியால், அறிவைப் பெற்றவர்கள்; கற்றவர்கள். ஆனால் அதற்கும் அப்பால் உள்ள மனிதாபிமானத்தைக் கற்றனரா? நம் கல்வி கற்பித்ததா? இக்கேள்விகள் இன்றும் அர்த்தம் உடையனவாகவே உள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயர்கல்விக்கு உயிரானவை

உயர்கல்வி வளர்ச்சி போதுமானதாக இல்லை, தேவைகளுக்கு ஈடுகொடுப்பதாக இல்லை. இக்காரணங்களுக்கு உரியனவாகப் பெரிதும் பேசப்படுவன இரண்டு. ஒன்று நிதி, மற்றொன்று மதி. ஏனைய நாடுகளைப் போலப் போதிய அளவு நிதி கல்விக்காக ஒதுக்கப்படவில்லை. மொத்த அரசுச் செலவில் 6 விழுக்காட்டிற்கு மேல் பல நாடுகளில் உயர்கல்விக்காகச் செலவழிக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் இந்த அளவு குறைந்து கொண்டே வருகிறது. இக்கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால், உயர்கல்வி உயர்வு இன்மைக்கு நிதிப் பற்றாக்குறை மட்டும் காரணம் அன்று, மதிப் பற்றாக்குறையும் ஒரு பெரும் காரணம் என்றும் அழுத்திச் சொல்லலாம். மதிப் பற்றாக்குறையைத் தீர்ப்பதன் மூலம் நிதிப் பற்றாக்குறையையும் நாம் தீர்த்துவிட முடியும். எவ்வாறு மதியைப் பயன்படுத்துவது என்பது அடுத்த வினா?

இந்தியாவில் மனிதர்கள் கூடுதலான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். ஆனால், வாழும் மனிதர்கள் மனித வளம் (Human Resource) உடையவர்களாக இல்லை. நகைச்சுவைக்காக ஒரு நிகழ்ச்சியைச் சொல்வார்கள்: உலகத்தில் மிகுதியாகப் பயனுள்ள மூளையை மிகுதியாகப் பயன்படுத்தாமல் ஓரளவே பயன்படுத்தியுள்ள புத்தம் புது மூளைகளை விலைக்கு வாங்க வேண்டும் என்று சொன்னால் அது மிகுதியாகக் கிடைக்கும் இடம் இந்தியா என்பார்கள். இக்குறிப்பில் சற்றே மிகைப்படுத்தல் தென்படினும், உண்மையும் இதில் பேரளவு அடங்கி இருக்கிறது. இந்தியாவில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து நம் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் பயின்று அயல் நாடு செல்லும் நம் இளைஞர்கள் அங்கே அனைவருக்கும் சமமாக - மேலாகவும் கூடத் தம் பணிகளில் ஒளிருவதைக் கொண்டு இதனை அறியலாம். எனவே, ஒருவருடைய மூளைத் திறனின் ஆக்கப்பூர்வமான பயன்பாட்டிற்கு இந்தியச் சூழலில் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கிறது. ஆனால், மிகுதியான வாய்ப்பு அயல் நாடுகளில் அமைந்து இருக்கிறது. எனவே, வாய்ப்பு நேர்ந்த இடங்களில் தங்கள் திறமையை இவர்களால் முழுமையாகக் காட்ட முடிகிறது. இன்னொரு பக்கம், திறமைக் குறைவானவர்களைக் கூர்மைப்படுத்த வேண்டியிருக்கிறது. திறமை இல்லாதவர்களுக்குத் திறமையைக் கற்பித்து வளர்க்க வேண்டி இருக்கிறது. இந்த மூன்றையும் கல்வி வழியாகத் தான் செய்ய முடியும். கல்வி வழியாக மனிதரை மனித வளம் உடையவர் ஆக்குவதில் நம் கவனம் முழுமையாகத் திரும்ப வேண்டும்.

புதியன கற்பது, புதியனவற்றைக் கற்பிப்பது, புதிய முறைகளில் கற்பிப்பது ஆகியன அறிவோடு தொடர்புடைய நம் கடமைகள். இவற்றில் நாம் மிகுதியாகப் பின்தங்கி இருக்கிறோம். கற்பிப்போர் மேலும் கற்றுக் கொண்டே இருக்கவும், கற்றவற்றைப் பயிற்றுவிக்கவும், தேவையான அமைப்பு (System) நம்மிடம் தற்போது இல்லை. இதுவேதான் கற்றறிந்த நம்மவரை மிகப் பின்தங்க வைத்திருக்கிறது. படிக்காதவரை (Illiterates) வகைப்படுத்தும் ஓர் அறிஞர் எழுதப் படிக்கத் தெரியாதவர் (Uneducated Illiterates) என்றும், எழுதப் படிக்கத் தெரிந்தும் மேற்கொண்டு தொடர்ந்து படிக்காதவர் (Educated Illiterates) என்றும் வகைப்படுத்திக் காட்டுகிறார். நம்மவருள் கணிசமானோர் படித்தும் மேலும் படிக்காத, படிக்காதவராக இருக்கிறார்கள். இத்தகையோரை ஊக்கப்படுத்தி மடை மாற்றம் செய்தல் மூலம் நம் மதி வளத்தைப் பன்மடங்காகப் பெருக்க முடியும். மேலும் மேலும் கற்போருக்கும், கற்றுக் கொண்டிருப்போருக்கும், கற்பதைத் தம் படைப்பின் மூலம் காட்டுவோருக்கும் சிறப்பு ஊதியம் வழங்குதல் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அத்தகு ஆசிரியர்களுக்கு ஆண்டுதோறும் நட்சத்திர முத்திரைகளை நல்குவதுடன் அவர்தம் பதவி உயர்வு, அயல் நாட்டு வாய்ப்பு, அயல் உலகக் கருத்தரங்க வாயப்பு, அயல் மாநிலக் கருத்தரங்க வாய்ப்பு ஆகியவற்றை வழங்குவதில் முன்னுரிமை தருதல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்வி நிறுவனங்களில் கற்பிப்போரைப் பல்வேறு முனைகளில் மேல் உயர்த்துவதுடன் மாணவர் திறனையும் (Skills) கண்டறிந்து அதற்கு ஏற்ப மாணவன் திறமையைக் கூர்மைப்படுத்தும் நோக்கில் நம் பாடத்திட்டம், பாடம் பயிற்றல், தேர்வு முறை ஆகியன பெரிய அளவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். பின்வரும் குறிக் கோள்களை நாம் நம் கல்வி அமைப்பில் செயல்படுத்த வேண்டும்.

1. பண்பே நம் முலதனம் (Character is our Capital)
2. அறிவு நம் கருவி (Knowledge is our Instrument)
3. வேலை/கடமை செய்தல் நம் பண்பாடு (Duty is our Culture)

மேற்கண்ட முன்றில் நம் கல்வி அமைப்பு, நம் பாடத்திட்டம், பயிற்று முறை, தேர்வு முறை ஆகியன இரண்டாவதான அறிவை மட்டும், அதுவும் புத்தக அறிவை மட்டும், அதுவும் இறக்குமதி அறிவை மட்டும் முன்னிறுத்துகின்றன. அறிவால் மட்டும் ஒருவனோ, ஒரு சமுதாயமோ வளர்ந்து விட முடியாது.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்

என்று திருவள்ளுவ மேதை, பண்பை, அறிவை விடக் கூடுதலாக மதித்து அறிவுறுத்துவார். வகுப்பு அறை வழியும், வாழ்க்கை வழியும் திருவள்ளுவர் கூறியிருப்பது முழுமையான உண்மை என்பதை நாம் அனைவரும் அறிவோம். எனவே, அறிவை அறிந்து பெருக்குவதுடன், பண்பையும், அதன் ஒரு தலைமைக் கூறான கடமையாற்றும் உணர்வையும் நாம் கற்பிக்கப் புதிய வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இஃது எளிது இல்லையென்றாலும் நாம் செய்தே ஆக வேண்டும்.

பண்பையோ, கடமை உணர்வையோ கல்வியின் ஊடே கலந்து ஊட்டுவது என்று முடிவான பின், இவற்றை ஊட்டும் பொறுப்பில் உள்ள ஆசிரியர்களும் இப்பண்புக்கு உரியவர்களாகத் திகழ்தல் வேண்டும். இல்லாவிடில் குறிக்கோள் மாணாக்கரை உருவாக்குவது இயலாது. இதற்கு ஏற்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் முறை, பதவி உயர்வு செய்யும் முறை, பரிசுகள் அளித்து ஊக்கும் முறை, பாராட்டும் முறை ஆகியவற்றையும் நாம் அறிமுகப்படுத்துதல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிதிப் பற்றாக்குறைக்குப் பிறிதொரு பெரும் காரணம், நிதி விரயம் ஆகும். கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில் 60 முதல் 85 விழுக்காடு வரை ஊதியமாகச் செலவழிகிறது. எஞ்சிய நிதியே கல்வி நிறுவன வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்படுகிறது. நம் நிர்வாக முறை முற்றுமாகச் சிவப்பு நாடா முறையாகும். அவநம்பிக்கையை அடிப்படையாக வைத்துக் கோப்புகளால் சுவர் எழுப்பும் முறையாகும். ஊதியம் வழங்கும் முறையையும், ஊதியத்தை வேலைத் திறனோடு இணைக்கும் நிருவாக முறையையும் நாம் கொண்டு வந்தாக வேண்டும். ஒரு சான்று: பல்கலைக்கழகங்களில் இருந்து, கருத்தரங்கம், பிற கடமை முதலானவற்றுக்காக முதல் வகுப்பு இரயில் கட்டணம் வழங்கப்படுகிறது. பெரும்பாலும் முதல் வகுப்புப் பயணம் பெரும்பாலோரால் மேற்கொள்ளப்படுவது இல்லை. இரண்டாம் வகுப்பு இரயில் பயணம் அல்லது பேருந்துப் பயணமே அவர்கள் மேற்கொள்கின்றனர். இரண்டுக்கும் உள்ள செலவு இடைவெளி ஏறத்தாழ நான்கு முதல் ஐந்து மடங்காகும். 100 ரூபாய் இயல்புச் செலவு என்றால், 500 ரூபாய் வழங்குகிறோம். ஒரு பல்கலைக்கழகத்தில் 10 இலட்சம் செலவழிக்க வேண்டிய இடத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவழிக்கிறோம். கருத்தரங்குகள், அவற்றில் பங்கேற்பு, பெறு பயன் ஆகியவற்றின் பயன் பற்றி நடுவுநிலைமையோடு ஒரு மதிப்பீட்டை நாம் இந்தக் கட்டத்திலாவது செய்தாக வேண்டும்.

பல்கலைக்கழக நல்கைக் குழு, பல்கலைக்கழகம், பல்வேறு அரசு நிதி நிறுவனங்கள், பல்கலைக்கழகம், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆய்வுத் திட்டங்களுக்காகக் கோடி கோடியாக நிதியைச் செலவிடுகிறது. இவ்வாய்வுத் திட்டங்களைப் பெறுகின்ற ஆசிரியர் மிகத் திறமையோடு உண்மையாக உழைத்து உருவாக்கும் ஆய்வு அறிக்கைகள் பெரும்பாலும் எந்தவிதப் பயனும் இல்லாமல் நிதி அளித்த அலுவலகங்களில் முழு உறக்கம் மேற்கொள்கின்றன. சில சமயம் ஒரே பொருளில் பல்வேறு இடங்களில் இத்தகு ஆய்வுகள் நிகழுகின்றன. மனித ஆற்றல், காலம் ஆகியன வீணாவதோடு, பெரிய அளவு காசும் வீணாகிறது. அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதுடன், அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஆய்வுத்திட்ட அனுமதி, நடப்பு, அறிக்கை வழங்கல் ஆகியன சீரமைக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரியர் மதி வளம் மட்டுமின்றி மாணாக்கரின் மதி வளமும், குறிப்பாக, முதுநிலை, ஆய்வு நிலையில் பயன் கொள்ளப்பட வேண்டும். தற்போது முதுநிலை நிறைவுப் பருவத்தில் வழங்கப்பெறும் ஆய்வு அறிக்கைகளும், எம்.பில், பிஎச்.டி பட்டங்களுக்காக வழங்கப்பெறும் ஆய்வேடுகளும் போதிய அளவிற்குப் பயன்தரத் தக்க வகையில் மாற்றம் பெற வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போக்கிலே இவை அமைக்கப்பட வேண்டும். தொடர்ந்து பிரச்சினைகளை அடியொற்றி ஆய்வுகளை வெளியிடுவது, நடை முறைப்படுத்துவது ஆகியவற்றிலும் நாம் முழுக்கவனம் செலுத்தியாக வேண்டும். நிறைய பிஎச்.டி என்பதைவிட மிகத் தரமான, பயனுள்ள பிஎச்.டி எனும் நோக்கில் நம் பார்வை மாற வேண்டும்.

நிதி, மதி ஆகியவற்றோடு தொடர்புடைய இன்னொரு சிக்கலையும் நாம் தீர்க்காமல் தொடர்ந்து வைத்துக் கொண்டுள்ளோம். மாணவர் போதிய அளவு சேராவிட்டாலும் முன்பே இருந்து பணியாற்றும் ஆசிரியர் நலம் கருதிச் சில துறைகளையும், சில பாடங்களையும் நாம் தொடர்ந்து சுமக்கிறோம். அன்றியும், நிகழ் கால, எதிர்காலத் தேவை இல்லாவிட்டாலும் கூட ஆசிரியர் முன்பே படித்ததற்கு ஏற்பச் சில பாடங்களை இன்றைய நிலைக்கு ஏற்பக் கூட்டாமலும், மாற்றாமலும் அப்படியே வைத்திருக்கிறோம். இதன் முழு விளைவை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. ஒரு பக்கம் ஆயிரக்கணக்கான மாணாக்கர்களின் நேரம், உழைப்பு, பணம் ஆகியவை இந்த இருப்பின் மூலம் வீணாகின்றன. பணியாற்றும் ஆசிரியர் நலன் பாதிக்கப்படாமல் உரிய மாற்றுத் திட்டத்தை நாம் காண வேண்டும். இந்தியா போன்ற எளிய நாடுகளில் மாணவர் ஆசிரியர் மனித ஆற்றல் வீணாவது முறை இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமுதாயக் கல்லூரிகள்

இந்தியாவில் 80 விழுக்காட்டிற்கு மேல் சிற்றூர்களே உள்ளன. நகரங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இந்தியாவில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர் சிற்றூர்களிலேயே வாழுகின்றனர். நகரங்களில் வாழ்வோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. விடுதலைக்குப் பிறகு நாம் அமைத்துக் கொண்ட, வளர்த்துக் கொண்ட நகர்சார் கொள்கைகளின் விளைவாக நகரங்கள் முதன்மை அடையத் தொடங்கின. சிற்றூர்களில் இருந்து வேலையில்லாத மக்கள் கவர்ச்சியோடு வளர்ந்து கொண்டிருந்த நகரங்களை நோக்கி நகரத் தொடங்கினார்கள். இதன் விளைவாக இந்திய மானுட வளர்ச்சியும், பொருளாதார வளர்ச்சியும் காந்தியத்திற்கு மறுதலையான பாதையில் நடையிடத் தொடங்கின. விளைவு, பெரும்பான்மையான சிற்றூர்ப் புற மக்கள் வளர்ச்சி குன்றி வாடத் தொடங்கினர். சிறுபான்மை நகரவாசிகள் அனைத்து வசதிகளையும் நுகரும் வாய்ப்பைப் பெற்றனர். நம்முடைய கல்வி அமைப்புக்கூட இந்தியாவில் மிகுந்து கிடக்கும் சிற்றூர்களை மனத்தில் கொள்ளாமல் நகரக் கல்வியாக விரிவடைந்தது. அதன் விளைவாகவே உழைப்புக் கல்வி முதன்மை இழந்தது. எழுத்தர், வணிகர், வணிக ஆட்சி முதலான திசைகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கானல் நீரை நோக்கி நம்பி ஓடும் மானைப் போல ஓடத் தொடங்கினர். விளைவு, ஏமாற்றமே மிஞ்சியது. வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியது. உழைப்புக்கு அளிக்கப்பட வேண்டிய மதிப்பு மேலும் நாளொரு பொழுதும், பொழுதொரு வண்ணமுமாகத் தேயத் தொடங்கியது.

www.tamilarangam.net



நம் பொருளாதாரத் திட்டத்திலும், கல்வித் திட்டத்திலும் இந்தியாவின் இயல்புக்கு ஏற்ற பெரும்பான்மையான மக்களின் வளர்ச்சிக்கு ஏற்ற திட்டங்களைத் தீட்டத் தவறினோம். அத்தவறுகளைத் திருத்திக் கொள்ளும் ஒரு திட்டமே சமுதாயக் கல்லூரிகள். இந்தியாவில் படித்துவரும் இலட்சக்கணக்கான மாணாக்கர்களுக்கு மேசை மின் விசிறி கீழ் அமரும் வேலையை நாம் நல்கிவிட முடியாது. தன்னைத் தானே நம்பியும், புதுப் புது வேலைகளை உருவாக்கியும் செயல்படுகின்ற தன்னார்வத்தை இளைஞர்கள் நெஞ்சத்தில் நாம் விதைத்தாக வேண்டும்.

சமுதாயக் கல்லூரிகளின் உயர் குறிக்கோள், இளைய சமுதாயத்திற்கு நம்பிக்கையை ஊட்டுவதும், மூட்டுவதும், கூடுவதும் ஆகும். தன் கைகளையே நம்ப வைப்பதும், தன் கால்களிலேயே நிற்க வைப்பதும்தான் சமுதாயக் கல்லூரிகளின் நோக்கங்களாகும்.

பள்ளிக் கல்வி முடித்த இளைஞர்கள் அத்தனைப் பேரும் தொடர்ந்து கல்லூரிக் கல்வியையோ, பல்கலைக்கழகக் கல்வியையோ பெற்றுவிட முடியாது. பெற்றே தீர வேண்டிய நிலைமையிலும் உயர் கல்வி அமைந்துவிட வில்லை. இந்நிலையில் மேலும் தொடர்ந்து படிக்க வாய்ப்பு அற்றவர்கள் நம்பிக்கை அற்றுப் போகாமல் காப்பாற்றப்பட வேண்டும். நகரங்களை விடச் சிற்றூர்களில் வாழுகின்ற இளைஞர்கள் இத்தகு நம்பிக்கையைப் பெற்றாக வேண்டும். எனவேதான், அவர்களின் கைகளுக்குத் திறனேற்ற சமுதாயக் கல்லூரி மூலமாக வழி காணப்படுகிறது. கல்லூரி, பல்கலைக்கழகங்களை ஒப்பிட்டுப் பார்க்க மிகுதியான செலவு இல்லாமல் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் என்ற வாசகத்தைச் சமுதாயக் கல்லூரிகள் வரித்துக் கொண்டு பங்காற்ற வேண்டும்.

இந்தியாவில் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த ஒரு நோய், உடல் உழைப்பைச் சார்ந்துள்ள திறன்களைக் குறைவாக மதிப்பதாகும். சான்றாக, நாள் முழுதும் வயலில் உழைக்கும் விவசாயியும், துணி நெய்யும் நெசவாளியும், இவர் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளியும், அலுவலகத்தில் அழுக்குப் படியா உடையுடனும், அழுக்குப் படியாக் கையுடனும், வாரத்தில் சில நாட்களே, சில மணி நேரங்களே பணியாற்றும்

www.tamilarangam.net



உத்தியோகியும் சமமாகக் கருதப்படுவது இல்லை. உடல் சார்ந்த உழைப்பு தாழ்வாகக் கருதப்படுவதுடன், குறைவான வருவாயும் விவசாயிக்கும், நெசவாளிக்கும், இன்ன பிற தொழிலாளிக்கும் நல்கப்படுகின்றது. விடுதலைக்குப் பின்பு நாம் ஏற்றுக் கொண்ட கல்வி முறை இத்தகு எழுத்தர்களுக்கே பெரும் முதன்மை நல்கியது. உழைப்பவர்களுக்கு உரிய மதிப்பு நல்கப் பெற வில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். சமுதாயக் கல்லூரி உழைப்புக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிறது. அதன் வழி, உழைத்தவர்களுக்கு நல்ல ஊதியமும் பெற்றுத் தரும் சூழலை அமைக்க விரும்புகிறது. உரிய மதிப்பையும் சமுதாயம் வழங்க விழைகிறது. உழைப்பாளர்களுக்கு உரிய மதிப்பும், ஊதியமும் நல்கும் காலமே வளர்ச்சிக்குரிய அறிகுறியைக் காட்டுவதாகும். சமுதாயக் கல்லூரி வழி ஏட்டுக் கல்வி சொல்லிக் கொடுத்து, மேட்டுக் குடியாக்குவது நோக்கம் இல்லை. அவரவர்களிடம் அமைந்திருக்கும் கைத்திறன்களைக் கூர்மைப் படுத்துவதே இச்சமுதாயக் கல்லூரிகளின் நோக்கமாகும். இந்நோக்கிலேயே பாடங்கள் அமைக்கப்படுகின்றன; பயிற்சிகள் நல்கப்படுகின்றன.

வேலையைத் தேடுவோரை உற்பத்தியாக்குவதை விட, வேலையை உண்டாக்கும் திறனை உண்டாக்குவதுதான் கல்விக் கூடங்களின் தலையாய நோக்கமாக இருத்தல் வேண்டும். மீனை வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாக மீன் வலையை வாங்கிக் கொடுப்பதும், வலை வீசும் முறையைக் கற்றுக் கொடுப்பதும் இதன் நோக்கங்கள். இதன் வெற்றியைப் பொறுத்துத்தான் ஒரு சமுதாயம் வெற்றி பெற முடியும்.

சிற்றூர்ப்புறங்களிலும் சரி, நகரப்புறங்களிலும் சரி, இந்தியாவைப் பொறுத்த அளவிற்குப் பல்வேறு கைத்திறன் வல்லுநர்கள் இருக்கிறார்கள். சான்றாக, மின் இணைப்பு, இரு சக்கர வண்டி, நான்கு சக்கர வண்டி பழு பார்த்தல், பல்வேறு மின் கருவிகளைப் பழுது பார்த்தல் முதலாயின நம் நாட்டில் சரியான வளர்ச்சியைப் பெறாதவர்களாலேயே பார்க்கப்படுகின்றன. இதனால் விளையும் விபத்துகள் ஏராளம். உரிய பொருள் பாழாவதுடன், உரிய மக்களும் ஊனப்படுகிறார்கள். பல்வேறு அல்லல்கள் வந்து சேருகின்றன. இதற்கு மாறாக, ஒவ்வொரு துறையும் உரிய இடங்களில், உரிய பயிற்சி பெற்ற உரிய பயிற்சியாளரை அமைத்துக் கொள்ளும் நிலை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவாக வேண்டும். இத்தகு நிலைமையே வெளிநாடுகளில் சிற்றூராக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி நிலவு கின்றன. தேநீர்க் கடையில் வேலை செய்யும் பரிமாறுபவர்களில் இருந்து, தொலைக்காட்சிப் பெட்டியைப் பழுது செய்பவர் வரை அனைவரும் முறையான ஒரு நிறுவனத்தில் பயிற்சியைப் பெற்றே தொழில் செய்ய முடியும். இத்தகு நோக்கம் முழுமையாக நிறைவேற வாய்ப்பாக நூற்றுக்கணக்கான சமுதாயக் கல்லூரிகள் அங்கே இயங்குகின்றன. நம் நாட்டில் அவ்வாறான முறைமையான கல்வியைச் சமுதாயக் கல்லூரியை நடத்துவதன் மூலம் குறைகளை நீக்க முடியும்; நீக்க வேண்டும்.

வழக்கமாகக் கல்லூரி, பல்கலைக்கழகப் படிப்பு என்பது பல்கலைக்கழக அளவில் பாடத்திட்டத்தை அமைத்து, வேறு வேறு இடங்களில் உள்ள, வேறு வேறு கல்லூரிகளில் நடத்துவதாகும். பி.ஏ., பிஎஸ்.சி., பி.காம்., எம்.,ஏ., எம்.எஸ்.சி., எம்.காம் என்பன இவ்வாறே இப்போது நடத்தப் பெற்று வருகின்றன. ஆனால், சமுதாயக் கல்லூரிகளில் இப்படி மேல் இருந்து கீழ் வரும் முறை முற்றுமாக நீக்கப்பட்டுள்ளது. கிராமப்புறத்தில் சமுதாயக் கல்லூரியை நடத்த விரும்பும் நிர்வாகம், அந்தப் பகுதியில் என்ன என்ன வேலைவாய்ப்பு தற்போது தேவையாக இருக்கிறது என்பதைக் கள வேலை நிகழ்த்தித் தரவுகள் சேகரித்துப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த அடிப்படை யிலேயே கீழிருந்து மேலாக வரும் கருத்து உருக்கள் பல்கலைக்கழகத்தால் பார்வையிடப் பெற்றுப் புதுப்புதுப் பாடங்கள் அறிமுகம் ஆகின்றன. சான்றாக, கப்பல் துறைமுகம் வழி நிகழுகின்ற பாடங்கள் தூத்துக்குடியில் வழங்கப்படுகின்றன. மீன் பிடித்தல் தொடர்பான பாடங்கள் கடலோர ஊர்களைச் சார்ந்து அமைந்துள்ள சமுதாயக் கல்லூரிகளில் வழங்கப்படுகின்றன. ஒருங்கிணைந்த பண்ணை வளர்ச்சி, வீட்டு வைத்தியம், மறைந்த வைத்தியம் முதலானவை கிராமப்புறங்களில் உள்ள சமுதாயக் கல்லூரிகளில் வழங்கப்படுகின்றன. நகரம் சார்ந்த கணினிப் பயன்பாடு, குளிர்சாதனவியல் முதலானவை நகரச் சமுதாயக் கல்லூரிகளிலும், மருத்துவம் சார்ந்தவை மருத்துவமனைகள் உள்ள இடங்களிலும் வழங்கப்படுகின்றன. வேரிலிருந்து விழுதை நோக்க வேண்டிய முறையாகும். அத்தகு முறையே நமக்கு வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமுதாயக் கல்லூரிப் பாட அமைப்பின் இன்னொரு நன்மை, ஒரு குறிப்பிட்ட வேலை தேவை இருக்குமேயானால் அதற்குரிய பயிற்சியை ஓராண்டு நல்கலாம். அவ்வேலைப் பயிற்சி அடுத்த ஆண்டிற்குத் தேவையில்லையெனில் அதனை விட்டுவிடலாம். அந்தப் பகுதியில் தேவைப்படும் இன்னொரு வேலைக்குரிய பயிற்சியை நல்கலாம். இதனால் கல்லூரி நிர்வாகத்தின் நிர்வாகச் செலவும் வீணடிக்கப்படுவது இல்லை.

பள்ளி அளவில் படிப்பை முடித்து விட்டு மேலும் தொடர முடியாமல் ஏதேனும் சிறுசிறு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களுக்குச் சமுதாயக் கல்லூரி ஒரு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சான்றாக, படிப்பைத் தொடர முடியாத இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் இடத்திலோ, கார், லாரி பழுது பார்க்கும் இடத்திலோ பணியாற்றிக் கொண்டிருக் கலாம். அனுபவம் பெற்ற மேஸ்திரியின் உதவியுடன் குறைந்த ஊதியத்தில் கற்றுக் கொண்டு காலத்தை அவர் கழித்துக் கொண்டிருப்பார். அவரைச் சமுதாயக் கல்லூரி அன்புடன் அழைக்கிறது. இக்கல்லூரியில் சேர்ந்து அவர் முன்பே பெற்றுவரும் பயிற்சியைத் தரப்படுத்திக் கொள்ளலாம். இதனால் அவர் செய்யும் வேலையைச் செவ்வனே செய்யவும், அரசு பதிவு பெற்ற, தனியார் நிறுவனங்களில் வேலை பெறவும் வாய்ப்பு இருக்கும்.

ஏழை எளியோருக்குக் கல்வி வாய்ப்பையும், வேலை வாய்ப்பையும் தந்து சமுதாய மேம்பாட்டிற்கும், மனிதவள மேம்பாட்டிற்கும் சமுதாயக் கல்லூரிகள் துணை செய்கின்றன. சமூக நீதியின் அடிப்படையில் ஏழைக்கு வாழ்வளிக்க, சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்டச் சமுதாயக் கல்லூரிகள் பயன் படுகின்றன. 18 விழுக்காட்டு மாணவர்கள் மட்டுமே பள்ளி முடித்ததும், கல்லூரிகளுக்குச் செல்கின்றனர். 82 விழுக்காட்டு மாணவர்கள் நேரடியாகத் தொழிலில் அல்லது வேலையில் இறங்கி விடுகின்றனர். இதில் பல மாணவர்கள் கிராமப்புறங்களைச் சார்ந்தவர்களாகும். தங்கள் தொழிற் திறனையும், செயல் திறனையும் பெருக்கிக் கொள்ளக் கிராமப்புற மாணவர்கள் பட்டணங்களை நோக்கி அதிக தூரம் செல்லத் தேவையில்லை. அருகில் உள்ள பட்டணத்திலேயோ அல்லது தங்கள் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள சமுதாயக் கல்லூரியிலேயோ வேலைவாய்ப்பினைப் பெறத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தக்கதான தொழிற் பயிற்சிக் கல்வியைப் பெறலாம். கிராமங்களில் சமுதாயக் கல்லூரிகள் செயற்பட்டாலும் அருகில் அமைந்துள்ள தொழிலகங் களோடும், வர்த்தக நிறுவனங்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு, போதுமான தொழிற் கல்வியைத் தருகின்றன. கிராமங்களில் வசிக்கும் மாணவர்கள் தங்கள் கிராமங்களிலேயே தொழிலகங்களைத் தொடங்கித் தங்கள் கிராமத்தைச் சார்ந்த மக்கள் பயன் பெறவும், தாங்கள் தொழிலில் முன்னேறவும் சாத்தியமான நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக, தொலைக்காட்சி மின்னியல் கருவிகளைப் பழுதுபார்க்க அருகில் உள்ள பட்டணத்திற்குச் செல்லத் தேவையில்லை. தங்கள் கிராமத்திலேயே, சொற்பச் செலவில் குறுகிய நாட்களில் பழுது பார்த்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். சமுதாயக் கல்லூரிகளில் பயின்ற கிராமத்தைச் சார்ந்த மாணவர்கள், சிறு தொழில் அல்லது சுயதொழில் வளர்ச்சிக்குத் தகுதியுள்ளவர்களா கின்றனர்.

கிராமத்திலுள்ள பெரியவர்கள், வசதி படைத்தவர்கள், இளைய சமுதாயத்திற்குத் தன்னலம் கருதாது உழைக்க நல்ல பண்புள்ள வர்கள், எண்ணங்களை இதயங்களில் கொண்டுள்ளவர்கள், தங்கள் கிராமங்களில், அதன் சூழ்நிலைக்கு எந்தெந்த வேலைகளுக்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நன்கு ஆராய்ந்து அதற்கேற்பப் பாடத்திட்ட வகுப்புகளை ஆரம்பித்து நம் இளைய சமுதாயத்திற்கு நற்பணியாற்றி வருகின்றனர். சமுதாயக் கல்லூரிகள், ஒரு புதிய சிறந்த மாற்றுக் கல்வித் திட்டமென மக்கள், முக்கியமாகக் கிராமத்து மக்கள் ஏற்றுக் கொண்டு, பாராட்டி வருகின்றனர். இதுவரை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஒப்புதல் பெற்ற முப்பத்துநான்கு சமுதாயக் கல்லூரிகளில் இருபத்திரண்டு வகையான பாடத்திட்ட வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

1. கணினிப் பயன்பாடுகள்
2. நான்கு சக்கர இயந்திரவியல்
3. சந்தையியல் மேலாண்மை
4. பலநோக்குக் கிராமிய வளர்ச்சிப் பணி
5. பாலர் பள்ளி ஆசிரியக் கல்வி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



6. உதவிப் பெண் செவிலியர்
7. மின்சார, மின்னியல் வீட்டுப் பொருட்கள் பழுதுபார்ப்பும், பராமரிப்பும்
8. கணினி நுட்பவியல்
9. மருத்துவ ஆய்வுக்கூட நுட்பவியல்
10. மருத்துவக் கதிரி வரைவியல்
11. காற்றுச் சீராக்கமும், குளிர்சாதனவியலும்
12. இருசக்கர இயந்திரவியல்
13. அலுவலக மேலாண்மைக்குக் கணினிப் பயன்பாடு
14. கப்பல்வழி ஏற்றுமதிப் பொருட்களின் மேலாண்மை
15. மீன்பிடித் தளவாடப் பராமரிப்பு
16. கணிமய நிதிக் கணக்கு
17. மருந்தில்லா வைத்தியம்
18. வீட்டு வைத்தியம்
19. ஒருங்கிணைந்த பண்ணை வளர்ச்சி
20. இயற்பியல் பயிற்சி வைத்தியம்
21. உடற்கூறு மருத்துவம்
22. ஏற்றுமதிச் சரக்கு மேலாண்மை.

முப்பத்து நான்கு சமுதாயக் கல்லூரிகளும் கிராமங்களில் நிறுவப் பட்டுத் திறமையாகத் தொண்டாற்றி வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடைவு


அக்கினிச் சிறகுகள்-நூல் 176
அஞ்சா நெஞ்சம் 106
அதிபர் ஆட்சி 135
அதிபர் ஆட்சிக்காலம் 138
அதிபர் தேர்வு நெறிகள் 140, 141
அதிபர் நாடுகள் 137
அதீத சிவப்பு நாடாமுறை 91
அதீத ஜனநாயக உரிமை 91
அநேகாந்தவாதமும் கல்வியும் 160
அப்துல் கலாம் 176
அம்மன் வழிபாடு 100
அமர்த்தியா சென் 125
அமிழ்தபதி காவியம் 78
அமெரிக்கர் பண்பு 32
அரசப்பரம்பரை ஆட்சி 137
அரசியல் சாசன உருவாக்கம் 142
அரசியல் சாசனத் திருத்தம் 143
அரசியல் படையெடுப்பு 44
அராபியச் சிந்தனை மரபு 180
அலெக்சாண்டர் 111
அறிவியலாளர் பண்புகள் 186
அறிவியலுக்கு அடிப்படை 181
அறிவே கருவி 195
ஆகஸ்ட் கோம்த் 30
ஆங்கிலம் - இணைப்புமொழி 152
ஆங்கிலேயர் பண்பு 33
ஆடம்பரம் தவிர்ப்பு 152
ஆண்வழிச் சமூகம் 101
ஆதிசைவர் 69
இங்கிலாந்து ஒட்டுரிமை 126
இதிகாசமும் சிலப்பதிகாரமும் 70
இந்திய ஒட்டுரிமை 126
இந்தியச் சிந்தனை மரபு 180
இந்தியப் பிரதமர்களின் ஆட்சி ஆண்டுகள் 139
இந்திர வழிபாடு 44
இரட்டை அமைச்சக முறை 146
இராமாயணச் செல்வாக்கும் எதிர்விளைவும் 65
இராவணன் 68
இலக்கியத் தொகுப்பு
பொருள் அடிப்படை 48
வடிவ அடிப்படை 48
சமய அடிப்படை 49
பாதுகாப்பு அடிப்படை 49
தர அடிப்படை 50
இலக்கியத் தொகுப்பு முயற்சிகள் 50
இலங்கை-தமிழ் மண்ணே 75
இலவசக்கல்வி 153
இயற்கை வழிபாடு 45
இறையியல் நிலை 41
இன இடப்பெயர்ச்சி 44
இனி ஒரு விதி செய்க 151
உண்மை உழைப்பு 158
உணர்வு நெறி ஆளுகை 173
உமாபதி சிவாச்சாரியார் 53

www.tamilarangam.net




உயர் கல்வி 188
உயர் கல்விக்கு உயிரானவை 193
உயர்வு மனப்பான்மை 93
உயிர்களின் தோற்றம்-நூல் 109
உலக மயமாக்கல் 123
உலகமொழிகள் 185
உழவின் மேன்மை 27
ஊதிய உயர்வுப் போராட்டம் 127
ஊழ் 28
ஊழியர் சம்பளம் 124
எடுத்துக்காட்டு மனிதர் 177
ஏகநாதன் சிவன் 56
ஐகூத் தேர்வு முறைகள் 170
ஒப்பந்த அடிப்படை ஊழியம் 154
ஓட்டுரிமை 126
கங்கை காவிரி இணைப்பு 152
கங்கை படையெடுப்பு 67
கட்டற்ற சனநாயகம் 123
கட்டொருமைப்பாடு 95
கடமை செய்தலே பண்பாடு 195
கயமை 19
கல்லாமையும் மூடநம்பிக்கையும் 121
கல்வியும் அநேகாந்த வாதமும் 160
கல்வி நிறுவன வளர்ச்சி 168
கல்வெட்டுகளில் வள்ளுவர் 18
கலைகளின் வீழ்ச்சி 80
காரல் மார்க்ஸ் 30
காரையூர்ச் செப்பேடு 18
கால்வின் 39
காவிரிப் பிரச்சனை 144
கிருமி கண்ட சோழன் 61
கிரேக்கச் சிந்தனை மரபு 180
கீழ்மை 20
குடியரசுத் தத்துவம் 108
குமரியர் பிக்குணியாதல் 78
கூட்டுணர்வு 175
சப்பானியர் பண்பு 33
சமத்துவப்பண்பாடு 99
சம நீதி மறுப்பு 144
சமய அரசியல் 48
சமயச் சமூகவியல் 41
சமுதாயக் கல்லூரிகள் 198
சமுதாயக் கல்லூரிப் பாடத்திட்டங்கள் 203
சமுதாயவியல் 32
சர்வாதிகார ஆட்சி 137
சனநாயகத்தின் மூன்று தூண்கள் 148
சாத்திரக் கல்வி 167
சாதி அடிப்படை 20
சாதி அரசியல் 126
சாதிப் பிரிவுகள் 87
சாதிய ஓட்டு 126
சாதி வளர்ச்சி 126
சாலஸ் டார்வின் 30
சிக்மண்ட் பிராய்டு 30
சிந்துபாத் கதை 129
சிலப்பதிகாரமும் இதிகாசமும் 70
சிலப்பதிகாரம்-தமிழரின் வடபுலப்போராட்டக்கதை 73
சிவன் மணவிழா 68
சீனச் சிந்தனை மரபு 180
சீன நிர்வாகம் 155
சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் 143
சுயவிழிப்பு 173
சூரிய வழிபாடு 46
செய்யா மொழி 25
செருமானியர் பண்பு 33
செல்லாத வாக்குகளின் ஆதிக்கம் 131
சேவைக் கல்வி 168
சோவியத்து ஒன்றிய வீழ்ச்சி 178
சோழரின் இலங்கைப்படையெடுப்பு 75
சோழன் தில்லையில் முடி சூடல் 61
டேனியல் கோல்மேன் 170
தமிழர் அரசியல் 116
தமிழர் கலைகள் 77
தமிழர் குடிபெயர்ச்சி 89
தமிழர் சடங்குகளும் சங்கடங்களும் 96
தமிழர் நண்டு போக்கினர் 34
தமிழர்: நூற்றாண்டு வரலாறு 87
தமிழர் பண்பு 34


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழர்: பண்பாட்டுச் சீர்குலைவு 92
தமிழரும் விடுதலையும் 119
தாய்த் தெய்வம் 100
தாய்மொழிக் கல்வி 152
தாய்வழிச் சமுதாயம் 100
தாழ்வு உணர்ச்சி 93
திராவிடத் தேசியக் காலம் 81
திரிபிடகங்கள் 52
திருக்குறள் அரங்கேற்றம் 23
திருக்குறள் - ஆரிய எதிர்ப்பு 22
திருக்குறளும் ஆரிய வேதமும் 24
திருக்கோவையார் 19
திருப்பதிகம் 19
திருமுறை 19
திருமுறை எழுதுவோர் 54
திருமுறை தொகுப்பு 48
திருவள்ளுவச் சமூகவியல் 30
திருவள்ளுவர் சிலைதிறப்பு 87
திருவள்ளுவம்-சமூக எதிர்ப்புக்குரல் 17
திருவள்ளுவமாலை 17
திருவள்ளுவர் உலக நோக்கினர் 38
திரைத்தேசியக் காலம் 81
திரைப்படக் கலாச்சாரம் 90
திரௌபதி வழிபாடு 73
தில்லை முதன்மை 61
தில்லை வாழ் அந்தணர் 62
துணை அதிபர் முறை 140
துறவியர் கள்ள உறவு 22
தேசியக்காலம் 81
தேவை: அஞ்சாநெஞ்சம் 106
தேர்தல்-சில சீர்திருத்தங்கள் 129
தேர்தல் செலவு 138
தேவரடியார் முறைமை 78
தேவரடியார் வீழ்ச்சி 79
தொழிற்புரட்சி 183
நக்கீரன் வரலாறு 107
நபிநாயகம் வரலாறு 175
நம்பிக்கை நிலை 41
நம்பியாண்டார் நம்பி 53
நாட்டின் சிறப்புகள் 136
நாடாளுமன்ற ஒருநாள் செலவு 124
நாயக்கர் பண்பாட்டுப் படையெடுப்பு 79
நிருவாகச் சீர்திருத்தம் 155
நிருவாக நேர்மை 157
நுண்பொருள் கோட்பாடு 59
நேர்முகத் தேர்தல்முறை 133
பக்தி இயக்கம் 23
பண்பாட்டுக்கல்வி 167
பண்பே மூலதனம் 195
பதற்றத்தைத் தணித்தல் 174
பல்லடம் செப்பேடு 18
பல்லவர் பண்பாட்டுப் படையெடுப்பு 79
பழனி வீரமுடியனார் செப்பேடு 18
பன்முகப் பொருண்மை 160
பாண்டித்துரை தமிழ்ச்சங்கம் 86
பாண்டியன் கடுங்கோன் 23
பிசிராந்தையார் 108
பிரதமர் ஆளும் நாடுகள் 137
பிரான்சிஸ் டர்னர் பால்கிரேப் 51
பிரெஞ்சுக்காரர் பண்பு 33
பிரேசர் தத்துவம் 41
பிலிப்பிரங் 51
பிறனில் விழைதல் 22
புத்தர் போதனைகள் 52
புதிய அரசியல் சாசனம் 142
புரட்சியின் மூன்று கூறுகள் 183
பூந்துறை நாட்டார் மேலோலை -18
பூமாதேவி வழிபாடு 46
பெண்கள்-இடஒதுக்கீடு 103
பெண்கள் உயர வழிகள் 104
பெண்கள் முதன்மை 99
பெரியார் வருகை 89
பெரியாரும் தமிழர் மூடநம்பிக்கைகளும் 96
பெல்ஜியர் பண்பு 33
பொய்யா மொழி 25
போப் 38
மகாபாரதச் செல்வாக்கும் எதிர்விளைவும் 65
மதப்போராட்டம் 69

www.tamilarangam.net





மதம் பரப்புதல் 45
மலேசிய நிர்வாகம் 156
மனத்திட்பம் 111
மனநலம் எல்லாம் தரும் 110
மனித உணர்வுகள் 171
மாநில அரசு கலைப்புகள் 144
மாநில சுயாட்சி 146
மார்க்கரேட்மீட் 30
மார்ட்டின் லூதர் 22
மீலாகர் ஆப் கதரா 50
முப்பால் 17
முன்னோர் வழிபாடு 46
மூடநம்பிக்கை 96
மெய்யியல் நிலை 41
மொழிகள் வழக்கிழப்பதற்கான காரணங்கள் 185
மொழிப்போர் 87
மோதல் தவிர்ப்பு 175
யசோதர காவியம் 78
ரூத் பெனடிக் 30
வடபுலப் படையெடுப்பு 67
வணிகக் கூட்டுறவு 44
வருண அடிப்படை 20
வரைவின் மகளிர் 21
வல்லரசாக வழி 150
வழிபாட்டின் தோற்றம் 42
வழிபாட்டின் பொதுமை 43
வள்ளுவர் - முதல் எதிர்ப்பாளர் 19
வள்ளுவன் வாய்மொழி 17
வாக்காளர் அட்டை 132
வாக்களித்தல் கட்டாயம் 132
வாக்களிப்போர் சதவீதம் 130
வாக்குரிமை 126
வாலிவதை 68
வாழ்க்கை வாழ்வதற்கு 115
வாஸ்கோடகாமா வரவு 85
விக்டோரியன் காலம் 51
விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் 132
விடுதலை அரசியல் 117
விதவை வாழ்க்கை 71
விதி தத்துவம் 28
வீரமாமுனிவர் 38
வேட்டுவத் தொழில் 101
வேதங்கள் 68
வேலை வாய்ப்பற்றோர் 128
வேளாண் தொழில் 122
ஜோசப் ஜஸ்டஸ் ஸ்காலிஜா் 51


SEELAN BOOKS NORWAY SIGNATURE

www.tamilarangam.net

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

www.tamilarangam.net



# தமிழர்தம் இலக்கியம், பண்பாடு, அரசியல், கல்வி 2000

**க.ப. அறவாணன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்